
சண்டேசுவரர்



திருவாவடுதுறை ஆதீனம் 199

வெளியீடு எண்: 417

சண்டேசுவரர்



திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனம்

1993

உ

சிவமயம்

திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்திரண்டாவது குரு மகாசந்நிதானம்

அருள்திரு அம்பலவாணதேசிக மூர்த்திகள்

பத்தாம் ஆண்டுக் குருபூசை விழாமலர்

மெய்கண்டார் ஆண்டு - 770 — திருவள்ளுவர் ஆண்டு - 2024

ஆங்கீரஸ - பங்குனி - ௬௨ - திருவோணம்

19 – 3 – 1993

ஆதீன வெளியீடு எண் : 417
விலை ரூ. 70–00
பக்கங்கள் : 272
படங்கள் : 69

ஆசிரியர்
S. நாராயணசுவாமி, M. A., B. Ed..
திருவிடைமருதூர்.

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்.
— திருவாவடுதுறை. —



சண்டேசுவரர்

உ

சிவமயம்

சண்டேசுவரர்

CHANDESWARAR] [चण्डेश्वरः

இது

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

இருபத்துமூன்றாவது குரு மகாசந்நிதானம்

சீர் வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள்

அருளாணையின் வண்ணம்

வெளியிடப்பெற்றது.

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனம்

1993

உ

சிவமயம்

"கண்ணுதல் அடியில் தோயும்
கருத்தினர் அரும் பாவங்கள்
புண்ணியத் திறமாம் என்றுஇப்
புவியுளோர் அறிய முன்னாள்
அண்ணலைப் பரசும் பேரா
தரவினுல் பிதாவை விட்டும்
திண்ணிய செயல்சேர் சண்டன்
திருவடி மருவு வாமே."

திருப்பறியலூர்ப் புராணம்.

- திருவாவடுதுறை ஆதீனத்து
11-வது குரு மகாசந்நிதானம்
ஸ்ரீ (பின்) வேலப்ப தேசிகர்.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
குருமுதல்வர்
அருள்திரு நமசிவாயமூர்த்திகள்



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குரு மகாசந்நிதானம்
அருள்திரு அம்பலவாண தேசிக மூர்த்திகள்
சிவப்பேறு : பங்குனி - திருவோணம்.

உ

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகித்
துயிலரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

— தவத்திரு மாதவச் சிவஞான யோகிகள்.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

குரு பரம்பரை விளக்கம்

ஸ்ரீகண்ட பரமசிவம்

|

திருநந்திதேவர்

|

சனகர் சனாதனர் சனந்தனர் சனற்குமாரர்

|

சத்தியஞான தரிசனிகள்

பரஞ்சோதி முனிவர்

மெய்கண்டதேவ நாயனார்

அருணந்தி சிவாசாரியார்

மறைஞானசம்பந்த சிவாசாரியார்

உமாபதி சிவாசாரியார்

அருணமச்சிவாய தேசிகர்

சித்தர் சிவப்பிரகாசர்

|

1.	அருள்திரு	**நமசிவாய மூர்த்திகள்** (ஆதீனக் குருமுதல்வர்)	
2.	,,	மறைஞான தேசிகர்	— 1360 — 1621
3.	,,	அம்பலவாண தேசிகர்	
4.	,,	உருத்திரகோடி தேசிகர்	
5.	,,	வேலப்ப தேசிகர்	— 1621 — 1625
6.	,,	குமாரசுவாமி தேசிகர்	
7.	,,	பிற்குமாரசுவாமி தேசிகர்	
8.	,,	மாசிலாமணி தேசிகர்	— 1625 1658
9.	,,	இராமலிங்க தேசிகர்	— 1658 1678
10.	,,	வேலப்ப தேசிகர்	— 1678 1700
11.	,,	பின் வேலப்ப தேசிகர்	— 1700 1730
12.	,,	திருச்சிற்றம்பல தேசிகர்	— 1730 1770
13.	,,	அம்பலவாண தேசிகர்	— 1770 1789
14.	,,	(வேலூர்) சுப்பிரமணிய தேசிகர்	— 1789 1845
15.	,,	அம்பலவாண தேசிகர்	— 1845 1869
16.	,,	(மேலகரம்) சுப்பிரமணிய தேசிகர்	— 1869 1888
17.	,,	அம்பலவாண தேசிகர்	— 1888 1920
18.	,,	சுப்பிரமணிய தேசிகர்	— 1920 1922
19.	,,	வைத்தியலிங்க தேசிகர்	— 1922 1937
20.	,,	அம்பலவாண தேசிகர்	— 1937 1951
21.	,,	சுப்பிரமணிய தேசிகர்	13—4—1951 முதல் — 23-9-1967
22.	,,	அம்பலவாண தேசிகர்	23—9 1967முதல் — 7—4—1983

23. *சீர் வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள்*
7—4—1983 முதல் இவ்வாதீன ஞானபீடத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்து வருகின்றார்கள்.

எடுத்தாண்ட நூல்கள்

1. திருமுறைகள்
2. சிவபராக்கிரமம்
3. தலபுராணங்கள்
4. பிரதிமாலட்சணம்
5. காமிகாகமம் (I & II)
6. காரணாகமம் (I & II)
7. அஜிதாகமம்
8. வாயுசம்ஹிதை
9. திருத்தலப்பெருமை
10. மதுரை, சிதம்பரம்
    மயிலாப்பூர் கும்பாபிஷேக மலர்
11. சிற்பச்செந்நூல்
12. ஸ்ரீ தத்வநிதி
13. காசியபம்
14. விஸ்வகர்மீயம்
15. காரணேஷன் அகராதி
16. சிவரகசியம்
17. சிவஸ்தலமஞ்சரி
18. சண்டேசுவரர் புராணம்
19. தீப்தம்
20. சிவவடிவங்கள்
21. சிவத்திருமேனிகள்
22. தமிழ்நாட்டுச் செப்புத் திருமேனி
23. மகோற்சவ விளக்கம்
24. அகோரசிவாச்சார்யார்பத்ததி
25. சுப்ரபேதாகமம்
26. சிற்பமும் கலைவாழ்வும்
27. திருக்கோயில் - இதழ்கள்
28. தியானரத்னாவளி
29. தென்னிந்திய கல்வெட்டு சாசனங்கள்
30. திருவாவடுதுறை ஆதீனம் சரஸ்வதிமகால் நூலக கையெழுத்துப் பிரதிகள் & அச்சுப் புத்தகங்கள்
31. இரண்டாம் உலகத்தமிழ் மாநாடு மலர் - கையேடு
32. கலைக்களஞ்சியம்
33. South Indian Temple Architecture
34. DARASURAM
35. Hindu Iconography
36. Manifestation of Shiva
37. Early - Middle - later-chola temples
38. Pondicherry - French Indology Books
39 South Indian Images
40. Pallava Architecture
41. மகேசுவர வடிவங்கள்
42. தெட்சிணாமூர்த்தி I & II
43. சோமாஸ்கந்தர்
44. கணபதி
45. முருகன்
46. அஷ்டாட்டவிக்ரகலீலை
47. சிவபுராணங்கள்
48. Temples of Tamil Nadu
49. South Indian God & Goddesses
50. சிவாலய பிரதிஷ்டா விதி
51. சிவாலய தரிசன விதி
52. யாகசாலைக் கருவூலம்
53. சில்பரத்னம்
54. Temple cars Medival Tamizhaham
55. Devine Bronzes
56. A Unique candikesvara Bronze - Essay
57. Master pieces of Early South Indian Bronzes.

பொருளடக்கம்

உ
சிவமயம்

முன்னுரை

பிரடைந்த பாலதாட்டப் பேணுது அவன் தாதை
வேரடைந்து பாய்ந்த தாளை வோதடிந்தான் தனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித தலையை வகுத்த தென்னெ ?
சிரடைந்த கோயின் மல்கு சேய்ஞலூர் மேயவனே.

(திருஞானசம்பந்தர் ...)

அண்டம் ஆர்அமரர் கோமான் ஆதிஎம் அண்ணல்பாதம்
கொண்டவன் குறிப்பினுலே கூப்பினுன் தாபரத்தைக்
கண்டவன் தாதை பாய்வான் காலற எறியக் கண்டு
சண்டியார்க் கருள்கள் செய்த தலைவராப் பாடியாரே,

(திருநாவுக்கரசர் ...)

இண்டைமலர் கொண்டு மணல் இலிங்கமதியற்றி
இனத்தாவின் பாலாட்ட இடறிய தாதையைத் தாள்
துண்டமிடு சண்டியடி அண்டர் தொழுதேத்தத்
தொடர்ந்தவனைப்பணி கொண்ட விடங்கன் ...

(சுந்தரர் ...)

தீதில்லை மாணிசிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தானிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளாற் றேவர் தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணேக்கம்.

(மாணிக்கவாசகர்)

செந்தமிழாற் சிவநெறி புரந்துவரும் மரபினைப் போற்றி வளர்க்கும் அருள்திரு நமச்சிவாய மூர்த்திகளை முதற்பெருங் குருவாகக் கொண்டு திகழ்வது திருவாவடுதுறை ஆதீனம். பல வடமொழி நூல்களைத் தமிழாக்கம் செய்தும், முன்னுசிரியமூர்த்திகள் செய்த நூல்களை (பண்டார சாத்திரங்கள்) வெளியிட்டும். திருவாவடுதுறையில் மலர்ந்த ‘ திருமந்திரம் ’ அனைவரும் படித்துணரும் நிலையில் “ பஞ்சாக்கரதீபமாம் ” உரையொடு மிளிரும் வெளியீடுகள் செய்தும், சைவஉலகம் எளிதிற் கண்டு ஆய்ந்து

உணரும் வகையில் சைவங் கூறும் நூல்களாம் திருமுறைகளையும் சாத்திரங்களையும் வெளியீடு செய்தும் சிவநெறி புரந்து வரும் இவ்வாதீனத்துக் குருமகா சந்நிதானங்கள் அனைவர்க்கும் செந்தமிழ் உலகும் சைவ உலகும் மிகு கடப்பாடு கொண்டவை.

சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான் அடியார் உய்திபெற ஆகமங்களையும் அருளினன். அவ்வாகமங்களில் கிரியாபாதப் பகுதிகளில் தன்னை வழிபட்டுய்ய சிவபூஜாவிதியினையும், தன் பிரதிமூர்த்தங்களாம் கணபதி, முருகன், ஆடல்வல்லான், தட்சிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், ஆகியோரையும் தேவி, சண்டேசர் முதலிய உடன் பரிவார தேவ மூர்த்தங்களையும் நிறுவிப் பூசிக்கும் முறைகளையும் வகுத்துத் தந்துள்ளான். அவனருளே துணையாகக்கொண்டு அவன் பாதங்களைப் பற்றிட, நித்திய நைமித்திக மகோத்சவ விதிகளையும் அவனருள் நமக்குத் தந்துள்ளது. இவற்றையெல்லாம் கருத்துட் கொண்டு இதுவரை கணபதி, முருகன், ஆடல்வல்லான், தட்சிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர் ஆகிய மூர்த்தங்களின்படிம உருவமைதிகள் தத்துவங்கள், வரலாறுகள், நிறுவும் முறைகள், பூசனை முறைகள், விரதங்கள், உபாசன முறைகள் ஆகியவை அடங்கிய நூல்கள் ஆதீன வெளியீடுகளாக மலர்ந்து சைவ மணம் பரப்பி வருகின்றன.

மகோற்சவங்களில் எழுந்தருள் (வீதியுலா) மூர்த்தங்களாக கணபதி, முருகன், எம்பெருமான் (சோமாஸ்கந்தர்) அன்னை (தேவி), சண்டேசர் ஆகிய ஐ மூர்த்தங்களை எழுந்தருளப் பண்ணுதலும், தீர்த்தங் கொடுக்கும் நாளில் ஆடல்வல்லானை எழுந்தருளப் பண்ணுதலும் மரபாக உளது. கணபதி, முருகன், ஆகியோர் குருமூர்த்தங்களாயும், சோமாஸ் கந்தர், தேவி மூர்த்தங்கள் அருள்தரு மூர்த்தங்களாயும், ஆடல்வல்லான் ஐந்தொழில் நடத்துவிக்கும் மூர்த்தமாயும், சண்டேசர் தொண்டர் நாயகமாம் சங்கம மூர்த்தமாயும் மிளிர்கின்றனர். இவ்வகையில் "மெய்ம்மையே திருமேனிகளாக்" கொண்டு சிவம் விளங்கும் நிலையும், குரு – லிங்க – சங்கம வழிபாட்டின் இன்றியமையாமையும் மக்கட்கு உணர்த்தப் பெறுகின்றன. இதனை மனதிற்கொண்டு மரபு போற்றும் முகத்தான், செந்தமிழாற் சிவநெறி புரந்தருள் செய்யும் ஆதீனத்து இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள் "சண்டேசுவரர்" குறித்த இந்நூல் அடியேனால் செய்விக்கப்படத் திருவுளம் பற்றினார்கள் அவ்வருளாணையின் வழி முன் பவனி வந்த நூலமைதியைப் போற்றிக் காத்துத் தொடரும் வகையாக இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நூலில், முன்வந்த வெளியீடுகளின் அமைப்பைப் பின்பற்றி சிவாலயங்களில் சண்டேசுவர சந்நிதி அமைப்பு, பூசைமுறை, சண்டேசுவரர் பூசைத் தத்துவம், சண்டேசுவரர் உருவ வகைகள், ஆலயங்களில் தொனி, சண்டேசுவரர் யமினி / நீலி / தர்மநீதி சண்டேஸ்வரி கும்பசண்டர்

சுமித்ர சண்டர், தேஜஸ் சண்டர் நிறுவுதல், ஆயுத வகைகள், பஞ்சாயதன சண்டேசர், திருவுருவங்களின் அளவுகள், சண்டேசர் வரலாறு; சண்டேசர் தலச்சிறப்புகள். ஆகமங்கள் வழி சண்டேசுவரர் ஸ்தாபனம், சிற்பக்கலையில் அறிய வேண்டிய நுண்பொருள்கள், நான்கு யுகங்கள் வகை அமையும் சண்டேசுவர உருவமைதிகள், சிற்ப நூற்களில் காணும் உருவமைதிகள், அருள் செய்மூர்த்திகள் நிறுவப்படும் வகை, திருக்கோலங்கள், சிற்ப விளக்கங்கள் (ICONOGRAPHY) மரச்சிற்பங்கள், சண்டேசுவரர்க்கான நூற்றெட்டு மற்றும் முந்நூறு போற்றி வரிசைகள், தலபுராணங்கள் மற்றும் திருமுறைகளில் சண்டேசுவரர் குறித்துப் போற்றும் பனுவல்கள் ஆகியன தரப்பட்டுள்ளன.

அடியேனது முன்முயற்சி விளைவுகளான ' தட்சிணாமூர்த்தி 1&2" " சோமாஸ்கந்தர் " நூலாக்கங்கள் நடைபெறுகையில் மனமுவந்து உறுதுணையாய் நின்று வழிநடத்திய திருவாவடுதுறை ஆதீனத்து முனிபுங்கவராம் தவத்திரு. புலவர். சுயம்புநாதத் தம்பிரான் சுவாமிகள் இதுபோதும் இந்நூலாக்கத்தின் அனைத்து நிலைகளிலும் உறுதுணையாய் எளிவந்த கருணை கொண்டு வழிநடத்தினார்கள். மேலும் ஆதீனத்தின் ஞானக்களஞ்சியமாம் " சரஸ்வதிமகால் " நூல்நிலையச் சுவடிப்புலம் மற்றும் வடமொழிப் பிரிவின் நூலகர் திரு காஞ்சி. சிவ. சதாசிவம், எம். ஏ., எம். எட்., டி. டி. இ., எம்ஃபில்., டி. எஸ். எம். அவர்களின் பன்மொழிப்புலமை இந்நூலின் வடமொழிப்பகுதிச் சீரமைப்பு, தமிழாக்கம், ஆகியவற்றில் துணை செய்தது திருவாவடுதுறை ஆதீன அம்பலவாண தேசிகர் நடுநிலைப் பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியர் திரு. எஸ் சிவஞானம் அவர்களும், தஞ்சைத் தமிழ் பல்கலைக் கழக சிற்பத்துறை இணைப் பேராசிரியர் டாக்டர் ஏ. வேலுச்சாமி சுதந்திரன் எம். ஏ. பி. எச். டி., அவர்களும் சண்டேஸ்வரர் குறித்த சிறப்புச் செய்திகளை அளித்து உதவினார்கள். சுவாமிமலை பரம்பரை ஸ்தபதியார் திரு. எஸ். தேவசேனாபதி அவர்களின் மூத்தமகனார் திரு. டி. இராதாகிருட்டிணன் Dip. in Architect அவர்கள் சண்டேசரின் வரைகோட்டுப் படங்களை வரைந்தளித்தார்கள்.

சிறப்பிற் சிறப்பாக பல்வேறு சண்டேச மூர்த்திகளின் 22 நிழற் படங்களின் (Photos - Black & white)படிகளை, இந்நூலினைச் சிறப்பிக்க புதுவை பிரெஞ்சு இந்தியக் கலைநிறுவனத்தின் (French Institute of Indology இயக்குநர் அவர்களும் அந்நிறுவன அலுவலர்களும் அளித்துதவினார்கள் என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். ஆதீன அச்சகமாம் ஸ்ரீ நமச்சிவாயமூர்த்தி அச்சகத்தினர் பெருவிருப்பும் பேரார்வமுங்காட்டி வெளியீடு செய்ய உதவினார்கள். ' மெய்கண்டார் ' திங்கள் இதழ் பொறுப்பாசிரியர் திரு. பா. மகாலிங்கதேசிகர் அவர்கள் ஒப்பீட்டுப் பணியில் பெருந்துணை செய்தார்கள். இவர்களனைவர்க்கும் சீர்வளர்சீர் குருமகாசந்நிதானம் அவர்களின் திருவருளும், சண்டேசப் பெருமான் திருவருளும் சிவனருளும் என்றென்றும் துணை நிற்க என்றும் வேண்டுவதொன்றே செயவல்லவனுயுள்ளேன்.

இந்நூல் 19—3—1993 - பங்குனி - திருவோணம் நன்னாளில் இவ்வாதீனத்து 22-ஆவது குருமகாசந்நிதானம் அருள்திரு அம்பலவாண தேசிக மூர்த்திகளின் பத்தாம் ஆண்டுக் குருபூசை விழாவில் சிவக்ஷேத்திர குருக்ஷேத்திர செந்தமிழ்ப் பரிபாலனம் செய்து சிவஞானச் செங்கோல் செலுத்தியருளும் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் 23-ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி அவர்களின் அருளாணையின் வண்ணம் இம்மங்கல நன்னாளில் வெளியிடப்படுகின்றது

திருவருளும் குருவருளும் இயக்கிட்ட கருவியாய் நின்ற அடியேனால் எழுத்தாக்கம் பெற்ற இந்நூல் அனைவர்க்கும் மெய்ம்மைப் பூசனைப் பயன்பெற அடியேனது ஞானாசிரிய மூர்த்தியாம் சீர்வளர்சீர் தருமகா சந்நிதானத்தின் அருளினை இறைஞ்சுகின்றேன். செந்தமிழ்ச் சைவர்கள் குணங்கொண்டு, கோது பொறுத்து ஞானமாநடராசப் பெருமான் திருவடிப் போதுகளை அடியேன் பற்றிடுமாறு நினைந்தருள வேண்டுகிறேன்.

இந்நூலினை மேலும் செம்மைப் படுத்துவதற்கான கருத்துகளைத் தக்க பெரியோர்களிடமிருந்து பெறப் பெருவிருப்புடையேன்.

குருவருட்பணியில் அடியேன்.

எஸ். நாராயணசுவாமி. எம். ஏ பி எட்,

ஆசிரியர்

திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர்

திருவிடைமருதூர், நடுநிலைப்பள்ளி, திருவிடைமருதூர்.

25—1—93.

உ

Sivamayam

FOREWORD

O! Lord Supreme! Emanating in Seinallur you have gone against your declarations (in Vedas) by accepting the actions of that one (Sri Chandesa) who had cut off the legs of his father for kicking off the milk pot kept for your Holy Bath (Thirumanjana). Can you clarify kindly the cause for this contradictory behaviour? I can't understand what made you to bestow on him (Chandesa) the garland; the Uppercloth (parivattam) worn by you, in token of the great Honour granted to him.

[St. Thirugnana Sambandar]

When Chandesa worshipped the Kshanika Linga, made of sands - as instructed by Him emanating within, his (chandesa's) father kicked off (the milk pot for Thirumanjana). Chandesa instanly cut off his (father's) legs. The Lord Supreme at Appadi bestowed His Grace on Chandesa.

[St. Thirunavukkarasar]

Chandesa cut off his father's legs for kicking off the Pot containing cow's milk, kept for thirumanjana, while worshipping the Kshanika Linga made of Sands. The Lord Supreme made him a chief of his staff and made other celestials worship him ... (Chandesa).

[St. Sundarar]

The pious brahmachari (Chandesa) cut off the legs of that one who obstructed Sivapooja though he was his father. This unforgivable sin incase of others had been accepted as Sivapunya in his case and he was elevated to be worshipped by all other celestials by the Grace of the Supreme - Eswara

[St. Manickavachakar]

All in Tamilnadu do know the fact that the Holy order of Thirukkayilaya paramparai - Thiruvavaduthurai Adheenam-founded by Arul Thiru Namachivaya Desika Moorthigal have

undertaken the holy task of propagating Siddhantha Saivam by upholding the cause of Tamil literature on Siddhantha Philosophy. The Early Maha Sannidhanams put forth their Divine experience and Divine Knowledge through Pandara Sasthras The Sannidhanams patronised the great savants in Tamil Literature esp in Saiva Siddhantha area. The latter responded to that benevalence by their Creativity and produced philosophic works and upheld the banner of the Adheenam in this area. Tamil expositions of Sanskrit Agamic texts; the great commentaries on Siddhantha Sasthras; the commentary - Panchakshara Deepa - on Thirumanthiram - the hardest nut to be cracked; publications of Thirumurais; and Shasthras were the resultant outcome of the patronage. The Saivites as a whole are greatly indebted to the kindness and Grace of the Sannidhanams.

The Lord - Siva the Supreme - has given out the Agamas which spell out the modes of worship of the Lords; His various emanations (Moorthas); Parivara Devathas; the specifications in laying out the temples; the steps to be followed in their consecration; etc. The most important moorthas in daily worship; specific worship and Festivals (Annual and others) are (i) Ganapathi; (ii) (Subrahmanya) Murugan; (iii) Somaskanda (iv) Devi; (v) Sri Nataraja and (vi) Chandesa. These are the Moorthas taken out in procession during festivals Taking this into consideration, with the kind view of enabling the Saivites and others to understand the modes of worship; consecration; the philosophy laid hidden in the tenets of worship; Vrathas and Upasanas - the Adeenam has so far released the publications on (1) Ganapathi; (2) Murugan; (3) Adalvallan; (4) Dhakshinamoorthi and (5) Somaskandar.

The worship of Siva is three fold - (i) Worship of Guru (the preceptor); (ii) Worship of Siva through Aroopa; Rooparoopa; and Roopamurthas; and (iii) the Saints who by their unflinching worship have attained Sivabhodha. Ganapathi & Muruga constitute the Gurumoorthas; Sri. Nataraja and Somaskanda stand for Siva moorthas (ie Sivalinga); Chandesa stands as the chief of saints and devotees, having been accorded that status by Siva Himself. That is why the convention of taking out these Moorthas in procession in Annual Saiva Festivals along with the Devi-Symbol of Grace has come into vogue. Having this in His consideration, Holiness Seer-Valar-Seer Sivaprakasa

Pandara sannidigal, the present Guru Mahasannidanam graciously commanded the publication ofthis volume on Chandesar and entrusted this hard task - (to be carried out) - to me. In obeisiance to the Wish of Mahasannidhanam the endeavour of bringing out the publication of this volume has been attempted

This volume contains (as in the previous works) the place occupied in Temples by Chandesa; the construction and consecration, the modes of worship and philosophy; the iconographical details of chandesa idols in stone; wood and metals - the scales to be adopted in making the icons; consecration of Dhvanischanda; Yamini / Neeli or Dharmaneethi Chandeswari; Kumbhachanda; Sumithra chanda; and Thejaschanda; The place of Chandesa in Panchayatana worship; An account of chandesapurana; An account of the places connected with Chandesa; Agamic details of the consecration ceremony; Various forms of meditation. Yoga chandeswara moorthins; the consecration of Anugraha moorthins The namavalis of Chandesa - the Hundred and eight and the Three hundred; The hymns on Chandesa in Thirumurai's and in Various Sthalapuranas etc. are brought out in this volume.

As usual and as expressed in the previous works by me I am to state again and again that it was the Grace of Gurumahasannidhanam that made me do this task and I was a mere tool. As hitherto Thavathiru. Pulavar Swayambhunatha Thambiran of the Adeenam. again condescended to be my guide throughout. The credit for bringing all the accumulated facts on chandesa in a proper order; is due to his kind and voluntary guidance. The multilingual efficiency of Thiru C S, Sadasivam, M A, M. Ed, M Phil (P. G D T E.); D S M., the Librarian of "Saraswathi Mahal" - Adheenam Library continued to be a constant help in shaping the Sanskrit Section of this volume and in the Translation of Sanskrit section into Tamil. Thiru. S Sivagnanam the former Headmaster of T. A. A. D. Middle School, Thiruvidaimarudur, and Dr. A. Veluchamy Swathanthiran, M A., Ph. D., helped me in compiling the factors of this Volume. Thirn. D Radhakrishnan; Dip. in Architect son of Thiru S. Devasenapathi, hereditary Sthapathiars - did a great help in the drawings (Line drawings) of Chandeswarar.

A special mention is due to the Director of the French Institute of Indology, Pondicheri and Scholars of the Institute for

permitting the use of "Photo stats of the various Prathimas of Sri. Chandeswara. As usual, Thiru. B Mahalinga Desikar, Editor in charge - Meikandar rendered a great help in publishing this volume. They did the arduous task with a constant and benevolent smile. I can only pray that the Grace of Gurumahasannidanam; Sri Chandeswara and Sri Gnanama Natarajamoorthi should be their constant Guardian and bestow all benevolence on all mentioned above The combind efforts of all made it possible for the release as the Souveneir on the 10th Gurupooja of Arul Thiru Ambalavana Desiga murthigal the 22nd Mahasannidanam on 19—3—1993 Once again, being my bounden duty. I submit my most humble obeisciences to Seer-Valar-Seer Gurumahasannidanam, my Gnanacharya moorthi - for His constant Benevolonces bestowed on me.

Suggestions for the improvement on this volume from Luminaries in the field are always welcome.

A humble servant in the Service of
GuruMahasannidhanam,

Thiruvidaimarudur.
25—1—1993.

S. NARAYANASWAMI, M.A., B.Ed.,
Asst. Teacher,
T. A. A. D. Middle School, Thiruvidaimarudur

உ

சிவமயம்

சண்டேசுவரர்

சிவாலய அமைப்பும் - சண்டேசுவரர் வழிபாடும் :

"அங்கண் முன்னை அர்ச்சனையின் அளவின்தொடர்ச்சி விளையாட்டாய்
பொங்கும் அன்பால் மண்ணிமணல் புளினக் குறையில் ஆத்தியின்கீழ்ச்
செங்கண் விடையார் திருமேனி மணலால் ஆக்கிச் சிவாலயமும்
துங்கநீடு கோபுரமும் சுற்று லயமும் வகுத்தமைத்தார்."

- பெரியபுராணம்

உலகத்து உயிர்களெல்லாம் மேன்மை அடையும் பொருட்டு, கருணைக் கடலாகிய சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிச் செய்த நூல்கள் வேத சிவாகமங்களாகும். வேதம் பொது நூல் எனவும், சிவாகமங்கள் சிறப்பு நூலெனவும் சைவத் திருமுறைகள் கூறும். *

சிவாகமங்கள் :

ஆ + கமம் = ஆகமம் என்பது ஆன்மாக்கள் மோட்சமடைய மலநாசம் செய்விப்பது என்று பொருள். உற்பத்தி (சிருஷ்டி), காலத்தில் இறைவனாகிய சிவபெருமான் ஆன்மாக்களுக்குப் புருஷார்த்தம் சித்திக்க வேண்டியதன் பொருட்டு இந்த ஆகமங்களைச் செய்தருளினர் என்று ஞானிகள் கூறுவர்.

* சிவாகமங்கள் மொத்தம் 28 ஆகும் (காமிகம் முதல் வாதுளம் வரை) இவற்றிற்கு உப ஆகமங்கள் 113 உள்ளன. அவ்வாகமங்கள் ஒவ்வொன்றிலும், சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞான பாதம் என நான்கு பிரிவுகள் உள்ளன.

நான்கு பிரிவுகள் :

சரியாபாதத்தில் - பூசைக்குரிய உபகரணங்களும் முறைகளும் சொல்லப்படுகின்றன. கிரியாபாதத்தில் கர்ஷணம் முதல் பிரதிஷ்டை வரையிலுள்ள கிரியைகளும், உற்சவ பிராயச்சித்த, நித்திய, நைமித்திக,

---

* சிவ ஆகமங்களைப்பற்றிய விளக்கம் : ஆதீன வெளியீடு எண் ; 407, "சோமாஸ்கந்தர்" - பக்கம் 23 முதல் 33 வரை.

S. நாராயணசுவாமி, எம். ஏ., பி. லிட்.

காம்ய பூசைகளும், சமய, விசேஷ, நிர்வாண தீட்சைகளும், வர்ணாச்ரம தர்மங்களும் கூறப்படுகின்றன. **யோகபாதம்** - பிராணாயாமம் முதலான, லக்ஷணங்களையும் ஆத்மசுத்தி, அந்தர்யாகம் முதலியவைகளையும் கூறுகின்றது. **ஞானபாதம்** - பதி, பசு, பாச லக்ஷணங்களைத் தெளிவுபட விளக்குகின்றது.

ஆகம நூல்கள் - திருக்கோயில்கள் அமைத்தல், கற்சிலை செய்தல், பஞ்சலோக விக்ரகங்கள் அமைத்தல், ஊர் அமைத்தல், குளம்வெட்டுதல், சாலை போடுதல், யாகசாலை அமைத்தல், வீடு கட்டுதல் முதலான எல்லாவற்றிற்கும் உரிய அளவுமுறைகளை விரிவாகக் கூறுகின்றன. இந்த அளவு முறைகள், மானாங்குலம், மத்ராங்குலம், தேஹலப் தாங்குலம் என மூன்று வகைப்படும்.

நகரமைப்பு :

சிவாகமங்கள் தவிர மற்றும் வேதத்தின் அங்கமாகிய கல்பசூத்திரங்களிலும், சிற்ப நூல்களாகிய **பானுசாரம், மயமதம், மகாவிஸ்வகர்மீயம், வாஸ்துவித்யை, காசிபம், அர்த்தசாஸ்திரம், சுக்ரநீதி** மற்றும் **தலபுராணங்களிலும்** அமைப்புமுறைகளைப்பற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இங்குச் சிவாகமங்களில் காணப்படும் விளக்கங்களைக் காணலாம்.

*** கால நிர்ணயம் :**

நல்ல சுபகரமான உத்தராயணத்தில் மார்கழி, மாசி மாதங்கள் நீங்கலாக சுக்ல பட்சத்தில் பிரதமை, சஷ்டி, அட்டமி, நவமி, சதுர்த்தசி திதிகள் நீங்கலாக மற்றைய சுப திதிகளில், அனுஷம், புனர்வசு, மகம், அசுபதி, ரோகணி, சுவாதி, மிருகசீரிடம், திருவாதிரை, ஹஸ்தம், உத்தரத்திரயங்கள், ரேவதி, திருவோணம் முதலிய புண்ணிய நட்சத்திரங்களில் புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் சுப லக்னத்துடன் ஜீவதிருஷ்டிகளுடன் கூடிய சுப வேளையில் அரசன் அல்லது எஜமானர் கிராமம் முதலியவைகளில் ஜன்ம நட்சத்திரங்களுக்கு அனுகூலமான தினங்களில் கருதிய காரியங்கள் தொடங்கப்பெறுதல் வேண்டும்.

கிராம நகர பேதங்கள் :

இவை நகரம், பட்டணம், துர்க்கம் அல்லது சேனாமுகம், ராஜதானி, கேடம், கர்வடம், சிபிரம், புரம், குடிகம், கிராமம் என்று பத்து விதங்களாகச் சொல்லப்படுகின்றன;

மேலும் பூமி பரீட்சை, நீர்பரீட்சை, தான்ய பரீட்சை, திக் பரீட்சை அல்லது சங்கு ஸ்தாபனம், ஆயாதிப் பொருத்தம், வாஸ்து விந்யாஸம், கிராம நகர விந்யாஸம் ஆகியனவும் கூறப்படுகின்றன.

---

* '' திருக்கோயில் '' - இதழ் - ஆலய - நகர அமைப்புக்கள்.

- சிவஸ்ரீ எம். ஐயாமணி சிவம் - திருவாடானை,

மேலேகண்ட பரீட்சையின்படி பூமியில் விளங்கும் கிராமங்கள், நகரங்கள், பட்டணங்கள், வீதிகள், ஆலயங்கள் ஆகியவற்றின் அமைப்புக்கள் பன்னிரண்டு விதங்களாகக் கூறப்படுகின்றன. அவைகள் 1) தண்டகம், 2) ஸ்வஸ்திகம், 3) பிரஸ்தரம், 4) பிரகீர்ணகம், 5) ஸம்பத்காம் அல்லது ஸர்வதோபத்ரம், 6) பராகம், 7) பத்மகம், 3) ஸ்ரீ பிரதிஷ்டிதம் அல்லது சதுர்முகம். 9) ஸ்ரீவத்ஸம், கார்முகம், 10) வைதிகம், 11) நந்தியாவர்த்தம், 12) கும்பகம்.

வீதிகள் அமைப்பு, வீடுகள் அமைப்பு, ஆலய அமைப்பு, ஆகியவற்றிற்கு தண்டம் என்ற அளவினைக் கைக்கொள்கின்றனர். இந்த அளவு அஜிதாகமத்தில் காணப்படுகிறது,

தண்டம் என்ற அளவுகோல் விவரம் :

பரமாணு	8	கொண்டது	1 அணு
அணு	8	,,	1 ரேணு
ரேணு	8	,,	ஒருரோமம்
ரோமம்	8	,,	1 கலிஷுகா
கலிஷுகா	8	,,	1 யூகம்
யூகம்	8	,,	1 யவம்
யவத்தின் குறுக்களவு	8	,,	1 அங்குலம்
அங்குலம்	12	,,	1 விதஸ்தி
விதஸ்தி	2	,,	1 ஹஸ்தம்
ஹஸ்தம்	2	,,	1 தனுர்முஷ்டி
தனுர்முஷ்டி	2	,,	1 தண்டம்
தண்டம்	2	,,	1 ராஜதண்டம்
ராஜதண்டம்	2	,,	1 பிரமதண்டம்.

சிற்ப அளவுமுறைகள் :

ஒவ்வொரு நாடும் தனக்கெனப் பல அளவைகளை வகுத்துக் கொண்டிருக்கிறது. இவ்வளவைகள் துறைக்குத் துறை வேறுபட்டிருப்பதையும் காண்கிறோம், ஆங்கிலேயர்கள் அங்குலம், அடி, கெஜம், பர்லாங்கு, மைல் என்ற நீட்டலளவைகளை வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். பிரெஞ்சுக்காரர்கள் சென்டி மீட்டர், மீட்டர், கிலோ மீட்டர், முதலான அளவுகளைக் கையாளுகிறார்கள்.

*ஆங்கில அளவை முறை தெரிந்த இன்றைய சிற்பிகளும் முதலில் பண்டைய அளவுகளில் கோயில், படிமம் ஆகியவற்றின் அளவுகளைக் கணித்து நிர்ணயித்து அதன் பிறகு தான் ஆங்கில அளவைகளில் மாற்றி வழங்க முடியும், சிற்பத் துறைகளில் ஈடுபட்டோருக்கு இது நன்கு புலப்படும். மேலும் சிற்பத்துறையில் பணிசெய்வோர் பண்டைய அளவுகளை நன்கு தெரிந்து தெளிதல் அவசியமாகும்.

அணு :

சிற்பத்துறையில் கையாளப்பெறும் அளவை பரமாணுவிலிருந்து தொடங்குகிறது. எந்த அணுவை — நுண்மையான பொருளை — கண்களால் நாம் பார்க்க முடியாதோ அதற்குப் பரமாணு என்று பெயர். ஆனல் இப்பரமாணு மாமுனிவர்களின் கண்களுக்கு மட்டுமே புலப்படும். என்று '' மான சாரம் '' எனும் நூல் கூறுகிறது. ஓர் ஆங்கில அங்குலத்தின் 190650 பாகங்களில் ஒன்று அணுவின் அளவெனில் நமது கண்களுக்குப் புலப்படாதன்றோ ! ஆனல் அணுவின் அளவைப் பற்றிப் பேசும் வேறு பல சிற்ப நூல்கள் இதனை வீட்டுக் கூரைகளிலிலுள்ள துவாரங்களின் இடைவெளிகளின் வழியாக ஊடுருவிப் பாயும் சூரியக் கதிரில் மிதக்கும், நுண்ணிய துகள் என்று கூறுகின்றன. இதனை ஆதாரமாகக் கொண்டு பெருகும் மற்றைய அளவைகள் நமது கண்களுக்குப் புலப்படக் கூடியனவே ஆகும்.

அணுவிலிருந்து முளைத்த அளவைகள்: (அங்குல வாய்ப்பாடு)

8	பரமாணு	—	ஒருதேர்த்துகள்
8	தேர்த்துகள்	—	ஒரு மயிர் நுனி
8	மயிர் நுனி	—	ஒரு ஈர்
8	ஈர்	—	ஒரு பேன்
8	பேன்	—	ஒரு யவை
8	யவை	—	ஒரு அங்குலம்

யவை:

*யவை என்பது ஒரு தானியத்தின் பெயர். சிற்ப நூல்கள் இதனை நெல்என்றே கூறுகின்றன. இவ்வளவிற்கு ஒத்திருக்கும் நெற்கள்


---

*இப்பகுதி '' சிற்ப அளவைகள் — வை. கணபதிஸ்தபதி 2 வது உலகத் தமிழ்மகாநாடு — கையேடு பக்கம் 250 - 254.

* ஆராய்ச்சியாளர்கள் '' யவை '' என்பதனை கோதுமை என்றும் பார்லி என்றும் கூறுவர்.

அங்குல வாய்ப்பாடு, விரல் வாய்ப்பாடு — '' மானசாரம் '' நூலில் விரிவாகக் காணலாம்.

விமானமும் மனித உடல் அமைப்பும் ஒன்றே என்பதை
விஸ்வகர்மீய வாஸ்து சாஸ்திரம் பின்வருமாறு கூறுகிறது :



DESIGN OF VIMANAM ILLUSTRATING HUMAN FORM.

உபபீடம்	—	பாதம்
அதிஷ்டானம்	—	அடிமுழங்கால் முட்டி
பாடவர்க்கம்	—	கைகள்
கும்ப பஞ்சரம்	—	உதரம் (தொப்புள்)
பிரஸ்தாரம்	—	தோள்
கண்டம்	—	கழுத்து
சிகரம்	—	தலை, முகம்
உஷ்னிஷம்	—	முடிந்த தலைக்கேசம்

செந்நிறம் பொன்னிறம், வெண்ணிறம் வாய்ந்தவை என்றும் பெருநெல் என்றும் சௌகந்தி என்ற பெயருடைய நெல் என்றும் நூல்கள் கூறுகின்றன. "சௌகந்தி" என்ற பெயர் இன்றளவும் தஞ்சை மாவட்டத்தில் வழங்கி வருதலைக் காணலாம்.

அங்குலம்:

அங்குலம் என்ற சொல் அங்குல் என்ற வடமொழிச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். அங்குலீ என்றால் விரல் எனப் பொருள் படும். தமிழ் நாட்டுச் சிற்பிகள் இன்றும் அங்குலம் என்ற சொல்லுக்கு விரல் என்றே கூறுகின்றனர். சிலப்பதிகாரம், மாதவி நடனமாட அமைக்கப்பெற்ற அரங்கத்தை அளவிட உபயோகித்த அளவுகோல் 24 விரல் கொண்டதாகுமெனக் கூறுகின்றது. அன்று போல் இன்றும் 24 விரலளவு கொண்டதே ஒரு முழமாகும் என்பது இங்குக் கவனிக்கத் தக்கது.

விரல் வாய்ப்பாடு:

8 அணு	—	ஒரு தேர்த்துகள்
8 தேர்த்துகள்	—	ஒரு இம்மி
8 இம்மி	—	ஒரு எள்ளு
8 எள்ளு	—	ஒரு நெல்
8 நெல்	—	ஒரு பெருவிரல்

மானுங் குலம்:

"மானசாரம்" என்ற சிற்பநூலில் காணும் வாய்ப்பாட்டில் 8 யவை கொண்ட அளவு ஓர் அங்குலமெனக் கண்டோம். இவ்வங் குலத்திற்கு மானுங்குலம் என்று பெயர், மானுங்குலம் என்பதற்குப் பொதுவாக அளப்பதற்குரிய அங்குலமென்றே பொருள்படும். இஃது ஆங்கில அங்குலம் 1 ⅜ கொண்ட நீள அளவையாகும்.

மூன்று பிரிவுகள்:

இத்தகைய மானுங்குலம் மூன்று சிறு பிரிவுகளுடையது. (1) 8 யவை கொண்ட அங்குலம் உத்தமாங்குலம் (பெருவிரல்) என்றும் (2) 7 யவை கொண்டது மத்தியமாங்குலம் (இடைவிரல்) என்றும் (3) 6 யவை கொண்டது கன்னியசாங்குலம் (கடைவிரல்) என்றும் சொல்லப்படும். அடுத்து விரல் அளவையிலிருந்து பெருகும் பெரு அளவைகளை மானசாரம் கீழ் வருமாறு கூறுகிறது.

12 விரல் நீளம்	—	ஒரு விதஸ்தி
2 விதஸ்தி	—	ஒரு கிஷ்குமுழம்

கிஷ்கு முழமானது 24 விரல் நீளம் கொண்டதென்பது இதிலிருந்து தெரிகிறது. இதனையே சிற்பமுழம், தச்சுமுழம் என்று கூறுவர். இச்சிற்ப முழமானது ஆங்கில அளவில் 33 இஞ்சு ஆகிறதென்பதை அறிதல் வேண்டும்.

இங்ஙனம் 24 விரல் கொண்டது ஒரு கிஷ்கு முழமென்றும். 25 விரல் கொண்டது பிராஜாபத்ய முழமென்றும், 26 விரல் கொண்டது தனுர் முஷ்டி முழமென்றும், 27 விரல் கொண்டது தனுர்கிரஹ முழமென்றும் பல்வேறு அளவைகள் கூறப்பட்டிருக்கின்றன. இம்முழங்களை எச்சந்தர்ப்பங்களில் உபயோகப்படுத்த வேண்டுமென்பதை மானசாரம் கூறுகிறது. * மேலும் 4 முழ நீளம் அளவைகொண்ட அளவையினை தனுர் தெண்டம் அல்லது தெண்டம் என்றும், 8 தெண்டம் கொண்ட நீள அளவை ரஜ்ஜு (கயிறு) என்றும் மானசாரம் உணர்த்துகின்றது. இந்த அளவையில் உட்பட்ட முழம் 24 விரல் கொண்டமுழம் என்பதை மறக்கலாகாது.

கிஷ்கு முழம்:

யானம், சயனம் ஆகிய பொருள்களை கிஷ்கு முழத்தால் அளத்தல் வேண்டும். யானம் என்பது வாகனம் ஆகும். அதாவது நம்மை ஏற்றிச்செல்லும் வண்டி, சகடம், சப்பரம், தேர், பல்லக்கு முதலியனவாகும்.

சயனம் என்பது பலகாசனம், மஞ்சம், கட்டில், தொட்டில், ஊஞ்சல், நாற்காலி, படுக்கை, இடுக்கைகளை உணர்த்தும். இவைகளை 24 விரல் நீளம் கொண்ட கிஷ்கு முழத்தால் அளத்தல் வேண்டும்.

பிராஜாபத்ய முழம்:

விமானம் என்று பொதுப்பெயரால் அழைக்கப்படும் வீடு, மாளிகை, அரண்மனை, கோட்டை முதலிய கட்டடங்களை 25 விரல் அளவு கொண்ட பிராஜாபத்ய முழத்தால் அளத்தல் வேண்டும்.

தனுர் முஷ்டி முழம்:

வாஸ்துக்களை (field ground) 26 விரல் கொண்ட தனுர் முஷ்டி முழத்தினால் அளத்தல் வேண்டும்.

தனுர் கிரஹ முழம்:

நகரம், கிராமம், பட்டணம் முதலியவைகளை தனுர் கிரஹ முழத்தினால் அளத்தல் வேண்டும்.

---

* சிற்பஅளவைகளை மானசாரம், மயமதம், காமிகாகமம், காஸ்யபம், விசுவகர்மீயம் முதலான நூல்களில் விரிவாகக் காணலாம்.

மயமத சிற்பநூலில் :

யானம், சயனம் இவ்விரண்டையும் கிஷ்கு முழம் அல்லது விதஸ்தி (12விரல்) யினுலும், விமானங்களை பிராஜாபத்ய முழத்தினுலும், வாஸ்துவை தனுர் முஷ்டி முழத்தினுலும், கிராமத்தை தனுர் கிரஹமுழத்தினுலும், நகரம், பட்டணம், நிகமம் (town) கேடம் (Small town) முதலியவற்றைத் தெண்டத் தினுலும், சிறு பொருள்களை விரல் அளவையினுலும், மிகச் சிறிய பொருள்களை யவையினுலும் அளத்தல் வேண்டும்.

காமிகாகமத்தில் :

மண்டபம், வீடு, மாளிகை, மன்றம், சாலே, பெரும் சாலே முதலிய வற்றைப், பிராஜாபத்ய முழத்தினுலும், பட்டணம் – அரண்மனை-குளம் கோட்டை முதலியவற்றைத் தனுர் முஷ்டி முழத்தினுலும், ரதவீதி - பிராகாரம் ஆகியவற்றை தனுர் கிரஹ முழத்தினுலும், யானம் - சயனம் இவற்றை கிஷ்கு முழத்தினுலும் விதஸ்தினுலும், லிங்கம் - பிரதிமை - துவஜஸ்தம்பம், குளிகை முதலியவற்றை விரலினுலும், கிராமம் – நகரம் – பட்டணம் முதலியவற்றை தெண்டத்தினுலும், சிறு பொருள்களை யவையினுலும், க்ஷேத்ரம் (field) அத்வானம் (Road) முதலிய வற்றை ரஜ்ஜுவினுலும் அளத்தல் வேண்டும்.

பொது விதி :

மேற்குறிப்பிட்ட அனைத்தையும் கிஷ்கு முழத்தினுலேயே அளக்கலாம் என்று மேற்குறிப்பிட்ட முப்பெரும் நூல்களிலும் பொது விதி காணப்படுகிறது.

முழக்கோலுக்குரிய மரங்கள் :

மானசாரம் நூல் முழக்கோல், தெண்டம், ரஜ்ஜு முதலிய அளவுகோல்களைச் செய்ய வேண்டிய மரங்களைக் கூறுகிறது. வன்னி, சாகை, கருங்காலி, புளி, நெல்லி, பாலே முதலிய மரங்கள் ' முழக்கோல் ' செய்ய ஏற்ற மரங்களாகும். கமுகு, மூங்கில் இவ்விரண்டும் தெண்டக் கோல் செய்வதற் கேற்றவையாகும்.

வேறுநூல்களில் :

சந்தனம். தேவதாரு, கருங்காலி, தேக்கு, முருக்கு, கமுகு, மா, பனை, வேங்கை, புளி, சண்பகம், முதலிய மரங்களையும், ஏற்றுக் கொள்ளலாம் என்று கூறப்படுகிறது. பொன், வெள்ளி, தாமிரம், இரும்பு ஆகிய உலோகங்களிலும் முழக்கோலேச் செய்யலாம்.

தாமரைக்கொடி. தென்னை ஈர்க்கு முதலியனவும் அளவு கோல் களாகப் பயன் படுத்தலாம். இன்றும் தென்னை ஈர்க்கினை தற்காலிக அளவுகோலாகப் பயன்படுத்து கின்றனர்.

காமிகாகமத்தில் முழக்கோல் செய்முறை:

தகுந்த மரத்தைத் தக்க அளவில் தெரிந்தெடுத்த பிறகு அதனை மூன்று மாதகாலம் நீரில் ஊறவைத்தல் வேண்டும். பிறகு அதனை வெளியிலெடுத்துக் கழுவித் துடைத்து உலரவைத்து தச்சனைக் கொண்டு சோற்றுப் பகுதியினை நீக்கி உறுதியான பாகத்தில் ஒரு முழ நீளமும் ஒரு விரல் அகலமும், அரை விரல் கனமும் உள்ளதாக நன்கு செதுக்கி அளவுக் குறிகளை இடுதல் வேண்டும். அளவு கோலின் இருமுனைகளிலும் உலோகப் பூண்களைக் கட்டவேண்டும் என அவ்வாகம நூல் கூறுகிறது.

அளவுகோல்கள் வரைதல் :

செதுக்கி வடிவாக்கிய கோலை 24 விரல் நீளம் உள்ளதாக நறுக்குதல் வேண்டும். அரைமுழம், கால்முழம், அரைக்கால் முழம், ஒரு விரல் முதலிய குறிகளைக் குறித்தல் வேண்டும் இது " கிஷ்கு " முழமாகும்.

'பிராஜாபத்ய முழம்' 25 விரல் நீளமுடையது. இவ் அளவு கொண்ட கோலை நறுக்கி அதனை 24 பாகங்களாகப் பிரித்தல் வேண்டும். முன்னையதைக் காட்டிலும் பின்னையது 1 விரல் கூடினதல்லவா? அந்த ஒரு விரல் 24 பாகங்களாகப் பிரிந்து ஒவ்வொரு விரலுடன் $\frac{1}{24}$ கூறு சேர்ந்து விடுகிறது. எனவே பிராஜாபத்ய முழத்தை 24 கூறு செய்வதில் இந்தப் பின்னவிரல் நம்மை அறியாமலே கணக்கில் சேர்ந்து விடும். இங்ஙனம் எத்தனை விரல் நீளமுடைய முழமாயினும் அதனை 24 பாகங்களாகக் கொண்டு, $\frac{1}{2}$ $\frac{1}{4}$ $\frac{1}{8}$ $\frac{1}{24}$ முழக் கூறுகளை வரைந்து கொள்ளுதல் வேண்டும்.

கயிறு (ரஜ்ஜு) திரித்தல் :

தேங்காய் நார், தெர்ப்பைபுல், ஆலமர உரி, பருத்திநூல், பட்டு நூல், பனை நார் முதலியவை ரஜ்ஜு செய்வதற்கேற்ற பொருள்களாகும். திரிக்கப் பெற்ற கயிறு முப்பிரிவுகளை யுடையதாகவும் ஒரு விரல் பருமனுள்ளதாகவும் முடிச்சுகள் இல்லாமலும் இருத்தல் வேண்டும்.

சிதம்பர முழம் :


திருக்கோயில் கட்டடக்கலைக்கும் சிற்பச் சிறப்புக்கும் புகழ் பெற்ற சிதம்பரம் கோயிலை 25 விரல் நீளமுள்ள பிராஜாபத்ய முழத்தால் கட்டியுள்ளார்கள். இம்முழம் ஆங்கில அங்குலம் $34\frac{7}{8}$க்குச் சமமையான அளவினதாகும். சிதம்பரம் தலத்தைச் சுற்றியுள்ள கோயில்களும் பிராஜாபத்ய முழத்தால் கணக்கிட்டுக் கட்டியுள்ளனர். தற்போது, பிராஜாபத்ய முழம் என்ற பெயர் மறைந்து 'சிதம்பர முழம்' என்று அழைக்கப்படுகிறது.

தஞ்சை முழம் :

காண்போர் வியக்கும் வண்ணம் அழகுடையதாயும், சிற்பங்களின் சிகரமாயும் உள்ள தஞ்சைப் பெருங்கோயிலை நிருமாணிப்பதில்

ஏகதள (ஒருமடி) விமான அமைப்புடன் விளங்கும் திருக்கோயிலின் அமைப்புமுறை :

(ஸ்தூபி முதல் உபானம் வரையிலான பகுதிகள்)



சிற்பிகள் கையாண்ட முழம் சிஷ்கு முழமாகும். இது ஆங்கில அங்குலம் 33க்குச் சமதையான அளவாகும்.

இத் திருக்கோயிலில் "தெண்டப் பிரமாணத்தைக்' காட்டும் கல் ஒன்று அந்த ஆலயத்தின் முன் மண்டபத் தெற்குப் படியினருகில் காணப்படுகிறது. இதனில் வரை கோடுகள் காணப்படுகின்றன. இதன் நீளம் 11 அடி சிஷ்கு முழத்தால் 4 கொண்டது. இது ஒரு தெண்டத்தின் அளவாகும். இதனையே அக்கால மக்கள் அசல் அளவாகக் கொண்டனர் என்பது உண்மையாகும்.

திருவண்ணாமலை முழம் :

அண்ணாமலையான் திருக்கோயிலின் கோபுரங்கள் யாவும் சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள லக்ஷணங்களை ஒரு சேரக்கொண்டு விளங்குவனவாகும். இது வருங்காலச் சிற்பிகளுக்கு ஓர் வரப்பிரசாதமாகக் காட்சியளிக்கின்றது. இத்திருக்கோயிலினைச் சமைத்த சிற்பி உத்தம சிஷ்கு முழத்தாலேயே (33 அங்குலம் கொண்ட முழக்கோல்) அளவிட்டுக் கட்டியுள்ளார். * இச் சிற்பியின் திருவுருவத்தையும் இவரருகில் முழக்கோலின் பிரதி ஒன்றினையும் கல்லிலே வடித்துள்ளனர். இத்தகைய சிற்பியின் உருவம் மற்றும் அளவு கோலை திருவாவடுதுறையிலும் காணலாம்.

மதுரை, பழனிக்கோயில் முழம் :

சிற்பத் துறையில் எத்தகைய சந்தேகம் எழுந்தாலும் மதுரைக்குச் சென்றால் (ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில்) நிவர்த்தியாகும் என்பது சிற்பத்துறை மூதாதையர் வாக்காகும். இவ்வாலயத்தை நிறுவிய ஸ்தபதி எடுத்துக் கொண்ட முழக்கோல் "கன்ய சிஷ்கு" முழம் ஆகும்.

24 விரல் கொண்ட சிஷ்கு உத்தம முழமென்றும், 23½ விரல் கொண்ட சிஷ்கு மத்யம முழம் என்றும், 23¼ விரல்கொண்ட சிஷ்கு கன்யச சிஷ்கு என்றும் சிற்பநூல் விதிகூறும். இம்மூன்றில் மூன்றாவது கடைமுழத்தைத்தான் ஸ்தபதி கையாண்டுள்ளார். இந்த அளவு ஆங்கில அங்குலம் 32க்குச் சமமானது ஆகும். இந்த முழமே பழனி க்ஷேத்ரத் திருக்கோயிலின் முழமாகும்.

---

* இதுபோன்றே திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் ஆலயத்தின் முகமண்டபம் இடப்பக்கத் தூணில் இவ் ஆலயத்தைக்கட்டிய சிற்பியின் உருவமும், அருகில் அளவுகோலும் காணப்படுகின்றன. இம்மண்டபத்தில் தான் மாதம் தோறும் "உலக நலன் கருதி" உருத்திர ஹோமம் நடைபெறுகிறது.

அளவைகளின் அதிதேவதைகள்:

முழக்கோல், தெண்டக்கோல் இவ்விரண்டுக்கும் அதிதேவதை விஷ்ணு என்றும், ரஜ்ஜுவுக்கு அதிதேவதை வாசுகி என்றும், பொதுவாக அளவைப் பிரமாணங்களின் அதிதேவதை பிரும்மாவென்றும் மானசாரம் கூறுகிறது.

அளவு கோலின் அடிப்பகுதி "ஸ்வாயம்புவ" ரூபமென்றும் நடுப்பகுதி "இலட்சுமி" ரூபம் என்றும், தலைப்பகுதி "விஸ்வகர்ம" ஸ்வரூபம் என்றும் காமிகாகமம் கூறுகின்றது. இத் தேவதைகளைத் தியானித்த பிறகே அளத்தல் வேண்டுமென மானசாரம் வற்புறுத்திக் கூறுகிறது.

ஆலய அமைப்பு:

மேலே கூறப்பட்ட முறைகளின்படி கிராமங்களின் நடுப்பாகமாகிய பிரம்ம பதத்தில் ஆலயங்கள் அமைத்தல் வேண்டும் (ஊரின் கிழக்கு பாகத்தில் சிவாலயமும், மேற்குப் பாகத்தில் விஷ்ணு ஆலயமும் இருத்தல் வேண்டும்). இந்த ஆலயங்கள் 2 முதல் 5 வரை சுற்றுப் பிரகாரங்களுடனும் நான்கு கோபுர வாயில்களுடனும் நடுவில் விமானங்களுடனும் அமைத்தல் வேண்டும்.

1. பூ பரீட்சை:

கர்ஷணம் (உழவு) செய்தல், சங்கு ஸ்தாபித்தல், வாஸ்துபதம் செய்து பூசித்தல் முதலிய சோதனைகளைச் செய்த பின்னர் ஆலயம் கட்டுதல் வேண்டும்.

2. சல் யோத் தாரம்:

ஆலயம் கட்ட நியமித்துள்ள பூமியை 25 அடி ஆழம் வெட்டி, மண்ணை அப்புறப்படுத்தி விட்டு, ஓடு, கல், ரோமம், எலும்பு முதலிய அசுபத்தைத் தரும் பொருள்களை நீக்கி நல்ல சுத்தமான மணலால் நிரப்புதல் வேண்டும். இவை 4 தண்டம் என்று கூறப்படும் அளவால் அமைத்திடல் வேண்டும்.

3. இஷ்டிகாஸ்தாபனம்:

இதற்கு ஆத்யேஷ்டிகா ஸ்தாபனம் என்று பெயர் (கால் கோள் விழாவாகும்). நான்கு செங்கல்களைப் பூஜை செய்து ஹோமம் முதலியன செய்து குறிப்பிட்ட ஸ்தாபனம் செய்ய வேண்டும்.

4. கர்ப்ப நியாஸம்

திருக்கோயிலின் மூலமூர்த்தி வைக்கும் இடத்திலும் கோபுரங்களில் கால்கள் நிறுத்துமிடத்திலும் சபைகள் முதலானவற்றின் ஈசான்ய பாகத்திலும், விமானங்களில் ஸ்தூபியின் அடிப்பாகத்திலும் கர்ப்ப நியாஸம் வேண்டும்.

தங்கம், வெள்ளி, செம்பு முதலியவைகளில் ஏதாவதொன்றால், நல்ல கனமுள்ள தகட்டால் 25 அறைகள் கொண்டதாக, ஒரு முழம் அல்லது அரைமுழ அளவில் ஒரு பேழை செய்து அதில் நவரத்தினங் களும், தங்கம் முதலிய உலோகங்களும், ஹரிதாரம், வீரம், பூரம், ரசம் முதலிய தாதுப் பொருள்களும் எல்லா வகைத் தானியங்களும் 8 வகை மிருத்திகை (மண்) களும், ஔஷதிகளும், மற்றும் அஷ்ட மங்கலக் குறிப்புகளைக் காட்டும் அடையாள சாமான்களும் வைத்து ஆகமங்களில் கூறியபடி பூஜை செய்து ஸ்தாபித்தல் வேண்டும்.

5. உப பீடம் அமைத்தல்:

குறிப்பிட்ட இடத்தில் திருக்கோயிலின் பிராசாதம் ஹஸ்தம் என்ற அளவையினால் 20 – 30 – 50 அளவுள்ள அகல நீளமுள்ளது உத்தம பிராசாதம், 10 – 12 - 16 ஹஸ்த அளவுள்ளது. மத்யம பிராசாதம், 7 - 8 - 9 ஹஸ்தம் கொண்டது அதம பிராசாதமாகும். அளவு நிர்ணயம் செய்த பிராசாதத்தின் அடிப்பரப்பை 25 பாகம் செய்து 9 பங்கு கர்ப்பகிருஹமும் 16 பங்கு சுற்றுச்சுவர் கனமும் உள்ளதாக அமைக்க வேண்டும். இலிங்கத்தின் அளவைக் கொண்டு பிராசாதம் அமைக்கும்முறையில் மகாலிங்கத்தின் சுற்றளவு3கொண்டது பீடமாகும். அந்த பீடத்தின் அளவு 3 பங்கு கொண்டது கர்ப்பக்கிருஹ அகலமாகும். கர்ப்பக்கிருஹ அளவில் மூன்றில் ஒரு பங்கு சுற்றுச் சுவராகும். அப்படி நிர்ணயம் செய்த பிராசாத கர்ப்பக்கிருஹ அளவை 8 பாகம் செய்து, ஒரு பங்கு சேர்த்துக் கொண்டு உபபீடம் அமைக்க வேண்டும். உபபீடத்தின் உயரம் அகலத்தின் 8 – ல் ஒரு பாகமாக இருத்தல் வேண்டும். இந்த உபபீடம் ஸ்ரீ கரம், லலிதம், பத்ரம் என மூன்று வகைப்படும்.

* அதிஷ்டானம் அல்லது பிராசாதம்:

அதிஷ்டானம், மஸூரகம், விஸ்வதாரம், திருதாலகம் என்ற பெயர்கள் ஒரே பொருளுள்ளவையாகும். இது உபபீடத்தின் மேல் மேலே விமானத்தின் கீழ்ப்பாகம் வியாளம் என்ற வர்க்கம் வரையுள்ளது. இந்த அதிஷ்டானங்கள் சதுரமாகவும், விருத்தமாகவும், கோணங் களாகவும் இருக்கலாம். அதிஷ்டானம், பாதபந்தம், பிரதிபந்தம் என்ற இரண்டு வகையாகக் காணபபடுகின்றது.

பாதபந்தம் என்ற வர்க்கம் - பாதபந்தம், பத்மகம், பத்ம புஷ்கலம், பத்மாஸம் என்ற 4 பகுப்புக்களுடன் கூடியது.

பிரதிபந்தம் என்ற வர்க்கம் - பிரதிபந்தம், பிரதிக்கிரமம், ப்ரகீர்ணகம், பிரதிசுந்தரம், என நால்வகைப்படும் ஆக எட்டு பேதங்

---

* கோயில்களின் பலநிலைகளை (கட்டுமானமுறையில்) ஆதீன வெளியீடு சோமாஸ்கந்தர் நூலில் காண்க - S. நாராயணசுவாமி.

களையுடையன அதிஷ்டான அமைப்புகளாகும். காமிகாகமத்தில் அதிஷ்டான வர்க்கம் பற்றிப் பல வேறு விதமான பஞ்சரங்களும், கர்ண கூடங்களும். கோஷ்டங்களும், முக சாலைகளும் உபரிசாலைகளும் காணப்படுகின்றன. இந்த அதிஷ்டானம் 5, 8, 12, 16 என்ற கோஷ்டங்கள் அமைப்பில் காணப்படுகின்றன.

கோஷ்டங்கள் :

சாதாரணமாக 8 கோஷ்டங்களை உடைய திருக்கோயில்களே அதிகமாக உள்ளன. முன்வாசலின் இரண்டு பக்கத்திலுமுள்ள கோஷ்டங்களில் துவார பாலகர்கள்; தென்புறமுள்ள கோஷ்டங்களில் நிருத்த கணபதி, தட்சிணாமூர்த்தி; மேற்கு கோஷ்டத்தில் விஷ்ணு அல்லது இலிங்கோத்பவர்; வடக்கு கோஷ்டத்தில் பிரம்மா, துர்க்கை முதலான பிம்பங்களை அமைத்தல் வேண்டும்.

அர்த்தமண்டபம் :

இது கர்ப்பக் கிரகத்தின் முன் பக்கம் கருவறையின் பாதியளவாவது, சரியாகவாவது செய்யலாம்.

மகா மண்டபம் முதலியன :


அதற்கு வெளியில் மகாமண்டபம் அல்லது வேத மண்டபம். இது 4, 2, ஸ்தம்பங்களுடன் கூடியதாக இருக்கலாம். இதற்கு வெளியில் ஸ்நபனமண்டபம் அமைத்தல் வேண்டும். அதற்கு வெளியில் விருஷப மண்டபமும், அதனை அடுத்து நிருத்த மண்டபமும், அதற்கு வெளியில் கோபுரத்துவாரமும் அமைத்தல் வேண்டும். மகாமண்டபத்திற்கு வெளியில் உள்ள மண்டபங்கள் 16, 32, 64, 96, 100 கால்களுடன் கூடியனவாகவும் இருத்தல் வேண்டும் என்று நூல்களில் கூறப்படுகின்றன. மேலும் பல ஆலயங்களில் நிறுவப்படும் * மண்டபங்களின் பெயர்கள் சிற்ப நூல்களில் காணப்படுகின்றன. அந்த மண்டபங்கள் நந்தியாவர்த்தம் - 4 கால்கள், ஸ்ரீ பிரதிஷ்டிதம் -

---

* பலமண்டபங்களின் பெயர்கள் - "சிற்பசம்பந்தமான தனிக்குறிப்பேடு" இந்நூலாசிரியரின் கையெழுத்துப்பிரதியிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது.

அர்த்தமண்டபம் (ஒவ்வொரு வார்த்தையின் பக்கத்தில் மண்டபம் என்று சேர்த்துப் படிக்கவேண்டும்), மகா, நிருத்த, முக, ஸ்நபன, கேய, வாத்ய, சோபான, கோபுரத்துவாரசாலா, ஆஸ்தான, யாக. புஷ்ப, பூஜா, விஜய, பிரதக்ஷிண, உத்யான, ஸ்ரீவல்லி, ஸ்ரீசூர்ண கிருஷ்ணகந்த, ஜலக்கிரீடா, சதுரஷ்ட, ஷோடசஸ்தம்ப, சதுஷ்ஷஷ்டிஸ்தம்ப, சதஸ்தம்ப, சஹஸ்ரஸ்தம்ப, கந்த, சுவர்ண, அபிஷேக, அலங்கார, வசந்த, உபசார, டோளா, ரோஹ, அத்தியயன, ஆகம, புராண, தீக்ஷா, வீணு, துவஜா ரோஹண ரதாரோஹண, முதலான மண்டபங்கள்.

துவைதள (இருமடி) விமானத்துடன் விளங்கும் சண்டேசுவரர்
திருக்கோயிலின் வரைகோட்டுப்படம்
(தாராசுரம் - சண்டேசுவரர் கோயில்)



16 கால்கள், வீராஸனம் - 20 – ஸ்தம்பங்கள், ஜயபத்ரம் – 32 தூண்கள், ஸ்ரீயாவர்த்தம் - 36 கால்கள், மாணிபத்ரகம் - 64 கால்கள், விசாலம் - 100 கால்கள் என்ற பெயர்களையுடையனவாகக் கூறப்படுகின்றன. மண்டபங்கள் எல்லாம் பிராசாத உயரத்திற்குக் குறைவாக இருக்ககூடாது.

விமானம் கோபுரம்:

பிராசாதம், விமானம், மேரு என்று பல பெயர்களால் அழைக்கப் பெறும். இது திராவிட, நாகர, வேசரம் என்ற மூன்றுவகையாக 96 பேதங்களில் காணப்படுகின்றது. கழுத்து முதல் வட்ட வடிவமானது வேசரம், கழுத்தடி முதல் எட்டு பட்டையானது திராவிடம், எல்லாமும் சமசதுரவடிவம் நாகரம் எனப்படும். இந்த விமானங்கள் தூங்கானை மாடம், கைலாசம், மந்தரம், நளிநகம், ப்ரவீநகம் என்றெல்லாம் பல பேதங்களுடன் காணப்படுகின்றன.

* ஆலயங்களில் பிரதானமாக ஐந்தும், அதற்குமேலும் கோபுரங்களைக்கட்டுகின்றனர். மத்ய கோபுரம் – கோயிலின் மத்தியில் உள்ளது, பூர்வ கோபுரம் - கிழக்கு, தக்ஷிணகோபுரம் – தெற்கு, பச்சிம கோபுரம் - மேற்கு, உத்தர கோபுரம் - வடக்கு இவைகள் யாவும் சதாசிவனின் ஐந்து திருமுகங்களாக எண்ணுபவரும் உளர்.

பிராகாரங்கள் :

அதிஷ்டானத்தைச் சுற்றியுள்ளது அந்தர்ஹாரம். அதற்கு வெளியில் உள்ளது மத்யஹாரம். அதற்கு வெளியே மர்யாதி. அதன் வெளியில் மகாமர்யாதி என்று பெயர். **அந்தர் ஹாரம்** - ஒரு தண்ட அளவும், **மத்யஹாரமாகிய** - இரண்டாம் பிராகாரம் 2 தண்ட அளவும், **மர்யாதி** - என்ற 3-வது பிராகாரம் 4 தண்ட அளவும், **மகாமர்யாதி** - 7 தண்ட அளவும் உள்ளதாக இருத்தல்வேண்டும்.

மகாமர்யாதிக்கு வெளியில் 4 கோபுரவாயில்கள் இருத்தல் வேண்டும். இரண்டாவது பிராகாரத்தில் அக்னி மூலையில் பாகசாலையும் ஈசானத்தில் யாகசாலையும், கிழக்கு ஈசான மத்தியில் கிணறும், தென்கிழக்கு மத்தியில் வாத்யசாலையும், மற்றும் சுற்றுப்புறங்களில் ஆயுதமண்டபம், புஷ்பமண்டபம் முதலியனவும், குபேர திசையில் சயனஸ்தானமும் இருத்தல் வேண்டும்.

பரிவார மூர்த்திகள் :

பரிவார மூர்த்திகள் யாவும் திருக்கோயிலின் அங்கங்களாகும். கோபுரத்தின் தெற்கே சூரியனும், அதற்குத் தெற்கே பாகசாலையும்,

---

* கோபுரங்களில் 3, 5, 7, 9, 11, துவாரங்களும், 3, 5, 7, 9, 11, கலசங்களும் அதற்கு மேலும் ஒற்றைப் படையில் விளங்கும் கோயில்களின் கோபுரங்களையும் காணலாம்.

தெற்குத் திக்கில் உமையவளும், சிறிது நிருதியை ஒட்டி மேற்கே சோமாஸ்கந்தரும், அதற்குத் தெற்கே விநாயகரும், மேற்குத் திக்கில் ஸ்கந்தரும், வாயுவில் லட்சுமியும் அதற்குக் கிழக்கே **' சண்டேசுவரர் தனிக்கோயிலும் ''**, வடக்கே மகிஷாசுரமர்த்தனியும், ஈசான உத்ரத்திக்கு மத்தியில் நடராஜப் பெருமானும், அதற்கு மேற்கே சந்திரசேகர மூர்த்தியும், வடக்கே கௌரி ஆலயமும், நடேசரின் ஈசானத்தில் சயனு லயமும், கோபுரத்தின் வடக்கே க்ஷேத்திரபாலரும், அதற்கு வடக்கே யாகஸ்தானமும், இறைவன் திருமுன்னே இடபதேவரும், அதற்கு வெளியில் பலிபீடமும் அமைக்கவேண்டும் என்று காரணுகமம் கூறுகிறது. மேலும் விமானங்களில் உள்ள தேவர்களின் விவரமும் 2, 3, பிரகாரங்களில் உள்ள தேவதைகளின் ஸ்தான நிர்ணயங்களும் கூறப்படுகின்றன.

மேற்சொன்ன அமைப்புகளைத்தவிர ஏனைய ஆலயங்களிலும் பரிவாரமூர்த்திகள் மற்றும் பிரதிட்டைகள் யாவும் மற்றைய ஆகமங்களி ஞலும் சிற்ப நூல்களினுலும் கூறப்பட்டபடி அமைந்திருப்பதனை நேரில் கண்டும் அல்லது தல வரலாற்றின் மூலமாகவும் அறியலாம். இருப்பினும் சண்டேசுவர மூர்த்தியின் ஆலயம் தனித்தும், வடக்கு ஆவரணத்தில் தென் திசை நோக்கியவாறும் மூலத்தானத்து அபிடேக தீர்த்தம் விழும் கோமுகியை அடுத்தும் இருப்பதனைக் காணலாம். சிவாலயத்தில் என்றும் சண்டேசுவரர் விளங்குதலால் அவரே சிவதரி சனப்பலனை அருளிவருகின்ருர்.

சிவாலயத்துள் அல்லாமல் சண்டேசுவரரைத் தனிக்கோயிலில் பிரதிட்டை செய்யும் முறை :

இவரது ஆலய பிரதிட்டையானது இருவகைப்படும். 1. ஸ்வதந்திரம் (தனியாட்சி கொண்டவர்), 2. ப்ரதந்திரம் (பரிவாரமூர்த்தி).

ஸ்வதந்திரம் :

சண்டேசுவரர்க்கு மட்டும் * தனிக்கோயில் அமைப்பதாக இருந்தால் இடபத்துடன் கூடியவராகவும், தெற்கு / கிழக்கு / மேற்கு திசை நோக்கியபடியும் தனி விமானம் கொண்டவராயும், அமைக்க வேண்டும். இவரது கோயிலின் பிரகார மண்டபத்தில் (திருவுள்நாழியில்) இவர்க்குரிய எட்டு பரிவார தேவர்களான 1) ருத்ரபக்தர், 2) ருத்ர சண்டர், 3) சண்டபர், 4) மகாபலர், 5) ஸ்தவிரர், 6) டங்கபாணி, 7) ஈச சேவகர், 8) ருத்ரகோபஜர் ஆகியோரைச் சுற்றிலும் அமைத்தல்

---

* சண்டேசுவரர் தனிக்கோயிலில் (ஸ்வதந்திர முறையில் அமைத்தல்) கருப்ப இல்லில் அமைக்கும்போது பக்கத்திலேயே சண்டசக்தியாகிய ''தர்மநீதி''யை அமைத்தல் வேண்டும் என்பது ஒருமுறை எனப் பெரியோர் கூறுவர்.

வேண்டும். இவர்கள் யாவரும் பேருருவுடையாராயும், கூப்பியகரம் உடையாராயும் கைகளின் இடுக்கில் மழுப்படையுடையராயும் விளங்கு வார்கள்.

இவ்வெண்மரும் சண்டேசுவரரின் ஆசனத்தைச் சுற்றிலுமோ அல்லது பலிபீடம் முதலாக அல்லது பலியிடும் இடம் வரையிலுமோ ஆசனத்தில் அமர்ந்தவர்களாக அமைக்க. இவரது கருப்பக்கிருகத்தின் கிழக்குத் திசையில் பலிபீடம் அல்லது இடபதேவரை நிறுவ வேண்டும்.

சண்டேசுவரரின் கருப்பக்கிருக வாயிற்புறத்தில் இருகரமுள்ள வர்களும் தண்டமேந்தியவர்களும் ஆகிய **"சண்டானுகர்" "சண்டபூபதி"** எனும் துவாரபாலகர்களை நிறுவுதல் வேண்டும். முற்கூறிய அனைத்துச் சிலைகளும் மத்யதசதாலம் அல்லது அதமதச தாலத்தில் அமைத்திடல் வேண்டும்.

ஆனால் மேற்சொன்ன இவ்வமைப்புள்ள ஆலயம் எங்கும் இருப்ப தாகத் தெரியவில்லை. காரணம், சண்டேசுவரர் சிவபூஜா நிர்மால்யத்தை ஏற்றுக்கொள்பவராக நினைத்து வழிபடுகின்றோம். ஆகவே தனித்து அமைந்து விளங்கும் ஆலயமாகக் கட்டியமைத்தாலும் அருகிலோ அல்லது தூரத்திலோ இருக்கும் ஓர் சிவாலயத்தின் நிர்மால்யம் கிடைக்கப்பெற்றால்தான் சண்டேசுவரர் ஆலயபூசை நடைபெறும். அந்த எண்ணங்களைத் தம் மனத்திற்கொண்ட பெரியோர்கள் தனித்து விளங்கும் சண்டேசுவரர் ஆலயத்தை அமைக்காமல் சிவாலயத்தினுள் ளேயே பரிவார மூர்த்தியாகப் பிரதிட்டை செய்து வழிபடுகின்றனர்.

சிவாலயங்களில் சண்டேசுவரர் அருள் நிலை:

சிவாலயங்கள் தோறும் சண்டேசுவரர் சந்நிதி விளங்குதலைக் காண்கிறோம். மேலும் இவர் பஞ்ச மூர்த்திகளில் ஒருவர் ஆவார். இவர், விசாரசருமர் எனும் திருப் பெயர் தாங்கி சேய்ஞலூரில் அவதரித்து, ஆநிரைகளை மேய்த்தும் திருவாய்ப்பாடி தலத்தில் தாபர மணலால் இலிங்கம் ஸ்தாபித்து, திருமஞ்சனம் செய்யும் காலத்தில் மறைந்திருந்து பார்த்த தந்தையான எச்சதத்தர் தம் காலால் பாற்குடங்களை இடறியதைக் கண்டு வெகுண்டு தன் அருகிலிருந்த கோலால் (தண்டம்) தண்டிக்க முற்படும் சமயம் தண்டம் சிவத் தியானத்தால் மழுவாகமாறி, தந்தையின் காலைத் துண்டித்து விட்டது. இருப்பினும் விசாரசருமர் மீண்டும் சிவத் தியானத்தில் ஈடுபடும் பொழுது சிவபிரான் இவரது சிவபக்தியினைக் கண்டு * "சண்டேசப்பதம்" தந்தருளினர். இக்காட்சி புராணங்களிலும் பல சிற்பங்களிலும் ஓவியங்களிலும் காணப்படுகின்றன.

---

* இவர் வரலாறு விரிவாகப் பிறிதொரு இடத்தில் இடம்பெறு கிறது.

சண்டேசப்பதம் தந்தவுடனே சிவத்திருமேனியுடன் சிவகணங்களுக்குத் தலைவராயும், திருக்கோயில்களின் நிருவாக உயர் அதிகாரியாகவும், சிவதரிசனப் பலனைத் தருபவராகவும் விளங்கினர். ஆகவே இப்பெருமானரைச் சிவாலயத்தில் வடக்கு ஆவரணத்தில் தென்திசை நோக்கியவாறு அமைத்து வழிபடுதல் இன்றும் மரபாக உள்ளது. இவரை வீரசண்டர் என்றும், சண்டேசுவரர் என்றும் போற்றுவர்.

பஞ்சாயதன வகையில் விளங்கும் சண்டேசுவரர்கள் :

சிவன் ஆலயம், முருகன் ஆலயம், விநாயகர் ஆலயம், சூரியன் ஆலயம், அம்பிகை ஆலயம் ஆகிய இந்த ஐந்து தனி ஆலயங்களில் சண்டேசுவரர், வெவ்வேறு திருப்பெயர்களுடனும், திருவுருவ பேதங்களுடனும் விளங்கியருளுகின்றார். இத்தகைய முறைகளை ஆகமங்களும் சிற்பநூல்களும் சில இடங்களில் கூறுகின்றன.

1. சிவனாலயத்தில் — சண்டேசுவரரின் பெயர் த்வனிச் சண்டர் (தொனிச் சண்டர்) அல்லது வீரசண்டர்
2. முருகன் ஆலயத்தில் — சுமித்ர சண்டர்
3. விநாயகர் ஆலயத்தில் — கும்பச் சண்டர்
4. சூரியன் ஆலயத்தில் — தேஜஸ் சண்டர்
5. அம்பாள் ஆலயத்தில் — சண்டிகேஸ்வரி அல்லது யமுனி சண்டி அல்லது தர்மநீதி (நீலி)

மேற்கண்ட ஐந்து வகைச் சண்டர் (சண்டேசுவரர்) திருவுருவங்கள் அனைத்துக்கும் இரு கரங்கள் உண்டு. முத்திரைகளில் சில மாறுதல்களையும் காணலாம். சண்டேசுவரர்களின் திருவுருஅமைதிகளைப் பிறிதொரு இடத்தில் விளங்கக் கூறப்பட்டுள்ளது.


தனிச்சந்நிதி :

எல்லாச் சிவாலயங்களிலும் சண்டேசுவரப் பெருமானுக்கு ஒரு சிறு தனிச்சந்நிதி உண்டு. அது கருவறைக்குப் புறம்பே அபிடேகத் தீர்த்தம் விழும் கோமுகியை அடுத்து அருகில் அமைக்கப்பட்டிருக்கும். திருக்கோயிலில் சிவதரிசனமும் வழிபாடும் செய்தபிறகு இறுதியாகச் சண்டேசுவரர் தரிசனத்துடன் நமது பிரார்த்தனை நிறைவுபெறுகின்றன. சண்டேசுவரரைத் தரிசனம் செய்து முடிக்காதபோது, சிவதரிசனம் நிறைவு பெறுமையோடு அதன்பயனும் நமக்குச் சித்திப்பதில்லை, எனப் பெரியோர்கள் கூறுவர்.

ஸ்வதந்திர முறையில் (கருவறைத்தனி நாயகராக)

சண்டேசுவரர்

ஆலய அமைப்பு



சிவ நிர்மால்யமானவைகளை இவரது சந்நிதியில் சமர்ப்பித்து சிவானுக்ரகம் பெற சிவச்சிந்தனையுடன் திகழும் சண்டேசுவரர் முன் நம் வருகையைத் தெரிவிக்கும் முகத்தான் மூன்று முறை மெல்லெனக் கையைத் தட்டவேண்டும். இவரை வலம் வருதல் கூடாது.

அரனார்மகனார்: *(பிள்ளையாகும் பெருமை)*

சண்டேசுவரர் சிவபிரானுக்கு மகன்மை முறைமையினராக ஆட்கொள்ளப் பெற்றவர் என்பதனை,

" வந்து மிகைசெய் தாதை தாள்
மழுவால் துணித்த மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே
அரனார் மகனார் ஆயினார் "

எனவரும் பெரியபுராணச் செய்யுள் விளக்கும். சிவபிரானுக்குப் பிள்ளையாகும் பெருமை பெற்றமை பற்றியே, மூத்த பிள்ளையார் (விநாயகர்), இளைய பிள்ளையார் (முருகன்) காழிப்பிள்ளையார் (சம்பந்தர்) என வழங்கும் வரிசை முறையில் வைத்து சேய்ஞலூர்ப் பிள்ளையார் எனச் சண்டேசுவரர் வழங்கப்பெறுகின்றார்.

தொண்டர் நாயகர்:

சண்டேசுவரரே சிவனடியார்கள் அனைவருக்கும் தலைமை உடையவர் ஆவர். தொண்டர்களுக்கு எல்லாம் தலைவாக விளங்கும் சிறப்புடைமை பற்றிச் சண்டேசுவரர்க்குத் " **தொண்டர் நாயகம்** " என்னும் ஒரு பெயரும் உண்டு. இதனை

" சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. "

என்று திருப்பல்லாண்டு போற்றுகின்றது. இங்ஙனம் அடியார்களுக் கெல்லாம் தலைவராகத் திகழ்தல் பற்றியே அடியார்களின் சார்பாளர் (பிரதிநிதி) முறையில் இறைவனின் திருவீதியுலாவில் சண்டேசுவரரும் சேர்ந்து எழுந்தருளிச் சிறப்பித்தருளுகின்றார்.

சிவாலயங்களில் சண்டேசுவரர் பூஜா முறை

சிவாலயங்களில் சண்டேசுவரர் பூஜா முறை:

சிவாலயங்களில் விளங்கும் பிரதான மூலமூர்த்திக்கு (இலிங்கம்) செய்ய வேண்டிய அனைத்து பூஜைகளையும் நிறைவு செய்தபிறகு * சண்டேசுவரர் ஆலயம் சென்று (தனிக்கோயிலும் தனிச் சந்நிதியும் - வடக்கு ஆவரணம்) சிவபெருமானுடைய நிர்மால்யத்தைக் கொண்டு வந்து சண்டேசுவரருடைய சந்நிதியில் அந்த நிர்மால்யங்களை (பத்ர புஷ்பம், மாலை, பரிவட்டம். நைவேத்யம் முதலான நிர்மால்யங்கள்) தாபித்து சண்டேசுவரருடைய பிம்பத்தைச் சுத்தோதகத்தால் அபிஷேகஞ்செய்து, ஓம் ஹாம் த்வநி: சண்டாஸநாய நம:, ஓம் ஹாம் த்வநி: சண்ட மூர்த்தயே நம: என்று ஆஸனம் மூர்த்தி இவற்றை அருச்சித்துத் தியானிக்க வேண்டும்.

தியானம் வருமாறு:

"இரண்டு கண்களையும், பொன்மை வர்ணத்தையுமுடையவராயும், ஜடா மகுடத்தால் அலங்கரிக்கப்பட்டவராயும், வலது கையில் பரசையும் இடதுகையை ஊறு ஹஸ்தமாகவும், வலது காலைத் தொங்க விட்டுக் கொண்டும், இடது காலைப் படுக்கையாக வைத்துக் கொண்டு இருப்பவராயும், பூணூலால் அலங்கரிக்கப் பட்டவராயும், அதிகமான காந்தியை உடையவராயுமிருக்கும் சண்டேசுவரரைத் தியானிக்கின்றேன் என்பதாம்."

இவ்வாறு தியானித்து, ஓம் ஹாம் த்வநிசண்டாய நம: என்று ஆவாஹனம் செய்து, ஸ்தாபனமுத்திரை முதலிய முத்திரைகளைக் காண்பித்து, தைலம் முதலியவற்ருல் அபிஷேகஞ் செய்து, ஆடை சந்தனம் புஷ்பமாலை முதலிற்யவருல் அலங்கரித்து அருச்சிக்க வேண்டும். ஓம் ஹாம் த்வநி சண்டேசுவராய ஹூம்பட் நம: என்று அருச்சித்து அங்கங்களைப் பூஜிக்கவேண்டும். அது வருமாறு:

அங்க பூஜை :

ஓம் ஹாம் சண்டேசுவராய ஹிருதயாய நம :

ஓம் ஹீம் சண்டேசுவராய சிரசே ஸ்வாஹா,

---

* இப்பகுதி - ஸ்ரீ அகோர சிவாசாரியார் இயற்றிய "சிவாலய நித்திய பூஜாவிதி" என்னும் "ஸ்ரீ பரார்த்த பூஜாவிதி" நூலின் பூர்வ பாகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். - வெளியீடு: சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம் - 1930 - வருடம்.

ஓம் ஹூம் சண்டேசுவராய சிகாய வஷட்,
ஓம் ஹைம் சண்டேசுவராய கவசாய ஹூம்,
ஓம் ஹௌம் சண்டநேத்ராய வௌஷட்,
ஓம் ஹ : சண்டாஸ்திராய பட் என்று

அங்கங்களைப் பூஜித்து, ஈசுவரருடைய நிர்மால்யமான அன்னம். பாநகம் முதலியவற்றையும் தாம்பூலம் முதலியவற்றையும் நிவேதனஞ் செய்து, தூபம் தீபம் அருக்யங்களைச் சமர்பித்து எல்லா உபசாரங்களையும் செய்து பிரார்த்திக்க வேண்டும்.

பிரார்த்தனை :

ஒ சண்டேஸ்வரா! மஹாபக்தரே! சிவத்யானம் செய்பவரே! பரம சிவனது ஆக்ஞையால் அவருடைய நிர்மால்யமானது தேவரீருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது என்பதாம். இவ்வாறு பரமசிவனது ஆணையைத் தெரிவித்து, சண்டேசுவரருடைய மூலமந்திரத்தால் அருக்யஞ் சமர்ப்பித்து, மீண்டும் சண்டரின் மூலமந்திரத்துடன் “ ஹ்ருதயாய ஹூம்பட் ஸ்வாஹா” என்னும் மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு நமஸ்காரஞ் செய்து பராங்முகார்க்யஞ் சமர்பித்து, விசர்ஜனஞ் செய்து, சண்டேசுவரருடைய அஷ்டக ஸ்தோத்ரம் நமஸ்காரம் முதலியவற்றைச் செய்து சத்திக்குத் தக்கவாறு மூலமந்திர ஜபஞ் செய்து “ பரமசிவனது பாத கமலங்களைச் சிந்திப்பவரான ஒ சண்டேசுவரா! உமக்கு நமஸ்காரம். பெருமானே! தாங்கள் பரமசிவனைச் சேவித்த பலனைத் தந்தருளல் வேண்டும்” என்று இவ்வாறு வேண்டிக் கொண்டு மூன்று முறை கைகளைத் தட்டிக் கொண்டு பிரார்த்திக்க வேண்டும்.

சிவாலய மஹோற்சவ காலங்களில் சண்டேசுவரர் உற்சவம் :

மகோற்சவ காலங்களில் இறுதியாக சண்டேசுவரர் உற்சவம் நடைபெறும். இதற்கு அடுத்தநாள் ஆசார்யோற்சவமும் நடைபெறும்.

சண்டேசுவரரை விதிப்படி வஸ்திரம், ஆபரணம், ‘ **மாலை முதலிய சிவநிர்மால்யங்களால்** ” அலங்கரித்துப் பூசித்து சிவிகையிலாவது, கேடகத்திலாவது, ரிஷபத்திலாவது எழுந்தருளச் செய்து (ஆரோகணம் செய்தல்) குடை, சாமரை முதலிய அலங்காரங்களுடனும், சகலவாத்திய கோஷங்களுடனும் திருவீதியினைப் பிரதக்ஷிணமாக (வலம் வருதல்) வந்து அவருடைய ஸ்தானத்தில் (இடத்தில்) தாபித்து சிவோற்சவ பலனைத் தரும்படி பிரார்த்திக்க வேண்டும். இவ்வுற்சவத்தை மனவுறுதி யுடன் செய்பவர்களே சிவோற்சவ பலனை அடைவார்கள்.

சண்டேசுவரர் தத்துவம்

"உறுவது அறிதண்டி ஒண்மணற் கூட்டி
அறுவகை ஆன்ஐந்தும் ஆட்டத் தன்தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழுவால் வெட்டி மாலை பெற்றானே." - திருமந்திரம்-351

"மெய்ம்மையே திருமேனி வழிபடாநிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன் ..."

- திருத்தொண்டத்தொகை

"குலமேறிய சேய்ஞலூரிற் குரிசில்; குரைகடல் சூழ்
தலமேறிய விறல்தண்டி; கண்டீர்; தந்தை தாளிரண்டும்
வலமேறிய மழுவால் எறிந்து; ஈசன்மணி முடிமேல்
நலமேறிய பால்சொரிந்து அலர்சூட்டிய நன்னிதியே."

– திருத்தொண்டர் திருவந்தாதி

ஊனக்கண் பாசத்தினால் மறைக்கப்படுவதால், ஆன்மாவினால் (பசுவினால்) உணரப்படாத பதியை, தண்ணிழலாம் அஞ்செழுத்தினை விதிவழி சிந்தித்துப் பாசம் நீங்கி, சிந்தையில் அப்பதி நாடி நிற்க, ஞானக் கண்ணினால் கண்டு, அவனே தான் ஆகிநிற்றலே சிவபூசையின் பயனும். அப்பயனை எய்துதற்கு, முறையினால் அரன், அடியார், ஆலயம் ஆகிய திருமேனிகளில் இறைவன் இருப்பை உணர்ந்து. ஆகமங் கள் விதித்த முறையால், ஐந்தெழுத்தை (கிரியா காண்டங்களின் விதிப்படி)த் தன்னுடலில் விதித்து, தம்முடலைச் சிவஉடலாக்கி (சிவீகரணம்)க் கணித்து அதனில் ஒன்றுவோர் சிவமேயாய் நிற்பர் என்பதே நம் முன்னோர் விதித்த விதியாகும். அவ்வாறு சிவமேயாய் நின்றார் சீவன்முத்தராய் இவ்வுலகின்கண் மற்றோர்க்கு வழிகாட்டி களாய், "அவர், வேடமும், ஆலயம் தானும் அரனெனத் தொழுது நிற்றலும்" அன்றிப் பதமுத்தி பெற்றோராய் சிவஉலகிருத்தலும் இறைவனருள் வழிநடக்கும்.

"அண்ணல் இருப்பிடம் ஆரும் அறிகிலார்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வார்கட்கு
அண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவன் இவனாமே." - திருமந்திரம் - 766

சிவாலயத்தில்

(கலியுகத்தில்) சண்டேசுவரர்

(தோணிச்சண்டர்) - (வீரசண்டர்)



கலியுகம் - சண்டேசுவரர் - (வீரசண்டர்)

திருவாவடுதுறை ஆதீனம்

இவ்வாறு அவனே தானாய் நிற்கும் ஞானநிலையடைய எளிதான வழியும் சொல்வார் திருமூலர்.

" யாவர்க்குமாம் இறைவற் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக் கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே." - திருமந்திரம். 253

எளிய வகையால் தொடங்கி, திருவருள் வழிகாட்டிட, ஒவ்வோரான்மாவும் மேலும் மேலும் சிவபூசனையில் ஒவ்வொருபடியாக மேல் நிலை சென்று, இறுதியில் திருவருளாலே, " மற்றண்ணல் வைத்தவழி கொளும்" போதில் இறையுண்மை அவர் நெஞ்சில் மலரச், சீவனுக் குள்ளே சிவமணம் பூக்கும். சிவமணம் பூத்துமலர, சுத்தசிவமே உள் நின்றுணர்த்துகையில் அவ்வான்மா சிவமாய் நின்றிடும். அடியார் பரவும் அமரர் பிரானை விடியா விளக்கென்று மேவிநிற்கும். மோனச் சமாதியில் இலயித்து நிற்கும். சித்தம் சிவமாகச் செய்தவமும் அவமும் எல்லாம் சிவன்செயலாகும். இத் தத்துவத்தை வாழ்ந்துகாட்டியவர் சண்டேசபதம் பெற்ற விசாரசர்மர். வெளியில் வெளிபோய் விரவிய வாறும், அளியில் அளிபோய் அடங்கியவாறும், ஒளியில் ஒளிபோய் ஒடுங்கியவாறும் உணர்ந்து தெளிந்து சித்தத்தைச் சிவனுக்காக்கி அதனால் சிவசித்தராய் நின்றார் என்பதே திருத்தொண்டர் புராண வழியால் நாமுணரும் உண்மையாகும்.

இதனையே, மெய்ம்மையான ஆகமவழியால், சிவம் விளங்கும் திருமேனியைக் கண்டு, சிவத்தை அதில் ஆவாகித்து, மெய்ம்மையான திருமேனியை, மெய்ம்மையால் (தானுணர்ந்த வழியால்) பூசித்து வழிபட்டு, அதற்கிடையூறு வந்தது கண்டு, சிவமாய் நின்ற நிலையில் அவ்விடையூற்றை நீக்க அருகில் கிடந்த கோலை எடுக்க, அவர் சிவீபூத நிலையில் நின்றமையால், அக்கோலும் மழுவாகி இடையூற்றையும் இடையூறு செய்தாரையும் ஒருங்கே விலக்கியது எனச் சேக்கிழார் விரித் துரைத்தார். இந்நிலையினையே

" உரையற்று, உணர்வற்று, உயிர்பரமற்றுத்
திரையற்ற நீர்போல் சிவமாதல் தீர்த்துக்
கரையற்ற சத்தாதி நான்குங் கடந்த
சொரூபத் திருத்தினன் "... (1593) எனவும்,

" தன்மேனி தற்சிவ லிங்கமாய் நின்றிடும்
தன்மேனி தானும் சதாசிவமாய் நிற்கும்
தன்மேனி தற்சிவன் தற்சிவா னந்தமாம்
தன்மேனி தானாகும் தற்பரம் தானே "... (1750) எனவும்,

"அறிவில் அணுக அறிவது நல்கிப்
பொறிவழி ஆசை புகுத்திப் புணர்ந்து
அறிவது வாக்கி அடியருள் நல்கும்
செறிவொடு நின்றூர் சிவமாயி ஞரே."... (1799) எனவும்

திருமந்திரம் எடுத்தியம்புகின்றது. சிவமாய் நின்ற விசாரசருமர் எம்பிரான் திருக்கரங்களால் தீண்டப்பெற்ற (ஒளித்) திருமேனியராய், "நின்ற விதியின் விளையாட்டால் நிறைந்த அரும் பூசனைப் பயனுய்" உடைய நாதனின் திருப்பள்ளித்தாமமும் பரிவட்டமும் நிவேதனமும், தமக்கு உரியதாம் நிலையும், மகன்மை முறையும், கணத்தலைவர் (தொண்டர் தலைமையும்) பதவியும் பெற்ருர். எனவே, சிவபூசையின் பயனைப் பிறர்க்களிப்பாராயினுர் என்பதே சண்டேசர் வழிபாட்டின் தத்துவம் (உட்கிடை). நாமும் அடியார் தலைவராம் சண்டேசர்தமை வணங்கி உய்வோம்.

கிருதயுகத்தில் பிரசண்டர்



சண்டேசுவரர் திருவுரு வகைகள்

சிவாலயங்களில் பஞ்சமூர்த்திகள் என்று போற்றப்படும் கணபதி, முருகன், சிவன், அம்பிகை, சண்டேசுவரர் முதலானோரின் மூலத்தானங்கள் மற்றும் உற்சவத் திருமேனிகள் யாவும் முறைப்படி அமைந்து விளங்குதலைத் திருக்கோயில்களில் இன்றும் காணலாம். சிவாலயங்களின் வரவு செலவுக் கணக்குகளைச் சண்டேசுவரர் பெயரினாலேயே எழுதுவது பண்டைக்காலத்து மரபாகும். மேலும் சிவாலய வழிபாடு செய்யும் அன்பர்கள் சிவனை வழிபட்டபிறகு இறுதியாக இவரது சந்நிதியில் சிவாலய வழிபாட்டுப் பலனை இவர் மூலமாகப் பெறுகின்றனர். மேலும் பிரமோற்சவ காலங்களில் சண்டேசுவரர் இடபவாகனத்தில் ஆரோகணித்து ஐந்தாவதாக எழுந்தருளுவார். பிரத்யேகமாக" சண்டேசுவரர் உற்சவம்" எனும் உற்சவமும் திருக்கோயில்களில் இன்றும் நடக்கின்றது.

குறிப்பாகத் திருவாப்பாடி திருக்கோயிலின் மூலத்தானத்து * இறைவனின் சந்நிதியிலேயே உயர்ந்த மேடைமீது தனிக்கோயிலாக தெற்குநோக்கி விளங்குகின்றார் சண்டேசுவரப் பெருமான். சிவபூசைப் பலனால் சண்டேசப்பதமும் சண்டீசர் எனும் பெயரும் பெற்றார். சண்டீ என்றால் பாதுகாப்பேன் எனப் பொருள்படும். இறைவனுக்கு நிகராக முதன்முதல் மனிதன் இறைத் தன்மையினை அடைந்த முதற்பெருஞ் சீலராக விளங்குபவர் சண்டேசப்பெருமான் ஆவார். இவரது ஆணையின் படியே சிவாலய நிருவாகம் முழுவதும் நடைபெறுவதாக ஐதிகம். இதற்குரிய பல கல்வெட்டுச் சான்றுகள் பல ஆலயங்களில் காணப்படுகின்றன.

பல காலங்கள் :

கலியுகத்தின் முன்னே கருதப்படும் கால யுகங்களில் சண்டேசப் பதம் பெற்றவர் சிலர் உண்டு என ஆகம நூல்களும், சிற்ப நூல்களும் கூறுகின்றன. அவர்கள் எண்ணற்ற பராக்கிரமங்களை உடையவர்களாக விளங்கினார்கள் என்ற கருத்தும் நிலவுகின்றபடியால், நான்கு யுகங்களில் காணப்படும் சண்டேசுவரர் திருவுருவங்கள் பற்றியும் ஏனைய திருக்கோலங்களைப் பற்றியும் இங்கு ஒருவாறுகச் சுருக்கமாகக் காணலாம்.

---

* இவ்வமைப்பில் எந்தச் சிவாலயமும் காணப்படவில்லை. ஏனெனில் சண்டேசுவரர்க்கு உரிய சிறப்புத்தலமாகும்.

ஈஸ்வரப் பட்டத்தில் ஐவர் :

1) விக்னேஸ்வரர் — கணபதி (விக்னங்களைக் களைபவர்)

2) சண்டேஸ்வரர் — சண்டேசுவரர் (சிவனருளைக் கொடுத்துப் பாதுகாப்பவர்)

3) சனீஸ்வரன் — சனி (நவக்கிரகங்களில் ஒருவர்)

4) இராவணேஸ்வரன் - இராவணன் (தவப்பயனால் ஈஸ்வரப் பட்டம் பெற்றவன்)

5) நந்திகேஸ்வரர் — சிவசந்நிதிக் காவலர்

ஈஸ்வரப்பட்டம் பெற்ற ஐவருள் சண்டேசுவரர் ஆகிய விசார சருமர் ஒருவரே மானிடர் ஆவார். கலியுகத்தில் இவர் திருவாப்பாடியில் மண்ணியாற்றங்கரையில் தாவர மணலில் இலிங்கம் அமைத்து வழிபட்டார் என்று திருமுறைகள் கூறுகின்றன. அவ்வகையில் எந்தெந்தப் பொருளால் க்ஷணிக இலிங்கம் அமைத்து வழிபட்டால் என்ன பலன் கிடைக்கும் என்பதனை "சிவரகசியம்" தெளிவுபடுத்துகிறது.

க்ஷணிக இலிங்கங்களும் - பயன்களும் :

ஆற்றுமண்	— பூமிலாபத்தைத்	தரவல்லது
புற்றுமண்	— மோட்சத்தைத்	,,
அன்னம்	— அன்னவிருத்தியைத்	,,
பச்சை அரிசி	— பொருள் லாபத்தைத்	,,
கோமயம்	— வியாதி நீக்கத்தைத்	,,
வெண்ணெய்	— மனமகிழ்வைத்	,,
உருத்திராக்கம்	— ஞானத்தைத்	,,
விபூதி	— சகலசெல்வங்களையும்	,,
சந்தனம்	— சகல இன்பத்தினையும்	,,
மாலை	— ஆயுள் விருத்தியைத்	,,
கூர்ச்சம்	— முக்தியைத்	,,
சர்க்கரை	— விரும்பியதைத்	,,
மாவு	— உடல் வலிமையைத்	,,
பழம்	— சுகத்தைத்	,,
தளிர்	— நல்ல குணத்தைத்	,,
தண்ணீர்	— சகல மேன்மையையும்	,,

திரேதாயுக சண்டேசுவரர்

[விக்ராந்தசண்டர்]



விக்ராந்த சண்டர் - திரேதாயுக சண்டேசவரர்

திருவாவடுதுறை ஆதீனம்

இவ்வாறு க்ஷணிகலிங்கம் ஒன்றைக்கொண்டோ இட்டலிங்கங்களைக் கொண்டோ மந்திரம், கிரியை, பாவனை மூன்றாலும் செய்யப் பெறுவது * ஆன்மார்த்த வழிபாடாகும். கலியுகத்தில் சிவலிங்க பூசையானது சிறந்ததாகப் புகழப்படுகிறது, அதற்கு ஒப்பான புண்ணியம் வேறு ஒன்றுமில்லை என்பது சாத்திரங்களின் நிச்சயமாகும்.

சண்டேசுவரரின் பலபெயர்கள் :

சண்டர், வீரசண்டர், சண்டேசுவரர், சண்டிகேசுவரர்; சண்டேசுவர நாயனார், சேய்ஞலூர் பிள்ளையார். சண்டநாதர், தொண்டர் நாயகர், சிவகணத்தலைவர், ஆதிசண்டர், சதுர்யுக சண்டேசுவரர்கள், சண்டீசன், தண்டேசுவரர், பிரசண்டர், விக்ராந்தசண்டர், விபுசண்டர், பிரம்மசண்டி எனப் பலபெயர்கள் சண்டேசுவரருக்குக் கூறப்படு கின்றன.

சிவாலயங்களில் பெரும்பாலும் இருகரங்கள் உடைய சண்டேசுவரர் திருமேனி விளங்கினாலும் (கலியுக சண்டர்) நான்கு யுகங்கள் மற்றும் அந்நிய தேசத்தில் விளங்கும் சண்டேசுவரரின் திருநாமங்களும் உருவ அமைதிகளும் பற்றி ஆகமம், மற்றும் சிற்ப நூல்கள் விரிவாக எடுத்துக் கூறுகின்றன. பொதுவாகச் சண்டேசுவரரின் அவதாரத் தலமான சேய்ஞலூரும், சண்டேசப்பதம் பெற்ற தலமான திருவாப்பாடியும் இவருக்குச் சிறப்புடைய தலங்களாகும். இவ்விரு தலவரலாறுகளும் சண்டேசுவரரின் திருவரலாறும் பிறிதொரு இடத்தில் விளக்கப் பட்டுள்ளதனைக் காணலாம். மேலும் சண்டேசுவரர் கணபதி, முருகன், சிவன், அம்பிகை, சூரியன் முதலானோர் வீற்றிருந்து அருளும் திருக்கோயில்களில் இவர் தனித்தொரு திருவுருவமும், திருவுருவத்திற்கு தகுந்தாற்போல திருப்பெயரும் கொண்டு விளங்குகின்றார். இப்பெருமானுக்கு " தர்ம நீதி " என்ற சக்தி உண்டு என ஆகமங்கள் கூறும்.

நான்கு யுகங்களில் சண்டேசுவரர் :

காச்யப சிற்பநூலில் பின்வருமாறு கூறப்படுகிறது. 1 " **கிருதயுகத்தில்**" — பிரசண்டர் எனும் பெயர் தாங்கி, வெண்ணிற உடல், பதினாறு கரங்கள், யானைவாகனம், வலக்கரங்களில் - சூலம், பரசு, வச்சிரம், கட்கம், கோசம், சூரிகை, தண்டம் அபயம், இடக்கரங்களில் கேடயம், பிண்டிபாலம், பாசம், மணி, வியாக்ரமுத்திரை சூசிமுத்திரை நாகம், வரதமுத்திரை ஆகியவற்றுடன் விளங்குவார்.

2. " **திரேதாயுகத்தில்** " - எட்டுக் கரங்கள், இரத்தச் சிவப்பு நிறம், குதிரைவாகனம், வலக்கரங்களில் - சூலம், பாசம் கத்தி, பரசு, இடக் கரங்களில் - வரதம், கேடயம், பாலம், மணி இவற்றோடு காணப் படுவார்.

3. " துவாபரயுகத்தில் " – நாற்கரத்தர், பொன்னிறத்தர், ஜடா மண்டலம், கோரைப்பற்கள், வலக்கரங்களில் மழு, சூலம், இடக்கரங் களில் பாசம், அங்குசம் கொண்டு பத்ர பீடத்தில் விளங்குவார்.

3. " கலியுகத்தில் " – ஜடாபந்தம், இருகரங்களில் வலப்பக்கம் தண்டம் அல்லது மழு அல்லது பரசு இடக்கரம் தொடைமீது அல்லது சிம்ஹகர்ணஹஸ்தம் கொண்ட சாந்தத் திருமுகம், கருநிறம் அல்லது சிவந்த ரூபம் கொண்டு பத்ரபீடத்தில் விளங்குவார்.

நான்கு யுகங்களில் வேறுவகையான திருவுருவங்கள் :

பின்வரும் திருவுருவ அமைதிகள் யாவும் உத்தரகாமிகாகமம் 65வது படலத்தில் கூறப்படடுள்ளன.

கிரேதாயுகத்தில் எட்டுக்கரங்களும், திரேதாயுகத்தில் ஆறு கரங்களும், துவாபர யுகத்தில் நாற்கரங்களும், கலியுகத்தில் இரு கரங்களும் கொண்டு சண்டேசுவரர் திருவுருவம் அமைக்கப்படும். இது சிங்கள தேசத்தின் சிறப்பாகும்.

" துவாபரயுக சண்டேசுவரர் " – நான்கு முகம், ஜடாமகுடம், நான்கு கரங்களில் வலப் பக்கம் அக்கமாலே, முத்தலேச் சூலம், இடப் பக்கம் குண்டிகை, மழு, பத்ரபீடம் அமர்ந்து விளங்குவார். இவரைப் பிரம்ம சண்டி எனக் கூறுவாரும் உளர். மேலும் இவரே ஆதிசண்டர் என ஒரு சாரார் கூறுகின்றனர்.

வேறுவகை : இவர் சங்கின் நிறம் கொண்டவர், முக்கண்ணனர், யானேஉரி உடையார், வீராசனத்தில் வீற்றிருப்பார், மேலிருகரங்களில் பிஞகம் (வில்), அமோகம் (அஸ்திரம்), கீழிருகரங்களில் அபய, வரத முத்திரைகளேயும் கொண்டு விளங்குவார்.

கலியுகத்தில் : - இவர் வலக்கரத்தில் மழுவும், இடக்கரத்தில் வரதமுத்திரை – அல்லது அஞ்சலி கரம் கொண்டு விளங்குவார்.

சிங்களதேச சண்டேசுவரர் :

சிங்கள தேசத்தில் இவரது உருவத்தை இஷ்டாசனத்தில் அமர்ந்திருப்பவராயும், இருகரங்களுடன் அபயம், மழு கொண்டவரா யும் அல்லது சங்கரரின் (சிவனரின்) ஆணேயை நிறைவேற்றும் முகத் தான் அபயம், மழு, பாசம், சூலம், கொண்டவராயும் அமைக்க என உத்தரகாமிகாகமம் 26 - 27 சுலோகங்களின் வாயிலாகக் கூறுகின்றது.

சண்டேசுவரரின் சக்தி (சண்டசக்தி) :

சண்டசக்தி; நல்லமைதி கொண்டவளும், பசுந்தளிர் நிறமுடைய வளும் அனேத்துஅணிபூண்டவளும், **" தர்மநீதி "** எனும் பெயருடன்

துவாபரயுக சண்டேசுவரர்



இத் திருவுருவத்தினை துவாபரயுக சண்டேசுவரர், ஆதி சண்டேசுவரர் (இதில் வேறு வகையும் உண்டு) பிரம்மசண்டேசுவரர், சதுர்முகசண்டேசுவரர், ஜ்வாலா கிரீடத்துடன் விளங்கும் சதுர்முக சண்ட நாதர் (உத்தர காரணாகமத்தில்) எனப் பல நிலைகளில் வைத்து இப்பெருமானை சிவாலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதனைக் காணலாம். இத் திருவுருவம் தாராசுரத்தில் விளங்குகின்றது. பின்கரங்களில் விளங்கும் ஆயுதங்களை மாற்றியும் அமைப்பர்.

இருகரங்களுள் ஒன்றினில் நீலோத்பல மலரினை ஏந்தியும், இடக்கரம் வரதமுத்திரையுடனும் விளங்குபவளாவாள்.

சண்டேசுவரரின் வகைகள் :

தீப்தாகமத்தில் 1. சண்டர், 2. அபசண்டர், 3. விக்ராந்தர், 4. சண்டேசர் எனும் நால் வகையினர் ஏன்று கூறப்படுறது. இவர்கள் பெருவலியுடையார், பேரறிவுடையார், உருத்திரர்கள் - ருத்ரனுக்கு (சிவன்) ஒப்பான ஒளியுடையார், ஒவ்வொரு யுகத்திலும் முறைப்படி சண்டேசப் பதவியில் விளங்கியவர்கள். எனவே சிவப்ரீதி எனும் செல்வம் பெற சண்டபூசை அவசியம் என இவ் ஆகமம் கூறுகிறது.

ஸ்ரீ தத்வ நிதி நூலில் :

1. பிரசண்டர் :

"பிரசண்டர்" என்று "**இருதயுகத்தில்**" போற்றப்படுகின்றார். வெண்ணிறத் திருமேனியும் 16 கரங்களையும் கொண்டவர். இவரது வாகனம் யானை. வலக்கரங்களில் முறையே சூலம், பரசு, வஜ்ஜிரம், கட்கம் (கத்தி), கோசம் (உடல்), சூரிகை (சிறியகத்தி), தண்டம் (தடி) அபயகரம். இடக்கரங்களில் முறையே வியாக்ரஹஸ்தம் (விஸ்மயகரம்), பாசம், பிண்டிபாலம், கேடயம், சுசிமுத்திரை, மணி, நாகம், வரதகரம் கொண்டு ஜடாமகுடத்துடன் விளங்குவார்.

2. விக்ராந்த சண்டர் :

விக்ராந்த சண்டர் "**திரேதாயுகத்தில்**" விளங்குபவர். 8 கரங்களுடன் குதிரை வாகனம் கொண்டவர். இவரது வலக்கரங்களில் முறையே சூலம், பாசம், கத்தி, பரசு. இடக்கரங்களில் முறையே - பாலம், மணி, கேடயம், வரதம் இவைகளோடு விளங்குபவர்.

3. விபு சண்டர் :

"**துவாபர யுகத்தில்**" இவரை விபுசண்டர் என அழைப்பர். பொன்னிறத்தர், ஜடாமண்டலத்தை உடையவராய், கோரைப்பற்களையும் கொண்டு விளங்குவார். இவரது வலக்கரங்களில் மழுவும் சூலமும் விளங்க இடக்கரங்களில் பாசமும் அங்குசமும் விளங்கும்.

4. வீரசண்டர் :

கலியுகத்தில் இப்பெருமானை வீரசண்டர் எனப்போற்றுவர். கருநிறம் அல்லது சிவந்த திருமேனி கொண்டும் நின்றோ அல்லது அமர்ந்தோ விளங்குவார். மழுவுடன் காணப்படுவார். அல்லது இரு

ஸ்கைகளும் கூப்பிய நிலையில் பூமாலையினைக் கூப்பிய கரத்துள் வைத்தும் அச்சத்தோடு சிவபெருமானின் வலப்பக்கத்தில் விளங்குவார். இவரது வாகனம் இடபம் ஆகும்.

பொருள் குறிப்பு:

சண்டன் — அசுரன், அலி, காலன், சிவன், சூரியன்- நமன், புளியமரம், பேடி.

சண்டி — உரோசமற்றவள், ஒரு மரம், சண்டேசுவர, நாயனார். துர்க்கை.

சண்டிகை — காளி, துர்க்கை.

சண்டேஸ்வரம் — சிவத்தலங்கள் 1008ல் ஒன்று

சண்டர் — சேங்கனூர் சண்டேசுவரராகிய விசார சருமர்.

பஞ்சாயதனவகையில் விளங்கும் சண்டேசுவரர்கள் :

1. தொனிச்சண்டர் தியானம் : *(சிவாலயத்தில்)*

(शिव) ध्वनिश्चण्डेश्वर ध्यानम् :-

युग्म कर रक्त निभ सव्यकर टङ्कं
वाम कर मूरुपरि शान्तमुख मेकम् ।
श्वेत मय वस्त्र युत भस्म धर देहं
शंभु पद ध्यानमय भक्तध्वनिश्चण्डम् ॥ (ध्यायेत्)

யுக்ம கர ரத்ன நிப ஸவ்யகர டங்கம்
வாம கர மூருபரி சாந்த முக மேகம் ।
ச்வேத மய வஸ்திர யுத பஸ்ம தர தேஹம்
சம்பு பத த்யான மய பக்தத்வனி சண்டம் ॥

(சிவ) தொனிச் சண்டேசுவரர் தியானத்தின் பொருள் :

இரு கரங்களும், சிவந்த நிறமும், வலக்கரத்தில் மழுவும், வெண்ணிற ஆடையும், வெண்ணீறணிந்த மேனியும், சிவனடி சார்ந்த தியானமுடைய பத்தரும் ஆனத்வனி: சண்டரை (தியானிக்கின்றேன்.)

[த்வனி:சண்டர்: சண்டர் எனும் பெயரைத் தமக்கே உரிமையாயுடையவர்.]

2. சக்திசண்டேசுவரி தியானம் : *(அம்மன் ஆலயத்தில்)*

(शक्ति) चण्डेश्वरि ध्यानम् :-

द्विनेत्रां द्विभुजां श्यामां टङ्कं चैव धारिणीं
कटकं वा विशेषेण व्याख्या मुद्रां तदैव च ।
द्विपादां वस्त्रसंयुक्तां सर्वाभरण भूषितां
जटामकुट संयुक्तां ज्ञानरूपां तदैव च ॥ (ध्यायेत्)
(कर स्फोटन मात्रेण शिवपूजाफलं लभेत्)

த்விநேத்ராம் த்விபுஜாம் ச்யாமாம் டங்கம் சைவது தாரிணீம்
கடகம் வா விசேஷேண வ்யாக்யா முத்ராம் ததைவச ।
த்விபாதாம் வஸ்திர ஸம்யுக்தாம் சர்வாபரண பூஷிதாம்
ஜடாமகுட ஸம்யுக்தாம் ஞானரூபாம் ததைவச ॥
(கரஸ்போடந மாத்ரேண சிவபூஜா பலம்பேத்)

சக்தி சண்டேசுவரி தியானத்தின் பொருள் :

இரு கண்களை உடையாளும்; இரு தோளியும்; பசுமை நிறத்தவளும்; மழுவேந்தியவளும்; கடகமுத்திரை அல்லது சின்முத்திரை கொண்டவளும்; ஈரடியினை கொண்டவளும்; நல்லுடையணிந்தாளும்; அணிகள் பல பூண்டவளும்; சடைமுடி கொண்டவளும்; ஞானமே உருவானவளும் ஆன சண்டேஸ்வரியை - (தியானிக்க).

[கையினல் சிட்டிகை / தட்டுதலின் மூலம் கவனத்தை நம்பால் திருப்பி பூசைப் பயனைப் பெறுக.]

3. கும்போதர சண்டேசுவரர் தியானம் (குப்பச்சண்டர்) :-

(விநாயகர் ஆலயத்தில்)

कुंभोदर चंडेश ध्यानम् (विनायकचंडः) :-

कुंभोदरः चतुर्बाहुः टंकशूलासि दंडधृक् ।
रक्तवर्णो महादीप्तो भद्रपीठोपरि स्थितः ॥

கும்போதர: சதுர்பாஹு: டங்கசூலாஸி தண்டத்ருக் ।
ரக்தவர்ணோ மஹாதீப்தோ பத்ர பீடோ பரிஸ்தித: ॥

கும்போதர சண்டேசுவரர் தியானத்தின் பொருள் :

(விநாயகருக்குரிய சண்டர்)


கும்போதரர் நாற்கரமுடையர்; மழு; சூலம்; மெல்லிய கூரிய கத்தி; தண்டம் ஆகியன தாங்கியவர்; சிவந்த நிறமும்; பேரொளி மேனியும் கொண்டு பத்ரபீடத்தில் நின்றவர்; (எனத் தியானிக்க)

4. சுமித்திர சண்டேசுவரர் தியானம் : (முருகன் ஆலயத்தில்)

सुमित्र चंडेश ध्यानम् :- (सुब्रह्मण्य चंडः)

द्विनेत्रं द्विभुजं रक्तं सुप्रसन्नं सुयौवनम् ।
दक्षिणे शक्ति संयुक्तं करद्वय कृतांजलिम् ॥ (ध्यायेत्)

கணபதி ஆலய அமைப்பில் கும்பசண்டர்



(கணபதி ஆலய நிர்மாண அமைப்பு மற்றும் திருவுரு பிரதிஷ்-டைகள் யாவும் விரிவாக ஆதீன வெளியீடாகிய ''கணபதி'' எனும் நூலில் காண்க)

த்விநேத்ரம் த்விடஜம் ரக்தம் ஸுப்ர ஸன்னம் ஸுயௌவநம் l

தக்ஷிணே சக்தி ஸம்யுக்தம் கரத்வயக்ருதாஞ்ஜலிம் ll

சுமித்திர சண்டேசுவரர் தியானத்தின் பொருள் :

(சுப்பிரமணிய சண்டர்)

இருகண்கள்; இருதோள்; சிவந்தநிறம்; மலர் முகம்; இளமையான உருவம்; வலத்தோளில் சார்த்திய சத்தி; கூப்பிய கரங்கள் (கொண்டவராய் தியானிக்க.)

5. தேஜஸ் சண்டேசுவரர் தியானம் (சூரியன் ஆலயத்தில்) :

तेजश्चण्ड ध्यानम् (सूर्य चंडः)

चंडं रक्तं करालास्यं अब्जा भयकरद्वयम् ।

दंष्ट्राकरालदीप्तास्यं जटिलं रक्तवाससम् ॥

சண்டம் ரக்தம் கராளாஸ்யம் அப்ஜா பயகரத்வயம் l

தம்ஷ்டிரா கராள தீப்தாஸ்யம் ஜடிலம் ரக்தவாஸஸம்

தேஜஸ்சண்டேசுவரர் தியானத்தின் பொருள் : *(சூர்ய சண்டர்)*

சண்டரை, சிவந்தமேனி, கோபத்தாற் கறுத்தமுகம்; தாமரை தாங்கும் இரு கரங்கள்; * கருநாகத்தினதொத்த கோரைப்பற்கள்; சடைமுடி; செவ்வாடை (கொண்டவராய் தியானிக்க.)

1A தொனிச்சண்டேசுவரர் காயத்திரி :

चंड गायत्री :-

टंकहस्ताय विद्महे शिवचिन्ताय धीमहि ।

तन्नः चंडः प्रचोदयात् ॥

டங்க ஹஸ்தாய வித்மஹே l சிவசிந்தாய தீமஹி

தந்நः சண்டः ப்ரசோதயாத் ll

தொனிச்சண்டேசுவரர்க்குரிய காயத்திரியின் பொருள் :

மழுவேந்திய (சண்டரை) அறிகிறோம் l சிவசிந்தையுடையவராய் உணர்கிறோம் ll அவ்வாறுணரும் எங்களை சண்டர் (வழி நடத்துக.)

---

* (கோரைப் பற்களுடைய கருநாகத்தை அணிந்தவர் எனவும் கொள்ளலாம்)

2A சக்தி சண்டிகேஸ்வரி காயத்திரி : (யமனி)

शक्ति सेवायै विद्महे, पद्महस्तायै धीमहि ।
तन्नो यमनी प्रचोदयात् ॥

சக்தி ஸேவாயை வித்மஹே, பத்மஹஸ்தாயை தீமஹி I
தந்நோ யமநீ ப்ரசோதயாத் II

காயத்ரியின் பொருள் :

சத்தியின் சேவையில் ஈடுபட்டவளாய் அறிகிறோம்; தாமரை ஏந்திய கையினளாய் உணர்கிறோம்; அவ்வாறுணரும் எங்களை யமனி வழிநடத்துக.

3A கும்பசண்ட காயத்ரி :

कुंभचंडाय विद्महे टंकहस्ताय धीमहि ।
तंनो चंडः प्रचोदयात् ॥

கும்பசண்டாய வித்மஹே I டங்கஹஸ்தாய தீமஹி I
தந்நோ சண்ட: ப்ரசோதயாத் I

பொருள் : (பெருவயிறுடைய) கும்பசண்டரை அறிகிறோம்; மழுவேந்தியவராய் உணர்கிறோம். அவ்வாறுணரும் எங்களை (கும்ப) சண்டர் வழிநடத்துக.

4A சுமித்ர சண்ட காயத்ரி :

स्कन्द भक्ताय विद्महे । शक्तिहस्ताय धीमहि ।
तंनो सुमित्रः प्रचोदयात् ॥

ஸ்கந்த பக்தாய வித்மஹே I சக்திஹஸ்தாய தீமஹி I
தந்நோ சுமித்ர: ப்ரசோதயாத் II

பொருள் : ஸ்கந்த பக்தரை அறிகிறோம்; சத்தி (வேல்) ஏந்தியவராய் உணர்கிறோம். அவ்வாறுணரும் எங்களை சுமித்ரர் வழிநடத்துக.

5A தேஜஸ் சண்ட காயத்ரி :

तेजश्चंडाय विद्महे । साक्षिभूताय धीमहि ।
तंनो चंडः प्रचोदयात् ॥

தேஜ: சண்டாய வித்மஹே । சாக்ஷி பூதாய தீமஹி ।
தந்நோ சண்ட: ப்ரசோதயாத் ॥

பொருள் : ஒளிவீசும் சண்டரை அறிகிறோம்; ஆன்மாவின் செயல்களின் சாட்சியாய் உணர்கிறோம்; அவ்வாறுணரும் எங்களை அச் சண்டர் வழிப்படுத்துக.

மூலமந்திரங்கள் :

1B) த்வனி: சண்டர் : ஓம் சம் த்வனி: சண்டாய நம:
ओं चं ध्वनिश्चंडाय नमः

2B) சண்டேஸ்வரி : ஓம் ஹ்ரீம் யமநீ சண்டேஸ்வர்யை நம:
ओं ह्रीं यमनी चंडेश्वर्यै नमः

3B) கும்பசண்டர் : ஓம் கும் கும்போதர சண்டாய நம:
ओं कुं कुंभोदर चंडाय नमः

4B) சுமித்ரசண்டர் : ஓம் சும் சுமித்ர சண்டாய நம:
ओं सुं सुमित्रचंडाय नमः

5B) தேஜஸ்சண்டர் : ஓம் தம் தேஜஸ்சண்டாய நம:
ओं तं तेजश्चंडाय नमः

சண்டர்களை பூஜாபலன் குறித்து வேண்டும் சுலோகங்கள் :

1C) த்வனி: சண்டர் :

பரசிவ பதாம்போஜ பரஸ்புரித மாநஸ ।
தேவ ஸேவாபலம் தேஹி த்வனி; சண்ட நமோஸ்துதே ॥

परशिव पदांभोज परस्फुरित मानस ।
देव सेवाफलं देहि ध्वनिश्चंड नमोऽस्तुते ॥

பொருள் : பரசிவத் திருவடிகளில் இலயித்த மனமுடையவரே, பெருமானை வணங்கிய பயனை அளிப்பீராக; த்வனிச் சண்டரே உமக்கு என் வணக்கம் உரித்தாகுக.

2C) சண்டேஸ்வரி :

பராசக்தி பதாம்போஜ பரஸ்புரித மாதஸே ।
தேவிஸேவாபலம் தேஹி சண்டேஸ்வரி நமோஸ்துதே ॥

पराशक्ति पदांभोज परस्फुरित मानसे ।

देविसेवाफलन्देहि चंडेश्वरि नमोऽस्तुते ॥

பொருள் : பராசக்தியின் திருவடிகளில் லயித்த மனமுள்ளவரே, தேவி பூஜையின் பயனைத் தருவீராக. சண்டேஸ்வரியே, உமக்கு என் வணக்கம் உரித்தாகுக.

3C) கும்பசண்டர் :

விக்நராஜ பதாம்போஜ பரஸ்புரித மானஸ ।

கணேச ஸேவாபலம் தேஹி சண்டேசுவர நமோஸ்துதே ॥

विघ्नराज पदांभोज परस्फुरित मानस ।

गणेश सेवाफलं देहि चंडेश्वर नमोऽस्तुते ॥

பொருள் : விக்கிநராசர் திருவடிகளில் லயித்த மனத்தினரே, கணேச சேவையின் பயனை அளிப்பீராக. சண்டேசுவரரே, உமக்கு என் வணக்கம்.

4C) சுமித்ரசண்டர் :

சுப்ரஹ்மண்ய பதாம்போஜ பரஸ்புரித மானஸ ।

ஸ்கந்த சேவாபலம் தேஹி ஸுமித்ரசண்ட நமோஸ்துதே ॥

सुब्रह्मण्य पदांभोज परस्फुरित मानस ।

स्कन्द सेवाफलं देहि चंडेश्वर नमोऽस्तुते ॥

பொருள் : சுப்பிரமணியரின் திருவடிகளில் லயித்த மனமுள்ளவரே, ஸ்கந்த பூசையின் பயனை அளிப்பீராக. சண்டேசரே! உமக்கு என் வணக்கம் உரித்தாகுக.

5C) தேஜ: சண்டர் :

சிவசூர்ய பதாம்போஜ பரஸ்புரித மானஸ ।

சூர்யபூஜாபலம் தேஹி சண்டேச்வர நமோஸ்துதே ॥

शिवसूर्य पदांभोज परस्फुरित मानस ।

सूर्यपूजाफलं देहि चंडेश्वर नमोऽस्तुते ॥

பொருள் : சிவசூரியனின் திருவடிகளின்கண் மனதினை இலயிப்பித்தவரே சூரியபூஜைப் பலனை அளித்திடுக. சண்டேசரே, உமக்கு என் வணக்கம் உரித்தாகுக.

வேறுவகையான சண்டேஸ்வரி தியானம் :

யமனீ சண்டேஸ்வரி தியானம்

த்விபுஜாஞ்சத்ரி நேத்ராஞ்ச ச்யாமளாங்காம் சுபப்ரதாம் ।
வாமஹஸ்தாந்து ஜானூர்த்வே ஸவ்ய ஹஸ்தேது புஷ்பகம் ॥

அதவாஞ்ஜலி ஹஸ்தாம் புஷ்பதாரிணீம்
சண்டேசீம் யமநீஞ்சைவ
த்யாயேத் உக்த க்ரமேணது ॥

द्विभुजां च त्रिनेत्रां च श्यामलांगां शुभप्रदाम् ।
वामहस्तांतु जानूर्ध्वे सव्यहस्तेतु पुष्पकम् ॥
अथवांजलि हस्तां पुष्पधारिणीम् ।
चंडेशीं यमनीञ्चैव ध्यायेदुक्तक्रमेणतु ॥

பொருள் : இரு கரமும் முக்கண்ணும் பசிய மேனியும், கொண்டவளும்; வலக்கரத்தில் புஷ்பமும் இட முழந்தாளில் ஊன்றிய இடக்கரமும் கொண்டவளாய் / அல்லது பூக்களைக் கொண்ட கூப்பிய கையினைக் கொண்டவளாய் யமனீ என்னும் பெயருடைய சண்டேச்வரியை (முன்) சொன்னவாறு தியானிக்க.

சிவன் - அம்பிகை - கணபதி - முருகன் - சூரியன் ஆலயங்களில் விளங்கும் சண்டேசுவரர்களின் அமைவிடங்கள்

சிவாலயம் தொனிச்சண்டர் :

பெரும்பாலான சிவாலயங்களில் உள்ள மூலத் தானத்தின் வடக்கு முதல் ஆவரணத்தில் தென்திசை நோக்கியவாறு * தனிக் கோயிலாகச் சண்டேவரர் கோயில் அமைந்து விளங்கும். இவரது திருக்கோயிலின் விமானமானது ஏகதளம் அல்லது துவைதளம் அல்லது திரிதள வடிவத்தில் காணப்படும். அல்லது விமானம் இல்லாமல் மண்டபம் மட்டும் அமைந்திருத்தலும் உண்டு. விமானத்தின் நான்கு திசைகளிலும் சண்டேசவரர் உருவத்தோடு நந்தியும் சுதைவேலைப்பாடாகக் காணப் படும். இவ்வாறு தனிக்கோயில் கொண்டருளும் பெருமானுக்குத் "தொனிச்சண்டர்" அல்லது வீரசண்டர் என்று பெயர்.

தொனிச்சண்டர் சுகாசனம் கொண்டு இருகரங்களுடன் விளங்கு வார். ஒரு கரத்தில் மழுவாயுதம் அல்லது பரசு அல்லது தண்டம் காணப் படும். மற்றொரு கரம் சிம்மகர்ணஹஸ்தமாகவும் அல்லது கடக கரமாகவும் அல்லது தொடைமீது பதித்தவாறும் காணப்படும். வழி படும் அன்பர்கள் சிவாலய வழிபாட்டின் போது சிவபிரானைத் தரிசித்துத் தொனிச்சண்டர் சந்நிதிக்கு வந்து மூன்றுமுறை கரவொலி எழுப்பிச் சிவதரிசனப்பலனைத் தந்தருளுவீராக என்று பிரார்த்தனை செய்வார்கள்.

சிவாலயத்தில் அன்றைய தினத்தில் நிகழும் அர்த்தஜாம பூசையில் மூலத்தானத்தில் அணிவிக்கப்பெற்ற பத்ரம், புஷ்பம், மாலை, வஸ்திரம், மற்றும் சிவநிர்மால்ய மகாநைவேத்யம் முதலானவைகளைச் சிவபெரு மானுக்கு அர்ப்பணித்துப் பரார்த்த பூசையினை நிறைவு செய்வதுமரபு. இப்பெருமான் சிவாலய பரிபாலனம் செய்யும் உயர் அதிகாரி ஆவார். மேலும், சிவகணங்களில் முதன்மை பெறுபவரும் இவரே ஆவார். திருவாரூர் போன்ற தலங்களில் தினந்தோறும் திருக்கோயிலில் நிகழ்ந்து முடிந்த ஸ்ரீகார்யத்தை இவரது சந்நிதியில் கூறுவர். இதற்குப் பழமையான கல்வெட்டுச் செய்திகளும் உள்ளன.

---

* இதுபோன்று - சிவாலயத்தில் விளங்கும் அம்பிகைக் கோயிலின் உள் வடக்கு முதல் ஆவரணத்தில் தென்திசைநோக்கியபடி சண்டேசுவரி கோயில் விளங்கு வதைக் காணலாம். சில ஆகமங்கள் ஈசான திக்கில் இவர் விளங்குவார் என்கின்றன.

விநாயகர் ஆலயத்தில் கும்ப சண்டர்



கும்பசண்டர் ஸ்ரீவிநாயகர் ஆலயத்தில்

சிவாலயப் பூசையைப்போலவே ஆத்மார்த்த பூசையினை ஏற்றுக் கொண்ட அன்பர்கள் யாவரும் தொனிச்சண்டரை இறுதியாக ஆவாகனம் செய்தும், சிவ நிர்மால்யமான பத்ரபுஷ்பங்கள் மற்றும் நைவேத்யங்களை முறைப்படி இவருக்கு அர்ப்பணித்தும் வழிபாடாற்றிச் சிவபெருமானின் திருவருளை இப்பெருமானின் வாயிலாகப் பெறுவர்.

சண்டேசுவர மந்திரங்கள் : - (காயத்ரி)

'' சண்டேச்வராய வித்மஹே । டங்க ஹஸ்தாய தீமஹி ॥

தந்ந : சண்ட : ப்ரசோதயாத் ॥

— அஜிதாகமம் - காயத்ரீ

'' ஓம்ஹாம் சண்டாஸநாய நம :

ஓம்ஹாம் சண்டமூர்த்தயே நம :

ஓம்ஹாம் த்வநிச்சண்டேச்வராய ஹும்பட்ஸ்வாஹா ''

* பரார்த்த பூசையான திருக்கோயில் பூசையினை அவ்வக்கோயிலில் நிகழும் ஆகமவிதிப்படியும், ஆத்மார்த்த பூசையில் - சிவபூசையும் சண்டேசுவரர் பூசையும் பிறவும் அவரவர்களுக்கு உபதேசித்த குருமார் களின் (ஆசாரியர்களின்) உபதேசப்படியும் செய்வது உத்தம மானதும், மரபுடையது மாகும்.

அம்பிகை ஆலயம் : - தர்மநீதி

சிவ்பிரான் விளங்கும் திருக்கோயில்களில் அம்பிகையின் திருக் கோயில் தெற்கு அல்லது வடக்குத்திசையில் கிழக்கு நோக்கியவாறு அமைந்து காணப்படும். சில ஆலயங்களில் கிழக்கு அல்லது மேற்குத் திசையில் தெற்குநோக்கியவாறு காணப்படுதலும் உண்டு. இவ்வாறாக அமைந்து காணப்படும் அம்பிகையின் ஆலயத்தில் தெற்கு நோக்கியபடி தனிச்சிறு கோயிலாக சண்டசக்தியானவள் சண்டேசுவரி அல்லதுயமனீ சண்டேஸ்வரி அல்லது, தர்மநீதி எனும்பெயருடன் விளங்குவாள்.

சண்டேசுவரி சுகாசனமாகவும், வலது கரத்தில் நீலோத்பல மலர் அல்லது மழு x ஏந்தியும், இடக்கரம் வரதமாக அல்லது சிம்ஹகர்ண மாகவும் கிரீட மகுடத்துடனும் சர்வாபரணங்களுடனும் காட்சி தருவாள்.

---

* காஞ்சியில் உள்ள கைலாசநாதர் கோயிலில் சண்டேசுவரர் சந்நிதி இல்லை, மேலும் இக்கோயிலில் தனியாக அம்மன் ஆலயமும் இல்லை இது காஞ்சிச் சிறப்பு.

x திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் ஆலய சண்டேஸ்வரி வலக் கரத்தில்மழுவினைஏந்தியுள்ளார். காஞ்சியில் விளங்கும் ஸ்ரீ காமாட்சியம்மன் ஆலயத்தில் தனியாக (வடக்கு ஆவரணத்தில்) சண்டேசுவரி சந்நிதி காணப்படவில்லை.

முருகன் ஆலயத்தில் சுமித்ர சண்டேசுவரர்

முருகன் ஆலய கருப்பக் கிருகத்தின் ஈசான பாகத்தில் ஸ்கந்த சண்டர் என்னும் சண்டேசுவரர் அல்லது சுமித்ர சண்டேசுவரர் அமைக்கத் தக்கவர். இரு கைகளை உடையவராக அமைத்தால் அபய முத்திரை மற்றும் வேதபுத்தகமும் கொண்டு அமைத்திடல் வேண்டும். நான்கு கைகளை உடையவராயின் அபயம், பத்மம், வச்சிரம், வரதம் இவைகளை உடையவராக அமைத்தல் வேண்டும்.

முருகப் பெருமானுக்குத் திருக்கோயில் அமைக்கும் போது எட்டு, பன்னிரண்டு, பதினாறு அல்லது முப்பத்திரண்டு பரிவாரங்களைச் சூழ அமைக்கலாம் என்பது ஆகமவிதியாகும்.

8. பரிவாரங்கள் அமைந்த முருகன் கோயிலில்

சுமித்ர சண்டர் - கிழக்குப் பார்த்த சந்நிதி - விளக்கப் படம்

சப்தமாதர்	ஜேஷ்டாதேவி	துர்க்கை
பிரமன்	முருகன் (மூலஸ்தானம்)	சந்திரன்
சாஸ்தா	வெள்ளையானை	சூரியன் (சுமித்ரசண்டர்)

முருகன் ஆலயத்தில் சுமித்திர சண்டர்



ஸ்ரீமுருகன் ஆலயத்தில் சுமித்திர சண்டர்.

இ. ஆதிணை

12. பரிவாரங்கள் அமைந்த முருகன் கோயிலில் சுமித்ரசண்டர்

சப்தமாதர்	வருணன்	அகஸ்தியர்	லட்சுமி	துர்க்கை
பிரமன்	முருகன் (மூலஸ்தானம்)			நாரதர்
யமன்				சுமித்ர சண்டர்
சாஸ்தா	சூரியன்	யானை		

16. பரிவாரங்கள் அமைந்த முருகன் கோயிலில் சுமித்ரசண்டர்

சப்தமாதர்	சுக்கிரன்	அகஸ்தியர்	வியாழன்		துர்க்கை
					திதி
சரஸ்வதி					
பிரமன்	முருகன் (மூலஸ்தானம்)				நாரதர்
லட்சுமி					அதிதி
சாஸ்தா	சூரியன்	யானை		சந்திரன்	சுமித்ர சண்டர்

32. பரிவாரங்கள் அமைந்த முருகன் கோயிலில் சுமித்ரசண்டர்

நாற்பத்தொன்பது பதங்கள் (கட்டங்கள்) கீறி, இடையிலுள்ள ஒன்பது கட்டங்களை மூலஸ்தானமாகப் பகிர்ந்து அதனைச் சூழ திருமகள், பூமி, ஜேஷ்டாதேவி, பாரதி, ஆர்யா, வாஸ்துவதிபதி, சுமித்ர

சண்டர், யானை, பிரமன், அகஸ்தியர், நாரதர், ஈசன், பர்ஜன்யர், மகேந்திரன், பாஸ்கரன், பூஷ்ணி, யமன், கந்தருவன், சந்திரன், பிதிரு, புஷ்பதந்தன், சுரர், நாகம், பல்லாடகம், சோமன், திதி, அதிதி முதலானவர்களை உரிய இடங்களில் அமைத்து வழிபட வேண்டும் என்பது ஆகம விதியாகும்.

சூரியனார்கோயில்



நவநாய மூர்த்திகள் திருக்கோயிலில் தேஜஸ்சண்டேசுவரர். அமைவிடம்

ஆகம பிரதிஷ்டையில் சூரியனார்கோயில்

கிழக்கு

வடக்கு				தெற்கு
	கேது	சந்திரன்	செவ்வாய்	
	சுக்கிரன்	சூரியன்	புதன்	
□	ராகு	குரு	சனி	

மேற்கு

□ தேஜஸ்சண்டேசுவரர் கோயில்.

சூரியன் ஆலயத்தில் தேஜஸ் சண்டர்



ஓம் பத்ம ஹஸ்தாய வித்மஹே ||
அர்க்கசிந்தாய தீமஹி ||
தந்நோ தேஜ: (சண்ட:) ப்ரசோதயாத் ||

[சூரியசண்ட காயத்ரி]

சிற்பக் கலையில் அறிய வேண்டியவன்

தமிழ் நாட்டில் விளங்கும் திருக்கோயில்களில் வழிபாட்டுக்கு வைக்கப்பட்டுள்ள செப்புத் திருமேனிகள் உலகமக்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளன இவையாவும் எழில்மிகு கலையழகுடன் காணப்படுவதால் விலை மதிப்பிலாச் செல்வங்களாக இன்றும் திகழ்கின்றன

* கிறிஸ்துவிற்கு முன்னர் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னரே செம்பில் செய்த அநேக உருவங்கள் காணப்படுகின்றன. இதற்கு ஆதிச்ச நல்லூரில் கிடைக்கப் பெற்ற செம்பாலான உருவங்களே சான்று ஆகும். பின்னர் பல்லவர் காலத்திலிருந்து பல செப்புப் படிவங்கள் கிடைத்துள்ளன. அன்று முதல் இன்று வரை கோயில்களிலே செம்பாலான தெய்வப்படிவங்களை அலங்கரித்து வீதியில் உலாவாக எடுத்துச் செல்வது பற்றிய குறிப்புக்களைத் தேவாரத் திருப்பதிகங்களிலே காணலாம்.

செப்புக்கலையின் பொற்காலம் :

சோழப் பெருமன்னர்கள் பெருங்கோயில்கள் பல எடுத்தனர். அவற்றிற்கு ஏராளமான செப்புத் திருமேனிகளை செய்தளித்துள்ளனர். ஆதித்த சோழன், பராந்தக சோழன் ஆகிய மன்னர்களின் காலத்தே செய்தளிக்கப்பட்ட செப்புத் திருமேனிகள் அழகானவை.

பராந்தக சோழரின் மகன் கண்டராதித்த சோழன் சிறந்த சிவபக்தி உடையவன். இவனது தேவியார் செம்பியன் மாதேவியார் என்ற புகழ்மிக்க சோழப் பேரரசியாவார். இவர் வழங்கிய பொற்குடங்களும் செப்புத் திருமேனிகளும் பலவாகும். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் பல கோயில்களில் இத்தேவியார் அளித்த செப்புத் திருமேனிகள் இன்றும் பொலிவுடன் விளங்குகின்றன. இச்செப்புத் திருமேனிகளில் ஆடல்வல்லான், சோமாஸ்கந்தர், ரிஷபாரூடர், கலியாணசுந்தரர் பிட்சாடனர், கஜசம்ஹாரமூர்த்தி ஆகியன வெளிநாட்டாரை கவருகின்ற வகையிலும் கலைத்துறையில் தமிழ் நாட்டிற்கு பெருமை சேர்க்கின்ற வகையிலும் விளங்குகின்ற கலைச் செல்வங்களாகும்.

செப்புத்திருமேனிகளில் இருவகை :

தமிழகத்தின் திருத்தலங்களில் விளங்கும் திருக்கோயில்களில் கற்சிற்பமான மூலவிக்ரகத்திற்கு அடுத்த நிலையில் எண்ணப்படுவது எழுந்தருளும் மூர்த்தங்களான செப்புத் திருமேனிகள் ஆகும். இந்தச் செப்புத் திருமேனிகள் இருவகைப்படும். முழுவதும் கனமாகச்

---

* தமிழகக் கோயிற்கலைகள் — இரா. நாகசாமி

செய்யப்பட்ட செப்புத் திருமேனிகள் என்றும் உள்ளே பொள்ளலாகச் செய்யப்பட்ட திருமேனிகள் என்றும் இருவகைப்படும்.

நமது ஆலயங்களில் விளங்கும் திருமேனிகள் அனைத்தும் கனமாகச் செய்யப்பட்ட செப்பு உருவங்களாகும்.

தேன் மெழுக்குமுறை : (முழுவதும் கனமானது)

செப்புப்படிமங்களைச் செய்யும் கலை இன்றும் * தமிழகத்தில் நிலைத்துள்ளது. எந்த உருவைச் செய்ய வேண்டுமோ அவ்வுருவைப் போல் முதலில் தேன் மெழுகினால் செய்வர். மெழுகினால் ஆன உருவின் மேல் "புற்றுமண்" பூசி நிழலிலே உலர வைப்பர். இதன்பின் புறத்தே தலையிலும், இடையிலும், அடியிலும் துளைகள் இருக்கும். இது நன்கு உலர்ந்த பின்னர் தீயிலே இடுவர். மண்ணின் உள்ளே மெழுகிருந்த பகுதி அச்சாக நிற்கும். பெரும்பகுதி செம்பும். மிகச் சிறிய அளவில் பித்தளை, தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகியவற்றையும் கலந்து உருக்கி அச்சின் பின் நடுவிலுள்ள துளையின் வழியாக ஊற்றுவர். தலையிலும் அடியிலும் உள்ள துளையின் வழியாக உலோகக் குழம்பு வெளிப்படும்.

அப்போது அச்சு முழுவதும் உலோகம் பரவி இருக்கிறது என்று அறிவர். இதைக் குளிர வைப்பர். ஊற்றிய உலோகம் கெட்டியாகும். பின்னர் அச்சை உடைத்து வார்ப்பை வெளியில் எடுப்பர். பின்னர் சிற்றுளி கொண்டு திறனுக்கு ஏற்பச் செதுக்கி எழிலுற அமைப்பர். "இம்முறையை, தேன்மெழுக்கு முறை என்பர்." இவ்வாறு செய்யப்பட்ட உருவம் முழுவதும் கனமாக இருக்கும். இது ஐந்து உலோகக் கலவை ஆனதால் பஞ்சலோக விக்ரகம் என்பர்.

பொள்ளலாகச் செய்யப்படும் முறை :

செப்புத் திருமேனிகளின் நடுவில் பொள்ளல் உடையதாகச் செய்ய வேண்டின் (இவ்வாறு செய்யப்படும் திருமேனி அன்பளிப்பாகவும் கண்காட்சியில் இடம் பெறுவதற்காகவும் செய்யப்படுகின்றன) முதலில் மண்ணைப்பிடித்து. அதன்மேல் மெழுகால் உருவை அமைத்து, அதன் மேல் மண்பூச வேண்டும். இதைத் தீயிலிட்டால் வெளியேயும் உள்ளேயும் மண் உருவு இருக்க. இடையிலுள்ள மெழுகு மட்டும் உருகிவிடும். இவ்வச்சில் உலோகத்தை உருக்கி ஊற்றினால் கனப் பொள்ளலான உருவம் கிடைக்கும்.

---

* குறிப்பாக சுவாமிமலை, கும்பகோணம் பகுதியில் அநேக சிற்பச் சாலைகள் இருந்து வருவதால் இன்றும் இந்த தெய்வக் கலைச்சிறப்பு உலகம் முழுவதும் பரவுகிறது.

இருவகை முறை :

தமிழகத்தில் *செப்புத் திருமேனிகள் செய்யும் போது மண்ணுலான அச்சை உடைத்து விடுவதால் மற்றுமொரு உருவம் அதே அச்சிலிருந்து செய்ய முடியாது. அதற்கு மீண்டும் மெழுகினுல் உருவம் பிடித்து, மண் இட்டு அச்சு செய்து, பின்னர் தான் மற்றுெரு உருவத்தைப் பெறமுடியும். இவ்வாறு ஒவ்வொரு உருவத்திற்கும் தனித்தனியாக அச்சு செய்வதால் இது சிறந்த கலையாகப் போற்றப்படுகின்றது.

தமிழகக்கலைக்கும் வடஇந்திய சிற்பக்கலைக்கும், வேறுபாடு உண்டு. தமிழகத்தில் மெழுகினுல் செய்யப்பட்ட உருவம் அங்கத் தெளிவு இல்லாமல் அமைக்கப்படும். நுண்ணிய வேலைப்பாடுகள் அங்கிலையில் இருக்காது. உலோகத்தால் உருவத்தை வார்த்த பிறகு நுண்ணிய வேலைப்பாடுகள் யாவும் ஸ்தபதியின் ஆற்றலுக்கேற்ப உளிகொண்டு செதுக்கி அமைக்கப்படும். ஆனுல் இந்தியாவின் வடபாகத்தில் மெழுகாலான உருவிலேயே நுண்ணிய வேலைப்பாடுகள் அனைத்தும் செய்து முடிக்கப்படும். உருவம் வார்த்த பின்னர் அதிக செதுக்கும் வேலை இருக்காது.

ஊரார் ஒப்புதலும் பிரதிட்டையும் :

ஒரு ஊரில் தெய்வ உருவைச் செப்பினுல் செய்ய விழையும் போது, மெழுகினுல் செய்த உருவை அலங்கரித்து ஊர் முழுவதும் x வலமாக எடுத்துச் செல்வர். பின்னர் மண்ணிட்டு அச்சு செய்வர் இவ்வாறு ஊர்வலமாக எடுத்துச் செல்வதால் ஊரார்களின் ஒப்புதலையும், அவர்கள் விருப்பினுல் வேண்டிய மாற்றங்களையும் செய்ய வாய்ப்பு உண்டு. உருவம் முழுவதும் வார்த்துச் செதுக்கியமைத்து அதன் பின்னர் அவற்றை உரிய பீடங்களிலே அமைக்கும் போதுதல இரத்தினக் கற்களை பீடத்திலிட்டு பின்னர் தெய்வ உருவை அப்பீடத்தில் பொருத்துவர். இதற்கு "இரத்தின நியாசம் செய்தல்" என்று பெயர். எவ்வாறு கருப்பக்கிருகத்தில் (மூலத்தானத்தல்) தெய்வச் சிலைகளை (கற்சிலாருபம்) பிரதிட்டை செய்கிறோமோ, அதுபோல செப்புத் திருவுருவங்களுக்கும் பிரதிட்டை செய்வதாய் இச்செயலும் அமைகின்றது

கண்திறத்தல் :

படிமத்தை தெய்வமாக மாற்றும் கடைசிச் செயல் கண் திறப்பது ஆகும். கலை நிறைந்த ஸ்தபதி உளியால் கண்களைச் செதுக்கியவுடன்

---

* விக்ரக உலோக விகிதம் தற்போது - ஈயம் (lead) - 3%, செம்பு (copper) - 82% பித்தளை (Brass) - 15% = இவை தவிர தங்கமும், வெள்ளியும் சேர்க்கப்படுகின்றன. இம்முறை சுவாமிமலை தேவசேனுபதி சிற்பத் தொழிற் சாலையில் நடைமுறையில் உள்ளது.

x புதியதாகப் பிரத்திட்டைச் செய்யப்படும் கற்சிற்பம், பஞ்சலோக சிற்பம்யாவும் ஊரினை வலம்வந்த பிறகே பிரதிட்டை செய்வது ஆகம மரபுவழியாகும்.

அச்சிலை தெய்வமாகக் கொண்டாடப்படும். கண் திறப்பது சிறந்த விழாவாகக் கொண்டாடப்படும். அப்பொழுது அவ்வழகிய செப்புத் திருமேனியை வடித்த ஸ்தபதிக்குப் பட்டாடைகள் அளித்து பலர்மாலைகள் அணிவித்து, பொன்னும் பொருளும் கொடுத்துக் கௌரவிப்பர்.

இவ்வாறாகச் செய்தளிக்கப்பட்ட * செப்புத் திருமேனிகள் தமிழகக் கோயில்களில் எழுந்தருளி இருந்து நமது பாரத நாட்டின் ஈடில்லா கலைப்பெருமையினை உலகறியச் செய்கின்றன இப்படிமங்களில் விளங்கும் ஆசனமுறைகள், கர அமைதிகள், ஆயுதங்கள், முத்திரைகள், அணிகலன்கள் ஆகியவைகளைப் பற்றியும் அறிதல் அவசியமாகும்.

படிமத் திருக்கோலங்கள் :

தெய்வப்படிமங்களின் திருக்கோலங்கள் "ஆசனங்கள்" எனப்படும். அவற்றை முறைப்படுத்தி ஐவகையாக வகுத்துள்ளன சிற்ப நூல்கள், அவை முறையே ஸ்தானகம், ஆசனம், சயனம், ஸ்தானுசனம், சயனுசனம் ஆகும். இவற்றை ஐந்தொழில் என்றும், பஞ்ச கிருத்யம் என்றும் விசுவகர்மீயம் என்ற சிற்ப நூல் கூறும்.

x ஸ்தானகம் – நின்றகோலம், ஆசனம் – அமர்ந்த கோலம், சயனம்–கிடந்த கோலம், ஸ்தானுசனம்–நின்ற கோலத்தின் பிற சாயல்கள், சயனுசனம் – கிடந்த கோலத்தின் பிற சாயல்கள்.

ஆசனம் என்பது கோலம் என்பதாகும். இதில் சமபாத ஸ்தானகம், வைதஸ்திக ஸ்தானகம், அர்த்தவைதஸ்திக ஸ்தானகம், வைசாகஸ்தானகம் காயோத் சர்க்கம் என ஐந்து வகை ஆகும். ஸ்தானுசன வகையில் 'வைஷ்ணவம்" (சிவமூர்த்தங்கள் விஷ்ணுமூர்த்தங்கள், சக்தி மூர்த்தங்களில் காணலாம்) மற்றும் "ஸ்வஸ்தி சாசனம்" (குழலூதும் கண்ணன், ரிஷபாந்திகர் படிமங்களில் காணலாம்) என இருவகைப்படும்.

o அமர்ந்த திருக்கோலத்தில் சுகாசனம், பத்மாசனம், அர்த்தபத்மாசனம், வீராசனம், உத்குடிகாசனம், யோகாசனம் ஆகியனவாகும். மேலும் ஆசனவகையில் ஆலீடம், பிரத்தியாலீடம் எனும் இரண்டு வகைகளும் உண்டு.

சயனத்தில் இருவகைகள் உண்டு. அவையாவன 1. சாதாரண "சயனம்" (மல்லாந்து படுத்தநிலை), 2 "அர்த்தாங்க சயனம்" (சாதாரண சயனநிலையில் ஒருபக்கத்தில் சற்று சாய்ந்து படுத்தநிலை).

---

* செப்புத் திருமேனிகள் அமைக்கும் விதம் சிற்ப நூல்களில் சொல்லப்பட்டாலும் தகுதி வாய்ந்த ஸ்தபதியிடம் பல நாள் உடனிருந்து இக்கலையைக் கற்றுக் கொள்ளுதல் முறையான செயலாகும்.

x *1968* — *2*-வது உலகத்தமிழ் மாநாடு — கையேடு.
படிமத் திருக்கோலங்கள் — வை. கணபதிஸ்தபதி. ப - *162*.

o ஆசனங்களின் விளக்கத்தை ஆ. வெ. எண். *384*ல் பக்கம் *25 - 30*ல் காண்க.

— S. நாராயணசுவாமி; MA., B. Ed.,

உடலேயும் தலையையும் இடப் புறமாதல் வலப் புறமாதல் வளைத்து, பார்ப்போர் உள்ளத்தில் ரசானுபவம் தோன்றுமாறு சிற்ப ஆசனங்களில் பங்க இலக்கணம் இடம் பெறச்செய்யப் படுகின்றது. உடல் ஒடிவை பங்கமென்று நூல்கள் கூறும் "பங்கங்கள் மூன்று" அவை முறையே "ஆபங்கம், சமபங்கம், அதிபங்கம்" ஆகும்.

ஆபங்கம் - சாத்விக பாவத்தையும், சமபங்கம் - ராஜஸ பாவத்தையும், அதிபங்கம் - தாமஸ பாவத்தையும் உணர்த்துவனவாம்.

இம்மூன்று பங்கங்களையும் சேர்த்து "திரிபங்கம்" என்றும். ஒவ்வொரு பங்கத்திலும் மூன்று ஒடிவுகள் இருப்பதால் ஒவ்வொன்றையும் பொதுப்படையாக திரிபங்கம் என்று கூறுகிறோம்.

சிற்பக் கரங்களின் அமைதி :

சிற்பங்களில் காணப்படும் பல்வேறு செயல்நிலைகளைக் கூறுவன கரங்களாகும். மனத்தில் நிகழும் உணர்வு நிகழ்ச்சிகளை எல்லாம், கரங்களினால் காண்போருக்குப் புலப்படுமாறு வெளிப்படுத்துவதே கர அமைதி அல்லது முத்திரை அல்லது அடையாளம் என வழங்குவர் சான்றோர். அதன்படி பரத நாட்டிய முத்திரைகள், அநுட்டான முத்திரைகள், சிவபூஜா முத்திரைகள், சிற்பமுத்திரைகள் என நான்காக வகைப்படுத்தப் பட்டுள்ளன.

சிற்பவகைக் கர முத்திரைகளை, 32-வகைகளாக ஆகமங்களும், சிற்ப நூல்களும் கூறுகின்றன. இக்கர அமைதிகள் இருவகைப்படும். அவை செயல்நிலைகளைப் புலப்படுத்தும் கரம், அழகு நிலைகளைப் புலப் படுத்தும் கரம் என்பனவாம். இந்த முப்பத்திரண்டு கர அமைதிகள் இங்குப் படங்களாகக் காண்பிக்கப் பட்டுள்ளன.

*** 32 கரங்கள் :**

1. அபயகரம் - காக்கும் கை, 2. வரதகரம் - வழங்கும் கை 3, 3அ. கடககரம் - நண்டுபிடி. 4, 4அ. சிம்மகர்ணகரம் - சிங்கக்காது 5, 5அ. வியாக்கியானகரம் - கற்பித்தல். 6, சூசிகரம் - (சுட்டும்கை) 7. தர்ஜனீகரம்-அச்சுறுத்தும் கை, 8. கர்த்தரீமுக கரம் - கத்தரிக்கோல் 9. அலபத்ம கரம் - மலர்ந்த தாமரை, 10. விஸ்மய கரம் - வியப்பு, 11. பல்லவ கரம் - தளிர்க்கை, 12. நித்ரா கரம் - ஊன்றியகை, 13. அர்த்த சந்திர கரம், 14. அர்த்த பாதக கரம், 15. திரிசூலகரம், 16. முஷ்டி கரம் - மல்யுத்தம் மற்றும் ஆயுதங்களைப்பிடித்தல், 17. சிகர கரம் - வில்லைப்பிடிக்கும்கை, 18. புஸ்பரிச கரம் - நிலத்தைத் தொடும்கை 19. கடிகரம் - இடைக்கை, 20. ஊருகரம் - நின்ற திருமேனிகளின் தொடைமீது பொருந்த வைத்துஅமைக்கும்கை, 21. ஆலிங்கன கரம் -

---

* இதன் விரிவான விளக்கங்களை ஆதீனவெளியீடு 384ல் பக்கம்9ல் காண்க, தட்சிணாமூர்த்தி 1பாகம். S. நாராயணசுவாமி, M. A. B. Ed.,

அணைக்கும் கை, 22. தனுர்க்கரம் - வில்பிடிக்கும் கை, 23 டமருகரம் உடுக்கையைப்பிடித்து முழக்கும் கை, 24 தாடனகரம் - அடிக்கும் கை 25. அஞ்சலிகரம் - வணங்கும்கை, 26. தியான கரம் - சிந்தனைக்கை. 27. புஷ்பபுடகரம் - மலர்களைப்போட்டு வணங்கும் கைகள், 28. தர்ம சக்கர கரம் - தர்மசக்கரத்தைச் சுழற்றும் தன்மையுடையகரம், அல்லது அறவாழிக்கை 29, 29அ. கஜகரம் - தும்பிக்கை போன்றகை, 30. தண்டகரம் - (யோகதண்டம்) நீட்டியகை, 31. டோலகரம் தொங்குகை 32. பிரசாரிதகரம் - தோளினை நேராக நீட்டிப் பல்லவ முத்திரையைக் காட்டி நிற்கும் கரத் தோற்றம்.

மேலும் சிலசிற்பங்களில் காணப்படும் கர அமைதிகள் ஞானமுத்திரை, சின்முத்திரை, வியாக்கியான கரம் ஆகியன படம் - 5ன் வடிவமாகும். ஆகூய கரம் - என்பது அழைத்து வழங்கும் கையாகும் * நாட்டியகரம் — எழிற்கையாகும் விவர்த்தி கரம் — சுழற்கை (படம் 23-ல் டமருகம் இல்லாது இருக்கும் நிலை). இத்தகைய கர அமைதிகளை நன்கு உணர்ந்த சிற்பிகள் தாம் வடிக்கும் சிலைகளில் பேரழகுடன் அமைத்துக் காட்டுவர்.

படிமங்களின் மகுடம் மற்றும் கேச அலங்காரங்கள் :

தெய்வப் படிமங்களுக்கும் அரசர்க்கும், அரசியர்க்கும், குழந்தைகட்கும் பலநிலைகளில் தலைக் கேசங்களை முகத் தோற்றத்திற்கு ஏற்றவாறு கட்டியும், பின்னியும், தொங்கவிட்டும், சரிந்தும், விரிந்ததுமான நிலைகளில் அமைப்பர். கேசங்களையே மகுடம் போன்ற அமைப்பிலும் அமைப்பர் அல்லது கேசத்திற்கு மேல் தனித்து விளங்கும் மகுடம் (கிரீடம்) ஒன்றைக் கொண்டதாகவும் அமைப்பர். இத்தகைய அமைப்பினைத் திருக்கோயிலில் விளங்கும் படிமங்களிலே காணலாம்.

இவ்வாறு படிமங்களில் எழிலூட்டப்பட்ட மகுடமுடிகள் பதின் மூன்று வகைப்படும் அவையாவன:

x (1) ஜடாமகுடம், (2) ஜடாபாரம் (3) ஜடாமண்டலம், (4) ஜடாபந்தம், (5) விரிசடை, (6) சுடர்முடி, (7) கேசபந்தம், (8) சிரஸ்திரகம், (9) குந்தளம் (10) தம்மில்லம், (11) அளகசூடம், (12) கிரீட மகுடம், (13) கரண்டமகுடம் என்பனவாம். மேலும் இவற்றில் சில உட்பிரிவுகளும் உள்ளன. இவ்வகையான, மகுடஅமைப்புக்கள் யாவும், கற்சிலா ரூபங்களிலும் உற்சவத் திருவுருவங்களிலும், காணலம்.

---

* கூத்தாடும் நிலையில் உள்ள விநாயகர், ஞானசம்பந்தர், கிருஷ்ணன் முதலான திருமேனிகளின் இடக்கரத்தினைக் காண்க.

x 1, மகுடமுடிகள் விளக்கங்கள் - ஆ. வெ. எண் 384ல் காண்க.

2. ''சிற்பச் செந்நூல்'' மகுட விளக்கத்தைப்பற்றி விரிவாகக் கூறுகிறது. இது மகாபலிபுரம் கலைக்கல்லூரி வெளியீடு.

ஆயுதங்களும், முத்திரைகளும் :

போர்க் கருவிகள் — சக்தி, சூலம், சங்கு, சக்கரம், வஜ்ரம், தண்டம், உடைவாள், சூரிகை (சிறியகத்தி), கேயம், வில், அம்பு, மழு, கதை சம்மட்டி, ஈட்டி, வேல், பாலம், பிண்டிபாலம்.

தொழிற் கருவிகள் — கலப்பை, உலக்கை, கொட்டாபுளி, சிருக், சிருவம் தந்தம், கத்கரி, எழுத்தாணி, தாளம், உழவாரப் படை, அங்குசம், பரசு, குந்தாளி, அரிவாள்' சாட்டை, யோக தண்டம், முழக்கோல், உளி.

இசைக் கருவிகள் — யாழ் (பஞ்ச மரபு நூலில் கூறப்பட்டுள்ள யாழின் வகைகளாவன – பேரியாழ், மகரயாழ், சகோடயாழ் செங்கோட்டியாழ், வில்யாழ், நாரதயாழ், கீசகயாழ், ஆயிரப் பேரியாழ் ஆகியன) வீணை, குழல், முரசு, மத்தளம், பஞ்சமுகவாத்தியம், உடுக்கை, எக்காளம் திருச்சின்னம், மிருதங்கம், தம்புரா, சேமங்கலம்

உயிரினங்கள் — இடபம், சிம்மம், குதிரை, மான், ஆடு, பசு, மூஷிகம் ஞமலி (நாய்) ஆமை, அன்னம், மயில், சேவல், கிளி, காகம், சர்பம், முயலகன். வேதாளம் கோசம், பூதம், கற்பகவிருக்ஷம், காமதேனு புருஷாமிருகம், யாளி, யானை.

பூக்கள் — செந்தாமரை, வெண்தாமரை, குவளை, அல்லி, ஊமத்தை, நீலோத்பலம், எருக்கம்பூ, செங்கழுநீர் கொன்றை

பொதுப்பொருள்கள்— மணி, கண்ணுடி, தீபம், கலசம், கமண்டலம் கெண்டி, அக்ஷமாலை, ஸ்படிகமாலை, ஏடு, கொடி, கபாலம், கட்வாங்கம், குடை, வீரக்கழல், சாமரம் சிலம்பு, செங்கோல், தலைக்கோல், தீச்சுடர், கரும்புவில், மலர்க்கணை, மோதகம், கொக்கிறகு, கங்கை, நெற்கதிர், கும்பம், மலை, பாசம், லிங்கம், புலிபீடம், திருவாசி முதலான அநேக பொருள்கள் உள்ளன.

முத்திரைகள் :

காளிகாபுராணம்	கூறும்	முத்திரைகள்	—	56
தந்திரசாரம்	நூலில் விஷ்ணுவிற்குரிய	,,	—	19
,,	சிவன்	,, ,,	—	9
,,	கணேசர்	,, ,,	—	8
,,	அக்னி	,, ,,	—	1
,,	சூரியன்	,, ,,	—	1
,,	சக்தி	,, ,,	—	31
,,	ஆவாஹநதி	,, ,,	—	9
,,	சக்திசம்பந்தம் (வேறுவகை) ,,		—	12
				146

மேற்கண்ட முத்திரைகளின் பெயர்கள் ஆதீன வெளியீடு எண் :- 384-ல் காணலாம்.

* அணிகலன்கள் :

தமிழகம், வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்ட, வளமான நாகரிகத்தையுடைய நாடு. வளமான தமிழகம் என்பதனை உணர்த்தத் திருக்கோயில்களே சான்றாகும். இத் திருக்கோயில்கள் யாவும் நாகரிகம், பண்பாடு, கலை முதலான அனைத்திற்கும் இருப்பிடமாக விளங்கின. நம் முன்னோர்களின் சிந்தனைகள், சிந்தனைகளால் விளைந்த கட்டிடக்கலைகள் ஆகியவை காண்பவர் வியக்கும் வண்ணம் அமைந்து விளங்குவதை. இன்றும் காணலாம். இத்திருக்கோயில்களே அனைத்துக் கல்வியும் பெற உதவும் பல்கலைக்கழகங்களாகவும் விளங்கின.

எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கிய தமிழகம் அணிகலன்கள் படைப்பிலும் சிறந்து விளங்கியது. எண்ணிக்கையால் மட்டுமின்றி அமைப்பு முறையாலும் பெருகிய அணிகலன்களை வரலாற்று நெறியோடு கண்டு மகிழலாம். மக்கள் அணியும் அணிகலன்களும் இறைத் திருமேனிகளுக்கு அணிவிக்கப்படும் அணிகலன்களும் தமிழகத்தில் தனிச்சிறப்பு வாய்ந்தவை.

---

* ORNAMENTS OF THE TAMILS — *சா. கணேசன் 2–வது உலகத் தமிழ் மாநாடு - கையேடு பக்கம் 211 - 212.*

கொடி, தளிர், அரும்பு, மலர், மலர்க்கொத்து போன்றவையே தொடக்க காலத்து அணிகளாய் அமைந்திருக்க வேண்டும். படிப்படியாக வளர்ந்து பொன்னும் நவரத்தினங்களும் பொதிந்த இன்றைய தோற்றத்தை அடைந்திருக்கின்றன.

அணியப்படுவன யாவும் "அணி" என்று பெயர் பெற்றன அவற்றுள் கோத்து அணிந்து கொண்டவை "கோவை" என்றும், தொடுத்து அணிந்து கொண்டதைத் "தொடை" என்றும், அசைந்து ஆடத்தக்கனவாய் அமைத்து அணிந்து கொண்டவை 'மாலை' என்றும், ஒரு தரமாய் ஒழுங்குபட அமைத்து அணிந்து கொண்டவை 'சரம்' என்றும் கொடிகளை முறுக்கி அணிந்து கொண்டதைக் 'கொடி'. 'கொடிமுறுக்கு' என்றும், பசியகொடியை வட்ட வடிவமாக்கி அணிந்து கொண்டதைப் 'பைந்தொடி' என்றும். பூவைப் பறித்துக் காதில் அணிந்து கொண்டதை 'கன்னப்பூ' என்றும், பூவரசின் பூத்தோட்டைக் காதில் அணிந்து கொண்டதைத் 'தோடு' என்றும், பனை ஓலையைச் சுருளாக்கிக் காதில் அணிந்து கொண்டதை 'ஓலை'. 'குதம்பை' என்றும் இப்படியாகப் பல்வேறு அணிகலன்களுக்குப் பெயரிட்டு வழங்கி வந்தனர். இன்றும் அப்பெயர்கள் யாவும் நிலைத்து உள்ளன.

சில அணிகலன்களுக்கு இரண்டு அல்லது மூன்று * பெயர்கள் வழக்கத்தில் உள்ளன. சிலம்பு – நூபுரம் என்ற இருபெயரும் ஒரு பொருளையே உணர்த்துவன. ஓலை - குதம்பை என்பனவும் ஒருவகைக் காதணியே ஆகும். பாதகடகம் – பாடகம்–தண்டை என்னும் மூன்றும் குறிப்பது ஒருவகைக் காலணியையே ஆகும் குறங்கு செறி–கவான்செறி இரண்டும் தொடையணியையே சுட்டும்.

தலையணிவகை :

1. முடி, சுடிகை, சேகரம், கிரீடம் சூடிகை, மகுடம், மௌலி மேலே கண்ட முடிவகை ஐந்துறுப்புகளையுடையவை. அவை முறையே தாமம், மகுடம், பதுமம், கோடகம், கிம்புரி என்பனவாம்

2. தொய்யகம் முகசரம், பூரப்பாளை, புல்லகம், தென்பல்லி வடபல்லி சிலம்பகம், சூடை, தலைச்சுட்டி, சூடாமணி, சூரியப்பிரபை, சந்திரப்பிரபை, சூளாமணி, வலம்புரி, சீதேவி, கோதை. 3. நெற்றிச் சுட்டி, ஓடை, சுடிகை, சூட்டு, பட்டம் 4. சடைநாகம், சடைத் திருகு, குச்சம், குஞ்சம்.

கழுத்தணிவகை :

அரும்பொட்டி, மணிவடம், கண்டவலயம் கிரீவம், சரப்பளி, கொத்து. அரும்புச் சரம், மலர்ச்சரம், கண்டசரம், கண்டமாலை, அட்டிகை

** சிற்பநூல்கள், கல்வெட்டுகள் - யாவும் அணிகலன்களின் பல பெயர்களை எடுத்து விளக்குகின்றன.*

7

ஞாண், சவடி, கோதை, காரை, பொட்டு, சூலம், தாலி, புலிப்பற்றலி தும்பு, திரு, ஆரம், கண்டிகை, தொடையல், வீரசங்கிலி, நேர்ஞ்சங்கிலி, மதாணி, மாலை, வடம், கோவை, மணியாரம், முத்தாரம், முன்றுலி, பின்றுலி, பதக்கம், சன்னவீரம், ஐம்படைத்தாலி, புலிநகத் தாலி, தாழ்வடம், மாங்காய்மாலை, மணிமிடை பவழம், நெல்லிக்காய்மாலை, சந்திரஆரம், ஏகருத்ராட்சம், ருத்ராக்ஷமாலை.

காதணிவகை :

தோடு, ஒட்டு, ஓலை, சின்னப்பூ, கன்னப்பூ, குழை, கம்பி, வல்லிகை, குணுக்கு, தருப்பு, கடுக்கன், மகரி, வீரசன்னம், திரிசரி, பஞ்சசரி, நவசரி, நவகண்டி, அட்டிகை, கடிப்பிணை தண்டட்டி, குண்டலம், கொப்பு, புகடி, முருகு, செவிப்பூ, மடல், சன்னவதஞ்சம், பாம்பணி, நாகபடம், பாம்படம், குதம்பை நீலக்குதம்பை, சந்திரபாணி, குரடு, செவியீடு.

மூக்கணிவகை :

மூக்குத்தி, புல்லாக்கு (புலாக்கு), பேசரி, நத்து.

கையணிவகை :

வாகுவலயம், சேயூரம், அங்கதம், தோள்வளை, தொடி, ஆடகம், கைச்சரி, வளை, தொடி, கங்கணம், மகரவாய், புரிவளை, புரியகம் கடகம், கைக்கட்டு, முறுக்கு, காப்பு, வால்வளை, பைந்தொடி, கொலுசு, குருகு, சரி, வண்டு, சங்கு, வங்கி, சூடகம், கன்று, பிடிகை, ஆளிக்காப்பு, தோடா, பவளப் பல்வளை, நவமணி வளை, இடைச்சரி, பாசித்தாமணி, நெளிவளை, முடுகு, பாட்டுலா.

கைவிரலணிவகை :

மோதிரம், ஆழி, வீகம், இலைச்சினை, அரும்பு, தடை, நெறி, வாளைப்பகுவாய், மரகதச்செறி, மகரவாய் மணியாழி, வட்டப்பூ, மரகத நாயகம்,

இடையணிவகை :

மேகலை (7வடம்), காஞ்சி (8வடம்), கலாபம் (16வடம்) பருமம் (18வடம்), விரிசிகை (32வடம்), தோரை, அத்து, மறு, அரைப்பட்டிகை அரைஞாண், உதரபந்தம், இரதனம், கடிசூத்திரம், கீர்த்திமுகம், இடைச் செறி, சதங்கை, மணிக்கோவை, ஐம்படைக் கோவை, அரைச்சதங்கை, அரைவடம், அரைமூடி, கச்சி, கச்சைப்புறம்.

துடையணிவகை :

குறங்குசெறி, கவான்செறி,

பாத அணிவகை :

பாடகம், பாதசரம், கிண்கிணியாரம், புனையாரம், பாதசாலம், சதங்கை, சிறுமணி, நூபுரம், பரிபுரம், பரியகம், சிலம்பு, அரவம், தண்டை, பாதகடகம், குடச்சூல், ஞெகிழம், புசங்க கடகம், கண்டை, வீரக்கழல், கொடைக்கழல், காற்சரி.

கால் விரலணி வகை :

கால்மோதிரம், மிஞ்சி, மெட்டி, பீலி, மகரவாய், நெளி, காலாழி.

சண்டேசுவரர் ஆயுதங்கள்

திருக்கோயிலில் விளங்கும் தெய்வத் திருமேனிகளின் கரங்களில் பல ஆயுதங்கள் விளங்குகின்றன. இவ்வாயுதங்களில் பல இன்றும் நமது அன்றாட வாழ்க்கையில் பயன்படுகின்றன. சில ஆயுதங்கள் காலத்தால் மறைந்தும் அதன் வெளிப்பாடு இல்லாமலும் இருப்பதை நாம் அறிகின்றோம். ஆயுதங்கள் சிலநேரங்களில் கருவிகளாக அமைவதும் உண்டு. தெய்வத் திருமேனிகளில் காணப்படும் ஆயுதங்களாகிய கருவிகள் - தொழிற்கருவிகள், போர்க்காலக் கருவிகள், இசைக் கருவிகள், அனுக்கிரக கருவிகள் எனப்பல வகைகளாகக் கூறுவர். அவ்வகையில் பல நிலைகளில் விளங்கும் சண்டேசுவரப் பெருமானின் திருக்கரங்களிலுள்ள கருவிகளைப்பற்றியும் சண்டேசப்பதம் பெற்ற சமயம் சிவபெருமானிடத்தில் விளங்கிய கருவிகளைப் பற்றியும் இங்கு ஒருசேரக் காணலாம்.

மான் :

சிவனின் இடக்கரத்தில் மான் திகழும். மான் தனது உணவைத் தேடுங்காலத்தில் இங்குமங்குமாகத் தேடி மனம் போனபடிச் செல்லும். மனிதனின் மன நிலையும் அப்படியாகவே உள்ளது எனலாம். மனக் கட்டுப்பாடுதான் முதலில் தெய்வ சிந்தனைக்கு மிக முக்கியமாகும். இது புலனடக்கத்தை அறிவுறுத்துவதாக அமைகிறது.

மழு :

சிவபெருமானின் வலக்கரத்தில் திகழ்வது மழு எனும் ஆயுதமாகும். இன்று மரங்களை வெட்டப் பயன் பெறுவதாக எறியென்னும் பெயருடையதாக வழங்குகிறது. தலைப்பகுதி தடித்த நிலையிலும், அதிலிருந்து வெளிப்பட்டிருக்கும் இரும்பு வெட்டுவாய் மிகக் கூர்மையானதாகவுமிருக்கும். இது பொதுவாகச் சண்டேசுவரர் கரத்தில் விளங்குவது.


பரசு :

இவ்வாயுதம் சற்றேறக்குறைய மழு போன்ற அமைப்பினை உடையதுதான். இதன் வாய் சற்று வளைந்தும் அகலமானதாகவும் கூரியதாகவும் இருக்கும். இவ்வாயுதம் மரத்தண்டில் செறிக்கப்பெற்றதாகும். சண்டேசரின் செப்புத் திருமேனியில் பரசு காணப்படுகின்றது.

சூலம் :

இது மூன்று நுனிகளையுடையது. சிவபெருமானுக்குச் சிறப்புடையதாக அமைந்த ஆயுதம். கருவரையிலும் சக்தி ஆலயங்களில் பலிபீடத்தின் அருகிலும் எஃகு அல்லது செப்பினாலும் செய்து சந்நிதிக்கு நேரே அமைத்திருப்பர்.

சண்டேசுவரர் திருக்கரங்களில் விளங்கும் ஆயுதங்களும் முத்திரைகளும்



1) மான் 2) மழு 3) பரசு
4) சூலம் 5) வஜ்ரம் 6) கேடயம்
7) ஸர்ப்பம் 8) பாசம் 9) தநுசு
10) அம்பு 11) அங்குசம் 12) கமண்டலம்
13) அக்ஷமாலை 14) கமலம் 15) சூரிகை
16) மணி 17) நீலோத்பலம் 18) தண்டம்
19) சக்தி 20) பாலம் 21) கட்கம்
22) பிண்டிபாலம் 23) அஞ்சலிஹஸ்தம் 24) அபயஹஸ்தம்
25) வரத ஹஸ்தம் 26) சூசிஹஸ்தம் 27) விஸ்மயஹஸ்தம்
28) கடக ஹஸ்தம் 29) கடிஹஸ்தம் 30) கோசம்
31) உத்குடிகாசனம் 32) சுகாசனம்

வஜ்ரம் :

இது சூல அமைப்பிலே மேலும் கீழுமாக விளங்குவது. ஆறு கூரிய பகுதிகளை உடையது. முருகனுக்குச் சிறப்புடைய ஆயுதம். இது பிடித்தபடியே எறியும் கருவிகளில் ஒன்றாகும். இதனை நடுவில் பிடித்து எறிவது வழக்கம். இருமருங்கும் குத்தும் இயல்பினது.

கேடயம் ;

இது கத்திவெட்டைத் தடுப்பதற்காகப் பயன்படுவது. இது பலகை, இரும்புத்தகடு, போன்றவற்றாலும் வலுவுள்ள காட்டெருமை, கடமா, நீர்யானை, காண்டாமிருகம் இவற்றின் தோலாலும் செய்யப் பெறும். சதுரம், நீளச் சதுரம், வட்டம், முக்கோணம், முதலிய பல வடிவங்களிற் செய்யப் பெறும்.

சர்ப்பம் :

நாகரூபத்தை அப்படியே தெய்வக் கரங்களில் அமைப்பது ஒரு வழக்கம். இதனை நாகபாசம் என்றும் கூறுவர். இதுவும் பாசவகைகளில் ஒன்றாகும்.

பாசம் :

இது கயிறு. பகைவர்களின் கைகளையும் கால்களையும் கட்டப் பயன்படும். ஒரு கயிறு அல்லது இரண்டு மூன்று கயிறுகள் சேர்த்து, எளிதில் அவிழ்க்கும் சுருக்குமுடிச்சாக இடப் பட்டிருக்கும். சுருக்கிடாமல் வளையமாகவும் இருக்கும். இது விநாயகருக்குச் சிறப்பான கருவியாகும்.

தநுசு : (பிநாகம்) – (வில்)

இது அம்பு எய்யப் பயன்படுவது. மூங்கில், சிலையென்னும் மரம் முதலான வளையக் கூடிய நார் மரத்தால் செய்யப்பெறுவது. இந்த வில்லினது இருதலையிலும் தோல், அல்லது நார்க்கயிற்றானியன்று நாண் கட்டப் பெற்றிருக்கும். வில்லை வளைத்து நாணை இறுகக் கட்டி அதன் நடுவில் அம்பை (அமோகம் என்கிற அஸ்திரம்) வைத்து விடுவது வழக்கம். எவ்வளவுக்கெவ்வளவு வில்லின் வலுவும், நாணின் உறுதியும் இழுத்து விடுபவன் வன்மையும் இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அமோகம் ஆகிய அம்பின் வேகமும் தைக்கும் வன்மையும் மிகும். அம்பு பட்டவுடன் இறப்பதற்காக அதன் நுனியில் விஷம் தோய்த்து வைத்தலும் வழக்கம் ; அம்பின்நுனி பிறைமதிபோலக் கவர்பட்டதாகவும் இருக்கும். மேலும் சூரியன். சூலம், வேல், வஜ்ரம், சக்தி. நாகமுகம் போன்ற பலவகை வடிவமைப்புகளில் அம்புகளின் முனைப்பகுதி அமைந்து காணப்படும்.

அம்பு : (அமோகம்)

வில்லை வளைத்து அதில் அம்பை வைத்து எய்யப்பெறும். நுனி மட்டும் கூரிய முள்போன்றது. நுனிமட்டும் இரும்பாலானது. நுனியை ஒரு கழியிற் செருகியிருப்பார்கள். அதனது வால்பக்கத்தில் கழுகின் இறகுகளையும் மற்றபறவை இறகுகளையும் கட்டியிருப்பார்கள். பெரும்பாலும் கழுகிறகே இதற்குப் பயன்படும். இறகு கட்டுவது விரைந்து காற்றை ஊடுருவிச் செல்வதற்காகவே.

அங்குசம் :

இது யானையை அடக்கப் பயன்படுவது. இரும்பாற் செய்யப் பெற்ற வளைந்த மூக்கும் குத்தியடக்கக் கூடிய ஒரு கூரிய நேரான பகுதியும் உடையது. நீளமான கழிகளிற் செருகப் பெற்றிருக்கும். யானைப்பாகன் இதனை யானையின் காதிலே மாட்டித் தொங்க விட்டிருப்பான். இதில் இரண்டு உருவங்கள் உள்ளன. இது விநாயகருக்குரிய சிறப்பு ஆயுதமானாலும் " விபுசண்டர் '' க்குரியதாகவும் அமைகின்றது

கமண்டலம் : (குண்டிகை)

நீர் வைத்துள்ள கலம். ஒருமரத்தின் காயால் இயன்றது. முனிவர்கள் - அந்தணர்கள் தங்கள் நாட்கடனைக் கழிப்பதற்காக வைத்திருப்பார்கள். இதுவும் அக்ஷமாலையும் ஆயுதங்கள் அல்லவானாலும் திருவுருவ நிலையை அறிந்து கொள்ள உதவும் கருவிகள் ஆகும். இந்தக் கருவி ஞானமார்க்கத்திற்கு உரியது. கிரகஸ்தர்களுக்கு உரிய கமண்டலத்தில் மூக்குப் பகுதி அமைந்திருக்கும். தெய்வத் திருவுருவங்களில் கமண்டலத்தின் மேல் வளையம் (கைப்பிடிவளையும்) மற்றும் மூக்குப் பகுதி இருக்காது என்பதனை சிற்பங்களில் காணலாம். இக்குண்டிகையான கமண்டலம் – நான்கு முகம் கொண்ட சண்டநாதர் திருவுருவத்தில் காணப்படும்.

அக்ஷமாலை :

இது உருத்திராக்ஷமாலையாகும். இதனைக் கழுத்தில் மாலையாகத் திருவுருவங்களில் தொங்கவிடுவதும் உண்டு. மேலும் தெய்வங்களின் கரங்களில் ஜபமாலையாகவும் காட்டப்பட்டிருக்கும்.

தாமரை : - (கமலம்/பத்மம்)

தாமரைமலர் கரங்களிலும் திருவடிகளுக்குக் கீழேயும் அமைதல் கூடும். பொதுவாக இந்த மலர் ஆயுதங்களின் வரிசையில் காணப்பட்டாலும் ஞானமார்க்கத்தைச் சுட்டிக் காட்டுவது ஆகும். சூரியன், தேஜஸ் சண்டர், விஷ்ணு ஆகிய திருவுருவங்களில் சிறப்பாக அமைந்திருக்கும்.

கட்கம் : - (பெரியகத்தி)

இது மன்னர்களின் உடைவாளாகும். அடிப்பாகம் அகன்றும் நுனிப்பாகம் மிகக் கூர்மை உடையதாகவும் விளங்கும். இதனை வைப்பதற்கு உரிய வாள் உறையும் உண்டு. போர்க் காலங்களில் அதிகம் பயன்படுவது. மேலும் நுனிப்பக்கம் இருபுறத்திலும் சற்று விரிந்தும் கூர்மை உடையதாகவும் இருக்கும். இதனைவாள் என்றும் கூறுவர். இது பல வடிவமைப்புகளை உடையது. இந்த வாளின் கைப்பிடி உபயோகிப்பவனின் கையினை விட்டு அகலாதபடி இருப்பதற்கான அமைப்பில் செய்யப்பட்டிருக்கும்.

சூரிகை : - (சிறியகத்தி)

கூர்வாளினைப் போன்று மிகச்சிறிய வடிவமைப்பில் விளங்குவது. முக்கால் அடிக்குமேல் இருக்காது. இதன் கைப்பிடி மரத்தால் அமைந்திருக்கும். இதன் கூரில் விஷமும் சில சமயங்களில் தடவிவைப்பதுண்டு. இதனை "பிச்சுவா" என்றும் கூறுவர். இதனை உபயோகிக்கும் மன்னர்கள் இதன் கைப்பிடியைத் தந்தம், நவரத்தினக்கல், வெள்ளி, தங்கம் போன்றவைகளால் அழகுபடுத்தி அமைத்திருப்பர்.

கண்ட்டம் : (மணி)

இது ஒரு படைக்கலமல்லவாயினும் பரநாதத்தை எழுப்புவதால் ஆணவ இருள் அகன்று ஆன்மாக்கள் உய்தி பெறுகின்றன. ஆதலால் இது ஒரு ஞானப்படையாயிற்று. இது பெரிய அளவில் திருக்கோயில்களில் அமைந்திருந்தால் ஆராய்ச்சி மணி என்றும் கூறுவர். போர்க் காலங்களில் கைப்பிடியுள்ள மணி விளங்கும். பூசை மணிக்கும் கைப்பிடி உண்டு.

நீலோத்பலர் :

அம்பிகையின் வலக்கரத்தில் கடககரத்துள் அமைவது. இம்மலர் நீல நிறம்வாய்ந்தது ஆகும். சண்டிகேசுவரி (தர்மநீதி) வலக்கரத்திலும் விளங்குவது.

தண்டம் :

இது நீளமான கைத்தடி. மரத்தாலானது. சண்டேசுவரரின் பெரும் பாலான கற்சிலாருபங்களில் இத்தண்டம் விள்ங்குவதைக் காணலாம். தண்டாயுத பாணியாக விளங்கும் முருகனுக்கு சிறப்புடைய கருவியாகவும் அமைவது.

சக்தி :

இது ஆறு கூரியப்குதிகளை உடையது. முருகனது திருக்கரத்தில் விள்ங்குவது. இரு வளைவோடுகூடிய மேலும் கீழ்மாக உள்ள வேலின்

இலைப்பகுதியினை உடையது. இது வீசிஎறிந்து பகைவரை அழிக்கும் ஓர் படைக்கருவியாகும். இதனையே நீளமான மரத்தண்டில் சொருகி அமைத்துக்கொண்டால் சக்திவேலாகவும் பயன்படும்.

பாலம்:

இது மரக்கொம்பாகும். இரண்டு மரக்கொம்புகளை ஒன்றாக அடிப்பகுதியினை சேர்த்து அவைகளை இறுகக் கயிற்றால் கட்டி வைத்துகொள்வர். இதனைக் கையில் வைத்துக்கொண்டோ அல்லது விட்டெறியும் ஆயுதமாகவோ பயன் படுத்தலாம்.

பிண்டி பாலம்:

இது மரத்தண்டில் சொருகப்பட்ட நீண்ட வேலின் இலைப்பகுதி போல் இருக்கும். அல்லது படத்தில் காட்டியபடி இலைப்பகுதியானது இரண்டு வளைவு உள்ளதாகவும் அமையும். இது விட்டெறியும் ஆயுதங்களில் ஒன்றாகும். இதனை வேல் கம்பு என்றும் கூறுவர்.

அஞ்சலி ஹஸ்தம்:

அபயகரத்தோற்றத்தோடு அமைந்த வலக்கரம் இடக்கரம் இரண்டையும் நெஞ்சுக்கு நேராகச் சேர்த்து அமைந்த தோற்றத்தை அஞ்சலி ஹஸ்தம் என்பர். பெரும்பாலும் சண்டேசுவரரின் உற்சவத் திருமேனிகள் யாவும் அஞ்சலி கரத்தோடு விளங்குதலைக் காணலாம். சிலசமயம் அஞ்சலி கரத்தின் மத்தியில் மாலை இருப்பதாகச்செய்தலும் உண்டு.

அபய ஹஸ்தம்:

கையின் சுட்டு விரல் நடுவிரல் அணிவிரல் சிறுவிரல் ஆகிய நான்கு விரல்களையும் ஒரு சேர அமைத்து, கைக்குச் சம உயரத்தில் மேல் நோக்கிச் செங்குத்தாக நிறுத்தி, பெரு விரலைச் சுட்டு விரலோடு சேர்த்து மேல் நோக்குமாறு அமைத்துப் பிடிக்கும் கரலட்சணத்திற்கு அபய கரம் என்று பெயர். இது அஞ்சாதே, அபயம், அருளல். என்ற பல குறிப்புகளை உணர்த்துவதாகும்.

வரத ஹஸ்தம்:

மேற் கூறிய அபயஹஸ்தத்தைக் கீழ் நோக்கியவாறும் உள்ளங் கை வெளி நோக்கிவாறும் அமைத்துக் காட்டினால் அது "வரத ஹஸ்தம்" ஆகும். இதனை கொடுக்கும் கரம் என்பர். அனைத்து செல்வங்களையும் கொடுப்பது வரதஹஸ்தம்.

சூசி ஹஸ்தம்:

சுட்டு விரலை மட்டும் செங்குத்தான நேர்நிலையில் வைத்து கடக ஹஸ்தம்போல நிறுத்துவது சூசி ஹஸ்தம் எனப்படும், இதன்தோற்றம்

ஊசிபோல் அமைந்திருத்தலின் இப்பெயர் பெற்றது. ஏதாவது ஒன்றைச் சுட்டிக் காட்டுவது இதன் குறிப்பாகும்.

விஸ்மய ஹஸ்தம் :

உள்ளங்கையை வெளியே காட்டாமல் உட்பக்கமாக புறங் கையைக் காண்போருக்குத் தெரியுமாறு காட்டிப் பிடிப்பது விஸ்மய ஹஸ்தமாகும். இது வியப்பு என்னும் மெய்ப்பாட்டை உணர்த்து வதாகும்.

கடக ஹஸ்தம் :

பெருவிரலை உட்பக்கமாகச் சிறிது வளைத்து நடுவிரல் அணிவிரல் இரண்டையும் சேர்த்து முன்பக்கமாக வளைத்து, சுட்டு விரல் சிறு விரல் இரண்டையும் தத்தமது இடங்களிலே நிறுத்தி, மேற்கணுக்களைச் சற்று வளைவாகப் பிடிக்கும் கரம் “ கடக ஹஸ்தம் ” எனப்படும். இதில் வேறு நிலையும் உண்டு.

இதில் நடுவிரல் நுனி அணிவிரல் நுனியிலிருந்து சிறிதளவு முன்னேக்கியவாறு அமைந்திருத்தல் வேண்டும். இதன் தோற்றம் நண்டுபோல் இருத்தலின் இதுவும் கடக ஹஸ்தம் எனப்படும். இது பொருள்களைப் பற்றிப் பிடிக்கும் தன்மையைப் புலப்படுத்துவதாகும்.

சிம்ஹ கர்ண ஹஸ்தம் :

முன்கூறிய கடக ஹஸ்தத்தில் நடுவிரல் உள்ளங்கை வரையில் படிமானமாக வளைந்து, அணிவிரலும் அதைத் தொடர்ந்து வளைய, ஏனைய விரல்கள் கடகஹஸ்தத்தின் தோற்றம்போல் வளைந்துதோன்றும். இது சிம்ஹ கர்ணம் எனப்படும். அதாவது சிங்கத்தின் காதுபோல அமைந்திருத்தலினல் இப்பெயர் பெற்றது. இந்த முத்திரை “ வருக ” என்று அழைக்கும் தோற்றத்தை உணர்த்துவதாகும்.

கடி ஹஸ்தம் - (தொடையில் அமைந்த கரம்) :

இடுப்பில் பெருவிரல் தனியாகவும், மற்ற விரல்கள் நான்கும் சற்று வளைந்த நிலையில் பதியுமாறு அழுந்தக் கையூன்றி, சுட்டுவிரல் சிறுவிரல் இரண்டும் சற்று மேலெழுந்த நிலையில் அமைந்து விளங்கும் அழகுத்தோற்றத்திற்குக் கடிஹஸ்தம் என்று பெயர்.

கோசம் - (உடல்) :

ஆன்மாவுக்குப் பிறவிகளில் தரப்படுகின்ற உடல்கள், இறைவன் திருவருளால் உருவாக்கப்படுகின்றன என்பதனைத் தெரிவிக்கின்றது. எனவே உடலினை இக்கரம் தாங்கியுள்ளது.

உற்குடிகாசனம் :

ஆசனத்தில் அமர்ந்த நிலையில் ஒருகாலைக் கீழே படியுமாறு தொங்கவிட்டு, மற்றொரு காலை மடக்கி அமர்ந்துள்ள ஆசனத்தின் மீதே ஊன்றிய நிலையில் அமர்ந்துள்ள அமைதிக்கு " உற்குடிகாசனம் " என்றுபெயர்.

சுகாசனம் :

ஓர் ஆசனத்தின் மீது சாய்வின்றி நேராக அமர்ந்து ஒருகாலை ஆசனத்தின் மீது நேராக மடித்து வைத்து மற்றொருகாலை நேராகத் தொங்க விட்டிருக்கும் நிலைக்குச் சுகாசனம் என்று பெயர். இதில் இடக்காலை மடித்து வலக்காலை தொங்க விட்டுக் கொண்டோ அல்லது வலக்காலைமடித்து இடக்காலை தொங்கவிட்டுக் கொண்டோ இருக்குமாறு அமைப்பர். சண்டேசுவரர் ஆலய கருப்பக்கிருகத்தில் சுகாசனத்தில் இப்பெருமான் காட்சியளிப்பர்.

சமபாத ஸ்தானகம் :

சண்டேசுவரரின் உற்சவத் திருமேனிகள் பெரும்பாலும் சமபாத ஸ்தானகத்தில் விளங்கும். அறுபத்துமூவர் வரிசையில் (நாயன்மார்களின் வரிசையில்) சிலாரூபத்தில் நின்றபடி சண்டேசுவரர் திருமேனியானது காணப்படும். சமபாதஸ்தானகம் என்பது நின்றகோலத்தில் பாதங்களைச் சமமாக வைத்து நிற்கும் நிலையாகும். அதாவது உடலை வளைக்காமல்நேராக நிமிர்ந்து நின்று கைகால்களை நெருக்கமாக வைத்து நிற்கும் நிலையாகும்.

சண்டேசுவரர் - சண்டேசுவரி திருஉருவங்களின் அளவு முறைகள்

சண்டேசுவரர் பெருமானை பரமேசுவரனுடைய அம்ச மூர்த்தியாகவே போற்றுவர். சண்டேசுவரர் ஜடாமகுடம் அல்லது கேசபந்தம் தரித்திருப்பவராவார். யக்ஞோபவீதம் (பூணூல்) தரித்து, சன்னவீரம் தரித்திருப்பவராவார். கருப்பு அல்லது மஞ்சள் நிறமுடையவராவார். ஸௌமிய மான (தெளிந்த அல்லது சாந்தமான) கண்களையும் முகப் பொலிவோடு விளங்குபவராவார். நின்ற வடிவத்தில் சமபாதமாகவாவது, வைசாக ஸ்தானகமாவது இருப்பவராவார்.

ஸ்தானக மூர்த்தி :

சண்டேசுவர மூர்த்தியானது, ஆபங்கம், சமபங்கம் என்று இரண்டு விதமாகும் இடது கால் குஞ்சிதமாகவும் வலது கால் ஸுஸ்திதமாகவும் இருக்க வேண்டும், அல்லது மற்றொரு விதமாக, வலது கால் குஞ்சிதமாகவும் இடது கால் ஸுஸ்திதமாகவும் இருப்பதாம் இவ்விதமாக ஸ்தானக மூர்த்தியானது கூறப்பட்டுகிறது.

வீரசண்டேசுவரர் (ஸ்தானக மூர்த்தி :)

ஸ்தானக மூர்த்தியானால் அதன் சரீரம் நேராக நிமிர்ந்திருப்பதாகும் நேராக நிமிர்ந்திருக்கும் மூர்த்தியானது மார்பில் கைகளை அஞ்சலி (கூப்பியகரம்) பந்தம் செய்து கொண்டிருப்பதாகும். அந்தக் கைகளின் மத்தியில் மழுவை ஏந்தியிருப்பதாகும். ஜடாமகுடம் தரித்து சகல விதமான ஆபரணங்களையும் அணிந்திருப்பதாகும், இத்தகைய வடிவமே சண்டேசுவர மூர்த்தியாகும். அந்த மூர்த்தியானது நின்ற வடிவமாக இருந்தாலும் உட்கார்ந்த வடிவமாக இருந்தாலும் இவருக்கு "வீரசண்டேசுவரர்", என்று பெயர்.

அமர்ந்தநிலை :

ஷ மூர்த்தியானது ஆசனமானால் (உட்கார்ந்ததானால்) இடது கால், பீடத்திற்கு மேலே படுக்கையாக இருக்க வேண்டும் அல்லது வலது கால் படுக்கையாகவும் இடது கால் கீழே தொங்க விட்டுமிருக்கலாம்: கை முன் போலவே இருப்பதாகும். கையானது கடக ஹஸ்தமாக இருக்கக் கூடாது அஞ்சலி ஹஸ்தமாக இருக்க வேண்டும். அந்த அஞ்சலியால், புஷ்பம் அல்லது மாலையை வைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஸ்தானகமானாலும், ஆசனமானாலும் மத்திய சூத்திரம் முன் கூறியது போலவேயாகும். ஆபங்கமாகவாவது, சமபங்கமாகவாவது இருக்க வேண்டும். இவைகளில் சூத்திரமானம் விதிக்கப் பட்டுள்ளது.

அங்கங்களும் அளவு முறைகளும் :

ஆபங்க சூத்திரம் :

'ஆபங்கம், சமபங்கம், " இவைகள் முறையே 3 அங்குலமும் 4 அங்குலமும் வணங்கியிருப்பதாகும். (அங்கங்கள் வணங்கியிருப்பதால் உயரத்தில் குறைந்து காணப்படுவதாகும் என்பது பொருள்)' உச்சியின் வலது பக்கம், வலது நேத்திரம், நாசிகையின் பக்கம், வலது நாஸாபுடாந்தம், முகவாய்க் கட்டையின் வலது பக்கம், வலது ஸ்தானத்தின் இடது பக்கம், நாபியின் வலது பக்கம், வலது காலின் இடது பக்கம், குதிகாலின் (இடது) பக்கம், இந்த இடங்களில் (மத்திய சூத்திரம்) தொங்க வேண்டும். இவ்விதமாக சூத்திரம் தொங்கினுல் இது " ஆபங்க சூத்திரம் " என்று பெயர்.

சமபங்க சூத்திரம் :

இனி சமபங்க சூத்திரலட்சணத்தைக் காணும் போது உஷ்ணீஷ மத்தியம், நாஸாக்ர மத்தியம், பாதங்களின் மத்தியம், இவைகளில் மத்திய சூத்திரத்தைத் தொங்கவிட வேண்டும். அந்த சூத்திரத்திலிருந்து கழுத்து 2 அங்குலமாகும். ஹிருதய (மத்திய) மானது வலது பக்கத்தில் 1 அங்குலமாகும். நாபி மத்தியமானது, வலது பக்கத்தில் 2½ அங்குலமாகும். துடைகளின் மத்தியம் 3 அங்குலமாகும். வாமஜானு 4 அங்குலமாகும். இந்த இடங்களில் சூத்திரம் விழுவது சமபங்க சூத்திரமாகும். இவ்விதமாக ஆபங்கம், சமபங்கம் இரண்டிலும் வலது பக்கத்திலேயே சூத்திரம் அமைதல் வேண்டும்.


ஆபங்க ஸ்திதியில் கால்களில் பெருவிரல்களின் மத்தியின் ஒதுக்கம் 16 அங்குலமாகும். சமபங்க ஸ்திதியில் கால் பெருவிரல்களின் ஒதுக்கம் 10 அங்குலமாகும். ஆபங்கம், சமபங்கம் இவைகளில் பெருவிரல்களின் மத்தியின் ஒதுக்கம் எவ்வளவோ அதில் 3ல் 1 பாகம் குதிகாலின் மத்தியின் ஒதுக்கமாகும்.

மகுடத்தின் அளவு முறை :

மகுடத்தின் உயரமானது, கேசாந்தத்திலிருந்து 9 அல்லது 10 அங்குலம் இருக்க வேண்டும். 20 அல்லது 22 அங்குலமும் இருக்கலாம். மகுடத்தின் அடிப்பரப்பானது சிரசின் அகலத்தைக் காட்டிலும் 1½ அங்குலம் கூடுதலாக இருத்தல் வேண்டும். மகுடத்தின் நுனியின் விஸ்தாரமானது அதன் அடியின் விஸ்தாரத்தைக் காட்டிலும் 6 அல்லது 5 அங்குலம் குறைவாக இருக்க வேண்டும்.

முதலில் கூறப்பட்ட அளவை, இரு மடங்காகச் செய்து கொள்ள வேண்டும். அதை 21 பாகங்களாகச் செய்து கொள்ள வேண்டும். அவைகளில் 3 அம்சங்களை விலக்கி விடவேண்டும். பாக்கியுள்ள உயர

கலியுகத்தில் வீரசண்டர்



மானது. உத்தம மாநமாகும். அதிலிருந்து ஒவ்வொரு பாகமாகக் (8 பாகங்களை) குறைத்துவர (சண்டேசுவரரின்) உயரம் 9 விதமாகும்.

சண்டேசுவரரின் மாநம் :

சண்டேசுவரரின் மாநமானது பூஜாம்சத்தின் உயரம் அகலத்தினாலே 26 விதமாகும். அத்துடன் 3, 5, 7, 9, 11 அம்சங்களைக் கூட்டியும் குறைத்தும் கொள்ள 36 விதமாகும். மாநாங்குலத்தினாலே 5 முதலும் 7 முதலும், 49 அங்குலம் வரையில் 2, 2 அங்குலம் வீதம் கூட்டிவர முறையே 23விதமும் 22 விதமுமாகும். இவ்விதமாக சண்டேசுவரரின் மாநம் கூறப்படுகிறது.

நந்திகேசுவரரின் லட்சணம் :

நந்திகேசுவரரின் உச்சிமுதல் பாதம் வரையில் 116 அங்குலமாகும். உச்சி 1 அங்குலம், கேசாந்தம் 3 அங்குலம், கேசாந்தத்திலிருந்து ஹநுவந்தம் $12\frac{1}{2}$ அங்குலம், களம் $1\frac{1}{2}$ அங்குலம், கண்டம் 4 அங்குலம், ஸ்தநாந்தம் $12\frac{1}{2}$ அங்குலம், நாபியந்தம் $12\frac{1}{2}$ அங்குலம் மேட்ராந்தம் 12 அங்குலம், ஊரு (துடை) 25 அங்குலம், முழங்கால் 4 அங்குலம், கண்டைக்கால் 25 அங்குலம் பாதம் 4 அங்குலம். ஆக கூடுதல் $1+3+12\frac{1}{2}+1\frac{1}{2}+3+12\frac{1}{2}+12\frac{1}{2}+12+25+4+25+4 = 116$ அங்குலம் ஆகும். இதுவே தீர்க்கமாநமென்று கூறுகிறார்கள்.

உஷ்ணிஷத்திலிருந்து பார்சுவ கேசாந்தம் 8 அங்குலமாகும். உஷ்ணிஷத்திலிருந்து பூர்வகேசாந்தம் 5 (8) அங்குலமாகும். கேசாந்தத்திலிருந்து, ஹநுவரையில் 3 வித அளவுகளாகும். கேசாந்தத்திலிருந்து அக்ஷிசூத்திரம் வரையில் 4 அங்குலம். புடாந்தம் 4 அங்குலம், ஹநுவந்தம் 4 அங்குலம். திருகந்தம் 2 அங்குலம்.

கண்ணின் உயரம்(நீளம்)திருகந்தத்திற்குச் சமமாகும். (2 அங்குலம் 1 யவையாகும்). புருவத்தின் நீளம் 5 அங்குலமாகும். புருவமத்தியத்திலிருந்து மேலே கேசாந்தம் வரையில் 2 அங்குலம் 1 யவையாகும். நடுப் புருவத்தின் அகலம் 1 யவையாகும். அது முறையே சிறுத்திருப்பதாம். அபாங்கத்திலிருந்து (கடைக்கண்ணிலிருந்து) கர்ண மூலம் வரையில் 6 அங்குலம் 6 யவையாகும். காதின் உச்சியானது புருவத்திற்கு சமமாக இருப்பதாம். காதின் விஸ்தாரம் 2 அங்குலமாகும். அதன் நீளம் முன்பு கூறியது போலவேயாகும், முன் பக்கத்தில் இரு காதுகளின் மத்திய விஸ்தாரம் 33 (23) அங்குலமாகும். பின் பக்கத்தில் இரு காதுகளின் மத்தியிலுள்ள அகலம் 12 அங்குலமாகும்.

மூக்கு அடியின் விஸ்தாரம் 2 அங்குலம், நாசி நுனியின் அகலம் 1 அங்குலமாகும். மூக்கு துவாரத்தின் அகலம் $\frac{1}{2}$ அங்குலமாகும். அதன் உயரமும் அதே அளவாகும் ($\frac{1}{2}$ அங்குலமாகும்). மூக்கு நுனிவரையில் கோஜியின் உயரம் 1 அங்குலம் 7 யவையாகும். மேலுதட்டின் விஸ்தாரம்

3 யவையாகும். வாயின் நீளம் 4 பாகம் (4 அங்குலம்) 3 யவையாகும். கீழுதட்டின் நீளம் (3 யவை) அதிகமாகும். அதில் சரிபாதியும் 2 யவையும் சிபுகமாகும். கீழுதட்டின் மத்தியமானது, அதிலிருந்து 7 யவையாகும். ஊர்துவபாலி, அதப்பாலிகளை (மேல்வரம்பு, கீழ்வரம்புகளை) முறையே 1 – 1½ யவை; கல்பிக்க வேண்டும்.

கழுத்தின் அடிப்பக்கத்தின் விஸ்தாரம் 7½ அங்குலமாகும். பாகுவின் (மேற்கையின்) நீளம் 25 அங்குலமாகும். முழங்கையின் நீளம் 2 அங்குல மாகும். பிரகோஷ்டத்தின் (முன்கையின்) நீளம் 19 அங்குலமாகும். அங்கிருந்து நடுவிரல் நுனி வரையில் நீளம் 11½ அங்குலமாகும். அது சரிபாதியளவு உள்ளங்கையின் நீளமாகும். அதுபோக மீதம் சரிபாதியளவு நடுவிரலின் நீளமாகும். பெருவிரலின் நீளம் 2 அங்குலம் 2 யவையாகும். அணி விரலின் நீளம் 4½ அங்குலமாகும். சுட்டு விரலின் நீளம் அணிவிரலைப் போன்றதாகும். சிறுவிரலின் நீளம் 4 அங்குலமாகும். பெருவிரல் முதல் சிறுவிரல் வரையில் விரல்களின் அகலம், முறையே 9, 4 (6) 7, 6, 5 யவையாகும். அவைகளின் நுனிகளின் அகலம் 1 யவை குறைவாகும்.

கையின் அடித்தலத்தின் கனம் 2 அங்குலமாகும். அதன் நுனியின் கனம் 1¾ அங்குலமாகும். மணிக்கட்டின் அகலம் 3 அங்குலம் 2 யவை யாகும். பிரகோஷ்டத்தின் (முழங்கைக்குக் கீழே) விஸ்தாரம் 5½ அங்குல மாகும் முழங்கைக்குமேலே (மேல் கை நுனியின்) விஸ்தாரம் 6½ அங்குல மாகும், பாஹுமத்தியத்தின் (மேல் கை நடுவின்) அகலம் 7 அங்குல மாகும். மேல்கை அடியின் அகலம் 8 அங்குலமாகும். கழுத்திலிருந்து கக்ஷம் வரையில் 8 அங்குலமாகும். இரு கக்ஷங்களின் மத்தியின் அளவு 22 அங்குலமாகும். ஹிருதய எல்லையின் அகலம் 18 அங்குலமாகும்.

ஹிருதயத்தின் விஸ்தாரம் 15½ அங்குலமாகும். ச்ரோணியின் விஸ்தாரம் 18 அங்குலம் விதிக்கப்பட்டிருக்கிறது. பீஜ கோசத்தின் உயரம் 4 அங்குல மாகும், அதன் அகலமும் 4அங்குலமேயாகும். சேபத்தின் (மாணியின்) நீளம் 5 அங்குலமாகும். அது தாமரை மொட்டுப் போல இருப்பதாகும். இடுப்பின் அகலம் 19 அங்குலமாகும். ஊருமூலத்தின் (அடித்தொடையின்) அகலம் 11½ அங்குலமாகும். அதன் நுனியின் விஸ்தாரம் 10½ அங்குல மாகும். நடு முழங்காலின் அகலம் 7½ அங்குலமாகும். அடிக்கண்டைக் காலின் அகலம் அதன் நடுவில் 6 அங்குலமாகும், *


சுட்டு விரலும் அதேநீள முடையதாகும். மத்திய விரலின் நீளம் 4 அங்குலம் 1 யவையாகும். அணிவிரலின் நீளம் 4 அங்குலமாகும். சிறு விரலின் நீளம் 3½ யவையாகும். சிறுவிரல் முதல் பெருவிரல் வரையில் விரல்களின் அகலம் முறையே 7, 8, 9, 10, 13 யவைகளாகும்.

---

* இவ்விடத்தில் மூலபாடம் விடுபட்டுள்ளது. அதனுல் விடுபட்டதனை அதமதசதாளத்தைப் போலக் கணக்கிட்டுக்கொள்ள வேண்டும்.



ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலில்
ஸ்ரீ பெருநலமாமுலையம்மை கோயில் உட்
பிரகாரம் வடபுறத்தில் விளங்கும்
சண்டிகேசுவரி



திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர்
ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயில் தோற்றம்

கணுக்கால் விழியிலிருந்து குதிகால் வரையில் மத்திய அளவு 4 அங்குலமாம். குதிகாலின் கனம் 4 அங்குலமாம். பின் பக்கத்தில் வட்ட வடிவமான பிருஷ்ட பாகத்தின் விஸ்தாரம் 9 அங்குலம் சிறந்ததாகக் கூறப் பட்டிருக்கிறது. ககுத் (கொண்டை) 4. அங்குலமாகும். அதன் அடியின் அகலம் 4 அங்குலம். கழுத்திலிருந்து தோளின் அடிப் பக்கம் வரையில் 4 அங்குலம் கூறப்பட்டிருக்கிறது. அதன் நடுவிலும் நுனியிலும் முறையே 2 அங்குலமும் 1 அங்குலமுமாகும். பின் பக்கத்தில் கக்ஷங்களின் மத்திய அளவு 24 அங்குலமாகும். மற்றவைகளை ஊகித்தும் சிற்ப வல்லுநர்களைக் கேட்டறிந்து தெளிவு செய்து கொள்ளுதல் நலமாகும்.

சண்டிகேசுவர மூர்த்தியானது வலது கால் ஸ்வஸ்திதமாகவும் இடது கால் குஞ்சிதமாகவும் ஆபங்கலக்ஷணம் அல்லது சமபங்க லக்ஷணத்துடன் இரண்டு கைகளையும் அஞ்சலிபந்தனம் செய்து கொண்டிருக்கும் மூர்த்தியாகக் கல்பிக்கவேண்டும்.

சண்டேசுவரி திருவுருவமைதி :

சிவாலயத்தில் பிரதிட்டை செய்யப்படும் சண்டேசுவரி திருவுரு அமைதிச் செய்திகள் யாவும் ஸ்ரீ ஸாரஸ்வதீய சித்திரகர்ம சாஸ்திரம் நாற்பதாவது அத்யாயத்தில் மூர்த்தி லக்ஷணம், தேவீ லக்ஷணம் பகுதியில் விரிவாகக் காணப்படுகிறது. ஷ சித்திர கர்ம சாஸ்திரத்தில் காணும் மூல பாடத்திற்குரிய விளக்கங்கள் இங்கே ஒருவாறு தொகுத்துக் கொடுக்கப் படுகின்றன. திருவுருவத்தினை அமைக்கும் சிற்பிகள், யாவரும் தங்களின் மேலான குருமூலமாக நன்கறிந்து செயல்படுவது உத்தமமாகும்.

சண்டேசுவரர் : (மூர்த்திலக்ஷணம்)

சண்டேசுவர மூர்த்தியானது, புலித்தோலாடை உடுத்தியிருக்க வேண்டும் மற்றய லக்ஷணங்கள் யாவும் முன்பு கூறியவாறு (ஸ்ரீ ஸாரஸ்வதீய சித்திர கர்ம சாஸ்திரப்படி) அமைதல் வேண்டும். மூர்த்தியானது மஞ்சள் நிற மாகவோ அல்லது சிகப்பு நிறமாகவோ இருக்கலாம். சிவனுர்க்கு அமையும் சிறப்புக்கள்யாவும் இவருக்கு அமைந்திருக்க வேண்டும்.

சண்டேசுவரி : (தேவீலக்ஷணம்)

சண்டேசுவரரின் இடது பக்கத்தில் சண்டேசுவரியின் தேவியை * நிர்மாணம் செய்யவேண்டும். அந்த தேவியானவள் சண்டேசுவரரின் கழுத்து மட்டம், கண் மட்டம் முகவாய்க்கட்டை மட்டம், அல்லது வாய்

* சிவாலயத்தில் சண்டேசுவரர் சுவாமி ஆலயத்தின் குபேர திசையிலும், சண்டேசுவரி அம்மன் ஆலயத்தின் குபேர திசையிலும் தனித்து விளங்குதல் நோக்கத்தக்கது. இப்பகுதி. தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு எண் 67ல் காணலாம்.

மட்டமாக இருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இந்த தேவியின் மாநம், உன்மானம் பிரமாணம்இவைகளை அதமதச தாலத்தினுலே கல்பிக்க வேண்டும்.

உச்சிமுதல் பாதம்வரை:

அதம தச தாலத்தின் மாநம் உச்சிமுதல் பாதம் வரையில் 116 அங்குலமாகும். அவைகளில், கேசாந்தம் 4 அங்குலமாகும். நேத்திராந்தம் $4\frac{1}{4}$ அங்குலமாகும். புடாந்தம் $4\frac{1}{4}$ அங்குலமாகும். ஹநுவந்தம் $4\frac{1}{4}$ அங்குல மாகும். கண்டம் 4 அங்குலமாகும். கண்டத்திலிருந்து ஹிருதயாந்தம், நாபியந்தம் யோநியந்தம், ஒவ்வொன்றும் $12\frac{1}{2}$ அங்குலமாகும் துடையின் உயரம் 25 அங்குலமாகும். முழங்கால் 4 அங்குலமாகும். கண்டைக்கால் 25 அங்குலமாகும். பாதத்தின் உயரம் 4 அங்குலமாகும். ஆகக் கூடுதல் $4 + 4\frac{1}{4} + 4\frac{1}{4} + 4\frac{1}{4} + 4 + 12\frac{1}{2} + 12\frac{1}{2} + 12\frac{1}{2} + 25 + 4 + 25 + 4 = 116\frac{1}{4}$ அங்குலங்களாகும் * பாதத்தின் நீளம் 16 அங்குலமாகும்.

மேல் கையின் நீளம் 25 அங்குலமாகும். முழங்கையின் நீளம் 2 அங்குலமாகும். முன்கையின் நீளம் 19 அங்குலமாகும்.

உள்ளங்கையின் நீளம்	...	6	அங்குலமாகும்
நடுவிரலின் நீளம்	...	6	,,
முகத்தின் அகலம்	....	$11\frac{1}{2}$	,,
கழுத்தின் அகலம்	...	8	,,
பாஹு மூலத்தின் அகலம்	...	7	,,
... .	...	14	,,
கக்ஷமத்திய விஸ்தாரம்	...	17	,,
ஸ்தநத்தின் விஸ்தாரம்	...	9	,,
ஸ்தநத்தின் உயரம் அகலத்தில் சரிபாதி	...	$4\frac{1}{2}$	,,
சூசுகத்தின் (ஸ்தநத்தின் கருப்பு) அகலம்	...	2	,,
முலைக்காம்பு	...	1	,,
ஷ ,, உயரம்	....	2	யவை

ஸ்தநங்கள் வட்டமாகவும் உயர்ந்து அழகாகவும் இருக்க வேண்டும். ஸ்தநத்திற்குக் கீழே ஹிருதயாந்தத்தின் அகலம் 13 அங்குலமாகும். உதர மத்தியின் விஸ்தாரம் 11 அங்குலமாகும். ச்ரோணிதலத்தின் விஸ்தாரம் 20 அங்குலமாகும். இடுப்பின் அகலம் 23 அங்குலமாகும்.

---

* நாபியந்தம், யோநியந்தங்களில் 2 யவை குறைவாகக் கொள்ள வேண்டும்.

அடித்துடையின் அகலம் 12 அங்குலமாகும். நடுமுட்டுக்காலின் அகலம் 6 அங்குலமாகும். நளகாந்தத்தின் (சண்டைக்கால் நுனியின்) அகலம் 4 அங்குலம் ஆகும். சனுக்கால் புண்டுகளின் மத்திய அகலம் 5 அங்குலமாகும். குதிகாலின் உயரம் (அகலம்) 4 அங்குலமாகும். புறங்காலின் அகலம் 5 அங்குலமாகும். முன் பாதத்தின் அகலம் 6 அங்குலமாகும்.

பெருவிரலின் நீளம் 4 அங்குலமாகும். மற்றவிரல்கள் யாவும் முன்பு கூறியிருப்பதைப் போலவேயாகும். டாஹுமத்தியத்தின் (மேல்கை நடுவின்) அகலம் 6 அங்குலமாகும். முட்டுக்கையின் அகலம் 4 அங்குலம் என்று கூறப்பட்டிருக்கிறது. மணிக்கட்டின் அகலம் 3 அங்குலமாகும். மற்றவை யாவும் முன்பு கூறியுள்ளபடியேயாகும்

சண்டேசுவரர் வரலாறு

சைவத் திருமுறைகளில் 12 - ஆம் திருமுறையாகப் போற்றித் துதிக்கப்படும் பெரியபுராணத்தில் சண்டேசுவர நாயனாரின் அருள் வரலாறு சிறப்பாக எடுத்துரைக்கப் படுகிறது. இவர் பெரியபுராணம் சிறப்பிக்கும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். சோழ நாட்டில் மண்ணியாற்றின் தென்கரையில் உள்ள * சேய்ஞலூர் என்னும் ஊரினர். சோழர்கள் முடிபுனைந்து கொள்ளும் ஐந்து ஊர்களுள் இதுவும் ஒன்றாகும். இங்குப் பண்டு வேத மோதும் அந்தணர் மிக்கிருந்தனர். இவ்வூரில் அந்தணர் மரபில் காசிப கோத்திரத்தைச் சேர்ந்த எச்சதத்தன் என்பவருக்கும் பவித்திரையப்பையாருக்கும் மகனாக "விசாரசருமர்" பிறந்தார். இவரே பின்னர் சண்டேசுவர நாயனாரெனச் சிறப்புற்றார்.

இவர் தம் ஐந்தாம் வயதில் கலைகள் யாவும் கற்கத் தொடங்கினார், ஏழாம் வயதில் உபநயனம் நடந்த பின்னர் வேதக்கல்வி பெறத் தொடங்கி அதில் சிறந்த புலமையுற்றார். வாழ்வின் குறிக்கோள் அம்பலக் கூத்தன் திருவடி அடைதலே என்று கொண்டு அவ்வம்பலவனை வழிபட்டு வருவாராயினர்.

ஆனிரை மேய்த்தல் :

ஒருநாள் ஆனிரை மேய்க்கும் இடையரோடு சென்ற போது, கன்றீன்ற பசுவொன்று இடையனை முட்ட முற்பட்டது. அறிந்த இடையன் கோலினால் அதனை நையப் புடைத்தான். அதனைக் கண்ட விசாரசருமர் பசுவிடம் இரக்கங் கொண்டு, இடையன் அதனை மேலும் அடிக்காதபடி தடுத்தார். இறை வழிபாட்டிற்கு வேண்டிய ஆனைந்தினை அளித்தல், திருநீற்றுக்குரிய கோமயம் நல்குதல், தேவர்கள் அனைவரும் அதன் உடலின் பலவிடங்களிலும் இடம் பெற்றிருத்தல் முதலியவற்றால் பசுவின் பெருமையினை உணர்ந்து, விசாரசருமர் தாமே அப்பசுக்களை மேய்க்கும் கடமையினை ஏற்றார்.

சிவபூசை செய்தல் :

விசாரசருமர் ஆனிரைகளை மேய்த்துப் பராமரித்தமையால் அவைகள் யாவும் பொலிவுடன் விளங்கின. மிகுதியாகப் பாலினைச் சுரந்தளித்தன.

---

* "சேய்ஞலூர்" தற்போது சேங்கனூர் என்று வழங்கப்படுகிறது. கும்பகோணத்திலிருந்து நகரப் பேருந்து மூலம் சென்றடையலாம். இதற்கு அருகில் வடபால் திருவாப்பாடி என்ற (சண்டேசுவரர் பூசை நிகழ்த்திய) தலம் உள்ளது.

ஆனிரைகள் யாவும் விசாரசருமரை கண்டபோது அன்புமிக்குக் கறவாமுன்னரே பாலைப் பொழிந்தன. விசாரசருமர் அவைபொழிந்த பாலைக் கண்டபோது, அது கொண்டு இறைவனுக்குத் திருமஞ்சனம் (அபிடேகம்) செய்ய விரும்பினார். * மண்ணியாற்றங்கரையிலிருந்த (திருவாப்பாடி) – ஆத்திமர நிழலில் மணலால் இலிங்கமும் கோயிலும் திருச்சுற்றும் கோபுரமும் அமைத்தார். பசுக்கள் பொழிந்த பாலைக் குடங்களிற் கொண்டும், அங்கிருந்த மலர்களைக் கொண்டும், பெருமானுக்கு அன்போடு அபிடேகம் அருச்சனைகள் செய்து வழிபட்டார். வீட்டிற்குச் சென்ற பசுக்கள் அங்கும் குறையாமல் பாலைச் சுரந்தளித்தன.

தந்தையினைத் தடிதல் :

விசாரசருமர் நாடோறும் செய்யும் இவ்வபிடேகத்தை, ஏதிலான் ஒருவன் கண்டு அந்தணர்பாற் சென்று கூறினான். அதுகேட்ட அந்தணர் சினந்து எச்சதத்தனை அழைத்து அவனிடம் கூறிக் கடிந்தார். பிழை பொறுக்குமாறு வேண்டிக் கொண்டு சென்ற தந்தை, மகன் செயலை நேரேகாண விரும்பி மறைந்திருந்து அவன் அபிடேகச் செயலில் மூழ்கி இருப்பதைக் கண்ணுற்றார்.

பாலை வீணாக்குகிறான் என்றே பிழை உணர்ந்த தந்தை சினங்கொண்டு அபிடேகத்திற்காக இருந்த பாற்குடங்களைக் காலால் இடறிச் சிதைத்தார். இறைத் தொண்டிற்கு இடையூறு செய்த தந்தைபாற் கோபங் கொண்டு, அங்கிருந்த * கம்பினை எடுத்து அடிக்க ஓச்சிய போது, அதுவே மழுவாய் மாறக் கண்டு, அதனால் தம் தந்தையின் இருகால்களையும் எறிந்து துண்டித்தார். தந்தை இறந்தார். மைந்தரான விசாரசருமர் அதனைக் கருதாது இறை வழிபாட்டில் தொடர்ந்து ஈடுபட்டார்.

ஈசனின் அருட்காட்சி :

விசாரசருமரின் அன்புமிகு பூசனைக்கு உகந்த இறைவன் விடைமீது உமையொடு காட்சியளித்தார். இறைவன் தம் கரத்தால் விசாரசருமரை எடுத்து, "நம்பொருட்டால் பெற்ற தந்தையின் கால்களைத் தடிந்து இறக்கச் செய்தனை; ஆதலால் இனி நாமே உனக்கு அடுத்த தந்தை யானோம்" என்றருள் புரிந்து மார்போடணைத்து உச்சி மோந்தார். சிவபெருமான் திருமலர்க்கை தீண்டப் பெற்றமையால் விசாரசருமர் அயன் முதல் அமரர் அனைவரும் துதி செய்யச் சூழ்ந்த ஒளியுற்று விளங்கினார்.

---

*சேய்ஞலூர், திருவாப்பாடி என்ற இரு தலங்களின் தலவரலாறு தனியே கொடுக்கப்பட்டுள்ளது.

* தண்டேச்சுரநல்லூர் - இலிங்க வழிபாட்டிற்கு இடையூறு செய்த தந்தையைத் தனது மழுவால் எறிந்து தனது பக்தியினை வெளிப்படுத்திய சண்டேசுவரரை - "தண்டேசுரர்" என்று வழங்குவர். இவரது பெயரால் சிதம்பரம் அருகே தண்டேச்சுரநல்லூர் என்ற பெயரில் ஊர் உள்ளது

சண்டேசப் பதம் அருளல் :

இறைவன், விசாரசருமரைத் தொண்டர்களுக்குத் தலைவனாக்கி, 'அனைத்து * நாம் உண்ட கலமும், உடுப்பனவும் சூடுவனவும், உனக்காகச் சண்டேசனுமாம் பதந்தந்தோம்' என்று கூறித் தம் முடியிலிருந்த கொன்றை மாலையினை எடுத்துச் சூட்டினார். விசாரசருமர் அன்று தொட்டுச் சண்டேச நாயனார் என்று போற்றப்பட்டார். இவர் சிறப்பினைச் சேக்கிழார் கூறுகையில் 'வந்து மிகைசெய் தாதை தாள் மழுவால் துணித்த மறைச் சிறுவர், அந்தவுடம்பு தன்னுடனே அரனார் மகனார் ஆயினார்'' (பெரிய புராணம் - சண்டேசுவரர் புராணம் - 59) என்று குறிப்பிடுகின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் ''இவரை மெய்ம்மையே திருமேனி வழிபடாநிற்க, வெகுண்டெழுந்த தாதை தாள், மழுவினால் எறிந்த, அப்பெருமான் அடிச் சண்டிப் பெருமானுக்கு அடியேன்'' என்று போற்றுகின்றார். நம்பியாண்டார் நம்பி ''குலமேறிய சேய்ஞலூரில்'' எனத் தொடங்கும் பாடலால் போற்றுகின்றார்.

சிவாலயத்தில் சண்டேசுவரர் வழிபாடு :

இறைவனால் சண்டேசப் பெரும்பதம் பெற்ற சிறப்பினால், ஒவ்வொரு சிவாலயத்திலும் கருவறையின் வடபால், தெற்கு நோக்கி அமைக்கப்பட்ட சிறிய கோயிலொன்றில் சண்டேசுவரப் பெருமானின் திருமேனி அமைக்கப்பட்டு (பிரதிட்டை) வழிபடப்பட்டு வருகிறது. சிவாலய வழிபாட்டுப் பயன், * சண்டேசுவரர் வழிபாட்டொடு நிறைவுறும் என்பது சைவ மரபாகும்.


''அண்டர் பிரானுந் தொண்டர் தமக்கு
அதிபனாக்கி'' அனைத்து நாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடுவனமும் உனக்காகச்
* சண்டே சனுமாம் பதம் தந்தோம்
என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக் கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்.

---


* அன்றுமுதல் சிவாலயங்களில் அர்த்தஜாமம் பூசை நிறைவில் ஈசனார்க்கு உள்ள (நிர்மால்ய புஷ்பம், நைவேத்யம், வஸ்திரம்) அனைத்தும் இவருக்கு உரிய தாக்கி அன்றைய தின பூசையினை நிறைவு செய்வர்.

* சண்டேசப்பதம் அருளிய காட்சியினை கங்கைகொண்ட சோழபுரத்திலும் மதுரை சிவாலயத்திலும் காணலாம். இக்கற்சிற்பப் படங்கள் தனியே விளக்கப்பட்டுள்ளன.

* சிவாலயத்தில் விளங்கும் சண்டேசுவரப் பெருமானை ''தொனிச் சண்டர்'' எனக் கூறுவர். தாம் எப்போதும் சிவத்தியான நிலையில் இருப்பதால் சிவாலய தரிசனத்தை முடித்து இறுதியில் அன்பர்கள் யாவரும் இவரது சந்நிதியில் கரஒலியினை மெதுவாக எழுப்பி சிவ தரிசனப் பயனைப் பெற பிரார்த்திக்க வேண்டும் என்பது மரபாகும்.



திருச்சேய்ஞலூர் – ஸ்ரீ சத்யகிரீஸ்வரர் ஆலயம்
(திருவிடைமருதூர் வட்டம், தஞ்சை மாவட்டம்)



திருச்சேய்ஞலூர் ஆலய முகமண்டபத் தூணில் விளங்கும் சண்டேசுவரர் – புடைப்புச் சிற்பம்

சேய்ஞலூர் - திருவாப்பாடி
தலச் சிறப்புகள்

சேய்ஞலூர்த் தலம் இருப்பிடம் :

கும்பகோணம் – திருப்பனந்தாள் சாலையில் நெடுங்கொல்லை கிராமத்தருகில் சேய்ஞலூர் கூட்டுச்சாலை உள்ளது. தற்போது கும்பகோணத்திலிருந்து நகரப்பேருந்து இத்தலத்திற்குச் செல்கிறது. சேய்ஞலூரின் நுழைவாயிலிலிருந்து 2 கி. மீட்டர் தூரத்தில் சேய்ஞலூர் சிவாலயம் விளங்குகிறது. இத்தலத்தினை அடுத்தத் தலம் திருவாப்பாடி ஆகும் தற்போது சேய்ஞலூரினை மக்கள் சேங்கனூர் என்று வழங்கி வருகின்றனர்.

சண்டேசுவரர் அவதரித்தத் தலம் :

சண்டேசுவர நாயனுர் (விசாரசருமர்) இத்தலத்தில் திருவவதாரம் செய்தார். இத்தலச் சிறப்பு கந்தபுராணம், வழிநடைப் படலத்தில் பேசப் படுகிறது. சூரனை அழிப்பதற்காக வந்த முருகப்பெருமான் இத்தலத்தில் எழுந்தருளி சிவபெருமானை வழிபட்டுச் சர்வசங்காரப் படைக்கலமான உருத்திர பாசுபதத்தைப் பெற்றுர். சேய் – முருகன். சேய்க்கு நல்லதாக அமைந்த ஊராதலின் சேய் + நல் + ஊர் = சேய்ஞலூர் என்று பெயர் பெற்றது. சத்தியகிரி, குமாரபுரி, சண்டேசுவரபுரம் என்பன இத்தலத்திற்குரிய வேறு பெயர்களாம். விசாரசருமர் இத்தலத்தில் உள்ள பசுக் கூட்டங்களை எல்லாம் தாமே ஓட்டிச் சென்று திருவாப்பாடி தலத்திலே மேய்த்து, தமது சிவபூசைச் சிறப்பால் சண்டேசப்பதம் பெற்றார்.

இறைவன் – சத்தியகிரீஸ்வரர், சத்யகிரிநாதர்

இறைவி – சகிதேவியம்மை

தீர்த்தம் – மண்ணியாறு

இது சிபி, அரிச்சந்திரன் ஆகியோர் வழிபட்ட தலமாகும். மண்ணியாற்றுக்குச் சத்தியநதி, சுப்பிரமணிய நதி என்ற பெயர்களுமுண்டு. கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக் கோயிலுள் இதுவும் ஒன்றாகும். கோயில் கட்டுமலை மேல் உள்ளது. கருப்பக்கிருகத்தைச் சுற்றிலும் மலைமேல் ஒரு பிரகாரமும், கீழே ஒரு பிரகாரமும் உள்ளன.

கோயிலினுள் :

இத்திருக்கோயிலினுள் நுழைந்தவுடன் அழகிய முன்மண்டபம் கருங்கல் திருப்பணியோடு காட்சி தருகிறது. இப்பகுதியினைத் திருப்பணி

செய்தவர்கள் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் 15-வது அதிபர் ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் ஆவார்கள். இவர்களது திருஉருவம் ஒரு தூணில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. சுவர்களில் தல வரலாறுகள் வண்ண ஓவியங்களாக எழுதப்பெற்று உள்ளன. மகா மண்டபத்தின் வடபுறம் நடராஜர் சபையும் பக்கத்தில் * வெண்கல ஓசையுடைய பைரவர் சிலையும் காணப்படுகின்றன, மேலும் சூரியன், சந்திரன், சமயாச்சாரியர்கள் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். உட்பிரகாரத்தில் விநாயகர், முருகன், இலக்குமி திருவுருவங்களும் காணப்படுகின்றன.

கோட்டங்களில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், துர்க்கை திருவுருவங்களும் காட்சிதருகின்றன. வடபுறம் x சண்டேசுவரர் தனிக்கோயிலும் காணப்படுகிறது. பஞ்சமூர்த்திகளின் திருவுருவங்களும் மற்றும் உற்சவ விக்ரகங்கள் பலவும் உள்ளன. கருப்பக்கிருகத்தில் தலத்துப் பெருமான் கிழக்கு முகமாகக் காட்சி தருகின்றார். சண்டேசுவரப் பெருமான் திருவவதாரம் செய்து வழிபட்ட இத்தலம் பழம் பெருமையினைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

பெரியபுராணத்தில் :

ஞானசம்பந்தர் புராணத்திலும் சண்டேசுவரர் புராணத்திலும் இத்தலத்தைப் பற்றிய செய்திகள் குறிப்பிடப்படுகின்றன. ஞானசம்பந்தர் திருப்புறம்பயம் முதலிய தலங்களை வழிபட்டுக் கொண்டு o இத்தலத்திற்கு எழுந்தருளினார். அருமறை அந்தணர்கள் எதிர் கொண்டழைத்தனர். சண்டேசுவரநாயனார் திருவவதாரம் செய்த தலம் ஆதலின் ஞானசம்பந்தர் சிவிகையினின்றும் கீழே இறங்கி வணங்கிப் பின்னர் ஊருக்குள் வந்தார். அந்தணர்களும் மற்றவர்களும் மலர்களைத் தூவி வரவேற்றார்கள். ஞானசம்பந்தர் சேய்ஞலூர்ப்பெருமானை முறையாக வழிபட்டுத் திருப்பதிகம் பாடிப் பரவினார்.

"வேதியர் சேய்ஞலூர் விமலர் தம்கழல்
காதலிற் பணிந்தவர் கருணை போற்றுவார்
தாதைதாள் தடிந்த சண்டீசப் பிள்ளையார்
பாதகப் பயன் பெறும் பரிசு பாடினார்"

பெரிய புராணம்,

** முகமண்டபத்தூணில் (தெற்கு நோக்கி) சண்டேசுவரர் புடைப்புச் சிற்பம் அமர்ந்த திருக்கோலத்தில் விளங்குகிறது. இதற்கு எதிர்த் தூணில் காசி மடத்து 15-வது அதிபரின் திருவுருவமும் காணப்படுகிறது.*

x பைரவரின் திரிசூலத்தண்டினை நாம் தட்டினால் ஓசைகேட்கும். தண்டானது மிக மெல்லியதாக உள்ளது.

o இந்தத் தலத்திற்குப் பெரிய புராணத்தில் காணப்பெறாத ஒரு தலவரலாறு உண்டு என்பர். அந்தப் புராண வரலாற்றுச் செய்தி தருமை வெளியீடு - 696 ல் பக்கம் 28 ல் காணலாம்.

திருஞானசம்பந்தர் அருளிய திருச்சேய்ஞலூர்த் திருப்பதிகம் :

[1-ம் திருமுறை பண் - பழந்தக்கராகம்]

திருச்சிற்றம்பலம்

1. நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர் கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல்மேவி அருமறை சொன்ன தென்னே !
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே.

2. நீறடைந்த மேனியின்கண் நேரிழை யாளொருபால்
கூறடைந்த கொள்கையன்றிக் கோல வளர்சடைமேல்
ஆறடைந்த திங்கள்சூடி அரவம் அணிந்த தென்னே !
சேறடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே.

3. ஊனடைந்த வெண்டலையி னோடுப லிதிரிந்து
கானடைந்த பேய்களோடு பூதங்க லந்துடனே
மானடைந்த நோக்கிகாண மகிழ்ந்(து) எரி ஆடலென்னே !
தேனடைந்த சோலைமல்கு சேய்ஞலூர் மேயவனே.

4. வீணடைந்த மும்மதிலும் வில்மலை யாஅரவின்
நாணடைந்த வெஞ்சரத்தால் நல்லெரி ஊட்டலென்னே !
பாணடைந்த வண்டுபாடும் பைம்பொழில் சூழ்ந்தழகார்
சேணடைந்த மாடமல்கு சேய்ஞலூர் மேயவனே.

5. பேயடைந்த காடிடமாப் பேணுவ தன்றியும் போய்
வேயடைந்த தோளிஅஞ்ச வேழம் உரித்ததென்னே !
வாயடைந்த நான்மறைஆ றங்கமோ(டு) ஐவேள்வித்
தீயடைந்த செங்கையாளர் சேய்ஞலூர் மேயவனே.

6. காடடைந்த ஏனமொன்றின் காரண மாகிவந்து
வேடடைந்த வேடனாகி விசயனொ(டு) எய்ததென்னே !
கோடடைந்த மால்களிற்றுக் கோச்செங்க ணுக்கருள்செய்
சேடடைந்த செல்வர்வாழும் சேய்ஞலூர் மேயவனே.

7. பீரடைந்த பாலதாட்டப் பேணாத வன்தாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்த்தடிந் தான்றனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமை வகுத்ததென்னே !
சீரடைந்த கோயில் மல்கு சேய்ஞலூர் மேயவனே.

8. மாவடைந்த தேரரக்கன் வலிதொலை வித்தவன்றன்
நாவடைந்த பாடல்கேட்டு நயந்தருள் செய்ததென்னே!
பூவடைந்த நான்முகன்போல் பூசுரர் போற்றி செய்யும்
சேவடைந்த ஊர்தியானே சேய்ஞலூர் மேயவனே.

9, காரடைந்த வண்ணனோடு கனகம் அனையானும்
பாரடைந்தும் விண்பறந்தும் பாத முடிகாணார்
சீரடைந்து வந்துபோற்றச் சென்றருள் செய்ததென்னே!
தேரடைந்த மாமறுகிற் சேய்ஞலூர் மேயவனே.

10. மாசடைந்த மேனியாரும் மனந்திரி யாதகஞ்சி
நேசடைந்த ஊணினாரும் நேசமி லாததென்னே!
வீசடைந்த தோகையாட விரைகம ழும்பொழில்வாய்த்
தேசடைந்த வண்டுபாடுஞ் சேய்ஞலூர் மேயவனே.

11. சேயடைந்த சேய்ஞலூரில் செல்வன சீர்பரவித்
தோயடைந்த வண்வயல்சூழ் தோணிபுரத் தலைவன்
சாயடைந்த ஞானமல்கு சம்பந்தன்இன் உரைகள்
வாயடைந்து பாடவல்லார் வானுல(கு) ஆள்பவரே.

திருச்சிற்றம்பலம்

திருவாப்பாடித்தலம் இருப்பிடம்:

திருஆப்பாடி என்னும் தலம் கும்பகோணம் திருப்பனந்தாள் சாலையில் உள்ளது. இத்தலத்தின் கிழக்கில் திருப்பனந்தாளும், மேற்கில் திருச்சேய்ஞலூரும் விளங்குகின்றன. திருஆப்படிக்குக் கும்பகோணத்திலிருந்து நகரப் பேருந்துகள் மூலம் செல்லலாம். பேருந்து நிற்குமிடத்திலிருந்து வடக்காக ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இத்தலச் சிவாலயம் விளங்குகின்றது.

இறைவன் - பாலுகந்தநாதர், இறைவி – பெரியநாயகியம்மை, தீர்த்தங்கள் – மண்ணியாறு, க்ஷீரபுஷ்கரணி, தலவிருக்ஷம் – ஆத்தி (இம்மரம் கோயிலின் உட்பிரகாரத்தில் உள்ளது; பழமையான மரம்.)

தலச்சிறப்பு:

இத்தலம் சண்டேசுவரநாயனார் வெண்மணலைச் சிவலிங்கமாகப் பிடித்துப் பூசித்த வரலாற்றுச் சிறப்புடையது. சேய்ஞலூரில் வாழ்ந்த சண்டேசுவரநாயனார் இத்தலத்திற்கு வந்து ஆனிரைகளை மேய்த்து, ஆத்தியின் கீழ் தாம் அமைத்த சிவலிங்கத் திருமேனிக்கு ஆவின்பாலைக் கறந்து அபிஷேகித்தார். இறைவனால் தொண்டர்களுக்கு அதிபனுக்கப் பெற்றார். சண்டேசபதம்) இறைவன் உண்டகலமும் உடுப்பனவும் சூடுவனவும் தந்தருளப் பெற்றார்.

திருவாப்பாடி - ஸ்ரீ பால்உகந்தநாதர் திருக்கோயில்





ஷை ஆலயத்தில் மகாமண்டபத்தின் உள்ளேயே (வடபால்) தென்திசை நோக்கி அருளும் சண்டேசுவரர் திரு-வுருவம். இவ்வமைப்பு வேறு எந்தத் தலத்திலும் இல்லை.

சண்டேசப்பதமும் இவர்க்கு இத்தலத்தில் தான் கிடைக்கப் பெற்றது. இதனைப் பெரியபுராணத்துள் சண்டேசுவர நாயனுர் புராணப் பகுதியில் விரிவாகக் காணலாம். தேவாரத் திருப்பதிகங்கள் பலவற்றிலும் இவர் வரலாறு குறிக்கப்பெற்றுள்ளது.

" சண்டியார்க் கருள்கள் செய்த தலைவர் ஆப்பாடி யாரை"

— என்று அப்பரடிகள் அருளிச் செய்துள்ளார்.

மற்ருெரு வரலாறு :

*" இத்தலத்திற்கு இது தவிர மற்ருெரு வரலாறும் உண்டு என்பர் சிலர். ஆப்பாடியில் இருந்த இடையர் குலத் தோன்றல் ஒருவன் பாலைக் கறந்து குடத்தைத் தன் வீட்டிற்கு எடுத்துச் செல்லு போது வழியில் நாடோறும் கால் தடுக்கிப் பாற்குடம் கவிழ்ந்து வருவதை அறிந்து அவ்விடத்தைச் சினங் கொண்டு கையிலிருந்த அரிவாளால் வெட்டினன், அவ்விடத்திலிருந்து இரத்தம் பெருகியது. குருதி படிந்த திருமேனியுடன் சிவலிங்கத் திருவுருவில் இறைவன் வெளிப்பட்டு அருளினுர் இவ்வதிசயத்தைக் கண்ட அந்த ஆயச்சிறுவன் தன் அறியாமையால் ஏற்பட்ட செயலை எண்ணி மனம் வருந்தினுன் அவனது வருத்தம் தணித்து இறைவன் இன்னருள் புரிந்தார் என்பது "

திருஆப்பாடி (திருவாய்ப்பாடி) எனும் தலம் மிகச் சிறிய வளமான கிராமமாகும். சோலைகளுக்கிடையே இக் கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயில் வாயிலில் இராஜகோபுரம் எழுப்புவதற்குரிய அடிநிலையோடு (மொட்டைக் கோபுரமாக) விளங்குகிறது.

திருக்கோயிலினுள் :

திருக்கோயிலுக்குள்ளே சென்றதும் முதற் பிரகாரத்தை அடைகிறேம். முதற்பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் பஞ்சமூர்த்தி மண்டபம் உள்ளது. கொடிமரம், நந்தி பலிபீடம் இவற்றைக் கடந்து முன்மண்டபத்தை அடைந்தால், செங்கல்லாலான வௌவால் நத்தி மண்டபம் காணப்படுகிறது. இம்மண்டபத்தின் வடபால் தெற்கு நோக்கியவாறு அம்பிகையின் சந்நிதி விளங்குகின்றது. உட்பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் இத்திருக்கோயிலின் தலமரமான ஆத்தி மரம் உள்ளது இத்தலமரத்தினடியில் ஓர் சிவலிங்கமும் காணப்படுகிறது.

கருப்பக்கிருகம் :

முன்னெரு காலத்தில் மண்ணியாற்றங் கரையில் இக்கோயில் அமைந்திருந்தது. காலம் செல்லச்செல்ல ஆற்றின் போக்கு இடம் பெயர்ந்து காணப்படுகிறது. ஆற்றின் கரையிலேயே இக்கோயில் முன்னெரு காலத்தில் அமைந்திருந்ததற்கு ஏற்ற சான்றுகள் பலவும் உள்ளன.

---

*"தலங்களின் வரலாற்றுக் குறிப்பு" — தருமை ஆதீன வெளியீடு எண் 391 (நான்காம் திருமுறை)

கோயிலின் கருப்பக்கிருகத்தைச் சூழ்ந்து மழைக் காலங்களில் தண்ணீர் ஊறிக் கொண்டிருக்கும். தண்ணீர் நிற்பதற்கேற்ற நிலையில் கருப்பக்கிருகத்தைச் சூழ 3 அடி ஆழமுள்ள பள்ளப்பகுதியும் உள்ளது. கருப்பக்கிருகத்தைத் தவிர அர்த்த மண்டபம், மகாமண்டபங் களிலும் நீரூற்றுகள் உள்ளன. ஆதலால் மழைக்காலங்களில் எங்கும் தண்ணீர் மயமாக இருக்கும்.

பிரகாரங்கள் :

மேற்குப் பிரகாரத்தில் தல விநாயகர், நால்வர். முருகன், மகாலக்ஷ்மி திருவுருவங்கள் காட்சி தருகின்றன. கருப்பக்கிருக கோஷ்ட மாடங்களில் தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், துர்க்கை ஆகியோர் திருமேனிகள் விளங்குகின்றன. வடக்குப் பிரகாரத்தில் எல்லாத் திருக்கோயில்களிலும் விளங்குதல் போல இங்கும் சண்டேசுவரர் திருக்கோயில் உள்ளது.

கருப்பக்கிருக வாயிலை அடுத்துள்ள அர்த்தமண்டபத்தின் வடபால் சற்று உயரமான மேற்பகுதியில் சண்டேசுவரர் அமர்ந்து (இத்திருவுருவம் மிகப்பழமையாக உள்ளது. நேரில் காண்க) இறைவனை ஆத்திமர நிழலில் அமைத்து வழிபடும் முறையில் தனிக் கோயிலில் எழுந்தருளியுள்ளார். எல்லாச் சிவாலயங்களிலும் சண்டேசுவரர் வடக்குப் பிரகாரத்தில் தனியே விளங்குவார். ஆனால் இத்திருக்கோயிலில் மட்டும் * இரண்டு சண்டேசு வரர் திருவுருவங்கள் உள்ளன.

மகாமண்டபத்தின் வடபால் நடராஜ சபையும், பைரவமூர்த்தியும், தென்பால் இரண்டு சிவலிங்கத் திருவுருவங்களும் காணப்படுகின்றன.

ஷை தலத்தின் கல்வெட்டுகள் :

x பிற்காலச்சோழ மன்னர்களில் இரண்டாம் இராசராசன், மூன்றும் குலோத்துங்கன் இவர்கள் காலங்களிலும்; பாண்டியரில் ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டியத்தேவர் காலத்திலும், பிற்காலப் பல்லவ மன்னரில் சகலபுவனச் சக்கரவர்த்தி கோப்பெருஞ் சிங்கத்தேவர் காலத்திலும், விசயநகர பரம்பரையில் வீர பொக்கண்ண உடையார் மகனார் அரியப்ப உடையார் காலத்திலும், தேவராய மகனார் மல்லிகார்ச்சுன மகா தேவர் காலத்திலும் வெட்டப்பட்ட கல்வெட்டுகள் இத்திருக்கோயிலில் காணப்படுகின்றன.

இத்திருக்கோயிலில் விளங்கும் இறைவனைத் திருஆப்பாடி உடையார் என்றும், நடராசரைச் சொக்கக் கூத்தர் என்றும் கூறுவர்.

---

*1 *அர்த்த மண்டபத்தில் விளங்கும் சண்டேசுவரர்*

2 *வடக்குப்பிரகாரத்தில் விளங்கும் சண்டேசுவரர்*

x See the Annual report on south Indian epigraphy for the year - 1932 Numbers 81 - 82.

இரண்டாம் இராசராசசோழதேவர் காலத்தில் இத்திருக்கோயிலில் நடைபெறும் தைப்பூச விழாவிற்கும், மூன்றும் குலோத்துங்க சோழ தேவர் காலத்தில் சொக்கக் கூத்தருக்கும் நிவந்தங்கள் அளிக்கப் பெற்றிருந்தன. இவைகளுள் சொக்கக் கூத்தர்க்கு நிவந்தம் அளித்தவர் மிழலைநாட்டுச் சேர்ஞலூர் உய்யக்கொண்ட பிள்ளை ஆவார். இவ்வூர் மிழலை நாட்டிற்கு உட்பட்டிருந்தது. அரியப்ப உடையார் காலத்துக் கல்வெட்டு ' ஆகவராமன் பணம் '' என்றும் ஒரு நாணயத்தின் பெயரைக் குறிப்பிடுகின்றது.

மராட்டியர் காலத்து மோடி ஆவணம் :

* ஐதர் படையெடுப்புக்கு முன்னரே இத் திருக்கோயிலில் திருவிழா நடக்கவில்லை. அதனால் திருத்தேரும் பழுதடைந்து விட்டது. ஆகவே மன்னர் வழக்கமாக அளிக்கும் மொய்யினுடன் தேரைப்பழுது பார்த்து வைகாசிப் பெருவிழா நடத்துவதற்கு 100 சக்கரம் தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த மோடி ஆவணத்தின் காலம் கி. பி. 1789 ஆகும்.

திருநாவுக்கரசர் அருளிய திரு ஆப்பாடி திருப்பதிகம்:

(நான்காம் திருமுறை) — திருநேரிசை

1. கடலகம் ஏழினோடும் புவனமும் கலந்த விண்ணும்
உடலகத் துயிரும் பாரும் ஒள்ளழ லாகி நின்று
தடமலர்க் கந்தமாலை தண்மதி பகலு மாகி
மடலவிழ் கொன்றை சூடி மன்னும்ஆப் பாடியாரே.

2. ஆதியும் அறிவும் ஆகி அறிவினுட் செறிவும் ஆகிச்
சோதியுட் சுடரும் ஆகித் தூநெறிக் கொருவனாகிப்
பாதியிற் பெண்ணும் ஆகிப் பரவுவார் பாங்க ராகி
வேதியர் வாழும் சேய்ஞல் விரும்பும் ஆப்பாடி யாரே.

3. எண்ணுடைய இருக்கும் ஆகி இருக்கினுட் பொருளும் ஆகிப்
பண்ணொடு பாடல் தன்னைப் பரவுவார் பாங்க ராகிக்
கண்ணொரு நெற்றி யாகிக் கருதுவார் கருதலாகாப்
பெண்ணொரு பாகம் ஆகிப் பேணும் ஆப்பாடி யாரே.

** தஞ்சை மராட்டியர் மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் '' — த. ப. கழகம். தஞ்சாவூர்*

தற்போது இத்திருக்கோயில் முழுவதும் திருப்பணிவேலை நடைபெற்று வருகிறது. 1961 - ல் இக்கோயிலுக்கு குடமுழுக்கு நடந்தது.

4. அண்டமார் அமரர் கோமான் ஆதிஎம் அண்ணல் பாதம்
கொண்டவன் குறிப்பி னாலே கூப்பனுன் தாபரத்தைக்
கண்டவன் தாதை பாய்வான் காலற எறியக்கண்டு
தண்டியார்க் கருள்கள் செய்த தலைவர்ஆப் பாடியாரே.

5. சிந்தையும் தெளிவும் ஆகித் தெளிவினுட் சிவமும் ஆகி
வந்தநற் பயனும் ஆகி வாள்நுதல் பாகம் ஆகி
மந்தமாம் பொழில்கள் சூழ்ந்த மண்ணித்தென் கரைமேல்மன்னி
அந்தமோ டளவி லாத அடிகள்ஆப் பாடியாரே

6. வன்னிவா ளரவு மத்தம் மதியமும் ஆறும் சூடி
மின்னிய உருவாம் சோதி மெய்ப்பொருட் பயனும் ஆகிக்
கன்னியோர் பாகம் ஆகிக் கருதுவார் கருத்தும் ஆகிக்
இன்னிசை தொண்டர் பாட இருந்தஆப் பாடியாரே.

7. உள்ளுமாய்ப் புறமும் ஆகி உருவுமாய் அருவும்ஆகி
வெள்ளமாய்க் கரையும் ஆகி விரிகதிர் ஞாயிறுகிக்
கள்ளமாய்க் கள்ளத் துள்ளார் கருத்துமாய் அருத்தம் ஆகி
அள்ளுவார்க் கள்ளல் செய்திட் டிருந்தஆப் பாடியாரே.

8. மயக்கமாய்த் தெளிவும் ஆகி மால்வரை வளியும் ஆகித்
தியக்கமாய் ஒருக்கம்ஆகிச் சிந்தையுள் ஒன்றி நின்று
இயக்கமாய் இறுதிஆகி எண்டிசைக் கிறைவர் ஆகி
அயக்கமாய் அடக்கம்ஆய ஐவர்ஆப் பாடியாரே.

9. ஆரழல் உருவம் ஆகி அண்டமேழ் கடந்த எந்தை
பேரொளி உருவினுனைப் பிரமனும் மாலும் காணுச்
சீரவை பரவி யேத்திச் சென்றடி வணங்கு வார்க்குப்
பேரருள் அருளிச் செய்வார் பேணும்ஆப் பாடியாரே.

10. திண்டிறல் அரக்கன் ஓடிச் சீகயிலாயம் தன்னை
எண்டிறல் இலனுமாகி எடுத்தலும் ஏழை அஞ்ச
விண்டிற நெரிய ஊன்றி மிகக்கடுத் தலறிவீழப்
பண்டிறல் கேட்டுகந்த பரமர்ஆப் பாடியாரே.

உத்தர காமிகாகமத்தில் சண்டேசுவரர் ஸ்தாபனவிதி :

[ஸ்தாபனவிதிப் படலம் - 65]

(1) உபோத் காத: - தோற்றுவாய் :

𑌚𑌂𑌡𑍇𑌶𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌤𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑌣 𑌪𑍁𑌰𑌃𑌸𑌰𑌮𑍍 ।
𑌪𑌰𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰 𑌭𑍇𑌦𑍇𑌨 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌤𑌚𑍍𑌚 𑌸𑌂𑌮𑌤𑌮𑍍 ॥

சண்டேச ஸ்தாபனம் வக்ஷ்யே தல்லக்ஷண புரஸ்ஸரம் ।
பர ஸ்வதந்த்ர பேதேந த்விவிதம் தச்ச ஸம்மதம் ॥

சண்டேசரை நிறுவும் நெறியினை அவரது உருவ அமைதியுடன் கூறுவோம். பரிவார (தேவர்); ஸ்வதந்திரர் (தனியாட்சிகொண்டவர்) என இருவகையாகக் கொள்ளப்படுவார். *1*

(2) தாமலட்சணம் - கோயிலின் அமைப்பு :

𑌪𑍁𑌰𑌾𑌦𑍌 𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 𑌵𑌾𑌽𑌷𑍍𑌟𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌚𑌣𑍍𑌡𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌲𑌯𑌃 ।
𑌧𑌾𑌮𑍇𑌶𑌾𑌨𑍇𑌽𑌥 𑌸𑍌𑌮𑍍𑌯𑍇𑌵𑌾 𑌸𑍋𑌮𑍇𑌶𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌽𑌥𑌵𑌾 ॥
𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌮𑌣𑍍𑌡𑌲𑌦𑍇𑌶𑍇𑌽𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑌾𑌰𑌾𑌯𑌾𑌂 𑌵𑍇𑌷𑍍𑌟𑌶𑌾𑌲𑌕𑍇 ।
𑌅𑌥𑍈𑌕𑌾𑌦𑌿 𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍 𑌹𑌸𑍍𑌤 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌸𑌂𑌯𑍁𑌤𑌃 ॥
𑌧𑌾𑌮 𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌾 𑌧𑌾𑌮𑍇𑌨𑌾𑌪𑌿 𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ।
𑌏𑌕𑌾𑌦𑌿 𑌸𑌪𑍍𑌤𑌭𑍂𑌮𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌭𑍂𑌮𑌿𑌭𑌾𑌗𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥
𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌕𑍍𑌤 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾𑌨𑍀𑌤 𑌗𑌰𑍍𑌭𑌾𑌦𑍍𑌯𑍇𑌷𑍍𑌟𑌕𑌯𑌾 𑌯𑍁𑌤𑌃 ।
𑌮𑍂𑌰𑍍𑌧𑍇𑌷𑍍𑌟𑌿𑌕𑌾 𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤 𑌸𑍍𑌤𑍂𑌪𑌿𑌸𑍍𑌥𑌾𑌪𑌨 𑌸𑌂𑌯𑍁𑌤𑌃 ॥

புராதௌ மத்யமே வாஸ்ஷ்- திக்ஷு சண்டேஸ்வராலய: ।
தாமேசாநேத சௌம்யேவா சோமேசேந்த்ராந்தரேதவா ॥
அந்தர் மண்டலதேசேந்தர்ஹாராயாம் வேஷ்டசாலகே ।
அதைகாதி த்ரயஸ்த்ரிம்சத் ஹஸ்த விஸ்தார சம்யுத: ॥
தாம லக்ஷண சம்சித்தா தாமேனாபி சமன்வித: ।
ஏகாதிசப்த பூம்யந்தம் பூமிபாக சமன்வித: ॥
ப்ராகுக்த விதிநாநீத கர்ப்பாத்யேஷ்டகயா யுத: ।
மூர்த்தேஷ்டிகா சமாயுக்த ஸ்தூபிஸ்தாபந சம்யுத: ॥

நகரின் தொடக்கம்; நகர நடுப்பகுதி அல்லது எட்டுத் திசைகள்; ஆலயங்களின் வடகிழக்கு, தெற்கு அல்லது சோமேசர் இருப்புக்கு அருகில் சண்டேசர்க்கு ஆலயம் அமைக்க. (கோயிலின்) உட்பகுதியில்; கருவறையைச் சுற்றியுள்ள அந்தராளம்; அல்லது நீண்டசாலை; இவற்றில் ஒருமுழம் முதல் முப்பத்துமூன்று முழம் வரையிலான அளவில் கொள்க. அடுக்குக் கோயில் அமைப்பினையுங் கொள்வதாயின் ஒன்று முதல் ஏழடுக்குகளும் உள்ளதாக பூமி அமைப்பினைக் கொள்க. முன் சொன்ன வகைப்படி கர்ப்பம் முதல் இஷ்டிகை வரையான பகுதிகளையும், சிகரத்துடன் ஸ்தூபிகலசமும் கொண்டதாக அமைத்திடுக. 2-5

𑌧𑌾𑌮𑍋𑌕𑍍𑌤𑌾𑌕𑌾𑌰 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌚𑌣𑍍𑌡𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ।
𑌇𑌷𑍍𑌟𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑍋 𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍇𑌵𑌲𑍋 𑌵𑌾 𑌵𑍃𑌷𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌦𑍍𑌵𑌾𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌪𑌰𑌾𑌙𑍍𑌮𑍁𑌖𑌶𑍍𑌚 𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌃 ।
𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑍇 𑌦𑌕𑍍𑌷𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑌦𑌿𑌙𑍍𑌮𑍁𑌖𑌃 ॥
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌸𑍍𑌥 𑌅𑌮𑌰𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌤 𑌮𑌧𑍍𑌯𑌕𑍁𑌮𑍍𑌭𑌯𑍁𑌤𑍇𑌨 𑌚 ।
𑌧𑌾𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑍇 𑌨𑌾𑌟𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌕𑍍𑌤𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌸𑌹 ॥
𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌕𑍍𑌤 𑌗𑌰𑍍𑌭𑌮𑌾𑌨𑌾𑌦𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰 𑌮𑌣𑍍𑌡𑌪𑍋𑌪𑍇𑌤𑌃 𑌪𑌰𑌿𑌤𑌃 𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌯𑍁𑌕𑍍 ॥

தாமோக்தா கார சம்யுக்தோ திக்ஷு: சண்டேச்வராங்வித: ।
இஷ்டதேவா ங்விதோ வாஸ்யாத் கேவலோவா வ்ருஷாங்வித: ॥
தக்ஷிணத்வார சம்யுக்த: பராங்கச்சேத் முநீச்வரா: ।
ஸ்வதந்த்ரஸ்தாபநே தட்ச பூர்வ பச்சிம திங்முக: ॥
திங்யஸ்த அமரவிங்யஸ்த மத்யகும்ப யுதேனச ।
தாம சம்ஸ்தாபனேநாட்ய: ப்ராகுக்த விதிஞ சஹ ॥
ப்ராக்உக்த கர்ப்ப மாநாத்யம் ஸர்வமந்த்ர ப்ரயோஜ்யதாம் ।
ப்ராகார மண்டபோபேத: பரித: பரிவாரயுக் ॥

முன்சொன்ன உருவிலும்; முன்சொன்னவாறு உரிய திக்கிலும் ஆலயமமைக்க. சண்டேசரை பரிவாரதேவராயின் சிவத்திஞெடு அமர்ந்தவராயும்; ஸ்வதந்திரராயின்-தனியாயோ; ஏறு - (ரிஷபம்)டன் கூடியவராயோ அமைக்க. தவத்திற்சிறந்த முனிவர்களே! பரிவார தேவராயின் தென்திசை நோக்கியும், சுதந்திரராயின் தெற்கு / கிழக்கு / மேற்குத்திசை நோக்கியவராயும், மேலமைத்த மத்தியகும்பங் கொண்டவராயும் (ஸ்தூபியுடைய விமானத்தின் கீழமர்ந்தநிலை) முன்சொன்ன நெறி (தர்மம்) யின்படி அறிந்தோர் முறைகளை அனுட்டிக்க. முன் சொன்னவாறே கர்ப்ப அளவுமுதல் பிரகார மண்டபத்தில் பரிவாரங்களோடு கூடியவராக (முறைப்படி அமைத்திடுக). 6 - 9

(3) சண்ட பரிவாராணி : சண்டரின் பரிவார தேவர்கள் :

𑌰𑍁𑌦𑍍𑌰𑌭𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌤𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌚𑌣𑍍𑌡𑌶𑍍𑌚𑌣𑍍𑌡𑌪 𑌏𑌵𑌚 ।
𑌮𑌹𑌾𑌬𑌲𑌸𑍍𑌤𑌥𑌾𑌸𑍍𑌥𑌵𑌿𑌰𑌷𑍍𑌟𑌙𑍍𑌕 𑌪𑌾𑌣𑍀𑌶 𑌸𑍇𑌵𑌕𑌃 ॥
𑌰𑍁𑌦𑍍𑌰𑌕𑍋𑌪𑌜 𑌇𑌤𑍍𑌯𑌷𑍍𑌟𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑌃 𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌕𑌾𑌃 ।
𑌏𑌤𑍇 𑌶𑍍𑌵𑍇𑌤𑌾 𑌮𑌹𑌾𑌕𑌾𑌯𑌾𑌃 𑌕𑍃𑌤𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌪𑍁𑌟𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ॥
𑌟𑌙𑍍𑌕𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌹𑍀𑌨𑌾 𑌵𑌾 𑌵𑍀𑌰𑌾𑌦𑍍𑌯𑌾𑌸𑌨 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 ।
𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌾𑌸𑍋𑌨𑍍𑌵𑌿𑌤𑌾 𑌵𑌾𑌥 𑌚𑌣𑍍𑌡𑌰𑍂𑌪𑌧𑌰𑌾𑌸𑍍𑌤𑍁 𑌵𑌾 ॥
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌾 𑌵𑌾 𑌤𑌦𑌰𑍍𑌧𑌂 𑌤𑍁 𑌪𑍀𑌠𑌂 𑌵𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌤𑍋 𑌵𑍃𑌷𑌃 ।
𑌬𑌲𑌿𑌪𑍀𑌠𑌾𑌦𑌿 𑌪𑍀𑌠𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍𑌤𑍁 𑌵𑌾 ॥
𑌦𑍍𑌵𑌾𑌰𑌸𑍍𑌥𑍌 𑌦𑍍𑌵𑌾𑌰𑌪𑍌 𑌕𑌾𑌰𑍍𑌯𑍌 𑌦𑍍𑌵𑌿𑌕𑌰𑍌 𑌦𑌣𑍍𑌡𑌧𑌾𑌰𑌕𑍌 ।
𑌚𑌣𑍍𑌡𑌾𑌨𑍁𑌗𑌃 𑌚𑌣𑍍𑌡𑌭𑍂𑌜𑍍𑌯𑍌 𑌨𑍈𑌰𑍃𑌤𑍍𑌯𑍇 𑌵𑌾 𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌗𑍍𑌰𑌜𑌾𑌃 ॥
𑌬𑌲𑌿𑌪𑍀𑌠𑍇 𑌬𑌲𑌿𑌰𑍍𑌦𑍇𑌯𑍋 𑌯𑌥𑌾𑌦𑍇𑌶𑍋 𑌬𑌲𑌿𑌰𑍍𑌹𑌿𑌤𑌃 ।
𑌦𑍇𑌵𑍋𑌕𑍍𑌤 𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌾𑌨𑍍𑌵𑌾 𑌵𑌿𑌘𑍍𑌨 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇𑌶 𑌭𑌾𑌨𑍁𑌭𑌿𑌃 ॥

ருத்ரபக்தஸ்ததோ ருத்ர சண்ட; சண்டப ஏவச ।
மகாபலஸ் ததாவிர்யாஷ்டங்க பாணீச சேவக: ॥
ருத்ரகோபஜ: இத்யஷ்டமூர்த்தய: பரிவாரகா: ।
ஏதே ச்வேதா: மஹாகாயா: க்ருதாஞ்ஜலி புடாந்விதா: ॥
ஸடங்காஸ்நத்விஹீநாவா விராத்யாஸந ஸம்ஸ்திதா: ।
க்ருத்திவாஸோந்விதா வாத சண்டரூபதராஸ்து வா ॥
இந்த்ராத்யா வா ததர்த்தந்து பீடம்வா பூர்வதோ வ்ருஷ: ।
பலிபீடாதி பீடாந்தம் பூர்வவத் கல்பயேத்துவா ॥
த்வாரஸ்தௌ த்வாரபௌ கார்யௌ த்விகரௌ தண்டதாரகௌ ।
சண்டாநுக: சண்டபூக்யௌ நேஷ்டௌ வா தேசிகாக்ரஜா: ॥
பலிபீடே பலிர்தேயோ யதாதேசோ பலிர்ஹித: ।
தேவோக்த பரிவாரான்வா விக்ன க்ஷேத்ரேச பானுபி: ॥

ருத்ரபக்தர்; ருத்ரசண்டர்; சண்டபர்; மகாபலர்; ஸ்தவிரர்; டங்கபாணி; ஈசசேவகர்; ருத்ரகோபஜர் ஆகிய எண்மரும் சண்டரின் பரிவார தேவர்களாவர். இவர்கள் வெண்ணிறத்தர்; பேருருவுடையார்; கூப்பிய கைகளையுடையார். கையில் மழு (டங்கம்) தரித்தாராய் சண்டரின் ஆஸநத்தைச் சுற்றிலுமோ அல்லது பலிபீடம் முதலாக

பலிபீடம் வரையிலுமோ வீராஸநம் முதலிய ஆசனங்களில் அமர்ந்தவர்களாக அமைக்க. கிழக்குத் திசையில் பலிபீடம் அல்லது அர்த்தபீடத்தின் அருகில் விருஷபரை நிறுவுக.

வாயிலினருகில் இருகரங்களுடையராய்; தண்டம் தரித்தாராய்; சண்டானுகர்; சண்டபூதி ஆகிய இருவரை உயர்ந்த தலைமை ஆசாரியன் நிறுவுவிக்க, முன்சொன்ன விதிப்படி இதமான உணவினைப் பரிவார தேவர்கட்கும்; விக்கினர்; க்ஷேத்திரேசர்; சூரியன் ஆகியோர்க்கும் பலிபீடத்தின் மீது உணவினை வைத்து அருத்துக. 10-15

(4) சண்டேச லட்சணம் - சண்டேசர் உருவமைதி :

𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍈𑌃 𑌶𑌿𑌲𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ।
𑌮𑌧𑍍𑌯𑍇𑌨 𑌦𑌶𑌤𑌾𑌲𑍇𑌨 𑌦𑌶𑌤𑌾𑌲𑌾𑌧𑌮𑍇𑌨 𑌵𑌾 ॥
𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌲𑌕𑍍𑌷𑌣𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌾𑌨𑍇𑌨𑌾𑌯𑌾𑌦𑌿 𑌸𑌂𑌯𑍁𑌤𑌃 ।
𑌬𑌦𑍍𑌧 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑌃 𑌚𑌣𑍍𑌡𑌨𑌾𑌥𑍋 𑌦𑍁𑌰𑍍𑌧𑌰𑍍𑌷𑌭𑍀𑌷𑌣𑌃 ॥
𑌵𑍍𑌯𑌾𑌲𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑍀 𑌚 𑌮𑍁𑌖𑍋𑌤𑍍𑌕𑍀𑌰𑍍𑌣 𑌮𑌹𑌾𑌨𑌲𑌃 ।
𑌕𑌰𑌾𑌲𑌕𑌜𑍍𑌜𑌳𑌾𑌭𑌾𑌸𑍋 𑌜𑌟𑌿𑌲𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍇𑌖𑌰𑌃 ॥
𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌤𑍍𑌰𑌿𑌶𑍂𑌲𑌵𑌾𑌨𑍍 ।
𑌟𑌙𑍍𑌕𑌂 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌂 𑌵𑌾𑌮𑍇 𑌭𑌾𑌨𑍁𑌰𑌕𑍍𑌤𑌾𑌰𑍍𑌕𑌲𑍋𑌚𑌨𑌃 ॥

த்ரவ்யை: சிலாதிபி: கார்ய; பூர்வவத் லட்சணாந்வித; ।
மத்யேந தசதாலேந தசதாலாதமேன வா ॥
ப்ரதிமாலட்சண ப்ரோக்த மாநேநாயாதி சம்யுத: ।
பத்த பத்மாசன; சண்டநாதோ துர்த்தர் சபீஷண: ॥
வ்யாள யக்ஞோபவீதீச முகோத்கீர்ண மஹாநல: ।
கராள கஜ்ஜளா பாஸோ ஜடில: சந்த்ரசேகர: ॥
சதுர்வக்த்ர: சதுர்ப்பாஹு: சாக்ஷமாலா த்ரிசூலவாந் ।
டங்கம் கமண்டலும் வாமே பாநுரக்தார்க்கலோசந: ॥

கல் முதலிய பொருட்களால், முன்கூறிய உருவமைதி கொண்டவராய், மத்யதசதாலம் அல்லது அதமதசதால அளவினால் செய்க. ப்ரதிமாலட்சண உருவமைதியின்படி சொல்லப்பட்ட ஆயாதிகளுடனும், அசையாது பத்மாஸனத்தமர்ந்த திருக்கோலமும் கொண்டு, தீயோரை அச்சுறுத்தும் சண்டநாதரை அமைக்க.

உத்தரகாமிகாகமத்தில் சண்டநாதர்
(வேறுவகை)



நான்முகத்தர்; நாற்கரத்தர்; முகத்தினின்று வெளியாகி ஒளிரும் பெருந்தீச் சுடரென ஒளிர்பவர்; கருநாகத்தின் ஒளியொப்ப ஒளிரும் சடைமுடியர்; பிறை சூடியவர்; வலக்கரங்களில் அக்கமாலை; முத்தலைச் சூலம் தரித்தவர்; இடக்கரங்களில் மழுவும், குண்டிகையும் கொண்டவர்; சிவந்த சூரியனை ஒப்ப ஒளிரும் கண்களை உடையவர் (என அமைக்க). 16-19

கஶ்வா ஶங்கவர்ணாஹ: சதுர்பாஹுஸ் த்ரிலோசந: ।
சந்த்ரார்த்தமண்டித: க்ருத்திவாஸா: வீராஸநஸ்தித: ॥
பிநாகாமோக பாணாப்யாம் ஹி சக்ரபாணிதலத்வய: ।
வராபய ப்ரதாநாப்யாம் அந்யத்ர பரிமண்டித: ॥

அதவா சங்க வர்ணப: சதுர்ப் ாஹு ஸ்த்ரிலோசன ।
சந்த்ரார்த்த மண்டித: க்ருத்திவாஸா: வீராஸனஸ்தித: ॥
பினாகாமோக பாணப்யாம் ஹ்பக்ரபாணிதலத்வய: ।
வராபய ப்ரதானப்யாம் அங்யத்ரபரி மண்டித: ॥

அல்லது சங்கின் (வெண்மை) நிறம்: நாற்கரத்தர்; முக்கண்ணர்; பிறைச்சந்திரன் அணிசெய (சடையினை)க்கொண்டார்; யானைஉரி உடையார்; வீராஸநத்தமர்ந்தார்; மேலிரு கரங்களில் பிநாகம் (வில்) அமோகம் (அஸ்திரம்) இவைகளையும் மற்றிரு கரங்களில் வரத, அபய (முத்திரைகளால்)ங்களாலும் பொலிபவர். 20, 21

கஶ்வா த்விபுஜ: ஶுக்லவஸ்த்ர: த்ர்யக்ஷ: அஞ்ஜநப்ரப: ।
ஜடாமகுடயுக்தோ வா துளஸீக்ருத மூர்த்தஜ: ॥
ஸ்தாநகோ வாஸநஸ்தோ வா ஶயிதா ஸவ்யபாதக: ।
ஸலம்பாஸவ்ய பாதஸ்து வாமஹஸ்த புஜாநக: ॥
வரஹஸ்தோ(அ)ஸவ்ய ஸவ்யாஞ்சித: டங்கஸம்யுத: ।
வாமேதரகர: டங்கயுக்த: கஞ்சிவ்யபோஷவா ॥
ஶங்கரேக்ஷணஸம்பந்: ஶோகநப்ரஸீதஸ்ஸவா ।
உத்தராஸநயுக்த ஶாகோ ஜடிம்ஷ்டங்கயுக்த கர: ॥

அதவா த்விபுஜ: சுக்லவஸ்த்ர: த்ரியக்ஷ: அஞ்ஜன ப்ரப: ।
ஜடாமகுட யுக்தோவா துளஸீக்ருத மூர்த்தஜ: ॥
ஸ்தாநகோ வாஸனஸ்தோவா சயிதா சவ்ய பாத் தல: ।
ஸலம்பாசவ்ய பாதஸ்து வாமஹஸ்த புஜாநுக ॥

வரஹஸ்தோsதவாஸஸ்பா திதர: டங்க சம்யுத: l
வாமேதரகர: டங்கயுக்தோஞ்ஜலி புடோsதவா ll
சங்கரேக்ஷண ஸம்பந்ந: சோதநம்ர சிரஸ்துவா l
உத்கடாசனயுக் சாந்தோ ஜடிலஸ் டங்கதிருக்கர: ll

அல்லது-இருகரத்தர்; வெள்ளாடை கொண்டவர்; முக்கண்ணர்; கண்மையன்ன (மேனி) நிறத்தர்; சடைமுடியுடன் அல்லது துளஸிஎன நீண்டு உயர்ந்தமுடியர்; நின்றவர் அல்லது அமர்ந்தவர் (எனக்கொள்க). (அமர்ந்தகோலமாயின்) மடித்த வலத்தாளும், தொங்கும் இடக்கரத்துடன் தொங்கும் இடத்தாளினை உடையராய்க் கொள்க.

(அல்லது) வரந்தரும் இடக்கரம் கொள்க. வலக்கரம் மழுக் கொண்டதாக (இருவகை உருவிலும்) அமைக்க. அல்லது மழுவும் வரதமும் இரு கரங்களிலும் (மேல்) இரு கரங்களில் அஞ்சலி முத்திரையும் அமைக்க. அல்லது - சிவத்தை நோக்கி வணங்கிய பார்வையும்; (வணங்கிய) திருமுடியும்; சுகாசநம் கொண்டும் (இஷ்டாஸநம்); அமைதி தவழும் முகம்; சடைமுடியும்; மழுக்கொண்ட கரங்களும் கொள்க. 22-25

ഏവംവാ ചണ്ഡനാഥസ്തു കാര്യസ്ത്വിഷ്ടാസനാന്വിതഃ ।
അഥവാ ഭയടങ്കാഭ്യാം പാശശൂലദ്വയേന തു ॥
ചതുര്ഭുജസ്തു വാ കാര്യഃ ശങ്കരാജ്ഞാനുപാലകഃ ।
വിശേഷഃ സിംഹളേ ദേശേ കശ്ചിദത്രാപി ദീയതേ ॥

ஏவம்வா சண்டநாதஸ்து கார்யஸ் து இஷ்டாஸநாந்வித: l
அதவா பயடங்காப்யாம் பாசசூல த்வயேனது ll
சதுர்ப்புஜஸ்து வா கார்ய: சங்கரா க்ஞானுபாலக: l
விசேஷ: ஸிம்ஹளே தேசே க:சித் அத்ராபி தீயதே ll

சிங்கள தேசத்தில் காணப்படும் ஒரு வேறுபாடு கூறப்படுகிறது. சண்டநாதர் தமது இஷ்டாஸனத்தில் இருப்பவராயும் இரு கரங்களுடன் அபயம் மழு கொண்டவராயும்; அல்லது சங்கரரின் ஆணையை நிறைவேற்றும் முகத்தான் நாற்கரங்களில் அபயம், மழு, பாசம், சூலம் கொண்டவராயும் அமைக்க. 26-27

(അന്യദേശേതു സര്വത്ര വിഭാഗോ നായമീരിതഃ)

அன்யதேசேது சர்வத்ர விபாகோ நாயமீரித: l

மற்ற எத்தேசங்களிலும் இவ்வுருவம் சொல்லப்படவில்லை.] 27½

(5) ஸ்வரூப லட்சணபேத காரணனி :

உருவ வேறுபாடுகளின் காரணம் :

𑌕𑍃𑌤𑌾𑌯𑌾𑌂 𑌅𑌷𑍍𑌟𑌹𑌸𑍍𑌤𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌷𑌡𑍍𑌭𑍁𑌜𑍋 𑌮𑌤𑌃 ।

𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇 𑌚 𑌚𑌤𑍁𑌰𑍍𑌹𑌸𑍍𑌤𑌃 𑌕𑌲𑍌 𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌕𑌰𑍋 𑌮𑌤𑌃 ॥

க்ரேதாயாம் அஷ்டஹஸ்த: ஸ்யாத் த்ரேதாயாம் ஷட்புஜோ மத: ।
த்வாபரேச சதுர்ஹஸ்த: கலௌ து த்விகரோ மத: ॥

கிரேதயுகத்தில் எண்கரங்கள்; திரேதாயுகத்தில் அறுகரங்களும் கொள்வர்; துவாபரயுகத்தில் நாற்கரங்களும்; கலியில் இருகரங்களும் கொள்ளப்படும் (என்பர்). 28½

(6) சண்டேச சக்திஸ்வரூப லட்சணம் :

சண்டேசரின் சத்தி உருவமைதி :

𑌅𑌥𑌵𑌾 𑌚𑌣𑍍𑌡𑌨𑌾𑌥𑌸𑍍𑌤𑍁 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌤𑍁 𑌸𑌹𑌿𑌤𑍋 𑌨 𑌵𑌾 ॥

அதவா சண்டநாஸ்து தேவ்யாது ஸஹிதோ நவா ।

அல்லது - சண்டநாதரைத் தம் தேவியுடன் கூடியவராயோ தனித்தோ அமைக்க. 29

𑌸𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌾 𑌹𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌯𑌾𑌖𑌿𑌲 𑌭𑍂𑌷𑌿𑌤𑌾 ।

𑌧𑌰𑍍𑌮𑌨𑍀𑌤𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌯𑌾 𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌧𑍃𑌤 𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑌾 𑌵𑌰𑌾 ॥

சாதேவீ ச்யாமளா ஹஸ்தத்வயாகில பூஷிதா ।
தர்ம நீத்யாக்யயா க்யாதா த்ருத நீலோத்பலா வரா ॥

(மேற்கூறிய) சண்டசத்தி, நல்லமைதி கொண்டவளும்; பசுந் தளிர் நிறமுடையவளும்: அனைத்தணி பூண்டவளும்; தர்மநீதி எனும் பெயருடன் அறியப்பட்டவளும்; இருகரங்களுள் ஒன்றில் நீலோத்பலங் கொண்டவளுமாக அமைக்க. 30

(6) சண்டமந்த்ரோத்தாரண விதி : ।

சண்டரின் மந்திரங்களை (மநுக்களை) எழுப்பும் நெறி ।

𑌏𑌵𑌮𑌾𑌪𑌾𑌦𑍍𑌯 𑌭𑍇𑌦𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌮𑌨𑍁𑌭𑌿𑌃 𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌂 𑌨𑌯𑍇𑌤𑍍 ।

𑌚𑌣𑍍𑌡𑌾𑌸𑌨𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌨𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌮𑌨𑍁𑌰𑌾𑌸𑌨𑍇 ॥

ஏவமாபாத்ய பேரந்து மநுபி: ஸ்தாபநம் நயேத் ।
சண்டாஸநம் சதுர்த்யந்தம் நத்யந்தம் மநுராஸனே ॥

இவ்வாறு பிரதிமைகளை உருவாக்கியபின் (மூர்த்தியை, அவ்வுருவில்) மந்திரங்களால் நிறுவுக. சண்டரின் ஆஸநத்தை நான்காம் வேற்றுமை முடிவும் போற்றும் முடிவும் கொண்டு அமைக்க.

[𑌓𑌂 𑌚𑌣𑍍𑌡𑌾𑌸𑌨𑌾𑌯 𑌨𑌮𑌃 - ஓம் சண்டாஸநாய நம:)

𑌚𑌣𑍍𑌡𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌤𑌿 𑌪𑌦𑌂 𑌦𑍀𑌪𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌨𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑍇𑌵 𑌚 ।

𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑌿𑌦𑌂 𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑌿𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥

சண்டமூர்த்தி பதம் தீப பூர்வம் நத்யந்தமேவ ச ।
சதுர்த்தியந்தமிதம் மூர்த்தி மந்த்ரமித்யபிதீயதே ॥

தீப (வித்து) முதலும் போற்றும் முடிவும் நான்காம் வேற்றுமை உருபும் கொண்ட சண்டமூர்த்தி எனும் பதம் சண்டமூர்த்தி மந்த்ரம் எனக் கொள்ளப்படுகிறது. 32

[𑌓𑌂 𑌚𑌣𑍍𑌡𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 𑌨𑌮𑌃 - ஓம் சண்டமூர்த்தயே நம:]

𑌧𑍍𑌵𑌨𑌿𑌃𑌚𑌣𑍍𑌡 𑌪𑌰𑌾𑌯𑍇𑌤𑌿 𑌹𑍂𑌂𑌫𑌟𑍍 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾𑌵𑌹𑌨𑍇 𑌚 ।

𑌮𑍂𑌲𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌸𑌮𑌾𑌦𑌿𑌷𑍍𑌟𑌃 𑌤𑌦𑌗𑍍𑌰𑍇 𑌦𑍀𑌪𑌸𑌂𑌯𑍁𑌤𑌃 ॥

த்வனி:சண்ட பராயேதி ஹூம்பட் ஸ்வாஹாவஹநே ச ।
மூலமந்த்ரஸ்ஸமாதிஷ்ட: ததக்ரே தீப சம்யுத: ॥

தீபவித்து முதலாயும் த்வனிச்சண்டபராய என இடையாயும் ஹூம்பட் ஸ்வாஹா எனும் முடிவும் கொண்ட மூலமந்திரம் ஆவாகனத்தில் (அழைத்தலில்) பயன்படுகிறது.

(𑌓𑌂 𑌧𑍍𑌵𑌨𑌿𑌶𑍍𑌚𑌣𑍍𑌡𑌪𑌰𑌾𑌯 𑌹𑍂𑌂𑌫𑌟𑍍 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾

ஓம் த்வனிச்சண்டபராய ஹூம்பட் ஸ்வாஹா)

𑌈𑌶𑌾𑌨𑌾𑌦𑍀𑌨𑌿 𑌚𑌣𑍍𑌡𑌸𑍍𑌯 𑌚𑌕𑌾𑌰𑍇𑌣 𑌉𑌦𑍍𑌧𑌰𑍇𑌦𑍍 𑌗𑍁𑌰𑍁𑌃 ।

𑌓𑌂 𑌚𑌣𑍍𑌡𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌃 𑌹𑍂𑌂 𑌫𑌣𑍍𑌣𑌮𑍋𑌨𑍍𑌤𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌹𑍃𑌦𑌾𑌦𑌿𑌕𑌾𑌃 ॥

𑌤𑌨𑍍𑌨𑌾𑌮 𑌨𑌾𑌹𑍂𑌂𑌫𑌡𑌨𑍍𑌤𑍇𑌨 𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌨𑌾𑌮 𑌪𑌰𑍋𑌮𑌤𑌃 ।

ஈசாநாதீநி சண்டஸ்ய சகாரேண உத்தரேத் குரு: ।
ஓம் சண்டபூர்வக: ஹூம் பண்ணமோந்த: ஸ்யாத் ஹ்ருதாதிகா: ॥
தந்நாம் நாஹூம்படந்தேன மூர்த்திநாம பரோமத: ।

உத்தரகாமிகாகமத்தில் சண்டநாதர்
(வேறுவகை)



ஜ்வாலக்கிரீடம் இல்லாது விளங்குமானல் துவாபரயுக சண்டர் எனவும் கூறுவர், பிறிதொரு இடத்தில் கற்சிற்பத்துடன் விளக்கப்பட்டுள்ளது.

ஈசானம் முதலாக சண்டருடைய (நியாச) மந்திரங்களை 'ச'காரங் கொண்டு எழுப்புக. "ஓம் சண்ட" என்பதை முதலாய்க் கொள்க. ஹ்ருதயம் முதலான அங்க மந்திரங்களையும் அவ்வாறே கொள்க. சண்டரின் பெயரொடு "ஹூம்பட்" என்னும் முடிவுங்கொண்டு உயர்ந்தனவாய்க் கருதப்படும் மூர்த்தி மந்திரங்களையும் எழுப்புதல் முறையாய்க் கருதப்படுகிறது.

[𑌓𑌂 𑌸𑌂 𑌚𑌣𑍍𑌡 𑌈𑌶𑌾𑌨𑌾𑌯 𑌹𑍂𑌂𑌫𑌣𑍍𑌣𑌮𑌃, 𑌓𑌂 𑌸𑌂 𑌚𑌣𑍍𑌡 𑌤𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌹𑍂𑌂 𑌫𑌣𑍍𑌣𑌮𑌃, 𑌓𑌂 𑌸𑌂 𑌚𑌣𑍍𑌡 𑌅𑌘𑍋𑌰𑌾𑌯 𑌹𑍂𑌂 𑌫𑌣𑍍𑌣𑌮𑌃 । 𑌓𑌂 𑌸𑌂 𑌚𑌣𑍍𑌡 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌾𑌯 𑌹𑍂𑌂𑌫𑌣𑍍𑌣𑌮𑌃, 𑌓𑌂 𑌸𑌂 𑌚𑌣𑍍𑌡 𑌸𑌦𑍍𑌯𑍋𑌜𑌾𑌤𑌾𑌯 𑌹𑍂𑌂 𑌫𑌣𑍍𑌣𑌮𑌃 ॥

ஓம் சம் சண்ட ஈசானுய ஹூம்பட் நம:; ஓம் சம் சண்ட தத் புருஷாய ஹூம் பட் நம:; ஓம் சம் சண்ட அகோராய ஹூம் பட் நம:; ஓம் சம் சண்ட வாமதேவாய ஹூம் பட் நம: ஓம் சம் சண்ட சத்யோ ஜாதாய ஹூம்பட் நம: – இவை சண்டரின்மூர்த்தி மந்திரங்கள்.]

34-43½

𑌅𑌥𑌵𑌾𑌨𑍍𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌚𑌣𑍍𑌡𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌤𑍇 ॥
𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌪𑌦𑍈𑌃 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍈𑌃 𑌹𑍂𑌂 𑌫𑌟𑍍𑌕𑌾𑌰𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑍈𑌃 ।
𑌚𑌣𑍍𑌡𑌾𑌯𑍇𑌤𑌿 𑌪𑌦𑍋𑌪𑍇𑌤𑍈𑌃 𑌚𑌣𑍍𑌡𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍋𑌽𑌯𑌮𑍀𑌰𑌿𑌤𑌃 ॥
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑍈𑌰𑌾𑌵𑍃𑌤𑍋𑌽𑌥𑌵𑌾𑌽𑌯𑌂 𑌚𑌣𑍍𑌡𑌨𑌾𑌥𑌃 𑌸𑌮𑍀𑌰𑌿𑌤𑌃 ।

அதவான்ய ப்ரகாரேண மந்த்ர:, சண்டாய கல்ப்யதே ll
ஜ்ஞானசக்தி பதை: மந்த்ரை: ஹூம்பட் கார சமந்விதை: l
சண்டாயேதி பதோபேதை: சண்டமந்த்ரோயம் ஈரித: ll
வித்யாங்கை: ஆவ்ருதோவாத சண்டநாத: சமீரித: l

அல்லது - இன்னொரு முறையாலும் சண்டருக்கு மந்திரங்கள் கற்பிக்கப்படுகின்றன. "ஞானசக்தி" முதலான பதங்கள் கூடியவையும், "ஹூம்பட்" என்ற முடிவுகொண்டவையும், "சண்டாய" என்ற பதத்தைக் கொண்டவையுமாக சண்டரின் மந்திரங்கள் சொல்லப் பட்டன, சண்டநாதர் வித்யாங்கங்களால் உருக்கொண்டவராயும் சொல்லப்படுகிறுர். **35-36½**

உத்வாஸ்ய சில்பினம் பசாத் கோமயே நோபலேபயேத் ।
மண்டபம் பூஷயித்வாது பூசுரான் போஜயேத் தத : ॥
கோமயாலேபனம் க்ருத்வா புண்யாஹம் வாசயேத்தத : ।
த்வார பூஜாதிகம் ஸர்வம் ஸ்தாபனக்ரமவத்சுதீ : ॥

கருவறையின் முன் எட்டுக்கை அளவில் மண்டபம் உருவாக்குக. பதினாறு தம்பங்கள் உடையதாய் அதன் நடுவில் இருமுழம் சதுர வேதிகை உடையதாய் செய்க. அறிவுடையான் அதில் மூன்றில் ஒருபாக அளவில் சுற்றிலும் எட்டு குண்டங்கள் செய்க. கிழக்கு முதலான நான்குதிசைகளில் நாற்கோண குண்டங்கள் செய்க. கோணங்களில் வட்டகுண்டங்கள் அமைக்க. ஈசானத்துக் கருகிலுள்ள வட்ட குண்டம் பிரதானகுண்டமாகும். மண்டபத்தின் வடப்புறம் நீராட்டும் இடம்அமைக்க. சிற்பியை அனுப்பியபின் கோமயத்தால் முற்றிலும் நன்குமெழுகுக. மண்டபத்தைஅலங்கரித்து அந்தணர்கட்கு உணவளிக்க. மறுபடி கோமயத்தால் மெழுகி புண்யாஹவாசனம் செய்க. துவார பூசை முதலியன முறைப்படிசெய்க.

10. காரணாகமம் : I 87 2b - முதல் 7 : -

அங்குராண்யர்ப்பயேத் தீமான் பூர்வோக்த விதிநா சஹ ||
விசித்ரமண்டபே மத்யே ஸ்தண்டிலம் சாலிபி : க்ரமாத் ||
தந்மத்யே நலினம்லிக்ய தஸ்யோர்த்வே பிரதிமாம் ந்யஸேத் |
சகுர்யாத் ரத்னவிந்யாசம்நேத் ரமோக்ஷணமாரபேத் ||
ஹேமஸூச்யாலிகேத் பக்ஷ்ம ரேகாம் வை க்ருஷ்ணமண்டலம் |
ஜ்யோதிர்மண்டல மாலிக்ய மத்வாஜ்யாப்யாம் துதர்ப்பயேத் ||
நேத் ரேணதர்ப்பயித்வாது குர்யாத் கவ்யாபி ஷேசனம் |
கிராமப்ரதட்சிணம் சோக்தம் குர்யாத் ஜலாதிவாசனம் ||
வஸ்த்ரேணப்ரதிமாம் வேஷ்ட்ய லம்ப கூர்ச்சசமன்விதாம் |
ஜலமத்யே ப்ரபாம் க்ருத்வா சாயயேத் தஸ்யா ச மத்யமே ||
ஏகராத்ரம் த்விராத்ரம் வாஜலே சைவாதிவாசயேத் |

முன் சொன்ன விதிப்படி முளைப்பாலிகைகள் செய்க. அலங்கரித்த மண்டபத்தின்நடுவில் ஒருவேதிகை அமைத்து நெல்லினைப்பரப்புக. அதன்மத்தியில் தாமரை எழுதுக. அதன்மேல் பிரதிமையை வைத்திடுக. ரத்னநியாசம், நேத்திரத்திறப்பு ஆகியவைசெய்க. பொன்னூசியால் கருவிழி முதலியன வற்றை எழுதுக. ஒளிமண்டலத்தை எழுதுக. தேன், நெய் இவற்றால் புரோக்ஷிக்க. நேத்திர மந்திரத்தால் நனைத்து நெய் முதலியவாற்றால் ஆட்டுக. கிராமப்பிரதட்சிணம் செய்க. ஜலாதிவாசனம் செய்க. பிரதிமையை வஸ்த்ரம் முதலியவற்றாலும் கூர்ச்சத்தாலும் அலங்கரிக்க. நீரின்மத்தியில் வட்டமிட்டு அதன்மத்தியில் பிரதிமையை ஓரிரவு அல்லது இரு இரவுகளேனும் அமிழ்த்திவைக்க.

11. காமிகாகமம் : II 65 : 44b - 46 : -

ஜலாதாநீய சண்டேசம் ப்ராக்வத்ஸ்நபன மாசரேத் |
கௌதுகம் பந்தயித்வாந்தே ஸர்வாத் மானம் சமுச்சரன் |
கல்பயேத் சயனம் வேத்யாமண்ட ஜாத்யை ரனுக்ரமாத் |
பஞ்சபிர்வாம்பரை : சுத்தை : சாயயேத் ஹ்ருதயேனது |
வாஸோப்யாம் வேஷ்டயித்வாது ... ... |

நீர்நிலைச்சயனத்திலிருந்து கொணர்ந்து சண்டேசரை முன்போல் சர்வமந்திரங்களாலும் நீராட்டுக: சர்வாத்ம மந்திரங்களால் கங்கணந் தரிக்க. வேதிகையில் நெல்முதலான ஐந்துவகை வித்துக்களில் சயனிப்பிக்க. இருதயத்தால் பரிவட்டஞ்சாத்திச் சுற்றுக.

12. காரணாகமம் I 87 15b 16 - 17 : -

கர்ஷஜலாதுத்தீர்ய பிம்பம் து வஸ்திராதீனி விஸர்ஜயேத் ।
க்ருத்வா து பூர்வவத் சுத்திம் விந்யஸேத் சயனோபரி ।
கந்த புஷ்பாதிபி : சைவ பூஜயேத் ஹ்ருதயேநது ।
ஆவேஷ்ட்ய நவவஸ்திரேண ப்ராக்சிரச்சோர்த்வ வக்த்ரகாம் ।
பிரதிமாம் சாயயேத் தீமான் கௌதுகம் பந்தயேத்தத : ।।

பிரதிமையை நீரிலிருந்து எடுத்து பழையவஸ்திரம் முதலியவற்றைக் களைக. முன்போல் பிம்பசுத்தி செய்து வேதிகையில் வித்துக்களின்மேல் சயனிப்பிக்க. சந்தனம் புஷ்பம் முதலியவற்றால் பூசிக்க. ஹ்ருதயத்தால் புதுவஸ்திரம் தரிப்பித்து; கிழக்கில் சிரசும், மேனோக்கிய முகமுமாய் சயனிப்பித்து கங்கணஞ்சாத்துக.

13. காரணாகமம் : I 87 - 18, 19, 20 21 :

ப்ரதிமாயா: சிரோபாகே சண்டகும்பந்து விந்யஸேத் ।
சஸூத்ரம் ஸாபிதானம் ச சோதகம் கூர்ச்ச சம்யுதம் ।।
ஹேமபங்க சமாயுக்தம் வஸ்திரேணைவ ஸமாவ்ருதம் ।
தந்மத்யே ச ஸமூர்த்திம் ச த்யாத்வா ந்யஸ்த்வா ஹ்ருதார்ச்சயேத் ।
டங்கமுத்ராம் ப்ரதர்ச்யாத பத்ம முத்ராம் ப்ரதர்சயேத் ।
அபித: கலசானஷ்டௌ சூத்ராதிபி: சமந்விதான் ।।
இந்த்ராதிஷு க்ரமாந் ந்யஸ்த்வா லோகபாலாம்ச்ச விந்யஸேத் ।
கந்தபுஷ்பாதிநா தத்தத் ஈசானேனைவ பூஜயேத் ।।

பிரதிமையின் சிரத்தின் பக்கலில் சண்டகும்பத்தை (பிரதான கும்பம்) வைக்க. கும்பத்தை நூல்; வாசநீர். கூர்ச்சம்; பொன்மழு; புதுவஸ்திரம் இவற்றோடு கூடியதாகச் செய்க. கும்பத்திலும் பிரதிமையிலும் சண்டமூர்த்தியை தியானித்து ஆவாஹிக்க. இருதயத்தால் அர்ச்சிக்க. மழு; பத்மமுத்ரைகளைக் காண்பிக்க. சுற்றியுள்ள நூல் முதலியன கூடிய கும்பங்களில் வரிசையாக இந்திரன் முதலிய லோகபாலகர்களை ந்யாஸம் செய்க. அவ்வவருக்குரிய படி ஈசானத்தால் சந்தனம், அட்சதை மலர்களால் பூசிக்க.

14. காமிகாகமம் : II - 65 - 47 - 53 :

சண்டோத்தமாங்கதேசேது ஸூத்ரகூர்ச்சாம்பரான்விதம் i
சஹேமடங்க தோயாட்யம் விந்யஸேத்து ஸபல்லவம் ii
ததாவித கடானஷ்டௌ விந்யஸேத் பரிதோபஹி: i
சண்டேசோ தேவீயுக்த: ச ஏதத்வர்த்தநீம் உத்தரே ந்யஸேத் ii
சாசனேன சதேவேந சண்டேசேநாப் யதிஷ்டிதம் i
கும்பமிஷ்ட்வா து பூர்வோக்த த்யானயுக் சந்தநாதிபி: ii
ஹ்ருத் சிர: சூலிகா வர்ம சஸ்திராணி பரிதோ பஹி: i
கடேஷு பூஜயேந் மந்த்ரீ விந்யாஸாத்உத்தராவதி i!
லோக பாலாம்ஸ்து வாதேஷு சண்டமூர்த்யஷ்டகம்துவா i
கந்த புஷ்பாதிம: சேஷ்ட்வா தத்வ மூர்த்யாதிகம் ந்யஸேத் ii
ஆத்ம வித்யா சிவாக்யம் ச ப்ரம்மாதீன் ச ததீச்வராந் r
க்ஷ்மாதிமூர்த்தி: ததீசாநாத் லோகபாநபி விந்யஸேத் ii
ப்ராகுக்த மூர்த்தயோவாத ருத்ரபக்தாதயோ (அ)தவா i
ஸாஸநம் மூர்த்தியுக் சண்டம் ப்ரம்ஹாங்க ஸஹிதம் யஜேத் ii

சண்டர் பிரதிமையின் சிரத்தினருகில் நூல், கூர்ச்சம், வஸ்திரம் நீர் ஆகியவற்றுடன் கூடியதும், தளிரிலைகள் கொண்டதும், பொன்மழு உள்ளிட்டதுமான சண்ட குடத்தையும்; அதுபோன்ற எட்டுக்குடங்களைச் சுற்றிலும் வெளி ஆவரணத்திலும் வைக்க. சண்டரை தேவியொடு பிரதிட்டைசெய்வதாயின் வடக்கில் வர்த்தனி கும்பம்வைக்க. இறையாணையின்படி சண்டேசரால் அதிஷ்டிக்கப்பட்ட கும்பத்தை (பிரதான கும்பத்தை) முன் கூறியவாறு தியானம், சந்தனம், அட்சதை, மலர்கள் முதலியவற்றால் பூசிக்க. இதயம்; சிரசு; சிகை, ஆயுதங்கள்; கவசம் முதலிய அங்கங்களை சுற்றிலுமுள்ள குடங்களில் மந்திரமறிந்தவன் நியாஸத்துடன் பூசிக்க. அட்டதிக்பாலகர்கள் அஷ்டசண்ட மூர்த்திகள் தத்துவங்கள் மூர்த்திகள் ஆகிய நியாஸத்துடன் பூசிக்கை. ஆத்ம, வித்யா, சிவதத்துவங்களையும் பிரமாதிமூர்த்திகளையும் பூசிக்க. பிருதிவி முதலான அதிதேவர்களையும், திக்பாலகர்களையும் பூசிக்க. முன்சொன்னவாறு சண்ட மூர்த்திகள் எண்மரையும் ருத்ர பக்தர்களாக ஆஸநம், மூர்த்தி, பிரம்மம்; அங்கம் ஆகியவற்றுடன் பூசித்து ஓமமும் செய்க.

15. காரணாகமம் I 87 - 22 முதல் 27 : -

நவவஸ்த்ரோஷ்ணீஷ : ஸோத்தரீய : சுமாலிக : i
ருத்ராட்ச மாலாபரணமந்த்ர முத்ராக்ரியான்வித : ii
ஆசார்யோ மூர்த்திபை : சார்த்தம் ஹோமகர்ம சமாரபேத் i
அக்ன்யாதானாதிகம் ஸர்வம் அக்னிகார்யோக்தம் ஆசரேத் ii
சமீகதிரமாயூர ப்ரலட்சம் சைவதிசர்சுவை i
ப்ரதானஸ்ய பலாசம்து ஸமித : சம்ப்ரகீர்த்திதா : ii

ஹ்ருதயேன சமித் ஹுத்வா சண்டமூலேன ஹோமயேத் ।
அஸ்திரேணைவ சரும் ஹுத்வா லாஜம் ஈகாநகம்ஹுனேத் ॥
ஸர்ஷபம் கவசேநைவ த்ரவ்யாந்தே வ்யாஹ்ருதிம் ஹுனேத் ।
ப்ரத்யேகம் சதம் அர்த்தம் வாததர்த்தம்வாபி ஹோமயேத் ॥
த்ரவ்யாத்தே வ்யாஹ்ருதிம் ஹுத்வா ஸ்ப்ருசேத் பிம்பஸ்ய மஸ்தகே

[ஏவம்ஜாகரணம் ராத்ரௌ]।

புதுவஸ்திரம்: புதுத்தலையணி (பாகை); புதிய உத்தரீயம் (மேலாடை); புஷ்பமாலை; ருத்திராக்கமாலை; மந்திரோச்சாரணக்ரியை இவற்றுடன் கூடிய ஆசாரிய மூர்த்திகளும் உதவியாளர்களும் ஓமச் சடங்குகளைச் செய்க. அக்கினியைக் கொணர்தல் முதலாக அனைத்து அக்னிகாரியங்களும் செய்க. (ஆகம விதிகளில்) சொன்னபடி செய்க. வன்னி, நாயுருவி, மா, பலா, ஆல், அத்தி, அரசு முதலியசமித்துக்களாலும் முக்கியமாக பலாசு (புன்னை) சமித்துக்களாலும் இருதய, சண்ட மூலமந்திரங்களால் ஹோமம்செய்க. அஸ்திரமந்திரத்தால் சரு (யாகநிவேதனம்); ஈசானத்தால் நெற்பொரியையும்; கவசத்தால் நெய்யையும்; வ்யாஹ்ருதிகளால் பிற ஓம்திரவங்களையும் ஓமம்செய்க. ஒவ்வொரு மந்திரத்தாலும் நூறு அல்லது ஐம்பது அல்லது அதிற்பாதி ஆகுதிகள் செய்க. ஒவ்வொரு ஓமப் பொருளாலும் ஓமம்செய்து பிரதிமையின் தலைப்பகுதியைத் தொடுக.

[இது பிரதிஷ்டைக்கு முதல் நாளிரவில் செய்யத்தக்கது.]

16. காமிகாமம் II 65 - 59 முதல்62; 63முதல் 65a : -

தத: ப்ரபாதே சுத்தஸ்து மூர்த்தி பை: ஸஹ தேசிக:।
உத்த்ருத்ய சண்டபிம்பம் து கும்பான் அக்னீம்ஸ் ச தர்ப்பயேத் ॥
ப்ராய: சித்தம்ச பூர்ணாம் ச குரு: க்ருத்வா ஸமூர்த்திப:॥
வஸ்திர ஸ்வர்ணாங் குலீயாத்யை: பூஜித: ப்ராப்த தக்ஷிண: ॥
அதமா பஞ்சநிஷ்காந்து த்விகுணா மத்யமா பவேத் ।
த்ரிகுணா ச உத்தமா ப்ரோக்தா சாந்யேஷாம் பூர்வவத் பவேத் ।
ப்ரதிஷ்டாச சிலாதீனாம் ப்ராக்வத் கார்யாத்விஜோத்தமா:।
ஸுமுகூர்த்தே ப்ரதிஷ்டாப்ய தாம்னி மந்த்ராம்ஸ்து விந்யஸேத் ॥
தேவாக்ரஸ்தண்டி லஸ்தேப்ய: ஸ கும்பேப்யோதேசிகோத்தம:।
தத்தத்கும்ப கதைஸ்தோயை: ஸ் நாபயேத் சண்டவிக்ரகம் ।।
ஸ்நபநம் பூரி நைவேத்யம் உத்ஸவம்ச ச சலம்யதி ।
காரயேத் தேவியுக்தம் சேத்தஸ்யா: சஸ்தாபநம் நயேத் ॥
சண்டேச்வர ப்ரதிஷ்டேயம் பாலஸ்தாநாந்விதா நவா ॥

வைகறையில் நீராடி நித்ய கருமம் முடித்த ஆசாரியனும் உதவியாளர்களும் சண்டேசப் பிரதிமையை எழுப்பிநிறுத்துக. பிரதிமை; கும்பங்கள் அக்னி ஆகியவற்றில் முன்போல் பூசிக்க. பிராயச் சித்தபூசை ஓமம்; பூர்ணுகுதி ஆகியவற்றைச் செய்க. உத்தம தட்சிணையாக பதினைந்து ; மத்திம தட்சிணையாக பத்து, அதமதட்சிணையாக ஐந்து பொன் நாணயங்களைப் பெற்று அந்தணர் தலைவர்கள் சிலாப் பிரதிஷ்டையைச் செய்க.

நல்வேளையில் சிலையை நிறுவியபின் பிரதானகும்பத்திலிருந்தும் மற்றக் கும்பங்களிலிருந்தும் மந்திரமூர்த்தங்களை எழுப்பி சண்டேசர் சிலையில் நியாஸம் செய்க. நியாஸம் முடிந்தபின் அவ்வக் குடத்து நீராலும் கடைசியாகப் பிரதான கும்பநீரினுலும் நீராட்டுக. தேவி யோடு கூடிய பிரதிஷ்டையாயின் தேவிக்கும் செய்க. குடநீராட்டு ; சிறப்பான நிவேதனம் ; (உத்ஸவமூர்த்தியுடன் கூடிய பிரதிட்டை யாயின்) ஊர்வலம் உத்ஸவம் ஆகியவற்றை நடத்துக. புதியதாயினும் பாலஸ்தாபனத்துடன் கூடியதாயினும் சண்டேஸ்வர பிரதிஷ்டை இவ்வாறே செய்யத்தக்கது.

17. காரணுகமம் I 87 - 35b :

தேவஸ்யைவ து நைவேத்யம் மாலாம் சைவ ப்ரதாபயேத் ||

(மகா) தேவனுடைய (நிர்மால்ய) நிவேதனத்தையும் மாலையையும் கொடுப்பித்திடுக.

18. காமிகாமம் II 65, 65b, 66 - 67 :

சண்டேசஸ்தாபநம் ஹ்யேவம் ய : குர்யாந் நரபுங்கவ :|
ஆயுஷ்காமீ லபேத் ஆயு : தனார்த்தீ சேத் வசூனி ச |
வித்யாகாமோ லபேத் வித்யாம் புத்ரார்த்திசேத் சுதம்லபேத் |
லக்ஷ்மீ காமோ மஹாலக்ஷ்மீம் ரதிகாமோ வரஸ்த்ரியம் ||
சண்டேச்வரம் ப்ரபந்நா யெ நதேஷாம் பவகாரணம் ||

இவ்வாறு சண்டேசப்ரதிட்டையை எந்த உயர்மனிதன் செய்கின்ருனே அவன் விரும்பியதெலாம் அடைவான். நிறைந்த ஆயுள்; நிறைசெல்வம்; நிறைகல்வி; நன்மகன்; பேரருட் செல்வம்; பெருங் குணமுடை மனையாள் அனைத்தும் வரப்பெறுவன் சண்டேசரை அடைபவர்கள் யாரோ அவர்கட்குப் பிறவியின் கரு மாயும்.

19. காரணுகமம் I 87 - 38a :

ஏவம் ய : குருதே மர்த்ய : ஸ புண்யாம் கதிமாப்நுயாத் ||

இவ்வாறு எவர் செய்வரோ அவர் புனிதப் பேற்றை அடைவாராக.

பக்த லட்சணங்களும் நான்கு யுகங்களில் அமைந்த சண்டேசுவரர் திருவுருவங்களும்

பக்த லட்சணம் :

காச்யப சில்பசாஸ்திரத்தில் 91-வது படலம் பக்த லட்சணத்தைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. பக்தர்களின் உருவங்கள் நான்குவித ஸ்தாநங்களாக அமையப்பெறுகின்றன. அந்த நான்குவித ஸ்தாநங்களும் முறையே 1. சாலோக்கியம், 2. சாமீப்யம், 3. சாருப்யம், 4. சாயுஜ்யம் என்றவைகளாகும்.

புருஷர்கள் அல்லது ஸ்திரீகள் எந்த ஸ்தாநத்திலிருப்பார்களோ அந்த ஸ்தாநத்தில் அநுகூலமாக சாலோக்கிய பதத்திலுள்ளவர்களை (முதலில்) கல்பிக்கவேண்டும். சாலோக்கிய பதத்திலுள்ளவர்கள் தேவதா சிந்ஹத்துடன் இருப்பவர்களாவார்கள். அடுத்த நிலையிலுள்ளவர்கள் அதில் சில அம்சத்தை மட்டிலும் தரித்திருப்பவர்களாவார்கள். மற்றவர்கள் அந்த ஸ்தாநத்திலிருப்பவர்களாவார்கள்.

மூன்றுவிதம் :

அவர்கள், பாலர்களென்றும், யுவாக்கள் என்றும், விருத்தர்களென்றும் மூன்று விதமாகக் கூறப்பட்டிருக்கிறார்கள். மூன்று வயது முதல் பதினாறு வயது வரையில் பாலர்களாவார்கள். அதற்கு மேலே எழுபது வயது வரையில் யுவாக்களாவார்கள். அதற்கு மேலான வயதுடையவர்கள் விருத்தர்களாவார்கள். பாலர்களுக்கு மாநம் பஞ்ச தாலமாகும். மற்றவர்களுக்கு அஷ்டதாலமாகும்.

*** பக்தபிம்பங்கள் : (ஸ்தாநகமூர்த்திலக்ஷணம்)**

பக்த பிம்பங்கள் மனிதவடிவமாக, ஸ்தாநகம், ஆஸநம், யாநம், நிருத்தம் என்று நான்கு விதமாகக் கல்பிக்கப்படுவதாகும். ஸ்தாந மூர்த்தியை ஆபங்கம் அல்லது ஸமபங்கமாகக் கல்பிக்கவேண்டும். வலது கால் ஸுஸ்திதமாகவும் இடதுகால் குஞ்சிதமாகவும் இருக்க வேண்டும். கைகளை முழங்காலில் வைத்திருக்கவேண்டும். அல்லது இருகைகளையும் அஞ்சலி பந்தநம்செய்து மார்பில் வைத்திருக்கவேண்டும். வலது கால் தொங்க விட்டிருக்கவேண்டும். கை முன்பு கூறியதுபோல இருத்தல்

---

* தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு பக்கம் - 463 - 469 - காச்யப சில்பசாஸ்திரத்தில் காண்க.

வேண்டும். தனது ஜாதிக்குரிய அடையாளமும் பஞ்ச முத்திரையும் தரித்திருக்கவேண்டும். ஹிருதயத்தில் அஞ்சலி பந்தநம் செய்துகொண்டிருக்கவேண்டும். அல்லது கடக ஹஸ்தமும் வரத ஹஸ்தமுமாக இருக்கவேண்டும்.

ஆஸனமூர்த்தி லட்சணம் :

பத்மாசனம் அல்லது பத்ராசனத்தின் மீது இடது கால் (ஸுஸ்திதமாகவும், வலது கால் குஞ்சிதமாகவும் இருக்க வேண்டும்) கையானது முன்பு கூறியதுபோலவே இருக்கவேண்டும்.

யாநமூர்த்தி லட்சணம் :

யாநமூர்த்தியின் வலது கையில் டங்கமும் (உளி அல்லது மழு) இடது கையில் பாசமும் வைத்திருக்க வேண்டும். அல்லது வலது கையில் அம்பும், இடது கையில் வில்லும் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இங்கு யாநமூர்த்தியை நடந்து செல்ல விருப்பமுள்ளது போலக் கல்பிக்கவேண்டும்.

நிருத்தம் :

நிருத்தமானது சாத்துவிகம், ராஜசம், தாமசம் என்று மூன்று விதமாகும். அவைகள் முறையே பாலர்கள், யுவர்கள், விருத்தர்கள் ஆவார்கள்.

சாத்துவிக நிருத்தம் :

பக்தர்களின் உயரத்தை அவரவர்களுக்குக் கூறப்பட்டிருக்கும் மாநத்தின்படி பாலர்களுக்கு பஞ்சதாலமும் மற்றவர்களுக்கு அஷ்டதாலமும் கல்பித்துக் கொள்ளவேண்டும். பாதத்தின் நதமாநம் எட்டு அங்குலம் விதிக்கப்பட்டிருக்கிறது. இடது பாதமானது ஸ்தாநகமாகவும் வலது கால் குஞ்சிதமாகவும் இருக்க வேண்டும். தூக்கப்பட்டிருக்கும் காலானது, பீடமட்டத்திற்குமேலே நான்கு அங்குலம் உயரத்தூக்கி இருக்க வேண்டும். அல்லது பீடத்திலிருந்து உயரத் தூக்கப்பட்டிருக்கும் பாதமானது, பீடத்திலிருந்து ஐந்து, ஆறு, அல்லது ஏழு அங்குலம் உயர்ந்திருப்பதுமாகும். அதற்கு ஸமமாயுள்ள பிரம்ஹஸூத்திரமானது அந்தக் காலின் பெருவிரல் சரிபாதியளவிலிருக்க வேண்டும். லலாட மத்தியத்திலிருந்து, நாசாக்கிரம் — கண்டமத்தியம் — ஸ்திதாங்கிரி நளகையின் மத்தியம், இந்த இடங்களில் பிரம்ஹஸூத்திரத்தைத் தொங்க விடவேண்டும். அந்த ஸூத்திரத்திலிருந்து இடது பக்கத்தில் நாபி மத்தியமானது, ஒன்றரை அங்குலம் ஒதுக்கமுடையதாகும். பிரம்ஹ ஸூத்திரத்திலிருந்து ஸ்திதபாதத்தின் முழங்கால் வரையில் ஒதுக்கம் ... ... * ... ... (இவ்விடத்தில் சுலோகம் விடுபட்டுள்ளது).

---

* ... ... இப்புள்ளிகள் இருந்தால் மூலபாடத்தில் சுலோகங்கள் விடுபட்டுள்ளன என்பதனை உணர்த்துகிறது.

நெற்றியிலிருந்து கணுக்கால் முண்டு வரையில் மத்திய ஸூத்திரத்தைத் தொங்கவிடவேண்டும். அந்த பிரம்ஹஸூத்திர மானது நாஸாக்கிரத்தையும், உதர மத்தியத்தையும் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். அல்லது வலது கால் பீடத்தில் வைக்கப் பட்டும் இடது கால் உயரத் தூக்கப்பட்டுமிருப்பதுமாகும். மற்றது அதற்கு அனுகூலமாக இருக்க வேண்டும்.

மூர்த்தியானது சகல ஆபரணங்களேயும் அணிந்து (பலவித மாலேகளேயும் அணிந்து) பலவித வஸ்திரங்களேயும் அணிந்திருக்க வேண்டும். அது பால வடிவமாக இருந்தால் ஆடையில்லாது (நக்நமாக) இருப்பதாகும்.

ராஜச நிருத்தம் :

... ... கையானது தண்டத்துடனுவது, அஞ்சலிபத்த மாகவாவது இருக்க வேண்டும். பீடத்திற்கு மேலே தூக்கிய காலின் ஒதுக்கம் பத்து, ஒன்பது அல்லது எட்டு அங்குலமாகும். மற்றவைகளே முன்பு கூறியது போலவே கல்பிக்க வேண்டும்.

தாமச நிருத்தம் :

... ... ஹஸ்தமானது தண்டஹஸ்தமாக இல்லாமல் ... ... தொட்டிருக்க வேண்டும். வலது கையில் தண்டமும், உயரத் தூக்கிய முகமும் ... ... சர்வாங்கங்களிலும் திருநீறு பூசிக்கொண்டு, ருத்திராக்ஷ மாலேகளே அணிந்து இருக்க வேண்டும்.

ஆதியில் பிரணவமும் (ஓங்காரம்) இறுதியில் நம: என்ற பதமும், இவைகளின் நடுவில் அந்தந்த பக்தர்களின் பெயரும் உடையது பக்தர்களின் மந்திரமாகும். அந்த மந்திரத்தினுலேயே அவர்களே பூசிக்க வேண்டும்.

நான்கு யுகங்களில் சண்டேசுவரர் திருவுருவங்கள் :

"काश्यप शिल्पशास्त्रम्" - II - द्वि नवतितमः पठलः ॥

"காச்யப சில்பசாஸ்த்ரம்" ॥ த்வி நவதி தம: படல: ॥

(92-ஆம் படலம்)

अथ वक्ष्ये विशेषेण चंडेशलक्षणं परम् ।
रुद्रस्यैव तु ऋक्षांशः चंडेश इति च स्मृतः ॥

அத வக்ஷ்யே விசேஷேண சண்டேச லக்ஷணம் பரம் ।
ருத்ரஸ்யைவ து ருக்ஷாம்ச: சண்டேச இதி ச ஸ்ம்ருத: ॥

இனி சிறப்புடையதும் (வேறுபட்டதும்) மேலானதுமான சண்டேச லட்சணத்தைச் சொல்வேன். (மகா)ருத்ரரின் கோபாம்சம் சண்டேசராகக் கொள்ளப்படுகிறது.

प्रथमावरणे चैव स्थानं कौबेरके भवेत् ।
अधमं दशतालन्तु मानं चंडेशमुच्यते ॥

ப்ரதமாவரணே சைவ ஸ்தாநம் கௌபேரகே பவேத் ।
அதமம் தசதாலந்து மாநம் சண்டேச முச்யதே ॥

(சண்டேசருக்கு) முதலாவரணத்தில் வடதிசையில் இடம் நிறுவப்படும். அவரின் அளவு அதம தசதாலமாகும்.

तदादि चंडमूर्तिस्तु युगं प्रति विशेषतः ।
चिह्नान्यपि चावाहानि नामभेदं च वर्णकम् ॥

ததாதி சண்டமூர்த்திஸ்து யுகம் ப்ரதி விசேஷத: ।
சிந்ஹாந்யபி சாவாஹாநி நாமபேதம் ச வர்ணகம் ॥

மேற்சொல்லிய அளவு ஆதிசண்டேசர்க்குரியது. ஒவ்வொரு யுகந்தோறும் அடையாளங்கள் (ஆயுதங்கள்); வாகனம்; பெயர்; நிறம் இவைகளால் அவர் வேறுபடத் தோன்றுவார். 3

कृतयुगे प्रचंडाख्यः श्वेतवर्ण समायुतः ।
दोर्भिः षोडशभिर्युक्तः वाहनंतु गजो भवेत् ॥

க்ருதயுகே ப்ரசண்டாக்ய: ச்வேத வர்ணசமாயுத: ।
தோர்பிர் ஷோடச பிர்யுக்த: வாஹநந்து கஜோ பவேத் ॥

" இருதயுகத்தில் " (இவர்) பிரசண்டர் எனும் பெயர் கொள்வார். வெண்ணிற (மேனியும்); பதினாறு கரங்கள்: கொண்டு யானையை ஊர்பவராய் அமைவார். 4

शूलः च परशुर्वज्रः खड्गः कोशस्तथैव च ।
क्षुरिका च अभयं दंडः दक्षिणाष्टा युधं भवेत् ॥

சூல: ச பரசுர்வஜ்ர: கட்க: கோசஸ்த தைவ ச ।
க்ஷுரிகா ச அபயம் தண்ட: தக்ஷிணாஷ்டாயுதம் பவேத் ॥

வலப்புறத்தில் முறையே சூலம்; பரசு; வச்சிரம்; கட்கம்; (கத்தி) கோசம் (உடல்); சூரிகை (குறுவாள்); அபயமுத்திரை தண்டம் ஆகியவை எண்கரங்களில் அமையும்.

खेटकं भिण्डिपालंच पाशं घण्टां तथैव च ।
वरदं व्याघ्रहस्तं च सूचीं नागंच वामके ॥

கேடகம் பிண்டிபாலஞ்ச பாசம் கண்டாம் ததைவ ச ।
வரதம் வ்யாக்ரஹஸ்தம் ச ஸூசீம் நாகஞ்ச வாமகே ॥

இடப்புறத்தில் (கரங்களில்) கேடயம்; பிண்டிபாலம்; பாசம்; மணி; வியாக்ரமுத்ரை; சூசீமுத்ரை; நாகம்; வரதமுத்ரை ஆகியன கொள்க. 6

जटामकुट संयुक्तं रुद्राक्षाभरणान्वितम् ।

ஜடா மகுட ஸம்யுக்தம் ருத்ராக்ஷாபரணாந்விதம் ।

சடைமுடியொடு கூடிய; உருத்திராக்க மாலைகளே அணிகளாகக் கொண்டவராயும் அமைக்க, $6\frac{1}{2}$

त्रेतायां अष्टहस्तस्तु अतिरक्त समप्रभम् ॥

த்ரேதாயாம் அஷ்டஹஸ்தஸ்து அதிரக்த ஸமப்ரபம் ॥

" திரேதாயுகத்தில் ", எண்கரமும்; ரத்தச்சிவப்பு நிறமும் (கொண்டவர்). 7

... ... नाम्नातु सुविकीर्ण जटान्वितम् ।
वाहनंतु हयं विद्यात् किञ्चित्प्रहसिताननम् ॥

.... நாம்நாது ஸுவிகீர்ண ஜடாந்விதம் ।
வாஹநந்து ஹயம் வித்யாத் கிஞ்சித் ப்ரஹஸிதாநநம் ॥

(விக்ராந்தசண்டர்) எனும் பெயர் கொண்டவராய், விரித்த சடையராய், குமிண் சிரிப்புடையராய், குதிரை ஊர்பவராய் அறிக. 8

शूलं पाशं च खट्गं च परशुं दक्षिणे करे ।
वरदं खेटकं फालं घंटां वामेधृढं धृतम् ॥

சூலம் பாசம் ச கட்கம் ச பரசும் தட்சிணே கரே l
வரதம் கேடகம் பாலம் கண்டாம் வாமே த்ருடம் த்ருதம் ll

வலக்கரங்களில் சூலம், பாசம், கத்தி, பரசு ஆகியவற்றையும் வரதம்; கேடயம்; பாலம்; மணி ஆகியவற்றை இடக் கரங்களிலும் திடமாய்த் தரித்தவர். 9

द्वापरे तु चतुर्बाहुः पीतवर्णः सुखासनः ।
जटामंडल संयुक्तं सदा ……………… ॥

த்வாபரே து சதுர்பாஹு: பீதவர்ண: சுகாசன: l
ஜடாமண்டல ஸம்யுக்தம் ஸதா .. ….. ……… ll

" துவாபரயுகத்தில் " நாற்கரத்தர்; பொன்னிறத்தர்; சடையினை வட்டமாய்க் கொண்டவர்; எப்போதும் … … … … 10

பெயர் ; விபுசண்டர்

दंष्ट्राकरालवदनः टंकं शूलं च दक्षिणे ।
पाशं चाप्यं कुशं वामे भद्रपीठोपरिस्थितः ॥

தம்ஷ்ட்ரா கராலவதந: டங்கம் சூலம் ச தக்ஷிணே l
பாசம் சாப்யங்குசம் வாமே பத்ரபீடோபரி ஸ்தித: ll

கோரைப் பற்களுடன் கோபக் குறிகாட்டும் முகமும்; மழு; சூலம் வலத்திலும்; பாசம்; அங்குசம் ஆகியவை இடப்புறத்தும் (கரங்களில் கொண்டு) பத்ரபீடத்தின் மேலுள்ளவர் (எனக்கொள்க).11

कलौ तु द्विभुजांशांशं जटामकुट मण्डितम् ।
जटामकुटसंयुक्तं केशबंधमथापि वा ॥

கலௌ து த்விபுஜாம்சாம்சம் ஜடாமகுட மண்டிதம் l
ஜடாமகுட சம்யுக்தம் கேசபந்த மதாபிவா ll

" கலியுகத்தில் " "சண்டேசர்" இருகரங்களும்: சடைமுடி அல்லது சுருட்டி உயர்த்திக்கட்டிய முடியும் கொண்டவராய்க் கொள்க. 12

कृष्णाभं वाथ रक्ताभं सौम्यनेत्राननान्वित ।म्
आभंगं समभंगंवा समपादस्थानकतु वा ॥

க்ருஷ்ணாபம் வாத ரக்தாபம் ஸௌம்ய நேத்ராநநாந்விதம் l
ஆபங்கம் ஸமபங்கம்வா ஸமபாதஸ்தான கந்துவா ll

கருநிறம் அல்லது சிவந்தநிற மேனி; கருணைபொழியும் கண்கள்; சாந்தமுகம் கொண்டவர்; ஆபங்கம் அல்லது சமபங்கத் தோற்றம் கொண்டு நின்ற கோலத்தர் (எனக் கொள்க). 13

भंगं चेत् दक्षिणं पादं कुञ्चितं चतुरंगुलम् ।
अथवा दक्षिणं पादं सुस्थितं वाथ कुञ्चितम् ॥

பங்கம் சேத் தட்சிணம் பாதம் குஞ்சிதம் சதுரங்குலம் ।
அதவா தட்சிணம் பாதம் ஸுஸ்திதம் வாத குஞ்சிதம் ॥

பங்கம் (வளைவு) உடைய மூர்த்தமாயின் வலப்பாதத்தை நாலங்குலம் வளைவுடையதாகக் கொள்க. அல்லது வலது கால் நன்கு ஊன்றி வளைவு கொண்டதாய்க் கொள்க. 14

ख्यातं चंडेश नाम्नातु स्थानकं वाऽसनं तु वा ।
आसनं चेत्तु वामांघ्रि शाययेत् अस्य लंबयेत् ॥

க்யாதம் சண்டேச நாம்நாது ஸ்தாநகம் வாஸநந்துவா ।
ஆஸநம் சேத்து வாமாங்க்ரிர் சாயயேத் அஸ்ய லம்பயேத் ॥

சண்டேசர் எனும் பெயர்கொண்டு நின்ற கோலமோ அமர்ந்த கோலமோ கொள்வார். அமர்ந்த கோலத்தில் இடதுகாலை மடித்தும் மற்றதைத் தொங்குவதாயும் (கொள்க), 15

टंकहीनन्तु वा पुष्पमाल्यांजलि वा धृतः ।
ईशदक्षिणपार्श्वे तु भीताननमेव हि ॥

டங்கஹீநந்து வா புஷ்பமால்யாஞ்ஜலி வாத்ருத: ।
ஈசதட்சிண பார்ச்வேது பீதாநநமேவஹி ॥

(கையில்) மழுவில்லாமல் கொள்ளும்போது, இருகைகளும் கூப்பி பூமாலையைக் கொண்டும்: பரமேசரின் பக்கத்தில் வலப்புறமாய் அச்சங் காட்டும் முகத்துடனும் (கொள்க). 16

पादावासं वा वृषभं ख्यातं श्वेतवर्णयुक् ।
एवं चतुर्विधं चापि चंडेशमभि धीयते ॥

பாதாவாசம் வா வ்ருஷபம் க்யாதம் ச்வேதவர்ணயுக் ।
ஏவம் சதுர்விதம் சாபி சண்டேசம் அபிதீயதே ॥

(சண்டேசரின்) பாதத்தருகில் வெண்ணிற இடபம் சொல்லப் பட்டது. இவ்வாறு நான்கு வகையாகச் சண்டேசர் சொல்லப் படுகிறார். 17

कनीयांस दश तालेन सर्वांगं परिकल्पयेत् ।
चंडेशलक्षणं प्रोक्तं ... ... ॥

கநீயாம்ச தசதாலேந ஸர்வாங்கம் பரிகல்பயேத் ।
சண்டேச லக்ஷணம் ப்ரோக்தம் ... ... ॥

மிகக் குறைந்த தச தால அளவினால் எல்லா உறுப்புகளும் கொண்டு அமைக்க. இவ்வாறு சண்டேசர் அமைப்பு சொல்லப்பட்டது. 18

பிரதிமா லட்சணத்தில் சண்டேசுவரர்

(திருவுருவமைப்பும் ... பிரதிட்டையும்)

பிரதிமா லட்சணத்தில் சண்டேசுவரரின் இலக்கணங்களுடன் அரைது பிரதிட்டைமுறையும் சொல்லப் படுகிறது. இதில் '' ஸ்வதந்திரம் '' ப்ரதந் திரம் '' என இருவகைப்படும்.

அகம் புறம் முதலிய நகர்ப்பிரிவுகளின் நடுவிலோ அல்லது எட்டுத் திக்குகளிலுமோ சண்டேசுவரர் ஆலயம் அமைக்கப்படும். ஈசானம் அல்லது கிழக்கு அல்லது இவற்றினிடையில் இத்திருவுருவம் வைக்கப் படும்.

திருக்கோயில்களின் உட்பகுதியிலோ உள்பிரகாரத்தின் சாலையிலோ ஒன்று முதல் முப்பத்து மூன்று முழ அளவுள்ளதாக சந்நிதியமைக்க திருக்கோயிலுக்குரிய லட்சணங்களுடன் கூடியதாகவும் ஏழுதள அமைப்புடன் கூடியதாகவும் இருக்க வேண்டும். முன் சொன்ன விதிப் படி கொள்ளப்பட்ட கர்ப்பம் முதலான எட்டுறுப்புக்களுடன் ஸ்தூபி ஸ்தாபனம் முதலியனவும் அமைத்தல் வேண்டும். இஷ்டதேவருடன் கூடியவராயோ. தனித்து இடபங்கொண்டவராயோ அமைக்கவும். பிறதேவர்களின் கோயிலாயின் தென் முகமாக அமைத்தல் வேண்டும். தனிக்கோயிலாயின் (ஸ்வதந்திரம்) தெற்கு, கிழக்கு மேற்கு முகமுங் கொள்க.

தனிக்கோயிலில் முன்சொன்னபடி மத்ய கும்பங் கொண்ட ஸ்தூபி யுடன் சுற்றுக் குப்பங்களும் அமைக்க முன் சொன்ன கர்ப்பமான அளவில் அனைத்தும் செய்க. பிரகார மண்டபத்தில் (திருவுள்நாழியில்) '' ருத்ரபக்தர் '', '' ருத்ரசண்டர் '', '' சண்டபர் '', '' மகாபலர் '' '' ஸ்தவிரர் '', '' டங்கபாணி '', '' ஈசசேவகர் '', '' ருத்ரகோபஜர் '', எனும் எண்மரைப் பரிவாரதேவர்களாக அமைக்கவும். இவர்கள் வெண்ணிறத்தர். பருத்த உடல் கொண்டவர். கூப்பிய கையினர், மழுவேந்திய வராகவோ, அல்லது இல்லாதவராகவோ வீராசனத்து உள்ளவர்கள்; யானைத்தோல் போர்த்தவர்களாகவோ; சண்டரைப் போன்றே உருவுள்ள வர்கள் எனக் கொள்க.

வாயிலில் இருகரமுள்ளவர்களும் தண்ட மேந்தியவர்களும் '' சண்டானுகர் '' '' சண்டபூதி '' எனும் இருவரை வாயிற் காவலர்களாகக் கொள்க. முன்சொன்ன லட்சணங்கள் (வாயிற்காவலர்க்குரியவை) கொண்டவர்களாய் அமைக்கவும். சிலை முதலானவைகள் யாவும் மத்யதச தாலம் அல்லது அதமதசதாலத்தில் அமைத்தல் வேண்டும்.

சண்டேசுவரரின் பல திருவுருவமைதிகள் :

முதல்வகை :

சண்டநாதரை பிரதிமாலட்சணத்தில் சொன்ன வகையில் ஆயாதி முதலியன கொண்டு அமைக்க. பத்மாசனத்தில் அமர்ந்தவரும்; துஷ்டர்களுக்கு அச்சமுண்டாக்குபவரும், அரவை முப்புரி நூலாக அணிந்தவரும் முகத்தினின்று ஒளிவீசும் அக்னிஜுவாலை உடையவரும், கரும் பாம்பைக் கச்சாக உடையவரும், சடையில் பிறைமதி அணிந்தவரும். நான்கு முகமும், நான்கு கரங்களும் உடையவரும், ஜெபமாலை, திரிசூலம் வலக்கரங்களிலும், மழு, கமண்டலம் ஆகியவற்றை இடக்கரங்களிலும் கொண்டு சூரியன் போன்ற சிவந்த கண்களை உடையவருமாய் அமைக்கவும்.

இரண்டாம் வகைத்திருவுரு :

சங்கநிறம், நாற்கரங்கள் முக்கண். சிரசில் பிறைமதிகொண்டவர், யானைத் தோல் உடையவர்; வீராசனத்தமர்ந்தவர். பிஞகம் எனும் வில், அமோகம் எனும் பாணம்; இவையிரண்டும் கொண்ட மேற்கரங்களும், வரதம்-அபயம் இவற்றால் அலங்கரித்த கீழ்க்கரங்களும் கொண்டு விளங்குபவர்.

மூன்றும் வகைத் திருவுரு :

இருகரங்கள்; வெள்ளையுடை அணிந்தவர். முக்கண்ணர்: மை நிறத்தர், சடைமுடி கொண்டவர் அல்லது சுருண்ட முடிகொண்டவர்; நின்ற நிலையிலோ அமர்ந்த நிலையிலோ இவரை அமைக்கலாம். அமர்ந்த நிலையாயின் தொங்கிய வலப்பாதம் மடித்த இடப்பாதம்; இடப்பாதத்தின் மீது வைத்த இடக்கை; அல்லது வரதகரம்; வலக்கரத்தில், மழு அல்லது இரு கரத்தாலும் அஞ்சலி செய்பவராக அமைக்கவும்.

நான்காம் வகைத்திருவுரு :

விரும்பிய ஆசனத்தமர்ந்தவர்; அல்லது உத்குடாசனர், சாந்தர், சடைமுடியர்; சிவத்தின் மீதமைந்தபார்வை உடையவர். சற்றே தாழ்ந்திய சிரமுடையார்; மழுவேந்திய கரத்தர் என்ற வகையில் அமைக்கலாம்.

ஐந்தாம் வகைத்திருவுரு :

அபயம் - டங்கம் - பாசம் - சூலம்கொண்ட நாற்கரங்களை உடையவர். இத்திருவுரு சங்கரரின் ஆணையை நிறைவேற்றுபவர் என எண்ணிச் செய்க.

பிரதிமாலட்சணத்தில் சண்டேசுவரர்
(வேறுவகை)



சிங்களதேசத்தில் விளங்கும் சிறப்புச் செய்தி:

சிங்கள தேசத்தில் ஒரு சிறப்புச் செய்தி கூறப்படுகிறது.

கிருதயுகத்தில்	—	எண்கரங்கள்
திரேதாயுகத்தில்	—	ஆறுகரங்கள்
துவாபரயுகத்தில்	—	நாற்கரங்கள்
கலியுகத்தில்	—	இருகரங்கள்

என்ற முறையில் சண்டநாதர் (சண்டேசுவரர்) அமைத்தல் என்பதே அது. இது வேறெங்கும் கொள்ளப்படுவதில்லை. அல்லது சண்டநாதரைத் தேவியுடன் கொள்க. தேவியானவள் சியாமள நிறத்தளாய்: இரண்டு கரத்தளாய்; அனைத்து வகையில் அலங்கரிக்கப்பட்டவளாய்; நீலோத்பலம் தரித்தவளாய்; "தர்மநிதி" என்ற பெயருடையவளாய்ச் சொல்லப்படுகிறாள். இவ்வாறாகப் பிம்பங்களை (சிலைகளை) அமைத்து மநுக்களால் (மந்திரங்களால்) பிரதிட்டிக்கவும் என உத்தரகாமிகாகமம் - படலம்-65ல் கூறப்பட்டுள்ளது.

சண்டேசுவரரின் தோற்றமும் பிரதிட்டையும் :

"சுப்ரபேதாகமம்" படலம் 47ல் சண்டேசுவரரின் தோற்றம் முதலிலும், பிரதிட்டை பின்னரும் சொல்லப்படுகிறது. இவர் ருத்ரனிலிருந்து தோன்றுவதால் ருத்ராம்சராயும், கணத்தலைவர்களின் வரிசையில் இடம் பெற்றவராயும் உள்ளார்.

ஈசானம் முதலான ஐம்முகங்களிலிருந்தும் "பிரசண்டர்", "பிரசண்ட சண்டர்", "விக்ராந்த சண்டர்", "விபுசண்டர்", "வீரசண்டர்" ஆகியோர் உற்பவித்தனர்.

பிரசண்ட சண்டர்	—	கிருதயுகத்திலும்,
விக்ராந்த சண்டர்	—	திரேதயுகத்திலும்,
விபுசண்டர்	—	துவாபரயுகத்திலும்,
வீரசண்டர்	—	கலியுகத்திலும்,


உரிமை பெறுவர்.

இவ்வாறு ஆலயத்தின் வடகிழக்குப் பகுதியில் விமானம் முதலியவற்றுடன்; முக்கண், நாற்கரம் அல்லது இருகண், இருகரம் அச்சுறுத்துபவர், சடையுடையவர், அனைத்தணிகளும் பூண்டவர்,

நாற்கரங்களாயின் அபயம், வரதம், பாசம், பரசுடனும்; இருகரங்களாயின் மழு வரதம் இவற்றுடனும்: வெண்முப்புரி நூலும் வெள்ளாடையும் அணிந்தவர்; நின்றவராகவோ அமர்ந்தவராகவோ முன் சொன்னவாறு அமைக்கவும்.

மேலும் "பூர்வகாரணாகமத்தில்" படலம் 11ல் பின் வருமாறு கூறப்படுகிறது. சண்டர் எனப்படும் சண்டேசுவரர் சிவப்பு அல்லது வெண்சிவப்பு நிறத்தர், இருகரத்தர்; சடைமுடியுடையவர்: காதில் குண்டலமுடையவர்; முப்புரி நூலணிந்தவர்; வெள்ளாடையணிந்தவர்; பரிசுத்தர், அனைத்தணிகளும் புனைந்தவர்; மழு வேந்திய கையர், அர்த்த சந்திர பீடத்தமர்ந்தவர்; மலர் மாலையணிந்தவர். இவ்வாறாக சண்டேசுவரரின் திருவுருவமைதி சொல்லப்படுகிறது.

சிங்களதேசத்தில் சண்டர்



அருள்செய் மூர்த்திகளை நிறுவும்முறை

[உத்தர காமிகாகமம் — படலம் 55]

1. சண்டேசானுக்ரகர் :-

அத சண்டேச நந்தீச விஷ்ணவநுக்ரக க்ருத் ப்ரபோ :।
ப்ரதிஷ்டாம் சம்ப்ரவக்ஷ் யாமி தர்லக்ஷண புரஸ்ஸரம் ॥

இப்போது சண்டேசர்; நந்தீசர், திருமால் ஆகியோர்கட்கு அருள் புரிந்த பெருமானை (உருவத்தை) எழுந்தருளச் செய்வதை அம்மூர்த்திக்குரிய உருவமைதியுடன் சொல்வேன். (1)

உமயா சஹிதஸ்யாத சந்த்ரசேகர மூர்த்தின :।
வாமேவா தக்ஷிணேவாபி காரயேத் தேசிகோத்தம :॥

தலைமை பெற்ற குரு, உமையோடு கூடிய சந்திரசேகரரின் உருவத்தின் வலப்புறத்திலோ இடப்புறத்திலோ (இவர்களின் உருவங்களை) அமைக்க. (2)

ஏவம் ஜாநூரூச்ரு நாப்யந்த ஸ்தந வக்ஷோ களாஸ்யகம்।
சுகாஸீநம் ஸ்திதம் வாபி க்ருதாஞ்ஜலி புடான் விதம்॥

இவ்வாறு (இறைவனின்) முழந்தாள் / தொடை / தொப்புள் மார்பு / கழுத்து / முகவாய் உயரமுள்ளவர்களாகவும். சுகாசனத்தில் அமர்ந்தவர்களாயும் கூப்பிய கையுடையராயும் செய்தமைக்க, அல்லது நின்றவராய் அமைக்க. (3)

தேவேக்ஷண ஸமோபேதம் மத்பக்தம் சண்டநாயகம்।
சர்வாங்க சுந்தரம் குர்யாத் கநிஷ்டதசதாலத :॥

என் அடியானான சண்ட நாயகனை அழகு கொள் உருவமைதி யுடனும் என் பார்வையில் விழுபவனாய் குறைந்த பத்து தால அளவாற்செய்க.

மாலாக்ரம் தேவ வரதே கடகேனே தரேணது ॥
தேவ : சிரஸி சண்டஸ்ய மாலயாவரி வேஷயேத் ॥

கடகங்கொண்ட இடக்கரத்தால் மாலையின் நுனியைப்பிடித்துக் கொண்டு, வலக்கரத்தால் சண்டரின் சிரத்தில் மாலையைச்சுற்றுபவராய் இறைவரை அமைக்க. (5)

2. நந்தீசானுக்ரகர் :

நந்தீச்வர ப்ரஸாதே து விசேஷ: கச்சித் இஷ்யதே।
த்விநேத்ரம் த்விபுஜம் சாந்தம் க்ருதாஞ்ஜலி புடாந்விதம்॥

நந்தீசருக்கு அருள் செய் மூர்த்தியில் ஒருவேறுபாடு உள்ளது. இரு கண்களும், இரு கரங்களும், கூப்பிய உள்ளங்கைகளும் அமைதியும் (உள்ளவராகக் கொள்க.) *(6)*

சுவிகீர்ண ஜடோபேதம் ஜடாமகுடான் விதம்।
ஆபங்க சகிதம் குர்யாத் ஆகம ச்ரவணோன்முகம்॥

நன்கு அமைந்த ஜடைதொங்கல்களும்; முடித்தசடையும், சற்றே முன் வளைந்த உடலும், ஆகம உபதேசம் கேட்பதில் ஆர்வம் கொண்டவராயும் செய்க. *(7)*

நந்தீஸ்வர ப்ரஸந் நந்தம் காரயேத் பூர்வமாநத :।

ஏற்கெனவே சொல்லிய அளவின்படி நந்திஸ்வரானுக்ரகரைச் செய்விக்க. *(7½)*

நந்தீ சானுக்ரகஸ்த்வேவம் தத்வத் விஷ்ணுப்ரஸாதக்ருத்॥

நந்தீசானுக்ரகருக்குச் சொன்னது போலவே விஷ்ணு அநுக்ர கரையும் (கொள்க). *(8)*

3. விஷ்ணு அனுக்ரகர் :

ஹித்வா நந்தீஸ்வரம் தஸ்மின் விஷ்ணு தல்ல க்ஷணாந்விதம்।
சக்ராஞ்ஜலிஹஸ்தஞ்ச சங்காப்ஜாபாஹஸ்தகம்॥

நந்தீசரைச் சொன்னஇடத்தில் அவருக்குச்சொன்ன உருவமைதியுடன் விஷ்ணுவை (அமைக்க). கீழிருகரங்கள் கூப்பின வாயும் சக்கரத்தைக் கொண்டனவாயும் மேற்கரங்கள் சங்கும் தாமரையும் கொண்டனவாயும் அமைக்க. *(9)*

காரயேத்தேவ ஏஷஸ்யாச் சக்ரதோ விஷ்ணுமூர்த்தின :।
காரயேத் ஏவம் அன்யத் ப்ராஸாதா பிமுகம் சிவம்॥

அருள் பெறுவோரை (கடைக்கண்ணால்) பார்த்த வண்ணம் மற்றொரு அநுக்ரகமூர்த்தியான சிவபெருமானை விஷ்ணுவுக்கு சக்கரமளிப்பவராகச் செய்க. *(10)*

2. நிறுவும் முறை : - பிரதிஷ்டாவிதி :

இத்தம் லக்ஷணமாதிஷ்டம் ப்ரதிஷ்டா விதிருச்யதே ।
வாராத்யம் அங்குரம் ரத்னவிந்யாஸம் உபயத்ர ச ॥

இவ்வாறு உருவமைதி (லட்சணம்) சொல்லப்பட்டது. மேல் நிறுவும் முறை சொல்லப்படும். குறித்த முறையில் முளைவளர்த்தல் (அங்குரார்ப்பணம்) ரத்ன விந்யாஸம் ஆகியவற்றை இருவர்க்கும் (இறைவன்; அடியார்) செய்க. (11)

நேத்ர மோட்சம் ததா சுத்திம் புராதீனம் ப்ரதட்சிணம் ।
தோயாதிவாசனம் யாகமண்டபஸ்ய ப்ரகல்பனம் ॥

கண் திறப்பு; அதன்மேல் (முறையால்) சுத்தி செய்தல்; நகர் வலம்; (கருக்கோலம்) ; நீரில் அமிழ்த்தி வைத்தல் (ஜலசயனம்) யாகசாலைக்கு கொண்டுவருதல் ஆகியவற்றைச் செய்க. (12)

குண்டானும் அதவ்ருத்தாச்ர திகச்ராணாந்து கல்பனம் ।
நவபஞ்ச ஏகசங்க்யாநாம் லக்ஷணே : பூர்வவத் த்விஜா : ॥

பின், வட்டம், முக்கோணம் (யோனி) நாற்கோணம் ஆகிய உருவங்கொண்ட குண்டங்களை ஒன்பது : ஐந்து; ஒன்று என்ற (எண்ணிக்கை)வகையில் முன் கூறியுள்ள அமைதிகளில் அந்தணர்கள் (இருபிறப்பாளர்கள்) அமைக்க. (13)

தக்ஷகோத்வாஸநம் விப்ரபுக்திம் புண்யோதஸேசநம் ।
வாஸ்து ஹோமந்து வேத்யாந்து ஸ்தண்டிலம் சயனம் ப்ருதக் ॥

சிற்பிசுளை விடுவித்தல்; அன்னதானம்; நன்னீராட்டல்; வாஸ்து ஹோமம்; வேதிகை; மேடைஆகியவற்றில் மூர்த்திகளை பிடுக்கையமைத்தல் ஆகியவற்றைச் செய்க. (14)

ஸ்நபநம் கௌதுகஞ்சைவ தேவாநாம் பூர்வவத் ப்ருதக் ।
ஆரோகணஞ்ச சய்சாயா : தஸ்யாஞ்ச சயநம் நயேத் ॥

மந்திரநீரால் முழுக்குச்செய்தல் கங்கணமணிவித்தல் முதலியுவற்றை ஒவ்வொருமூர்த்திக்கும் தனித் தனியேசெய்க. பின்னர் அம் மூர்த்திகளை சயனவேதிகையில் அமர்த்திப் படுக்கையில் அமைக்க. (15)

தேவாஸ்த்வநுக்ரஹீதாயே பின்னபீடஸ் திதாயதி ।
தேவேச பாதமூலேது தேஷாஞ்ச சயனம் நயேத் ॥

அருள் பெறும் தேவர்களை தனி ஆசனங் கொண்டவர்களாயினும் சிவமூர்த்தியின் திருவடியின் கீழ் படுக்கையில் அமர்த்துக. (16)

தேவோத்த மாங்க தேசேது சிவகும்பம் ச வர்த்தனீம் |
அநுக்ரஹீத தேவாநாம் தத்தந்மூர்த்யஷ்ட கந்மநு ||

இறைவரின் சிரஸினருகில் சிவகும்பம், வர்த்தனீ (தேவி கும்பம்) இவற்றை வைக்க. அருள் பெறும் தேவர்களின் அருகில் அவர்கட்குரிய கும்பத்தினை வைக்க. (17)

தத்தத் அத்யாய சம்சித்தம் சங்க்ராஹ்யம் முநிபுங்கவா: |
க்ருத்வா குண்டாக்னி சம்ஸ்காரம் த்ரவ்யைர் ஹோமமம் சமாரபேத் ||

அவரவர்களை வழிபட அமைத்த குண்டங்களை முநிவர்கள்அடைக. குண்ட சுத்தியும் அக்னிசுத்தியும் செய்து உரியபொருள்களால் ஓமம் செய்க. (18)

சமித் ஆஜ்ய அந்ந லாஜை தில சாலி அட்சதை: க்ரமாத் |
ஸத் பலாச வடப்லட்ச உதும்பரா: பூர்வதோபவேத் |

வரிசையாக, சமித்து, நெய், அன்னம், பொரி, எள்; நெல்; அட்சதைகளைக் கொள்க. நல்ல சமித்துக்களான பலாசு; ஆல்; அத்தி; அரசு ஆகியவைகளால் நாற்கோண குண்டங்களில் ஓமம் செய்க. (19)

சமீ கதிர ஸ்ரீவிருட்ச அச்வத்தா வந்ஹி கோணத : |
ப்ரதானஸ்ய பலாசஸ்யாத் ஸச சர்வத்ரவா மத : |

வந்நி, நெல்லி, வில்வம்,அரசு ஆகியவைகளால் [யோனி அல்லது] முக்கோணகுண்டத்தில் ஓமம் செய்க. ப்ரதான குண்டத்தில் (வட்ட குண்டம்)பலாசத்தால்செய்க. அதையே எல்லாவற்றிலும் கொள்ளலாம் எனவும் கூறப்பட்டது. (20)

சண்ட நந்தீச விஷ்ணும்ச ப்ரதானே தர்ப்பயேத்குரு : |
நிஷ்க்ருதௌ பூர்ணயோபேதம் ஹோமகர்மபி ருதக் நயேத் ||

சண்டர்; நந்தீசர்; விஷ்ணு ஆகியோரை குரு முக்கிய குண்டத்தில் ஓமத்தால் பூசித்து தர்ப்பிக்க (திருப்திசெய்க); ஒவ்வொருவர்க்கும் தனித்தனியே நிறைவு ஆகுதி (பூர்ணாஹுதி) செய்க. (21)

த்விதியேது தத : சுத்தோ மூர்த்தியை : தத்வவித்குரு : |
ஸம்பூஜ்ய உத்ருத்ய தேவாம்ஸ்து ரும்பான் குண்டேஷு பாவகான் |

இரண்டாம் பூசையில் தத்வத்தினை உணர்ந்த ஆசார்யன் கடவுளர்களை ஓம குண்டத்திலும் கும்பத்திலும் பூசித்து அவர்களின் சக்தியை அவற்றில் எழுப்புக. (22)

சுமுகூர்த்தே அதஸம்ப்ராப்தே மந்திரநியாஸம் சமாசரேத் |
வஸ்த்ர ஹேமாங்குலீயாதி பூஜிதோ மூர்த்திபாதிபி : ||

நல்வோரை வரப் பெற்றவுடன் மூர்த்தியை நிறுவுவோரால் நல்லாடை, பொன்மோதிரம் ஆகியவற்றுல் உபசரிக்கப்பட்டவராய், மூர்த்திகளில் மந்திரத்தைப் பதித்திடுக. [கும்பங்களில் அக்னியிலிருந்துஎழுப்பிப்பதிக்க]. (23)

சம்ப்ராப்த தசநிஷ்காதி தக்ஷிணஸ்துஷ்ட தீ : குரு : ।
க்ருத ஸ்தண்டிலகாதாரா பிம்பாக்ரேது கடம் ந்யஸேத் ॥

பத்துப்பொன் நாணயம் முதலாக தட்சிணைகள் பெற்று திருப்தியான நிறைவு மனத்துடன், பீடத்தில் நிறுத்திய மூர்த்தியின் முன் குடங்களை அமர்த்துக. (24)

கும்பாத் மநும் ஸமாதாய சிவஸ்யஹ்ருதி விந்யஸேத் ।
வர்த்தந்யா மநுமாதாய தத் பீடோபரி விந்யஸேத் ॥

(சிவ) கும்பத்திலுள்ள மந்திரங்களை எழுப்பி சிவமூர்த்தியின் இதயத்தில் பதிவிக்க. வர்த்தனி கும்பமந்திரங்களை [தேவி உடன் உறையா மூர்த்தமாயின்] சிவபீடத்தில் பதிவிக்க. (25)

தேவீ சஹாசநா சேத்து தஸ்யா : ஹ்ருதி மநும்ந்யஸேத் ।
அன்யேப்யோ பீஜமாதாய பிடஸ்யோபரி விந்யஸேத் ॥

ஒரே பீடத்திலோ (தனிப்பீடத்திலோ) தேவியும் இருந்தால் அவளின் இதயத்தில் (தேவி) மந்திரத்தைப்பதிவிக்க. மற்ற தேவர்களின் மந்திரங்களைப் பீடத்தைச் சுற்றிலும் பதிவிக்க (சிவ, தேவி ஆவரண பரிவாரதேவதாமந்திரங்கள் குறிக்கப்பட்டன). (26)

சண்டேசாதிஷு தேவேஷு தத்தத் கும்பாந்மநும் ந்யஸேத் ।
தத்தத் கடோதகைஸ் தத்தத் ஏவம் அபிஷேசயேத் ॥

சண்டேசர் முதலானோர்க்கு அவரவர்க்குரிய கும்பங்களிலிருந்து மந்திரங்களைப் பதிவிக்க. அவரவர்க்குரிய குடங்களின் நீரால் உரியபடி நன்முழுக்காட்டுக.

ஸ்நபனஞ்ச உத்சவம் பூரி நைவேத்யம் காரயேத் நவா ।
தேவீ பின்ன பீடாசேத் கல்யாணம் காரயேத் குரு : ॥

குடமுழுக்கு, உற்சவம், மிகுதியான அளவில் நிவேதனங்கள் ஆகியன செய்க. தனிப்பீடத்தில் தேவி நிறுவப்பட்டால் கல்யாண உற்சவமும் குரு செய்விக்க. (28)

3. பயன் கூறல் :

ஏவம்ய : குருதே மர்த்ய: ஸோந்தே மோக்ஷமவாப்நுயாத் ।

இவ்வாறு (பிரதிட்டையை) யார் செய்விக்கிறரோ அவர்கள் முத்தியை அடைவர். (28½)

இதி சண்டேசாத்யநுக்ரஹ பிரதிஷ்டாவிதி படல :
பஞ்ச பஞ்சாசத்தம : ॥

இவ்வாறு சண்டேசர் முதலானவர்க்கருளும் (சிவ) மூர்த்தியின் (உருவ) நிறுவனவிதிப்படலம் (55 ஆம் படலம்) முற்றும்.

அனுக்கிரக மூர்த்திகளின் திருக்கோலங்கள்

[சிவாகமங்களிலும் சிற்ப நூல்களிலும் கூறப்பட்டவை]

சண்டேசானுக்ரக மூர்த்தி :

'அம்சுமத்பேதம்'' – படலம் – 75ல் பின்வருமாறு சண்டேசானுக்ரக மூர்த்தியின் திருவுருவமைதி கூறப்படுகிறது.

இடப்புறம் சற்றே திரும்பிய முகத்துடன் உமாசகிதரைப் போற் செய்க. வலப்புறம் அபயத்திற்குப்பதில் வரதம் கொள்க. வரதசரம் சண்டேசுவரரின் சிரத்தை வருடுவதாக அமைக்க. பொன்னிறமேனியுடன் பத்ம பீடத்தமர்ந்து சண்டேசுவரர் இதயத்திற் கூப்பிய கரத்துடன் பத்திமை அடியாரய் அமைக்க. இறைவர்க்கும் அன்னைக்கும் மத்தியில் கந்தரின்றி அமைத்திடும் படிமத்தை சண்டேசானுக்ரகர் என்று சொல்வதுண்டு.

''உத்தரகாமிகாகமத்தில் '' - படலம் 55ல் பின்வருமாறு கூறப்படுகிறது உமையோடு கூடிய சந்திரசேசுர மூர்த்தியினுடைய இடப்புறம் அல்லது வலப்புறத்தில் (சண்டேசுவரரை) ஆசாரியன் செய்விக்க இறைவனின் முழங்கால் அளவில் மார்பும், கழுத்தும், அழகிய முகமும் கொண்டவராயும், அஞ்சலி முத்திரையுடனும், அமர்ந்தவராயோ, நின்றவராயோ செய்க. இறைவனின் திருநோக்கு சண்டேசுவரர் மீது அமையும் வகையில் செய்க. அனைத்து அங்கங்களிலும் உரிய அணிகள் பூண்டவராயும் சிறிய பத்துத்தாள அளவிலும் அமைக்க. மாலையின் நுனி கடகமுத்திரையுடைய கரத்தால் பற்றப்பட்டு மற்றக்கரத்தினால் மறுநுனி சண்டேசுவரரின் சிரசில் சுற்றப்படுவதாக அமைத்தல் வேண்டும்.

''சில்பரத்தினம்'' – படலம் 22ல் சிற்பநூலில் பின்வருமாறு கூறப்படுகிறது. சண்டேசானுக்ரக மூர்த்தியை உமாஸ்கந்த மூர்த்தியைப் போல் அமைக்க. இடப்புறம் திரும்பிய முகமும், வலப்புறத்தில் அபயமின்றி வரதகரமாகவும் இடக்கரத்தை சண்டேசுவரர் முடியில் வைத்த நிலையிலும் அமைக்க. பத்திமை அடியராம் சண்டேசுவரர் கூப்பியகரத்தராயும் இறைவன் ஆசனத்தடியில் நின்றவராகவோ அல்லது அமர்ந்தவராகவோ பொன்னிறம் கொண்டவராகவோ அமைத்தல் வேண்டும்.

''பூர்வகாரணுகமம்'' – படலம் 11ல் பின்வருமாறு கூறப்படுகிறது. ஸ்கந்தரின்றி உமாசகிதர் போல் செய்க. வலக்கரத்தில் கடகமுத்திரையும். இடக்கரத்தில் வரதமும் கொள்க (உமையின் கரவமைதி) இறைவனின் முன்னர் சண்டேசுவரரை அமைக்க. தேவனின் தோள் அளவாக (கைநீளமளவாக)சண்டேசுவரரின் உயரம் சொல்லப்பட்டது. இறைவனை

நோக்கி அஞ்சலித்தவராயும் அமர்ந்தவராயும் அமைக்க. சண்டேசுவரரின் சிரசில் ஐயன் மாலை அணிவிப்பவராக அமைக்க. இந்த வகை உருவம் முன் கூறிய படி சண்டேசானுக்ரகர் எனப்படும்.

விஷ்ணு அனுக்ரகர் :

"உத்தரகாமிகாகமம்" – படலம் 55ல் விஷ்ணு அனுக்ரகமூர்த்தியின் திருவுருவமைதி பின்வருமாறு கூறப்படுகிறது. நந்தீசானுக்ரக மூர்த்தி போன்றே விஷ்ணு அனுக்ரக மூர்த்தியினையும் அமைக்க. நந்தீசரை விடுத்து அவ்விடத்தில் உரிய லட்சணங்களுடன் கூடிய விஷ்ணுவை அமைக்க, அஞ்சலி ஹஸ்தத்தில் * சக்கரமும். மேற்கரங்களில் சங்கமும் தாமரையும் கொண்டவராய் அமைக்க. மற்ற பிரசாதமூர்த்திகளையும் இவ்வாறே அமைக்க.

'ஸ்ரீதத்வநிதி'' – எனும் சிற்பநூலில் பின்வருமாறு விஷ்ணு அனுக்ரக மூாத்தியின் லட்சணம் கூறப்படுகிறது. ஈசனின் முன் நிற்பவராயும். கூப்பியகையராயும் அவரின் பாதத்தை நோக்கிய கண்களை உடையவராயும். மலரென அவர் பாதத்தில் தன் கண்ணை அர்ப்பணித்த வராயும். பீதாம்பரம் (பொன்னிற ஆடை/மஞ்சள் பட்டு) கௌஸ்துபமணி இவற்றால் அலங்கரித்துள்ளவராயும், தயையுடன் அவரை நோக்கி பசுபதியாம் பெருமான் பரசு, மான் இவற்றை மேற்கரங்களில் ஏந்தி இடக்கரத்தில் வரதங்கொண்டு : பத்மாட்ச என அழைத்து வலக்கரத்தால் தரும் சக்கரத்தைப் பெறுபவராயும் உள்ளவர் சக்ரப்பிரதர் எனும் மூர்த்தி.

ஒருமுகம் ; முக்கண், சடைமுடி உடையார். மேற்கரங்களில் மானும் பரசும், இடப்புறம் வரதமும் வலக்கரத்தில் சக்கரமும் கொடுக்கும் நிலையுள்ள உருவமுடனும் ஈசன் சொல்லப்படுகிறார். இறைவனின் இடப்புறத்தில் கரும்பசுமை நிறமும் நன்கு நிற்பவரும், அனைத்து அணிகலன்களையும் அணிந்தவரும், மஞ்சள் கீழாடையும் மேலாடையும் கொண்டவரும், சங்கம் – பத்மம் கொண்டவரும் மற்றிருகரங்களால் அஞ்சலி செய்பவரும் ஆன அமைப்புடன் விஷ்ணு சொல்லப்படுகிறார்.

"உத்தரகாரணாகமம்'' கூறுகையில் அனைத்து ஆன்மாக்களும் உய்யும் பொருட்டு சக்ரதானரின் உருவமைதி கூறப்படுகிறது. சரவணோத் பவரே! கேட்பீராக.

முக்கண்ணர், நாற்கரத்தர், சாந்தர், சடைமுடி உடையார், இடத்தாளை (ஆசனத்தில்) மடித்து வைத்து வலத்தாளைத் தொங்க விட்டவர். பரசு. சக்கரம் இவற்றை வலக்கரங்களிலும் மான் வரதம் இவற்றினை இடக்கரங்களிலுல் தரித்தவர். தன் இடப்புறத்தில் (சம ஆசனத்தில்)பரமேஷ்டியாம் (வணங்கத்தக்கவளான)கௌரியோடு கூடிய

* விஷ்ணுவிற்கு சக்கரம் அருளிய தலம் திருவீழிமிழலை

வர். ஆசனத்தின் அருகே இடப்புறத்தில் அஞ்சலித்த கரத்துடன் நிற்கும் திருமாலையுடையவர். திருமாலினால் தாமரைப் பூக்களாலும் (தனது) கண்ணாகிய மலராலும் பூசிக்கப்பட்டவர். உச்சியில் சக்கரம் கொண்ட ஒளிவட்டத்திடை அமர்ந்தவர், இவ்வாறாக இமைத்திடல் வேண்டும்.

நந்தீசானுக்ரகர் :

' உத்தரகாமிகாகமத்தில் '' படலம் 55ல் நந்தீசானுக்ரக மூர்த்தியின் திருவுருவமைதி பின்வருமாறு கூறப்படுகிறது, நந்தீ சானுக்ரகமூர்த்தியின் வேறுபட்ட அமைப்பு மட்டும் இங்கு சொல்லப்படுகிறது. இருகண்கள், சாந்தமான முகம், அஞ்சலிமுத்திரை, சடைமுடியுடன் சற்றே விரிந்த சுருள் சடைகள், சற்றே முன் வளைந்த அமைப்பு; சிவபெருமானிடம் ஆகமங்களைக் கேட்கும் ஆர்வம் கொண்ட நந்தியெம் பெருமானைப் பூர்வமானத்தால் செய்க.

விக்னேஸ்வர பிரசன்னர் :

'' ஸ்ரீ தத்வநிதி '' எனும் சிற்ப நூலில் பின்வருமாறு விளக்கப் படுகிறது.

நாற்கரத்தர், முக்கண்ணர், சடைமுடி கொண்டவர், வலமுன் கரத்தை விநாயகரின் சிரசில் வைத்தவராயும் (விநாயகரை வலப்புறத்தில் நிற்பதாக அமைக்க) மேற்கரங்களில் மான் மழு தரித்தவராயும் வலத்தாளை ஆசனத்தின் மேல் மடித்து வைத்தவராயும் இடத்தாளைத் தொங்க விட்டவராயும் அனைத்தணிகளும் பூண்ட, பொன்னிறமும், ஒளிர் மேனியும் கொண்டவராயமைக்க.

இறைவரின் இடப்புறத்தில் மலர்ந்த முகமும், அணிகளனைத்தும் பூண்டவளாயும் வலக்கரத்தில் குவளையும் இடக்கரத்தில் வரதமும் கொண்ட இருகரத்தவளாயும் முக்கண்ணளாயும், வலத்தாளை மடித்து இடத்தாளைத் தொங்கவிட்டவளாயும் ஏகாஸனத்தில் இடங்கொண்டவளாயும் தேவியை உமாஸ்கந்தருக்குச் சொன்னவகையால் அமைக்க.

* விக்னேசரை – செந்நிறத்தரும் ; கிரீடமகுடத்துடன் கூடியவரும் நமஸ்கார அஞ்சலி செய்பவரும், பாசம் அங்குசம் கொண்டவரும், அனைத்து அழகும் கொண்டவரும் ; அனைவர்க்கும் அனைத்துப் பயனையும் தருபவரும் ஆக அமைக்க. இம் மூர்த்தம் விக்னபிரஸாதரர் என்றும் கூறுவர்.

மேலும் ஸ்ரீ தத்வநிதியில் அனைத்துயிர்கட்கும் நன்மை அளிப்பதும் புனிதமானதும் அனைத்து வேண்டுதலையும் நிறைவேற்றுவதுமான

---

* விநாயகரின் *(விக்னேசர்)* பல்வேறு திருவுருவமைதிகளை *(ஆதீன வெளியீடு எண்-411)* கணபதி எனும் நூலில் காண்க.

விக்நேசானுக்ரக மூர்த்தியின் திருவுரு லட்சணம் கூறப்படுகிறது. சர்வ விக்நங்களையும் ஒடுக்குதற் பொருட்டு உத்தம ஆசார்யன் இவ்வுருவத்தை நிறுவுக அல்லது நிறுவச் செய்க.

முக்கண்ணர் நாற்கரத்தர் சாந்தர் ஒளிரும் குண்டலம் அணிந்தவர், கொக்கிறகு, பூங்கொத்த (சூளிகை - மகுடஉரு) சுரிகுழல் ஆரமாயுள்ள மலர்மாலை; கொத்தாய்த் தொங்கக் கூடிய மணிவடம் அங்குசம் அட்சமாலை ஒளிரும் வரதம் வலப்புறம் நிற்கும் கஜாநநர் முடியில் தைவரும் (வலக்கரம்) இடப்புறத்தில் கௌரி, மற்றும் வானச் சுடராம் வெண் கொற்றக் குடை, நல்லுருவமைப்பு இவற்றுடன் கூடியவராயமைத்து முறைப்படி நிறுவுக.

கிராதார்ச்சுன மூர்த்தி :

நாற்றோளர், முக்கண்ணர் சடைமுடி கொண்டவர், அனைத்தணிகளோடு கூடியவர், பட்டாடை அணிந்த சிவந்தமேனியர், வில்லம்பு கொண்டவர் மான், பரசு கொண்டவர், முந்நூலணிந்தவர். நிமிர்ந்த நெடு மேனியர் (சம்பங்கர்) இடப்புறத்தே நிற்கும் கௌரியுடனும் வலப்புறத்தில் நிற்கும் அர்ச்சுனடனும் கூடியவர்.

"அர்ச்சுன வடிவம்" – ஒருமுகம் இருகண் சடைமுடி தவக்கோலம் அனைத்தணிகள் கொண்ட மேனி; அஞ்சலித்த கரங்கள் நின்ற கோலம் இவ்வாறு கிராதர் உருவத்தைப்பற்றி ஸ்ரீதத்வநிதி என்னும் சிற்பநூல் கூறுகிறது.

இராவண அநுக்கரகர் :

கயிலையங்கிரியில் அம்பிகையுடன் சிவபெருமான் விளங்கும் காலத்தில் கயிலாய மலையின் பெயர்த்து எடுக்க எண்ணிய இராவணனின் கரங்கள் மலையின் அடியில் மாட்டிக் கொண்டமையால் இராவணன் தாளாத துன்பம் அடைந்தான். அவ்வமயம் பெருமானுக்குப் பிரியமான சாம கானத்தை எழுப்ப எண்ணினான். எனவே தனது உடலில் உள்ள எலும்பினையும், நரம்பினையும் கொண்டு அமைத்த வீணையின் மூலம் சாம கானத்தை மீட்டினான். பெருமான் மகிழ்ச்சியடைந்து அவனை விடுவித்து வரம் பல அருளினார். இந்தச் சிற்பம் வடஇந்தியாவில் எல்லோராகுகையிலும் பேளூரில் ஹோய்சாலா பாணியிலும் காணப்படுகிறது. தென்னகத் திருக்கோயில்களில், கோபுரச் சிற்பங்களாகக் காட்சிதருகிறது இக்கயிலைக் காட்சியைத் திருவிடைமருதூர் மருதவாணர் சந்நிதியிலும் அவ்வூர் கைலாயநாதனத்திலும் காணலாம்.

சிற்ப நூல்களில் சண்டேசானுக்கிரகர் மூர்த்தி உருவமைதிகள்

சண்டேசானுக்ரக மூர்த்தி த்யானம்

(श्रीतत्वनिधिः)

ஸ்ரீ தத்துவ நிதி :

चंडेशं पीतवर्णं युगकरसहितं दक्षहस्ते च टंकम्
वामे कृष्णां दधानं वरकर सहितं पार्वती वामभागम् ।
चंडेशस्योत्तमांगे प्रतिनिहित करं दक्षभागे त्रिणेत्रम्
सर्वालङ्कार युक्तं शशिशकलधरं गङ्गया युक्तमीडे ॥

சண்டேசம் பீதவர்ணம் யுககரஸஹிதம் தக்ஷ ஹஸ்தே ச டங்கம்
வாமே க்ருஷ்ணாம் ததாநம் வரகர ஸஹிதம் பார்வதீ வாமபாகம் ।
சண்டேசஸ் யோத்த மாங்கே ப்ரதிநிஹித கரம் தட்சபாகே த்ரிணேத்ரம்
ஸர்வாலங்கார யுக்தம் சசிசகல தரம் கங்கயா யுக்தமீடே ॥

சண்டரின் தலைவராம் சண்டேச (அநுக்ரஹ) ர் பொன்னிறத்தர்; நாற்பெருந்தோளர். வலக்கரத்தில் மழுவும் இடக்கரத்தில் இளமானும் கொண்டார்; இடது (கீழ்க்) கரத்தில் வரதமுத்திரையும் இடப்புறத்துப் பார்வதியும் கொண்டார்; சண்டேசரின் சிரத்தினை வருடும் வலக்கரமும்; முக்கண்ணும் உடையார். பல்வகை அணிகளை (தேகத்தில்) கொண்டும்; கங்கையும் பிறையுமணிந்த சிரமும் கொண்டவராய் உள்ளாரைப் போற்றுகின்றேன். (1)

देवस्य दक्षभागेतु चंडेशंतु प्रकल्पयेत् ।
देवस्य बाहु मात्रेण चंडेशायाम उच्यते ॥

தேவஸ்ய தட்சபாகேது சண்டேசந்து ப்ரகல்பயேத் ।
தேவஸ்ய பாஹு மாத்ரேண சண்டேசாயாம உச்யதே ॥

பெருமானின் வலப்புறம் சண்டேசரை அமைக்க. பெருமானுடைய * கையளவே சண்டேசரின் உயரமாகக் கொள்க. (2)

* கையளவு உயரத்தில் சரிபாதியாம். எனவே பெருமானின் உயரம் உத்தம தசதால மாதலின்; அவரின் கைநீளமான உத்தம பஞ்ச தாலம் அளவே சண்டேசரின் உயரம் கொள்க. சண்டேசர் குழந்தைகட்குரிய அணிகளைக் கொண்டவர் என பின்னே கூறப்படுதலைக் காண்க.

न्यस्तव्यो मत्प्रसादेन चंडेशो भक्तिसंयुतः ।
चंडेश्वरं स्वर्णवर्णं बालभूषण भूषितम् ॥

ந்யஸ்தவ்யோ மத்ப்ரஸாதேந சண்டேசோ பக்திசம்யுத : ।
சண்டேச்வரம் ஸ்வர்ணவர்ணம் பால பூஷணபூஷிதம் ॥

சண்டேசரை பொன்னிறத்தராயும்; குழந்தைகட்குரிய அணிகள் புனைந்தவராயும், என் அருளால் பத்திமை பூண்டவராயும் அமைத்திடுக. (3)

देवं शिरसि चंडस्य लीलया परिशोभितम् ।
चंडेशानुग्रहं प्रोक्तं ………

தேவம் சிரஸி சண்டஸ்ய லீலயா பரிசோபிதம் ।
சண்டேசா நுக்ரஹம் ப்ரோக்தம் ……

சண்டரின் சிரஸில் கருணையுடன் மிளிரும் கரமுடையரான சண்டேசாநுக்ரகப் பெருமானைக் கூறப்பட்டது. (4)

॥ शिल्परत्नम् ॥ :

चंडेशानुग्रहं देवं उमास्कन्दवत् आचरेत् ।
वामे किञ्चिन्नतं त्वास्यं दक्षिणे त्वभयं विना ॥
तद्धस्ते वरदं कार्यं वामेतु कटकं विना ।
चण्डेशमूर्ध्नि विन्यस्य तद्धस्तं करुणान्वितम् ॥
हृदयेऽञ्जलि संयुक्तः चण्डेशो भक्ति संयुतः ।
आसनाधः सुखासीनो भक्तिमान् स्वर्णसन्निभः ॥

சில்பரத்னம் :

சண்டேசாநுக்ரஹம் தேவம் உமாஸ்கந்தவத் ஆசரேத் ।
வாமேகிஞ்சிந்நதம் த்வாஸ்யம் தக்ஷிணே த்வபயம் விநா ॥
தத்ஹஸ்தே வரதம் கார்யம் வாமேது கடகம்விநா ।
சண்டேச மூர்த்நி விந்யஸ்ய தத்ஹஸ்தம் கருணாந்விதம் ॥
ஹ்ருதயே அஞ்ஜலி ஸம்யுக்த : சண்டேசோ பக்திஸம்யுத: ।
ஆஸ்நாத : ஸுகாஸீந : பக்திமாந் ஸ்வர்ணஸந்நிப : ॥

சண்டேசாநுக்ரகமூர்த்தியை உமாஸ்கந்தரை ஒப்பச் செய்க. சற்றே இடப்புறம் திரும்பித் தாழ்நோக்கும் முகமும், வரதமுத்திரை கொண்ட வலக்கரமும், சண்டேசரின் சிரத்தை அன்பொடு வருடும் இடக்கரமுமாக அமைக்க வேண்டும். இதயத்திற்கூப்பிய கைகளும்,

பத்திமை தோற்றும் பாவமும், இறைவரின் ஆசனத்தடியில் சுகாசனங் கொண்டும் உள்ளவராய்ப், பொன்னிறங் கொண்டவராய் மெய்யடியராம் சண்டேசரை அமைக்க.

॥ काश्यप शिल्पशास्त्रम् ॥ :

காச்யப சில்பசாஸ்த்ரம் :

अथ वक्ष्ये विशेषेण चंडेशानुग्रहं परम् ।
उमासहितवत्सर्वं वामे किञ्चिन्नताननम् ॥

அத வக்ஷ்யே விசேஷேண சண்டேசாநுக்ரகம் பரம் ।
உமா ஸஹிதவத்ஸர்வம் வாமே கிஞ்சிந்நதா நநம் ॥

இனி, மேலான சண்டேசானுக்ரக மூர்த்தியின் சிறப்பு அம்சங்களைச் சொல்கிறேன். உமாஸஹிதரை ஒத்து; இடப்புறம் சற்றே திரும்பித்தாழ் நோக்குடை முகமும் (கொள்க.)

दक्षिणेत्त्वभयं वर्ज्यं तथात्वाभरणं भवेत् ।
वामे तु कटकं न्यस्य अधस्तात् चंडमूर्तिकम् ॥

தக்ஷிணேத்வபயம் வர்ஜ்யம் ததாத்வா பரணம் பவேத் ।
வாமேது கடகம் ந்யஸ்ய அதஸ்தாத் சண்டமூர்த்திகம் ॥

வலக்கரத்தில் அபயமுத்திரை நீக்கித்தாங்கும் பாவமாய் அமைக. இடக்கரம் கீழமர்ந்துள்ள சண்டமூர்த்தியின் சிரத்தில் வைக்கப்பட்டதாய்ச் (செய்க) சண்டேசர் பத்திமைபாவமுடையராய் (நிற்பவராய்) அமைக்க.

हृदयेऽञ्जलि संयुक्तं चंडेशं भक्ति संयुतम् ।
आसीनौ पद्मपीठेतु चंडेशं स्वर्ण वर्णभम् ॥

ஹ்ருதயே அஞ்ஜலி சம்யுக்தம் சண்டேசம் பக்தி ஸம்யுதம் ।
ஆஸீநௌ பத்மபீடேது சண்டேசம் ஸ்வர்ண வர்ணபம் ॥

மார்பிற்கூப்பிய கைகளுடன், பொன்னிறத்தராய்ப், பத்திமை (பாவங்) கொண்ட சண்டேசரை அமைக்க.

देवी देवे शयों मध्ये स्कन्दमूर्ति विना बुध ।
चंडेशानुग्रहं ख्यातं ... ...

தேவீ தேவே ச யோர் மத்யே ஸ்கந்த மூர்த்திம்
விநா புத ।
சண்டேசாநுக்ரகம் க்யாதம் ... ...

பத்ம பீடத்தில் பரமேசுவரனும் பார்வதி தேவியும் பத்ம பீடத்தில் உட்கார்ந்த வடிவமாக இருப்பவர்களாவார்கள். அவர்களின் மத்தியில் ஸ்கந்தமூர்த்தியை வைத்தல் கூடாது என சண்டேசானுக்கிரக மூர்த்தியின் லக்ஷணம் கூறப்பட்டுள்ளது.

ஸாரஸ்வதிய சித்திர கர்மசாஸ்திரம் :

சண்டேசானுக்ரக மூர்த்தியானது சுகாசனத்தில் நேராக நிமிர்ந்து உட்கார்ந்திருக்கும் மூர்த்தியாம். பார்வதி தேவியானவள் பக்கத்தில் சிறிது வணங்கியிருப்பதாகும். பெருமானின் இடது கை வரதஹஸ்தமாகவும் வலது கையானது சண்டேசுவரரின் சிரசில் வைத்திருப்பதாம். சண்டேசுவரர் சுவாமியின் வலது பக்கத்தில் தலையில் வைக்கப்பட்ட சிவஹஸ்தத்துடனிருக்க வேண்டும். பரமசிவனுடைய ஆசனத்திற்குக் கீழே இருகைகளையும் சேர்த்து அஞ்சலி பந்தனம் செய்து கொண்டு இருக்கவேண்டும். சுவாமியின் இடதுபக்கத்தில் உமாதேவியார் சமமான ஆசனத்தில் உட்கார்ந்த வடிவமாக இருக்க வேண்டும்.

வேறு விதமான முறை :

பரமேசுவரனுடைய (வலதுபக்கம்) சமீபத்தில் சண்டேசுவரரை வைக்கவேண்டும். சண்டேசுவரர் பக்தியுடன் கைகூப்பியிருப்பவராவார். பரம சிவனுடைய வலது கையானது சண்டேசுவரரின் முழங்கையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும் சண்டேசுவரரின் வலது கையில் தடி (தண்டம்) இருக்கவேண்டும். சண்டேசுவரர் பெருமானுடைய இடுப்பு மட்டமாகவாவது, சுரோணி மட்டமாகவாவது, விசேஷித்து நாபிமட்டமாகவாவது யுக்தம் போல் இருக்க வேண்டும். பரமேசுவரன் மான், மழு வைத்துக் கொண்டிருப்பவராவார். ஜடாமகுடம் தரித்தும் விளங்குவார். நாபிமத்தியம் (லலாடமத்தியம்) கழுத்து நடுவிலிருந்து இடது பக்கத்தில் 1 அங்குலத்திலுள்ள இடம், ஹிருதய மத்தியத்திலிருந்து (இடதுபக்கத்தில்) 2 அங்குலத்திலுள்ள இடம், நாபியின் வலது பக்கம், மேட்ரத்திலிருந்து இடது பக்கத்தில் 4 அங்குலத்திலுள்ள இடம் (இந்த இடங்களில் மத்திய சூத்திரம் விழவேண்டும்) *இருத்தல் வேண்டும்.

அம்பிகையின் திருவுரு :

அம்பாள் பச்சை நிறமுடையவளாய் இடது கையில் புஷ்பம் கொண்டும், கரண்ட மகுடம் தரித்தும் விளங்குபவளாவாள். தெளிந்த கண்களையுடைய முகமுடையவளாய் பரமசிவனைப் பார்த்த வண்ணமாக இருப்பவளாவாள். நின்ற வடிவமானாலும், உட்கார்ந்த வடிவமானாலும் அம்பாள், சுவாமிக்கு சமமான ஆசனத்தில் அமர்ந்திருப்பவளாவாள்.

---

* இங்கு மூலபாடம் விடுபட்டதாகத் தோன்றுகிறது.

உத்தர காரணுகமத்தில்
சண்டேசானுக்கிரக பிரதிஷ்டா விதி:

வண்ேடசாநுக்ரஹ ஸ்தாபந படல:

சண்டேசாநுக்ரஹ ஸ்தாபந படல:

சண்டேசர்க்கருள்டரி மூர்த்தியினை நிறுவும் பகுதி.

1. உபோத்காதம் - தோற்றுவாய் :

அத வக்ஷ்யே விசேஷேண சண்டேசாநுக்ரஹம் புரா ।
ஸர்வலோக ஹிதார்த்தாய ஜ்ஞானிநாம் முக்திகாரணம் ॥

அத வக்ஷ்யே விசேஷேண சண்டேசாநுக்ரகம்புரா ।
ஸர்வலோக ஹிதார்த்தாய ஜ்ஞானிநாம் முக்திகாரணம் ॥

இப்போது முதலில் எல்லா உலகத்தினரின் நன்மையின் பொருட்டாகவும், ஞானிகளின் முத்தி காரணருமான சண்டேசானுக்ரகரை சிறப்பாக முதலில் சொல்கிறேன். 1

தாபத்ரய விநாசார்த்தம் ஸத்பாத்ராநுக்ரஹாய்த்தகம் ।
சண்டேசாநுக்ரஹம் ரூபம் வக்ஷ்யேஹம் ச்ருணு ஷண்முக ॥

தாவத்ரய விநாசார்த்தம் சத்பாத்ராநுக்ரஹார்த்தகம் ।
சண்டேசாநுக்ரஹம் ரூபம் வக்ஷ்யேஹம் ச்ருணு ஷண்முக ॥

மூவகைத் துன்பங்களும் விலகவும், நல்லோர்கள் அருள்பெறவும் நான் சண்டேசாநுக்ரஹரின் உருவமைதியை, அறுமுகனே! நான் சொல்லக் கேட்பாயாக. 2

2. சண்டேசாநுக்ரக ரூப லட்சணம் :

சண்டேசாநுக்ரகரின் உருவமைதி.

வாமார்த்தே ஜம் த்ரிநேத்ரம் ச ஜடாமகுட விராஜிதம் ।
டங்க க்ருஷ்ண ம்ருகஞ்சைவ விப்ராணம் ஹஸ்தயோஸ்ததம் ॥

தக்ஷிணே லம்பிதம் பாதம் சயநம் வாம பாதகம் ।
வாமே கௌரீ ஸமாயுக்தம் உத்துங்கஸவ்ய ஹஸ்தகே ॥

𑌵𑌾𑌮𑌂 𑌭𑍁𑌜𑌂 𑌨𑌿𑌵𑍇𑌶𑍍𑌯𑌾𑌥 𑌆𑌸𑌨𑍇 𑌕𑍍𑌷𑍌𑌮𑌸𑌂𑌪𑍁𑌟𑍇 ।
𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌂 𑌚 𑌨𑍀𑌲𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌨𑌿𑌭𑌪𑍍𑌰𑌭𑌾𑌮𑍍 ॥
𑌕𑌿𑌰𑍀𑌟𑌮𑌕𑍁𑌟𑍋𑌪𑍇𑌤𑌾𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌰𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌾𑌮𑍍 ।
𑌵𑍃𑌷𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌂 𑌮𑌹𑌾𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌮𑍍 ॥
𑌪𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌵𑌾𑌮𑌕𑌰𑍍𑌣𑍇 𑌤𑍁 𑌭𑌾𑌲𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌉𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ।
𑌭𑍁𑌜𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌉𑌦𑍍𑌧𑍃𑌤𑌾𑌂 𑌮𑌾𑌲𑌾𑌂 𑌚𑌣𑍍𑌡𑌸𑍍𑌯 𑌕𑍇𑌶𑌧𑌾𑌰𑌿𑌣𑌮𑍍 ॥

சதுர்புஜம் த்விநேத்ரம் து ஜடாஜூட விராஜிதம் l
டங்க க்ருஷ்ண ம்ருகம் சைவ வித்ரும ப்ரபசப்யுகம் ll

சுவாமி லட்சணம்: இறைவர் உருவமைதி :

நாற் கரங்களும்; முக்கண்ணும்; சடைமுடி அழகரும்; மழு; கருநிறமான் இவை ஏந்தியவரும்; மின்னொளி என மிளிர்பவரும்;

தக்ஷிணே லம்பிதம் பாதம் சயனம் வாமபாதகம் l

வலது திருவடியினைத் தொங்கவிட்டு, இடத் திருவடியை மடித்தமர்ந்தவரும்;

வாமே கௌரீ சமாயுக்தம் உத்பலம் சவ்ப ஹஸ்தகே ll
வாமம் புஜம் நிவேச்யாத ஆசனே க்ஷௌம சம்புடே l
குஞ்சிதம் தட்சிணுங்க்ரீம் ச நீலாம்புநிபஸங்நிபாம் ll
கிரீடமகுடோபேதாம் சித்ரவஸ்த்ரை ரலங்க்ருதாம் l

இடப்புறம் கௌரியோடு கூடியவர்;

கௌரிலட்சணம் : வலக்கரத்தில் நீலோற்பலமலர் தாங்கியவள்; இடக்கரத்தை பொன்னாசனத் தூன்றியவள்; வளைந்த வலப்பாதமுடையவள்; [இடப்பாதம் தொங்குவதாய் அறிக]; பூவேலைப்பாடுகளுடைய வஸ்திரமணிந்தவள்;

வ்ருஷப்ஸ்தம் மஹாசாந்தம் முக்தாகுண்டல மண்டிதம் ll
பத்ரந்து வாமகர்ணே து பாலநேத்ரம் உதாஹ்ருதம் l
புஜாப்யாம் உத்ருதாம் மாலாம் சண்டஸ்கங்கேச தாரிணம் ll

இறைவர் உருவம் (தொடர்ச்சி)

இடபத்தையுடையவரும்; பேரமைதி ததும்பும் முகமுடையவரும்; வலக்காதில் முத்துக்குழையும்; இடக்காதில் தொங்கும் தோடும் (பத்ரகுண்டலம்) கொண்டவரும்; நெற்றியில் கண்ணுடையவரும்; இரு கரங்களால் எடுத்த மாலையை சண்டரின் பிடரியில் சூட்டுபவராயும் கொள்க.

சண்டேசர் உருவமைதி : சண்டேச லட்சணம் :

𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌂 𑌶𑍁𑌕𑍍𑌲𑌵𑌰𑍍𑌣𑌂𑌚 𑌶𑍁𑌕𑍍𑌲𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌿𑌨𑌮𑍍 ।
𑌕𑌿𑌰𑍀𑌟 𑌮𑌕𑍁𑌟𑍋𑌪𑍇𑌤𑌮𑍍 𑌅𑌂𑌜𑌲𑍀𑌕𑌰𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ॥
𑌨𑌤𑍇𑌨 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌾𑌚 𑌤𑌥𑌾 𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 ।
𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌦𑍍 𑌵𑌿𑌧𑌿𑌵𑌤𑍍 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌶𑍃𑌣𑍁 𑌷𑌣𑍍𑌮𑍁𑌖 ॥

த்விபுஜம் சுக்லவர்ணம் ச சுக்லயஜ்ஞோபவீதினம் ।
கிரீடமகுடோபேதம் அஞ்சலீகரசம்யுதம் ॥
நதேந மூர்த்நாச ... ...

இரு கரங்களையும் கூப்பிய நிலையிலுள்ளவர்; வெண்ணிறத்தர் வெண்ணிறப் பூணூல் அணிந்தவர்; கிரீட மகுடங்கொண்டவர்; வணங்கிய முடியுடையர்;

... ததா பக்தாநுக்ரஹ காரகம் ।
கல்பயேத்விதிவத் பச்சாத் ப்ரதிஷ்டாம் ச்ருணு ஷண்முக ॥

அவ்வாறு பக்தானுக்ரகமூர்த்தியை முறைப்படி அமைக்க. இதன் பின்னர் பிரதிட்டை செய்யும் முறையை அறுமுகனே! கேட்க.

3. சண்டேசாநுக்ரஹப்ரதிஷ்டா - சண்டேசாநுக்ரகரை நிறுவல்

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌯𑌨𑌕𑍇 𑌨𑌶𑌸𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌂 𑌚𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌯𑌣𑍇 ।
𑌪𑍁𑌷𑍍𑌯𑌾𑌦𑌿𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌶𑍁𑌭𑌂 𑌕𑍁𑌮𑍍𑌭𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌮𑍍 ॥
𑌅𑌷𑍍𑌟𑌬𑌨𑍍𑌧𑌨𑌹𑍀𑌨𑍇 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌮𑌾𑌸𑍇 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑍇 ।
𑌦𑍍𑌵𑍇𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌾 𑌤𑌡𑌿𑌤𑍇 𑌚𑍋𑌰𑍇 𑌵𑌿𑌦𑍍𑌵𑌰𑍇 𑌦𑍇𑌵𑌤𑌾𑌗𑍃𑌹𑍇 ॥

தட்சிணயநகே நசஸ்தே ப்ரசஸ்தம் சோத்தராயணெ ।
புஷ்யாதி ஜ்யேஷ்ட பர்யந்தம் சுபம் கும்பம் விநாசம் ॥
அஷ்டபந்தன ஹீநெது சர்வமாஸே ப்ரசஸ்யதே ।
த்வேச்சக்ரா தடிதே சோரே விட்வரே தேவதாக்ருஹே ॥

தட்சிணயனம் விதிக்கப்படவில்லை. தைமுதல் ஆடிவரையிலுமான காலத்தில் அசுபமான மாசி(கும்பம்)யைத் தவிர்த்து உத்தராயணத்தின் மற்றப்பகுதிகளில் செய்க. அஷ்டபந்தனம் பழுதுற்றாலும், இடிவீழ்ந்தாலும், திருட்டு நேரிட்டாலும், கோயில் பழுதடைந்தாலும் எல்லா மாதங்களிலும் விதிக்கப்பட்டது.

𑌉𑌤𑍍𑌸𑌵𑍇𑌶𑍍𑌵𑌰 𑌬𑍇𑌰𑌾𑌦𑍀𑌨𑍍 𑌜𑍀𑌰𑍍𑌣𑍇 𑌵𑌾 𑌨𑌵𑌨𑍇𑌽𑌪𑌿 𑌵𑌾 ।
𑌉𑌤𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 𑌵𑌿𑌹𑌿𑌤𑍇 𑌕𑌾𑌲𑍇 𑌨𑌯𑌨𑍋𑌨𑍍𑌮𑍀𑌲𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌮𑍍 ॥
𑌜𑌲𑌾𑌧𑌿𑌵𑌾𑌸𑌨𑌂 𑌚𑍈𑌵 𑌰𑌤𑍍𑌨𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌶𑍁𑌭𑌂 𑌵𑌿𑌨𑌾 ।
𑌶𑍇𑌷𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌃 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 𑌸𑍍𑌨𑌪𑌨𑌂 𑌵𑌿𑌨𑌾 ॥

உத்சவேச்வர பேராதீன் பிலேவா கநநேபிவா ।
உத்தாப்ய விஹிதெ காலே நயநோன்மீலனக்ரியாம் ॥
ஜலாதிவாசநம் சைவ ரத்னந்யாசம் சுபம்விநா ।
சேஷம் பூர்வவதாசார்ய: காரயேத் ஸ்நபனம் விநா ॥

பழுதடைந்து புதுப்பிக்கப்பட்ட உத்சவ மூர்த்திகளை புதுப்பிக்கப் படச்செய்த தாழ்ந்த இடத்திலிருந்து உரியகாலத்தில் மேலெழுப்புக. கண்திறத்தல்; நீர்ப்படை; ரத்னம் உள்வைத்தல் ஆகியவற்றைத் தவிர்த்து, ஆசார்யன் மந்திரத்துடன் கூடிய குடமுழுக்கினை (மற்ற அங்கங்களுடன்) முன்கூறியதுபோல் நடத்துவிக்க. 12-13

𑌸𑌮𑌾𑌸𑍇 𑌬𑍀𑌜𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍇 𑌷𑍋𑌡𑌶𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑍇𑌦𑌿𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌾𑌥 𑌦𑌶𑌕𑍁𑌮𑍍𑌭𑌂 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍𑌤𑌤𑌃 ॥
𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌘𑌟𑌾𑌨𑍍 𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑍋𑌰𑌣𑌾𑌨𑍍 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌙𑍍𑌗𑌲𑌾𑌨𑍍 ।
𑌜𑌲𑌾𑌧𑌿𑌵𑌾𑌸𑌨𑌂 𑌚𑍈𑌵 𑌨𑌯𑌨𑍋𑌨𑍍𑌮𑍀𑌲𑌨𑌂 𑌤𑌥𑌾 ॥
𑌯𑌾𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌸𑌮𑌾𑌰𑌾𑌧𑍍𑌯 𑌶𑌯𑌨𑌾𑌰𑍋𑌹𑌣𑌂 𑌪𑍁𑌰𑌾 ।
𑌵𑍇𑌦𑌿𑌕𑌾𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 𑌚𑍈𑌵 𑌅𑌰𑍍𑌚𑌯𑍇𑌤𑍍𑌤𑍁 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 ॥

சமாஸே பீஜநட்சத்ரே ஷோடச ஸ்தம்ப சம்யுகம் ।
மத்யே வேதிம் ப்ரகல்ப்யாத தசகும்பம் ந்யஸேத்தத: ॥
பரிவார கடாந் ந்யச்ய தோரணாசன் சஸ்திர மங்கலான் ।
ஜலாதிவாசநம் சைவ நயநோந்மீலநம் ததா ।
யாகேச்வரம் சமாராத்ய சயனரோடணம் புரா ॥
வேதிகா மத்யமே சைவ அர்ச்சயேத்து யதாவிதி ॥

உரிய மாதம்; உரிய நட்சத்திரம் (விண்மீன்) கூடிய நாளில் பதினாறு தூண்களையுடைய (யாகசாலையின்) நடுவில் வேதிகையை அமைக்க. அதில் பத்து கும்பங்களையும் பரிவார கும்பங்களையும், மங்கல ஆயுதங்கள் ஒளிரும் தோரணங்களையும் அமைக்க. புதிய சிலை உருவத்திற்கு நீர்ப்படை செய்வித்தல்; விழிதிறத்தல் முதலியன செய்க. யாகேஸ்வரரைப் பூசித்து சயனத்திலேற்றுக வேதிகை மத்தியிலும் முறைப்படி பூசிக்க.

𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍁𑌚𑍍𑌚𑌾𑌰𑍍𑌯 𑌅𑌮𑌮𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌾𑌯 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌨𑌮𑍋𑌨𑍍𑌤𑌂 𑌅𑌰𑍍𑌚𑌯𑍇𑌤𑍍 𑌤𑌤𑌃 ॥
𑌪𑌞𑍍𑌚𑌾𑌵𑌰𑌣𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣 𑌪𑍂𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 ।
𑌵𑌾𑌯𑌵𑍍𑌯𑍇 𑌵𑍇𑌦𑌿𑌕𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑌕𑌂 𑌦𑌶𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ॥
𑌭𑍋𑌗𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌸𑌮𑌾𑌵𑌾𑌹𑍍𑌯 𑌪𑍂𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 ।
𑌅𑌗𑍍𑌨𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌤𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌹𑍋𑌮𑌯𑍇𑌦𑍁𑌕𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌰𑌤𑌃 ॥

ப்ரணவம் பூர்வமுச்சார்ய அமமித்யாட்சரம் பவேத் ।
நீலகண்டாய இத்யேதே நமோந்தம் அர்ச்சயேத் தத: ॥
பஞ்சாவரண மார்க்கேண பூஜயித்வா யதாவிதி ।
வாயவீயே வேதிகாம் க்ருத்வா கரகம் தசவிந்யஸேத் ॥
போகசக்திம் சமாவாஹ்ப பூஜயித்வா யதாவிதி ।
அக்னிகார்யந் தத: க்ருத்வா ஹோமயே துக்தமாத்ரத: ॥


முதலில் ப்ரணவத்தை (ஓம்) உச்சரிக்க. அதன்பின் (அமம்) எனும் ஒலியைச் சேர்க்க. ''நீலகண்டாய'' எனச் சேர்த்து, பின் ''நம'' எனும் முடிவைக் கொள்க. பஞ்சாவரண முறையில் விதிப்படி பூசிக்க. வடமேற்கில் வேதிகை ஒன்றை நிறுவி பத்துக் கரங்களை அமைக்க. (அவற்றில்) போக சத்தியை நிலைபெறுவிக்க. உரிய முறையில் பூசிக்க. சொல்லப்பட்ட (போகசக்தி) மந்திரத்தால் (அக்னியில்) ஹோமம் செய்க. *17, 18, 19*

𑌸𑍁𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌸𑍁𑌲𑌗𑍍𑌨𑍇𑌽𑌪𑌿 𑌘𑌟𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌨𑍍 𑌭𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 𑌤𑌤𑍍𑌰 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂 𑌦𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 𑌤𑌤𑌃 ॥
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌂 𑌪𑍂𑌜𑌯𑍇𑌤𑍍 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌵𑍈𑌵𑌾𑌹𑍍𑌯 𑌕𑍍𑌰𑌮𑌂 𑌆𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌏𑌵𑌂 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌵𑌿𑌧𑌿𑌨𑍈𑌵 𑌸 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ॥

சுமுகூர்த்தே சுலக்னேபி கட ஸ்நாநம் சமாசரேத் ।
ப்ராம்மணான் போஜயேத் தத்ர தக்ஷிணான் தாபயேத் தத: ।
ஆசார்யம் பூஜயேத் பச்சாத் வைவாஹ்ய க்ரமம் ஆசரேத் ॥
ஏவம் க்ரமேண விதிநைத் ச புண்யாம் கதிமாப்னுயாத் ॥

நல் வேளையிலும் நல்லோரையிலும் குடமுழுக்கைச் செய்க. அந்தணர்கட்கு அன்னமிட்டு பொருளும் வழங்குவிக்க. பின்னர் (குடமுழுக்கினைச் செய்வித்த) ஆசார்யனைப் பூசித்திடுக. பின் திருமண உற்சவம் செய்விக்க. இவ்வாறு முறையுடன் செய்வோர் புனித கதியினைப் பெறுவாராக. *20. 21*

சண்டேசானுக்கிரக மூர்த்தி



கங்கைகொண்டசோழபுரம் ஸ்ரீ பிரகதீஸ்வரர் ஆலயம் – சோழர் காலம் கி. பி. 11–ஆம் நூற்றாண்டு.

சண்டேசானுக்கிரக மூர்த்தி - சிற்பங்களின் விளக்கம்

[கங்கைகொண்ட சோழபுரம் சண்டேசானுக்கிரகமூர்த்தி சிற்பம்]

சரித்திரச்செய்தி :

பிற்காலச் சோழர்களில் விசயாலயன் காலம் முதல் முதலாம் இராசராசன் காலம் முடிய (கி. பி 846 - 1014) பத்துத் தலை முறைகள் தஞ்சாவூர் சோழமன்னர்களின் தலைநகரமாய்த் திகழ்ந்திருந்தது. இராசராசசோழனின் மகனான முதலாம் இராசேந்திர சோழன் அடிக்கடி தில்லைப்பெருமானைத் தரிசிப்பது வழக்கம். மழைக் காலங்களிலெல்லாம் கொள்ளிடப் பேராறு தடையாய் இருத்தலை அறிந்து சோழநாட்டின் நடுப்பகுதியில் தலைநகரை அமைக்க எண்ணம் கொண்டான். ஆகவே " கங்கை கொண்ட சோழபுரம் " இராசேந்திரன் காலம் முதல் சோழர்களின் தலைநகரமாயிற்று. பெருமை மிக்க தந்தையான முதலாம் இராசராசனின் (தஞ்சைக் கோயிலை எடுப்பித்தவன்) திறமைமிக்க மைந்தனாக கி. பி 1012 முதல் 1044 வரை நல்லாட்சி புரிந்தான்.

கோயிலின் அமைப்பு ,

கங்கை கொண்ட சோழேச்சரம் என்னும் பெரிய இக் கோயில் ஊரின் நடுவே கிழக்கு நோக்கி ஆறு ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இரண்டு நுழைவாயில்கள் இருக்கின்றன, திருச்சி – சிதம்பரம் சாலையிலிருக்கும் வடக்கு வாயிலும், மொட்டைக் கோபுரமாகக் காட்சியளிக்கும் கிழக்கு வாயிலும் உள்ளே செல்லும் இருவழிகளாகும். கிழக்குக் * கோபுரத்தின் இருமருங்கிலும் துவார பாலகர்கள் காணப்படுகின்றனர்.

இவ்வாயிலைத் தாண்டி நாம் உள்ளே வந்தால் பரந்த புல்வெளி கொண்ட 584 அடி நீளமும் 372 அடி அகலமும் கொண்ட வெளிப்பிரகாரம் தெரிகின்றது. வடக்குச் சுவரின் உட்பகுதியின் மட்டும் திருமாளிகைச் சுற்று எஞ்சியுள்ளது. மதிற்சுவரின் மேற்கிலும் தென் கிழக்கிலும் அரண்கள் (Bastions) பீரங்கி மேடைக்கு பொருந்துவதாய் அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

---

* *தற்காலத்தில் மொட்டைக் கோபுரத்தின் முன்பாக அகழ்ந்தபோது இருமருங்கிலும் இரு சிறு கோயில்களின் (கணபதி, முருகன்) அடிப்பகுதி காணப்படுகிறது. 1856ல் இக்கோயிலின் மதிற்சுவரின் கற்கள் (அணைக்கரை) கீழ்அணை கட்ட எடுக்கப்பட்டன.*

* நந்தி :

மூலவரின் சந்நிதிக்கு எதிரே திறந்த வெளியில் அதிகார நந்தி சிறிதளவே உயர்ந்த மேடையில் 15 அடி நீளமும், 8 அடி அகலமும் 11 அடி உயரமும் உடையதாய் கருங்கற்களால் கட்டப்பெற்றதாய் சுதை வேலைப்பாடுகள் கொண்டதாய்ப் பிரம்மாண்டமான தோற்றத்தோடு விளங்குகிறது.

மகாமண்டபம் :

பிரதானக் கோயிலின் தெற்கிலும் வடக்கிலும் டடிகள் உள்ள வாயில்கன் காணப்படுகின்றன. இக்கோயிலின் மகாமண்டபத்தில் 158 சுற்றூண்கள் உள்ளன. இம்மண்டபத்தின் நீளம் 175 அடி, அகலம் 95 அடி ஆகும்.

அர்த்தமண்டபம் :

மகாமண்டபத்தைக் கடந்து அர்த்தமண்டபம் விளங்குகின்றது. எட்டு பெருந்தூண்களைக் கொண்டதாகும். தூண்களின் மேற்புறம் 53 வகையான பரத நாட்டிய அபிநய சிற்பங்கள் அழகாக வடிக்கப் பட்டுள்ளன. இந்த மண்டபத்தில் துவாரபாலகர்கள், விநாயகர்கள், சரஸ்வதி, நந்தி, பலிபீடம், முன்பு தட்சிண, உத்திர கைலாயக் கோயில்களில் வெளிப்பிரகாரத்தில் இருந்த இலிங்கம் அம்மன் திருவுருவம் ஆகியவை எருந்தருளச் செய்யப்பெற்றுள்ளன. மேலும் இம்மண்ட பத்தின் மேற்கு நோக்கிய சுவர்மீது உட்புறமாக ஆறு சிற்பங்கள் காணப்டடுகின்றன. அவை விஷ்ணு அனுக்கிரஹ மூர்த்தி, மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கலியாணம், இராவணன் கயிலையினைப் பெயர்த்தல், மார்க்கண்டேயர் வரலாறு, சண்டேசுவரர் வரலாறு, தேவி அனுக்கிரக மூர்த்தி ஆகியவைகளாகும்.

மூலவர் மூலலிங்கம் :

கருவறையில் மூலமூர்த்தியாகிய ஸ்ரீ பெருவுடையார் சிவலிங்கத் திருமேனியாக பெரிய திருவுருவாகக் காட்சி தருகின்றார். ஆவுடை என்ற பீடத்தின் சுற்றளவு 60 அடி, ஆவுடைக்கு மேல் காணப்படுகின்ற பாணத்தின் சுற்றளவும் உயரமும் 16½ × 13½ எனவும் சொல்லப்படும். கருவறையின் சுவரில் ஒரு வகை சந்திரகாந்தக்கல் அமைந்திருப்பதால் எப்போதும் குளிர்ச்சியாக இருக்கும். இலிங்கத்தின் மீது எப்போதும் ஒளியின் பிரதிபலிப்பு பகல் முழுவதும் வியாபித்திருத்தல் அக்காலத்துப்

---

* இது போன்று திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயில் நந்தியினைத் தனித்தனி கருங்கற்களால் கட்டியமைத்துள்ளனர். இதற்கு விசேட நாள்களில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். இதனை விசுவரூப நந்தி என்பர். இதுவே நந்தித்தலமாகும்.

பொறியியல் சிறப்பாகும். கருவறையின் மேற்பகுதியில் காணப்படும் விமானம் 8 அடுக்குகளைக் கொண்டது, இது 180 அடி உயரமுடைய தாகும், செப்புக் கலசத்தின் உயரம் 7 அடியாகும், "தஞ்சைப் பெரிய கோயில் ஆண்மையின் கம்பீர நிலை உடையது, கங்கை கொண்ட சோழபுரம் கோயில் பெண்மையின் மென்மை மிளிர்கின்றது" என்று பெர்சிப்ரோன் கூறுவது இங்குக் குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும்.

கோஷ்டத் திருவுருவங்கள்

கருப்பக்கிருகச்சுவரில் அமைந்து விளங்கும் சுற்றுச் சுவரின் வெளிமாடங்களில் கலையின் செறிவாகப் பல சிற்பத் திருவுருவங்கக எழிலோடு விளங்குகின்றன.

கருவறையின் வெளியே தெற்குச் சுவர் அறைகளில் - நர்த்தன விநாயகர், அர்த்தநாரீஸ்வரர், தட்சிணாமூர்த்தி, சங்கர நாராயணர், நடராசர் உருவங்களும், மேற்சுவரில் - கங்காதரர், இலிங்கோற்பவர், ஸ்ரீதேவி பூதேவி சமேத திருமால், கார்த்திகேயர், உமாமகேஸ்வரர் உருவங்களும் வடக்குச் சுவரில் - காலசம்ஹார மூர்த்தி, எட்டுத் திருக்கரங்களுடன் விஷ்ணு துர்க்கை, சாவித்திரி சரஸ்வதி சமேத பிரமன், கால பைரவர், காமதகனமூர்த்தி ஆகிய சிவ மூர்த்தங்களும் காணப்படுகின்றன. தெற்கு கர்ண துவாரபடிக்கட்டுகளில் எதிரும் புதிருமாகப் பிட்சாடனரும் கஜலட்சுமியும் அமைந்துள்ளனர்.

வடக்குக்கர்ண துவார படிக்கட்டுகளில் எதிரும் புதிருமான சண்டேசாநுக்ரக மூர்த்தி (கிழக்கு நோக்கியது) யும். ஞான சரஸ்வதி (மேற்குநோக்கியது) யும் அமைந்தள்ளனர் இவ்வாறாக 19 தேவ கோஷ்ட்ட மாடங்களிலும் அமைந்து குப்பஞ்சரங்களைக் கொண்டு எழில் மிகு சோழர்காலச் சிற்பக் கலைப்பாணிக்குக் கட்டியம் கூறுவதாக விளங்குகின்றன.

காண்போர் உளங்கவர் சண்டேசானுக்ரகமூர்த்தி சிற்பம் :

இத்திருக்கோயிலின் கோஷ்ட வெளிச்சுற்று மாடங்களில் திகழும் 19 கலைத்திருவுருங்களில் மிகவும் சிறப்புடையது சண்டேசானுக்ரகமூர்த்தி சிற்பமாகும். இத்திருவுருவத்தினை * அஷ்டாஷ்ட மூர்த்த தியானத்தில் "பிக்ஷ டாந்து சிம்ஹக்நம் சண்டேஸ்வரப்ரஸாதகம்" என்றும் பஞ்ச விம்சதி மூர்த்த தியானத்தில் "சப்தோத்ர சதகம் சண்டேசானுக்ரஹந்ததா" என்றும் பாம்பன் சுவாமிகள் அருளிய அட்டாட்ட விக்ரகலீலையில்

---

* அஷ்டாஷ்ட மூர்த்ததியானம், பஞ்சவிம்சதி தியானம், அட்டாட்ட விக்ரலீலை தியானம் முதலியன ஆதீனவெளியீடு எண் 407 (பக்கம் 1-4) சோமாஸ்கந்தர் நூலில் (S. நாராயணசுவாமி எம், ஏ. பி. எட், காண்க.)

" சந்திர சேகரம் அர்த்தநாரீசுரம் சக்கரப் பிரதானம்
தட்சிணாமூர்த்தம் இலிங்கம் லிங்கோற்பவம் தட்சயக்கிய பங்கம்
சந்தியில் நிர்த்தனம் சந்தத நிர்த்தனம் சண்டேசாநுக்ரகம்

என்று கூறப்பட்டுள்ளன

சண்டேசுவரர் (விசார சருமர்) தனது தந்தையின் இருகால்களையும் தடிந்த பிறகு சிவத்தியானத்தோடு சிவபூசையினை மீண்டும் தொடர்ந்த போது சர்வ லோக நாயகனாகிய சிவபிரானும் உமையும் வெளிப்பட்டு (உமாசகித மூர்த்தி) தமது சிரத்தை அலங்கரித்த இண்டை மாலையினைத் தமது கரத்தால் எடுத்து, சண்டேசுவரரின் திருமுடியில் சூட்டும் காட்சியே * சண்டேசாநுக்ரக மூர்த்தி திருவுருவமாகும்.

திருவுருவமைதியில் உமையழகு :

நீண்ட பத்ர பீடத்தில் வலப் பக்கம் விளங்கும் சிவபெருமான் வலக்காலை மடித்தும் இடக்காலை தொங்கவிட்டும் (பாதத்தினைத் தாமரை தாங்கியுள்ளது) சுகாசனமாக எழுந்தருளியுள்ளார். சிவனாரின் இடப்பால் கரண்டமகுடம் அணிந்து, இருச்சரங்களுடன் உமையானவள் உத்குடி காசனத்தில் (வலக்காலை குத்திட்டும், இடக்காலை கீழ் நோக்கிய படி தொங்கவிட்டிருத்தல்) மிகுந்த அடக்கத்துடன் கீழ் நோக்கிய பார்வையுடன் அமர்ந்துள்ளாள்

* வலக்கரம் கடகமுத்திரையினைக் கொண்டுளது (மலரினை ஏந்தியிருக்கும் பாவனையில் அமைந்ததுவே கடகமுத்திரையாகும்) வலக்கால் முட்டியின் மீது பொருந்த, இடத்தொடையின் மேற்பகுதியில் தனது இடக் கரத்தினை பதித்து வைத்துள்ளாள். அம்பிகையின் கழுத்தில் சவடி, சரப்பளி, வாகுமாலை, தோள்வளை, சூடகம், விளங்குகின்றன. கால்வில் - காப்புகள் உள்ளன. காதுகளில் - குதம்பையணியும் காணப்படுகின்றது. அம்பிகையின் மார்பில் யக்ஞோபவீதமும் காணப்படுகிறது. உமையம்மை சர்வாலங்காரம் பொருந்தியவளாகக் காட்சிதருகின்றாள்.

சிவனுடைய திருவுருவமானது சுகாசனமாக எழுந்தருளி விளங்கினாலும். நேராக அமைந்து விளங்காமல் திருமேனி சற்று வலப்பக்கம் திரும்பினாற் போன்று அமைந்துளது அமர்ந்த நிலையில்

---

* அநுக்ரகமூர்த்தியில் பல நிலைகள் உண்டு 1, சண்டேசாநுக்ரக மூர்த்தி. 2, விஷ்ணு அநுக்ரக மூர்த்தி, 3. நந்தீசாநுக்ரகமூர்த்தி, 4, விக்னேஸ்வர அனுக்ரக மூர்த்தி, 5. பாசுபதாநுக்ரகமூர்த்தி, 6, இராவணாநுக்ரகமூர்த்தி. என்பன அவை

* கடகமுத்திரையில் மலர் காணப்படவில்லை. மேலும் அம்பிகையின் கை கால் தோள் ஆகியன சர்வேஸ்வரனை ஒட்டி அமைந்தவாறு சிற்பம் விளங்குதல் நோக்கத்தக்கது.

விளங்கும் சிவனரின் திருமுகப் பொலிவானது சற்றுகீழ் நோக்கிய வாறு எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிய தோற்றத்தோடு அருள் பொதித்துளது.

இப்பெருமானுக்கு நான்கு திருக்கரங்கள் உள்ளன. பின் இருகரங்கள் முறையே வலப்பால் பரசு ஆயுதமும் இடப்பால் மிருக முத்திரையான மானும் விளங்குகின்றன. முன் இருகரங்களான வலக்கரம் இண்டை மாலையின் ஒருமுனையினைத் தாங்கி ஏந்திய நிலையிலும், இடக்கரம் சண்டேசுவரரின் திருமுடியின் மீது பதித்த நிலையிலும் காணப்படுகின்றன.

சிவனரின் அணிகலன்கள் :

நெற்றிப்பட்டையுடன் (லலாடம்) கூடிய ஜடாமகுடமானது மிக நுண்ணிய வேலைப்பாடுகளுடன் விளங்கின்றது. அதில் யாளிரூபத்துடன் கூடிய பத்ரபூரிமமும் விளங்குகின்றது. கேசங்களின் கற்றைகள் யாவும் தனித்தனியாக (சீவினற் போன்று) விளங்குகின்றன. ஜடாமகுடத்தின் இடப்பால் சந்திரபிறை காணப்படுகிறது. சூரியசந்திரனகிய கண்களும் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. இதில் மூன்ருவதாக எண்ணப்படும் நெற்றிக்கண்ணும் இருப்பதாகக் கொள்ள வேண்டும்.

செவிகளில் காதோலையும் கழுத்திலும் மார்பிலும் மணிவடம், கண்டாபரணம், காரை, முத்தாரம் (மணியாரம்) ஆகியவையும் அணிகளன்களாக அமைந்துள்ளன. தோளில் – பாகுமாலை, புஜங்களில் தோள்வளை, கரங்களில் காப்புகள், விரல்களில் மோதிரங்கள் மார்பில் – யக்ஞோப வீதம், (யக்ஞோப வீதத்தின் நடுப்பட்ட ரி மணி கோக்கப்பட்டது போன்றுள்ளது) காணப்படுகின்றன. இடப்பக்க மார்பின் மேற்பகுதியில் பூனூலின் பிரம்ம முடிச்சும் உள்ளது. கொப்பூழ் மேற்பகுதி (இடுப்பு) யில் உதர பந்தமானது மூன்று வரிசளாக (மணிகள் கோத்தது போல்) உள்ளது. இடுப்பு ஆடையானது சிற்பத்தில் மறைந்து உள்ளது. காலில் சிலம்பு, அல்லது கொலுசும், தண்டையும் விளங்குகின்றன.

பின் இரு கரங்களில் மூம்மூன்று காப்புகளும், முன் இரு கரங்களில் இரண்டிரண்டு காப்புகளும் அமைந்து காணப்படுகின்றன, முன் வலக்கரம் மலர் மாலையின் ஒரு முனையினை ஏந்தியபடி சண்டேசுவரரின் திருமுடியில் சுற்றும் பாவனையில் (பிரதட்சனமாக சுற்றுதல்) அமைந்துளது. முன் இடக்கரம் சண்டேசுவரரின் திருமுடியில் தமது விரிந்த விரல்களைப் பதித்தவாறு காணப்படுகிறது "செம்மேனியம்மானகவும் பரம கருணை மூர்த்தியாகவும் பரமேஸ்வரன்" இப்படியும் அநுக்ரகிரகித்தல் உண்டு என்பதனை பாருலகிற்கு உணர்த்தும் வகையில் சண்டேசுவரர்க்கு சிவப் பொலிவினேடுகூடிய சண்டேசப்பதம் அருளுகின்ருர்.

சண்டேசுரர் திருவுரு :

சண்டேசுரரர் பத்ர பீடத்தின் கீழ்ப்பகுதியில் (சிவனுரின் கீழ்) இருகால்களையும் மடக்கியும் இருகரங்களால் அஞ்சலி ஹஸ்தமாக மார்பிலே பதித்தும், காணப்படுகின்றார். கழுத்தில் உருத்திராக்க மாலையும்கண்டா பரணமும், உள்ளன புஜத்தில் தோள்வளை கரங்களில் மும்மூன்று காப்புகள் அணிகளன்களாக அமைந்து காணப்படுகின்றன. இவரது காதுகளில் மலரினைப்போன்ற காதணிகள் உள்ளன. தமது ஜடா மகுடத்தில் பெருமானுல் சூட்டப்படும் இண்டை மாலையில் சூரியன் போன்ற வடிவினை உடைய மலர்கள் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன.

சண்டேசுவரர் சிவகணங்களுள் தலைமையானவராகவும் பெருமானது திருக்கோயில்களில் தாமே நிருவாகம் செய்தருளும் அதிகாரத்தை உடையவராகவும், பெருமானுக்குச் சமர்ப்பிக்கப்படும் பட்டுப்பரிவட்டம், மாலை* நைவேத்யம் முதலியன யாவும் தாமே பெற உரிமை உடையவராகம் இருந்தாலும்; அமைதியின் திருவுருவாகவும், அடக்கத்தின் சிகரமாவும் " சலனமில்லாத் திருமுகத்தோடு சிவத்தியானபரராகவும் அண்ணலின் திருவருளுக்குப் பாத்திரராகவும் தோற்றமளிக்கின்றார். இவர் அதம தசதாளத்தில் விளங்குகின்றார்.

இம்மூவரது திருவுரு அமைதியினை அம்சுமத்பேதாகமம், உத்தர காமிகாகமம், பூர்வ காரணுகமம், சில்பரத்னம் ஆகிய நூல்களில் காணப்பட்டவாறு கங்கை கொண்ட சோழபுரத்துச் சண்டேசாநுக்ரகமூர்த்தி திருவுருவம் அமைந்து காணப்படுகிறது. இத்தகு சிற்ப அழகினை நேரில் காண்பவர் தான் உணர்வர். இதில் பெருமிதம் அடக்கம், பணிவு, அமைதி, அழகு, கம்பீரம் முதலியன யாவும் ஒருங்கே அமைந்துள்ளன.

தில்லை - தெற்கு கோபுரத்தில் சண்டேசானுக்ரகமூர்த்தி :

தில்லை (சிதம்பரம்) ஸ்ரீ நடராசப் பெருமான் திருக்கோயிலில் விளங்கும் கோபுரங்களில் பல்வேறு சிவமூர்த்தங்கள் விளங்குகின்றன. இவ்வாலயத்தின் தெற்கு கோபுரத்தில் x மேற்கு நோக்கியவாறு கீழிருந்து இரண்டாம் அடுக்கு மாடத்தில் சண்டேசானுக்ரக மூர்த்தியின் சிற்பம் ஒன்று காணப்படுகிறது.

சண்டேசானுக்ரகமூர்த்தியின் திருவுருவமைதியினை அப்படியே சிற்பி தன்கைத் திறத்தினுல் பொலிவோடு வடித்துள்ளான். பத்ர பீடத்தில் காட்சிதரும் சிவனும் அம்பிகையும் வீற்றிருக்கும் அழகுத்

---

* *மாலைகளில் பலவிதம் - இண்டை, தொடை, தார், மாலை. கன்னி, முதலியன:*

x *சிதம்பரம் கோபுரத்தில் (மாடப்பகுதியில்) விளங்கும் சிற்பங்களின் இருப்பிடத்தையும் பெயரினையும் "DARASURAM" - பிரெஞ்ச் இண்டாலஜி - பாண்டிச்சேரி - நிறுவன புத்தகத்தில் காணலாம்.*

திருக்கோலம் அப்பகுதியில் விளங்கும் ஏனைய சிற்ப அழகினைக் காட்டிலும் விஞ்சி காணப்படுகிறது. இதில் சுவாமிக்கு மட்டும் பின்னால் திருவாட்சி யமைக்கப்பட்டுள்ளது. பீடத்தின்கீழ் அமர்ந்து விளங்கும் சண்டேசுவரர் மழுவோடு அஞ்சலி முத்திரையுடன் காணப்படுகின்றார்.

*பெருமானானவர் தமது திருக்கரங்களால் இண்டைமாலையினை சண்டேசுவரர் பெருமானின் திருமுடியில் சூட்டுகின்றார். இப்பகுதியில் சிவனாரின் கரங்கள் மற்றும் இண்டைமாலையின் அமைப்பு ஆகியன அபூர்த்தியாகக் காணப்படுகின்றன. ஷ ஆலயத்தில் மற்றைய கோபுரங்களில் சண்டேசானுக்ரசமூர்த்தியின் சிற்பம் காணப்பெறவில்லை. அம்பிகை கடககரத்துடனும் இடக்கரத்தினை ஆசனத்தில் இருத்தியும் (பூஸ்பரிஸ முத்திரை) காட்சி தருகின்றாள். இச்சிற்பத்தொகுதியின் உயரம் சுமார் 4½ அடி ஆகும். சுகாசனமாக அமர்ந்து விளங்கும் பெருமானின் வலப்பாதம் தாமரை மலரில் பதிந்து காணப்படுகிறது.

---

* திருவானைக்கா - ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் ஆலயத்தின் கருப்பக்கிருகம், தெற்குப்பகுதியின் மேலே விளங்கும் கர்ணகூட்டில் உள்ள சண்டேசானுக்கிரகமூர்த்தி சிற்பத்தில் சிவனாரின் முன்னிரு கரங்கள் சண்டேசுவரரின் திருமுடியைப் இறுகப் பற்றிய வாறும் (இண்டைமாலை சூட்டுதல்) சண்டேசுவரர் நின்ற நிலையில் முன்பக்கமாக வளைந்தும் காணப்படுகின்றார். இந்தச் சிற்பம் ஒரு அடிஉயரத்தில் விளங்கும் புடைப்புச் சிற்பமாகும்.

சிவனார் தனித்து அமர்ந்து அருளும் ஏனாதிமங்கலம் — சண்டேசானுக்கிரக மூர்த்தி

தஞ்சை மாவட்டப் - திருவிடைமருதூருக்குத் தென்பால் உள்ள ஏனாதிமங்கலம் எனும் கிராமத்தில் ஸ்ரீ சோமநாத சுவாமி ஆலயம் விளங்குகின்றது.

இத்திருக்கோயிலில் கலை அழகு ததும்பும் கற்சிற்பங்கள் பல கோஷ்ட மாடங்களில் விளங்குகின்றன. ராஜகோபுரம் இல்லை. சுவாமி, அம்பாள் விமானங்கள் காட்சி தருகின்றன. இத்திருக்கோயிலின் சுற்றுப் பகுதிகள் யாவும் சிதிலமாக உள்ளன. இத்திருக்கோயிலில் உள்ள கோஷ்டச் சிற்பங்கள் யாவும் கங்கை கொண்ட சோழபுரத்து சிற்பங்களுக்கு இணையானதாகக் காணப்படுகின்றன.

கருவறையில் சிவலிங்கத் திருமேனி கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கின்றது. தெற்கு நோக்கியபடி அம்பிகை நின்ற கோலத்தில் அருள் வழங்குகின்றாள்.

சண்டேசுவரர் சந்நிதி :


இத்திருக்கோயிலின் வடக்கு ஆவரணத்தில் தனிச் சண்டேசுவரர் சந்நிதி விளங்குகின்றது. சுவாமியினை (மூலவர்) தரிசிக்கச் செல்லும் வடக்கு வாயிற் பகுதியில் (வடக்குஆவரணம்) உள்ள மாடத்தில் மேற்குத் திசை நோக்கியபடி சண்டேசானுக்ரக மூர்த்தியின் எழில்திருமேனியைக் காணலாம். இதற்குப் பக்கத்தில் கலைவாணியின் (சரஸ்வதி) திருவுருவமும் காணப்படுகிறது. கங்கைகொண்ட சோழபுரத்தில் விளங்கும் சண்டேசானுக்ரக மூர்த்தி கிழக்கு நோக்கிய கோஷ்ட மாடத்தில் (சிவன், அம்பிகை, சண்டேசுவரர் உட்பட) விளங்குகின்றார்.

இந்த கோஷ்டமாடத்தில் சிவனும் சண்டேசுவரர் மட்டும் காட்சி தருதல் சிறப்புடையதாகும்.

சிவன் தனித்த நிலையில் சண்டேசுவரர்க்கு அருளும் திருவுருவம் :

சிற்பநூல்களிலும் ஆகமநூல்களிலும் சிவனாரும் அம்பிகையும்விளங்க சண்டேசுவரர் இவர்களுக்குக் கீழ் நின்றோ அல்லது அமர்ந்தநிலையிலோ விளங்குவார். சிவனார் சண்டேசப்பதம் தந்தருளி தம் திருக்கரத்தால் தனது இண்டை மாலையினைச் சண்டேசுவரர்க்கு அணிவிக்கும் காட்சியினை முற்

ஏனுதிமங்கலம் சண்டேசானுக்கிரகமூர்த்தி



தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் வட்டம் ஏனுதிமங்கலம் (பவுண்டரீகபுரம்) ஸ்ரீ சோமநாத சுவாமி ஆலயத்தில் விளங்கும் சண்டேசானுக்கிரக மூர்த்தி, (சிவனுர் தனித்து, சண்டேசுவரர்க்கு சண்டேசபதம் அருளும் காட்சி)

கூறிய நூல்கள் விளக்குகின்றன. இதற்கு கங்கை கொண்ட சோழபுரம் கோயில், மதுரைக் கோயில், சுசீந்திரம், காஞ்சீபுரம் முதலான இடங்களில் உள்ள திருக்கோயில்களில் மேற் சொன்னவாறு சிற்த் திருவுருவமைதி ள் காணப்படுகின்றன.

இவைகளுக்கு மாறாக இத்திருக்கோயிலில் விளங்கும் சண்டேசானுக்ரகமூர்த்தியின் திருவுருவமானது வேறு எங்கும் காணப்படாத அழகின் திருக் கோலத்தினைக் காணும்போது மனம் ஒன்றிவிடும் நிலையினை நாம் உணர்கின்றோம்.

சிவனுர் திருவுரு :

சிவபெருமானின் திருமுடிக்கு மேல் குடை விளங்குகின்றது இப்பெருமான் சதுரமான பத்ர பீடத்தில் சுகாசனமாக எழுந்தருளியுள்ளார் பின் கரங்களில் விளங்கும் மானும், மழுவும் சிதைந்து காணப்படுகின்றன. முன் வலக் கரமானது சிதைந்துள்ளது. முன் இடக்கரமானது சண்டேசுவரரின் சிரத்தை பற்றி (தொட்ட நிலையில்) இருக்கின்றது வலக்காதில் ஒலையும், இடக்காதானது வடிக்காதாகவும் காணப்படுகின்றன. இடுப்பில் விளங்குப் ஆடையானது இரைது தொடை வரை சரிந்துள்ளது. கழுத்தில் – ஏகருத்ராட்சம் கண்டாபரணம் விளங்குகின்றன மார்பில் யக்ஞோபவீதப் (முப்புரிநூல்) ஸ்தன சூத்திரம் விளங்குகின்றன. கால்களில் வீரக்கழல், கொலுசு மற்றும் ஏனைய ஆபரணங்கள் விளங்குகின்றன.

பாதம் முதல் குடைக்கலசம்வரை 114 செ. மீ. சுவாமியின் பத்ரபீடம் 33 செ. மீ. உயரம், அகலம் 36 செ. மீ. உள்ளது சுவாமியின் வலப்பாதம் முதல் திருமுடி வரை 81 செ. மீ. ஜடாமகுடம் 17 செ. மீ. குடையின் முன்வளைவானது 51 செ மீ. உள்ளது.

சண்டேசுவரர் திருவுரு :

சிவபெருமானின் திருவடிக்குக் கீழ் அமர்ந்து விளங்கும் சண்டேசுவரர் அஞ்சலி ஹஸ்தத்துடன் இடப்பக்க மார்போடு அணைத்தபடி உள்ள மழுவோடும் கீழ் நோக்கிய திருக்கண்பார்வையுடனும் சிவாப்சு பொலிவோடும் விளங்குகின்றார். வலதுகாலைக் குத்திட்டு இடக்காலை மடக்கி, முன் உடம்பை மட்டும் திருகியபடி (உடம்போடு திரும்பி நிலை) மேற்கு நோக்கியவாறு திருமுகப் பொலிவுடன் காணப்படுகின்றார். சிரசில் ஜடைகள்யாவும் ஜடாமகுடமாக உள்ளன கழுத்தில் கண்டாபரணம் என்ற ஒரு அணிகலன் மட்டும் அணிந்துள்ளார். காதுகளில் குண்டலங்கள் இல்லாமல் வடிக்காதுகளாக காணப்படுகின்றன. இவரது மணிக்கட்டுகளில் காப்புகளும் கைகளின் மேற்பகுதியில் கெண்டைப் பகுதியில் ஏகருத்ராட்சமும் கட்டப்பட்டுள்ளன.

சிரசில் விளங்கும் ஜடாமகுடத்தில் இண்டைமாலை பாதியளவு மட்டும் காணப்படுகிறது. மாலையின் மற்ற பகுதிகள் சிதிலமாக உள்ளன. சண்டேசுவரப் பெருமான் அமர்ந்த திருக்கோலத்தின் உயரம் 40 செ. மீ (திருமுடி முதல் ஆசனப்பகுதிவரை) அகலம் 36 செ. மீ ஆகும்.

சிவபெருமான் விசாரசருமர்க்கு இண்டை மாலையினை தமது பொற்கரத்தால் அணிந்தும் சிவகணங்களில் முதன்மைச் சிறப்பை இவருக்குக் கொடுத்தும், விளங்கும் இத்திருக் கோயிலின் சண்டேசா னுக்ரக மூர்த்தியின் சிற்பத்திருவுருவின் எழிற் கோலத்தின் சிறப்பை நேரில் காண்பவர் யாவரும் உணர்வர்.

காஞ்சி — சுசீந்திரம்

சண்டேசானுக்ரக சிற்பங்கள்

கி. பி. 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவர்களின் அரிய கலைக் கோயிலாகத் திகழும் காஞ்சிபுரம் – ஸ்ரீ கைலாசநாதர் கோயிலில் விளங்கும் சண்டேசானுக்ரக சிற்பமானது பெரும்பகுதி சிதிலமடைந்து விளங்கினாலும், சிந்திக்க வேண்டிய நிலையில் காணப்படுகிறது.

காஞ்சி சிவனார் திருவுரு :

நின்ற நிலையில் விளங்கும் சிவனாரின் நான்கு கரங்களில் எவ்வித ஆயுதங்களும் காணப்பெறவில்லை. பின் இடக்கரம் சிரசு மட்டத்திற்கு நேராக புறக் கரமாக உள்ளது. பின் வலக்கரம் விரல்கள் யாவும் மடங்கிய நிலையிலும், முன் இடக்கரம் கடககரம் போலவும், முன் வலக்கரம் வரத ஹஸ்தமாகவும் விளங்குகின்றன. கேசங்கள் ஜடா பாரம் போன்று தோன்றுகின்றது. விரிந்து விளங்கும் மார்பில் யக்ஞோபவீதம் எடுப்பாக வுள்ளது. இடையில் வஸ்திரம் விளங்குகிறது கரங்களில் காப்புகள் உள்ளன. இப்பெருமானது இடதுகால் ஓர் உயர்ந்த பீடத்தின் மீது ஊன்றிய நிலையில் உள்ளது. வலக்கால் தரையில் நேராகப் பதித்து விளங்கு கிறது. இதனை நோக்கும் போது ஊர்த்துவஜானு கோலத்தில் அமைந்து இருத்தல் போன்ற நிலையினை உணருகின்றோம்.

சண்டேசுவரர் திருவுரு :

சிவனரது வலப்பக்கம் சண்டேசுவரர், ஜடா பந்தத்துடன் விளங்குகிறார். இவர் தனது தந்தையின் இடக்காலை வெட்டி வீழ்த்திய பின்னர் பரசு ஆயுதத்தினைத் தனது வலத்தோளில் கொண்டவராய்க் காணப் படுகிறார். இடது கரத்தின் விரல்கள் பொருளைப் பிடிக்கும் நிலையில் மடங்கியுள்ளன. தாம் எழுந்த நிலையில் விளங்குகின்றார்.

சண்டேசுவரரின் காலடிப் பகுதியில் "(எச்சதத்தன் ") தந்தை இடக்காலிழந்து சோக முகத்துடன் கண்கள் பிதுங்கி, விஸ்மய கரத்துடன் வலப்பக்கமாகச் சாய்ந்த சிரத்துடன் விளங்குகிறார்.

இத்தகைய சிற்ப அமைதியினை நோக்கும் போது, சில்ப, ஆகம நூல்களில் கூறப்படாத வகையில் சிற்பியின் மனோநிலைக்கேற்ப பல்லவர் காலத்தில் அமைந்த சிற்பக் கலையின் முதல் வடிவாகக் (சண்டேசானுக்ர வடிவம்) இதனைக் கொள்ளலாம். தற்போது இச்சிற்பம் மேலும் அறிய

முடியாத நிலையில் மிகவும் சிதைந்து காணப்படுகிறது. இக்கோயில் மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

சுசீந்திரம்:


சுசீந்திரம் ஸ்தாணுநாதசுவாமி திருக்கோயில் கோபுரத்தின் அடிப்பகுதி மாடத்தில் சிறிய திருவுருவாக சண்டேசாநுக்ரக மூர்த்திச் சிற்பம் விளங்குகிறது

நீண்ட பத்ர பீடத்தில் சிவனும் உமையும் விளங்குகின்றனர். மான் மழு அபயம், கடக ஹஸ்தங்களாக சிவனர் அமர்ந்துள்ளார். அம்பிகை உத்குடிகாசனம் கொண்டு வலக் கரத்தில் மலர் ஏந்தி இடக்கரத்தினை ஆசனத்தில் ஊன்றிய நிலையில் உள்ளாள்.

சுவாமியின் கீழ் சண்டேசுவரர் பத்மாசனத்தில் அமர்ந்து தனது உடலை வலப் பக்கமாக நன்றாகத்திருப்பி (சிவன் பார்க்கும் திசையில்) அஞ்சலி ஹஸ்தத்துடன் மழுவினைக்கரங்களின் இடுக்கிக் கொண்டு ஜடாமகுடத்துடன் விளங்குகிறார்.

கீழ்ப்பகுதியில் கூப்பிய கரத்துடன் அமர்ந்தநிலையில் சண்டேசுவரர் தனி ஆசனத்தில் விளங்குகின்றார்.

மதுரை சண்டேசானுக்கிரகமூர்த்தி



மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயில் - கம்பத்தடி மண்டபத்தில் (நந்தி மண்டபம்) விளங்கும் சண்டேசானுக்கிரகமூர்த்தி,

மதுரைத் திருக்கோயிலில் சண்டேசானுக்ரக மூர்த்தி

மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் சிற்பங்கள் எல்லாம் கவின்மிகு கலைச்சிறப்புக்களையுடையனவாகும். குறிப்பாக பாண்டியர்கள், சோழர்கள், விஜய நகர நாயக்க மன்னர்கள், சேதுபதி மன்னர்கள் செய்த கலைத்திருப்பணிகள் யாவும் சொல்லில் அடங்காச் சிறப்புடையன. இத்திருக்கோயிலில் விளங்கும் கோபுரங்கள், தூண்கள் கோஷ்டமூர்த்தங்கள் மண்டபங்கள் யாவும் நூற்றுக்கணக்கான சிற்பங்களைக் கொண்டு அழகுற விளங்குகின்றன. குறிப்பாக நாயக்கமன்னர்கள் சிவமூர்த்தங்களான இருபத்தைந்து திருவுருவங்களையும் தூண்களில் அபரிமிதமான கலையழகுடன் வடித்துள்ளனர். ஒவ்வொரு சிற்பத்தின் அழகினைக் காணும் போது காண்பவர் தங்களை மறந்து அவ்வழகிலே ஒன்றுபட்டு விடுவர்.

சண்டேசானுக்ரகமூர்த்தி திருவுருவங்களில் – சிவன், உமை, சண்டேசுவரர் இம்மூவரும் விளங்குவார்கள். சிவபெருமான் தனது இண்டை மாலையினை அமர்ந்து விளங்கும் சண்டேசுவரர் அல்லது நின்று விளங்கும் சண்டேசுவரர்க்கு அணிவித்து, சிவகணங்களின் தலைவராகவும் சிவாலயப்பரிபாலனத்தின் முதன்மை அதிகாரியாகவும், சிவனாரின் கட்டளைகளை ஏற்று, அதன்படி அக்கட்டளைகளை நிறைவேற்றி வருபவராகவும் நியமித்துத் தமக்குரிய (சிவனுக்குரிய) சகல உபசாரங்களும் அப்படியே (நிர்மாலியங்களான பூஜாமாலை, பத்திரம், வஸ்திரம் நைவேத்யம் முதலியன) இவருக்குக் கிடைக்கவும் அருள்பாலித்த சிவத் திருக்கோலமே சண்டேசாநுக்ரக மூர்த்தமாகும்.

மதுரைக் திருக்கோயில் மண்டபத் தூண்களில் சிவமூர்த்தங்கள் (பஞ்சவிம்சதிமூர்த்தங்கள்) வரிசையில் மிகவும் போற்றத் தகுந்ததும், வேறு எங்கும் காண முடியாததுமான நின்ற நிலையில் சண்டேசப்பதம் பெறும் சண்டேசுவரர் சிற்பமானது எண்ணிலாக் கலைச் சிறப்புடன் விளங்குகின்றது,

சிவன் திருவுரு :

சிவபெருமானின் திருவுருவம் சுகாசனம் கொண்டு நான்கு கரங்களுடன் நிமிர்ந்த உடலுடன், நேரான பார்வையுடன் ராஜ கம்பீரமான தோற்றத்துடன் காணப்படுகிறது. பின் இரு கரங்களில் மழுவும், மானும் விளங்குகின்றன. இடக்கால் மடங்கியும் வலக்கால் கீழ் நோக்கித் தொங்கியபடியும் உள்ளன.

கழுத்திலும் மார்பிலும் முத்து மாலைகளும் உருத்திராக்க மாலைகளும் பதக்கமும் அணிகளன்களாக அமைந்துள்ளன. இடுப்பிலிருந்து கணுக்கால் வரை அமையும் வஸ்திரத்தின் மேற் பகுதியில் பல மடிப்புகளும் அதில் மணிகளும் காணப்படுகின்றன. முன் இரு கரங்கள் மலர் மாலையினை எடுத்து நின்ற நிலையில் விளங்கும் (சமபாதகஸ்தானம்) சண்டேசுவரர் திருமுடியில் அணிவிக்கும் நிலையில் காணப்படுகிறது.

அம்பிகை உருவம்:

சுவாமியின் இடப்பாகம் சற்று உயரமான பத்ர பீடத்தில் சிறிய வடிவில் கரண்டமகுடத்துடன், வலக்கரத்தில் மலரினைத் தாங்கி, இடக்கரத்தை துடையில் பதித்து, வலக்காலை மடக்கி, இடக்காலைத் தொங்க விட்டு எல்லா ஆபரணங்களையும் தரித்தவளாய் சுவாமியின் திருமுகத்தை நோக்கியவளாய் அம்பிகையின் திருவுருவானது விளங்குகின்றது.

நின்ற நிலையில் சண்டேசுவரர்:

ஜடாபந்தத்தைச் சிரசிலே தாங்கி சமபங்கஸ்தானத்துடன் விளங்கும் சண்டேசுவரர் சுவாமியின் வலப்பாதத்தை நோக்கியவாறும் உடலை முன் நோக்கிச் சிறிது வளைத்தவாறும் காணப்படுகிறார். சிரசினைப் பணிவின் காரணமாகத் தாழ்த்தியுள்ளார். காப்புகள் அணிந்த கரங்களால் தனது வாயினை * பொத்திச் சிவனார் அருளிச்செய்யும் சிவப்பிரசாத மாலையான இண்டைமாலையினை ஏற்றுக் கொள்ளும் பாவனையில், சிவத்தியான ஒளியுடன் ஐம்புலன்களும் ஒடுங்கிய நிலையில் காணப்படுகிறார். இடுப்பிலிருந்து பாதம் வரை விளங்கும் வஸ்திர அமைப்பழகு நுண்ணிய வேலைப்பாடுகளையுடையது சண்டேசுவரரின் இருமருங்கிலும் நின்றநிலையில் இருமுனிவர்கள் சுவடி, அக்கமாலையுடன் கூடிய சின்முத்திரையுடன் கௌபீனம் கொண்டு, ஜடாபந்தத்துடன் உத்திராக்க மணிகளை அணிந்தும் விளங்குகின்றனர். அவர்கள் விசாரசருமர் சண்டேசபதம் பெறும் காண்பதற்கு அரிய காட்சியினைக் கண்டு மனத்தகத்தே மகிழ்ச்சி தோன்றச் சிவனாரின் அருள் திரு நோக்கினை எண்ணியவர்களாகக் காட்சிதருகின்றனர்.


இத்தகு அமைப்பானது கங்கைகொண்ட சோழபுரத்தின் சிற்பத்தைப் போன்றதாக இருந்தாலும் பல நிலைகளில் வேறுபாடுகளோடு விளங்குகின்றது.

---

* சில்பரத்தினம், காசியபம், ஸாரஸ்வதிய சித்திரகர்ம சாஸ்த்திரம் ஆகிய சிற்ப நூல்கள் பூர்வ காரணாகமம் உத்தரகாரணாகமம் ஆகிய ஆகம நூல்கள் சண்டேசுவரர் அஞ்சலி ஹஸ்தம் இருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றன. உபதேச நேரத்தில் வாய் பொத்திக் கேட்டு அகஒளி போன்ற நிலையின் இச்சிற்பம் அமைந்தது எனலாம்.



பல்லவர்காலத்து சோழபுரம்-சண்டே சுவரர் (தற்போது சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது)-வடஆர்க்காடு மாவட்டம் கி. பி. 8-ஆம் நூற்றுண்டைச் சார்ந்தது.



கிழையூர் ஸ்ரீ வீரட்டேஸ்வரர் ஆலய சண்டேசுவரர் (பல்லவர் காலம் கி. பி. 7-8 ஆம் நூற்றுண்டு) திருக்கோவிலூர் தாலுக்கா தென்னர்க்காடு மாவட்டம்.

சண்டேசுவரர் படிம விளக்கங்கள்

1. சோழபுரம் - பல்லவர்காலம்

உத்குடிகாசன சண்டேசுவரர் :

கி. பி. 8 - ஆம் நூற்றாண்டில் பல்லவர் ஆட்சியின் போது வடிக்கப்பட்ட சண்டேசுவரர் சிலா ரூபம் ஒன்று. சென்னை அரசினர் அருங்காட்சியகத்தில் காணப்படுகிறது. இச்சிலை வடஆர்க்காடு மாவட்டம் - சோழபுரம் எனும் ஊரில் கிடைக்கப்பெற்றதாகும்.

இந்த உருவமானது உத்குடிகாசனம் அமைப்புமுறையில் வலக்காலை ஆசனத்தின்மீது குத்திட்டும், இடக்காலை கீழே வளைத்து வலப்பக்கமாக சாய்த்தபடியும், இடத்தொடைமீது இடக்கரமானது பதிந்தும் காணப்படுகிறது. வலக்கரத்தில் தண்டத்தை ஏந்திய படி வலக்கால் முட்டிமீது வலக்கரமுட்டி பதிந்தும் காணப்படுகிறது. சிரசில் லலாடம் பொருந்திய கூடமகுடமும், காதுகளில் விளங்கும் அணிகலன்கள் வட்டவடிவிலும், கழுத்தில் கண்டாபரணமும் (தனித்தனியான பட்டைகளை கோத்தது போல), நன்கு முறுக்கேறிய பட்டையான முப்புரி நூலும், புஜங்களின் மேற் கீழ் பகுதிகளில் இரண்டு, மூன்று வளையங்களால் அமைந்த அணிகளும், காணப்படுகின்றன. இடுப்பு வஸ்திரத்தினை நன்கு பிடித்த நிலையில் உள்ள வஸ்திரப்பட்டையினது முடிச்சும் வஸ்திரத்தின் அடிப்பகுதியில் விளங்கும் கரைப்பகுதி நெளிவும் உள்ளன. இத்திருவுருவின் பாத விரல்கள் தெளிவாகக் காணப்படவில்லை. அச்சுறுத்தும் முக பாவனை முகத்திலே தெரிகின்றது. இத்தகைய அமைப்பில் சண்டேசுவரர் உருவம் அமைவது அரிதாகும்.

2. கீழையூர் - பல்லவர்காலத்து சண்டேசுவரர் :

தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவிலூர் வட்டத்தைச் சார்ந்த கீழையூர் கிராமத்தில் உள்ள ஸ்ரீ வீரட்டேசுவரர் ஆலயத்தில் விளங்கும் சண்டேசுவரர் திருவுருவானது கி. பி. 7 – 8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவர்காலத்து கற்பலகையில் அமைந்த புடைப்புச் சிற்பமாகும்.

இத்திருவுருவத்தின் ஜடைகள் யாவும் ஜடாபாரமுறையிலுள்ளன. தூக்கிப்பிடித்த வலக்கரத்தில் தண்டம்உளது. இடக்கரம் இடத்தொடையின் மையப்பகுதியில் பதிந்துளது. இத்திருவுரு இரு கால்களும்

வளைத்த நிலையிலும் சிறுபிள்ளைபோல காலைக்குறுக்கி அமர்ந்த நிலையிலும் காணப்படுகிறது. ஆனால் இந்தச் சிற்பத்தில் * அமரும் ஆசனம் தெளிவாக அமையப் பெறவில்லை. கழுத்தில் ஓர் கண்டாபரணமும் கரங்களில் காப்புகளும் காணப்படுகின்றன. பட்டையாக உள்ள யக்ஞோபவீதம் மார்பில் விளங்குகிறது. நடு உடற்பகுதியானது இடப் பக்கம் சாய்ந்தவாறு உள்ளது. இவ்வுருவம் காலத்தால் முற்பட்ட நிலையினை உணர்த்தும் வகையில் காணப்படுகிறது. மேலும் சிரசினைத் தாண்டி மேல் நோக்கித்தூக்கிப்பிடித்த தண்டவமைப்பினையும் நோக்குக.

3. இருவேலிப்பட்டு - பல்லவர்காலத்துச் சண்டேசுவரர் :


தென்னார்க்காடு மாவட்டம் – உடுமலைப் பேட்டை வட்டத்தில் உள்ள இருவேலிப்பட்டு எனும் ஊரில் உள்ள சண்டேசுவரர் சிலை கி. பி. 7 - 8 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த பல்லவர் காலத்தது ஆகும். இந்த உருவம் புடைப்புச் சிற்பமாக உள்ளது. சுகாசன நிலையில் சற்று வித்தியாசமான முறையில் உள்ளது. வலக்கையில் நேராக மழுவினை ஏந்தியிராமல், (இங்கு மழுவானது பரசுபோன்று காணப்படுகிறது) நன்கு வளைந்தபடி ஆயுதமாகக் காணப்படுகிறது. தலையில் கேசங்கள் யாவும் தெளிவாகத் தெரியாமல் ஜடாபந்த நிலையில் சற்று வித்தியாசமான முறையில் உள்ளது. கரங்களில் கெண்டைப் பகுதியில் வளையம் போன்ற தோள்வளை காணப்படுகிறது. தலையானது வலப்பக்கம் சற்று சாய்ந்த நிலையிலும் உதடுகள் சிரித்த நிலையிலும் விளங்குகின்றன. இத்திருவுருவத்தின் இடக்கரமானது முட்டியிலோ அல்லது தொடையிலோ அமையப்பெறாமல் தொடையின் அடிப்பகுதியில் இருத்தலைக் காணவும். ஆபரணங்கள் இன்றி முற்றிலும் சரிவர அமையப்பெறாத சிற்பத் திருவுருவாக இது காணப்படுகிறது.

4. திருவதிகை - பல்லவர்காலத்து சண்டேசுவரர் :


தென்னார்க்காடு மாவட்டம் – கடலூர் வட்டம் – திருவதிகை ஸ்ரீ ஆதிமூலேசுவரர் ஆலயத்தில் விளங்கும் சண்டேசுவரர் திருவுருவமானது (கற்சிலாரூபம்) 8 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவர் காலத்துக் கலைப்பாணியை உடையதாகும். செவ்வகமான ஆசனத்தில் சுகாசனமாக இடக்கரத்தினைத் தொடையில் பதித்தும், வலக்கரத்தில் மழுவினை ஏந்தியும் ஜடாபாரத்துடன் (கேசங்கள் வரிவரியாக இல்லாமல் காணப்படுகிறது, தடித்த யக்ஞோபவீதம் திருமார்பில் விளங்கவும், உதர பந்தம் இடையில் விளங்கவும் உள்ளது. கழுத்தில் கண்டாபரணம் மட்டும் திகழவும், கரங்களில் தோள்வளை, காப்புகள் அணியப்பெற்றும்

---

* வலக்கால் குத்திட்ட நிலையிலும் இடக்கால் மடக்கிய நிலையிலுமான தோற்றமாக நாம் நினைத்தால் இதனை உத்குடிகாசனம் எனக் கூறலாம்.



இருவேலிப்பட்டு - சண்டேசுவரர். (உடுமலைப்பேட்டை தாலுக்கா, தென்னார்க்காடு மாவட்டம்) பல்லவர்காலம் – கி. பி. 7-8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.



திருவதிகை ஸ்ரீ ஆதிமூலேசுவரர் ஆலய சண்டேசுவரர். (கடலூர் தாலுக்கா தென்னார்க்காடு மாவட்டம்) பல்லவர்காலம் கி.பி 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

இடையில் தொடைப்பகுதி வரை ஒட்டி அமைந்த வஸ்திரமும் காணப்படுகின்றன. காதுகளில் அணியபபெற்ற காதணிகள் வட்ட வடிவிலும், மார்புப்பகுதி எடுப்பாகவும், விழியானது நன்கு விழித்த படி நல்ல உடற் கட்டோடும் இச்சிற்பம் விளங்குகிறது இத்திருவுரு வமைதியினை நன்கு நோக்கும் போது, கல்லிலே வடிக்கும் காலத்தின் ஆரம்ப நிலையினை நன்கு உணர முடிகிறது. மேலும் இச்சிலையில் அணிகலன்கள் மிகக் குறைந்தும், உடற்பகுதி நன்கு வழவழப்பாக அமையப்பெருமலும் விளங்குதல் ஆராய்ச்சிக்குரியதாகும்.

5. பிறவாமருந்தீஸ்வரர் கோயில் சண்டேசுவரர் :

தஞ்சைமாவட்டம் – திருத்துறைப்பூண்டியில் உள்ள பிறவா மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் சண்டேசுவரர் திருவுருவம்விளங்குகிறது. இதன் உயரம் 67 செ. மீ. காலம் - சோழர் காலமாகிய கி. பி. 950 ஆகும்.

இங்கே தனித்ததொரு பத்மபீடத்தில் நின்றகோலத்தில் வலக்காலை ஊன்றி, இடக்காலைச்சற்று விலக்கி, அதனைச்சிறிதே முன்பக்கமாக நிறுத்தி இடுப்பினை வளைத்தபடி அமைந்த சண்டேசுவரர் திருவுருவம் காணப்படுகிறது. கேசச்சுருள் கற்றைகள் அமைந்த கேசக் கிரீடம் சிரசில் காணப்படுகிறது. கூப்பிய கரங்களில் கட்டைவிரலும், ஆள்காட்டி விரலும் தொட்ட நிலையிலுள்ளன. கூப்பிய கரமானது முன் பக்கம் விரித்தாற்போன்று காணப்படுகிறது. இடக்கரத்தின் இடுக்கில் அமைந்த * மழு சற்றுசாய்ந்தும் அதன்அடிப்பாகம் வயிற்றினைத் தொட்டவாறும் உள்ளது. எடுப்பாக ஆபரணங்கள் திகழ்கின்றன. சண்டேச பதம்பெற்ற நிலையில் சிவசொரூபம் கொண்ட திருவுருத்தோற்றத்தை அப்படியே இப்படிமத்தில் காணலாம்.

6. போரூர் - அதிசய பல்லவ சண்டேசுவரர் :

“பால் குடத்தைக் காலால் உருட்டி சிவ அபராதம் புரிந்த தந்தையின் கால்களை மழுவினல் துண்டித்து, சிவனுல் சண்டேசப் பதம் பெற்ற விசாரசருமன் வரலாற்றினை அறிவீர்”.

* இப்புராணம் லேபாட்சி, சிதம்பரம் போன்ற தலங்களில் ஓவியமாகவும் வேறு பல ஆலயங்களில் சிற்பமாகவும் மிளிர்கின்றன. சில இடங்களில் சாசனங்களாகவும் விளங்குகின்றன.

---

* மழுப்படை இல்லாமல் விளங்கும் சண்டேசுவரர் (சோழர்காலம் கி. பி. 1000) திருவுருவமும் இக்கோயிலுக்கு உரியதாகும்;

* “அபூர்வ சிற்பங்கள்” - தினமணி-நாளிதழ்

" சண்டேச்சுரன் ஓலே சாகரஞ்சூழ் வையகத்
தில் தண்டேச்சுரன் கருமமாராய்
பண்டேய் அறஞ்செய்தான்
செய்தான் அறங்காத்தான் பாதம் திறம்
பாமைச் சென்னி மேற்கொள்க "

பிரர்ம சண்டேசுவரர் : (பெரும்பேர் கிராமம்)

கௌடதேச - ஸ்ரீ கண்ட தேசிகர் சிதம்பர நாயகனைத் தரிசிக்க வந்து, விக்ரம சோழனின் குருவானுர். இவர் பரம்பரையில் அகோர சிவாசாரியார் (கி. பி 1158) சிவாலய கிரியைகளுக்கு கிரியா கிரமத் யோதிணி" என்ற கிரந்தம் இயற்றினுர். இதில் ஜடாமகுடம், நாக கங்கணம், சர்ப்ப யக்ஞோபவீதம், சதுர்முகம், சதுர்புஜம், அக்கமாலே கமண்டலம் தரிக்கும் அதிசய சண்டேசுவரரை வர்ணித்துள்ளார். இச்சிற்பத்தை " திருக்கச்சூரில் " காணலாம்.

இவர் கையிலேந்தியுள்ளது அக்கமாலே பாசமல்ல. ஊன்றிப் பார்த்தால் மாலே மணிகள்தெளிவாய்த் தெரியும் பிரும்மாவின் சின்னங் களேக் கொண்டதால் பிரம்ம சண்டேசுவரர் ஆனுர். (இது போன்ற சிற்பம் சிதம்பரம், தாராசுரம் முதலானதலங்களில் காணலாம்) சில சிற்ப நூல்கள் இந்த ஜபமாலேயையே ஆயுத புருஷனுகக் கருதுகிறது.

அதிசய சண்டேசுவரர் :

பூந்தமல்லிக்கருகே போரூரில் வேருெரு அதிசய பல்லவ சண்டேசுவரர் உண்டு. ஒரு கால் பத்மாசனத்தில் விளங்க மற்ருெரு காலே வளேத்து, கையை ஊன்றி எம்பிஎழும் கோலமாக அமைந்துள்ளது. இரண்டே கரங்கள் விளங்கவும் ஜடைகள்யாவும் பல்லவ பாணி (கேசங்கள்யாவும் தனித்தனியாக இல்லாமல் ஒட்டுமொத்தமாக வட்டவடிவில் தோள்வரை அமைவது) யாகவும் வலக்கரத்தில் மழுவினை ஏந்தியவராகவும் (மழுவின் வெட்டுவாய் பட்டையாக (இலேப்பகுதி) நேர்த்தண்டுடன் பொருந்தியுள்ளது) அதிகமாக ஆபரணங்கள் ஏதும் அவரது உடம்பில் காணப்படவில்லே. இடையில் கோவணம் (பற்றற்றவராகஇருத்தலேக் காட்டுதல்) மட்டும் உள்ளது. இத்திரு வுருவம் இளமைக் கோலத்துடனும், முகத்தில் கோபமும், அதேசமயத் தில் சிவசிந்தனேயையும் கொண்டு விளங்குகிறது.

" திருமன்னி வளர " என்ற முதலாம் ராசேந்திரன் மெய்க்கீர்த்தி இவ்வாலயம் முதற்சோழர் காலத்திற்கு முந்தியது என்பதைப் புலப் படுத்துகிறது. " திங்களேர் தரு " என்ற பிரசஸ்தியைப் படரவிட்டு நிலதானம் விட்டதை ராஜாதிராஜன் கல்வெட்டு விளம்ப, இப்படி சுமார் 60 கற்பாளங்கள் சோழச் சரித்திரத்தைச் சுமந்துகிடக்கிறது.

அரிட்டாபட்டி குகைக்கோயில் (சிவாலயம்) பாண்டியர்காலத்து சண்டேசுவரர். (மேலூர் தாலுக்கா, மதுரை மாவட்டம்) கி. பி. 8-ஆம் நூற்றுண்டைச் சார்ந்தது. தண்டேசர் எனவும் அழைக்கப்படுதற்கு இலக்கியமாக இத்திருவுரு விளங்குகிறது.





செப்புத்திருவுரு பழையங்குடி ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் ஆலய சண்டேசுவரர் (திருத்துறைப்பூண்டி தாலுக்கா, தஞ்சை மாவட்டம்) சோழர்காலம் கி. பி. 9-10 ஆம் நூற்றுண்டைச் சார்ந்தது.

அவைகள் யாவும் படி எடுத்து, தமிழ் மன்னர்களின் அரிய சாதனைகளையும், வரலாற்றினையும் தமிழுலகத்திற்கு அறிவிக்க ஆராய்ச்சியாளர்கள் முன்வருதல் வேண்டும்.

7. அரிட்டாபட்டி - குகைக்கோயில் (பாண்டியர்காலம்)
சண்டேசுவரர் :

மதுரை மாவட்டம் - மேலூர்வட்டம் - அரிட்டாப்பட்டி எனும் ஊரில் விளங்கும் அரிட்டாப்பட்டி குகைக்கோயிலான சிவன்கோயில் (கி. பி 7 - 8 ஆம்நூற்றாண்டு) பாண்டியர் காலத்தது ஆகும்.

இக்குகைக்கோயிலினுள் எங்கும் காணாத சிற்பஅமைப்பு முறையில் சண்டேசுவரர் உருவம் காணப்படுகிறது. இத்திருவுருவமானது மாடத்தில் அமைந்ததுபோல செதுக்கப்பட்டுள்ளது. இவர் சுகாசனமாக வீற்றிருந்து வலத்தொடைமீது வலக்கரத்தினைப்பதித்துள்ளார். இடக்கரத்தில் விளங்கும் தண்டமானது ஆசன பீடத்தின்மீது நிறுத்தி உயர்த்திப்பிடித்தவாறும் * அத்தண்டத்தில் ஓர் சர்ப்பம் சுற்றிய நிலையிலும் காணப்படுகிறது. தண்டத்தின் மேற்பகுதி நன்கு தடித்த (மொத்தமாக) நிலையில் உள்ளது. * சிரசில் பத்ரபூரிமம் கூடிய ஜடாமகுடம் விளங்குகிறது. காதுகளில் வளையங்கள் (மகரவளையங்கள் அல்லது சர்ப்ப வளையங்கள்) உள்ளன. கழுத்தில் கண்டாபரணமும் மார்பில் சர்ப்ப யக்ஞோபவீதமும் இடுப்பில் பட்டையான உதரபந்தமும் காணப்படுகின்றன. புஜங்களில் தோள்வளையும், கரங்களில் காப்புகளும் உள்ளன இரைது வஸ்திரக்கட்டு பல மடிப்புகளுடன் காணப்படுகின்றன. வஸ்திரமானது கணுக்கால்வரை நீண்டும் பீடத்தில் பரந்தும் கீழ்நோக்கித்தொங்கிய படியும் (விசிறி மடிப்புப்போல) அமைந்துள்ளது.

இத்திருவுருவ முகப்பொலிவில் கோரப்பார்வையுடன் அமைதித் தோற்றத்தையும் காணமுடிகிறது. மூக்கும், உதடுகளும், பின்னமாய்க் காணப்படுகின்றன. இராஜ கம்பீரமான தோற்றப் பொலிவுடன் சிவனதுகட்டளையினை ஏற்று நடத்துபவர்போலக் காணப்படுகிறார். நல்ல பொலிவுடன் கூடிய உடற்கட்டோடு விளங்கும் இத்திருவுருவமானது பாண்டியர் காலச்சிற்பக்கலைக்கு நல்எடுத்துக் காட்டாகவும், ஆராய்ச்சியாளர்களின் உயரிய சிந்தனைக்கு அரிய விருந்தாகவும் அமைந்து காணப்படுகிறது. ஆய்வாளர்களும், சிந்தனையாளர்களும். நேரில்

---

* இதுபோன்ற சண்டேசுவரர் உருவம் மதுரை - தேவர்மலையின் குகைக்கோயிலில் இடக்காலைமடித்து வலக்காலை குத்திட்டு வலதுகரத்தில் சர்பம் சுற்றிய தண்டத்தைப்பிடித்தும் இடக்கரத்தை இடதுதொடைமீது வைத்தும் உள்ள சிற்பம் ஒன்று காணப்படுகிறது.

* சிரசில் விளங்கும் மகுடம், பத்ரபூரிமம் ஆகியன வித்தியாசமான நிலையில் உள்ளதனைக் காணலாம்.

சென்று பார்த்து அநுபவிக்கும் போது பல்லவர் காலக்கலைச் சிறப்புக்கும் பாண்டியர் காலக் கலைச் சிறப்புக்கும் உள்ள தொடர்பினையும், வேறு பாட்டினையும் அறிவர்.

8. பழையங்குடி - சோழர் காலத்து செப்புத்திருமேனி - சுகாசன சண்டேசுவரர் :

தஞ்சாவூர் மாவட்டம் - திருத்துறைப்பூண்டி வட்டத்தைச் சேர்ந்த பழையங்குடி கிராமத்தில் விளங்கும் ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் ஆலயத்தில் உள்ள கி. பி. 9 - 10ஆம் நூற்றுண்டைச்சார்ந்த சோழர் காலத்திய சண்டேசுவரர் திருவுருவம் செப்புத்திருமேனியாக அமைந்துள்ளது.

இவ்வழகிய அமர்ந்த நிலையுடன்கூடிய சுகாசனம் கொண்டு திகழும் சண்டேசுவரர் செப்புத் திருமேனியனைக் காண்பது அரிதாகும். இவர் ஜடாமண்டலத்துடன், நெற்றிப்பட்டையோடு இடக்காதில் காதோலையும், வலக்காது வடிக்காதாகவும், நிமிர்ந்த முகத்தோற்றத் துடனும் காணப்படுகின்றார். சிவனாரின் அருட்பெருக்கால் சிவாம்சம் கொண்டமையால் முகப்பொலிவு தெளிவாக விளங்குகிறது. கழுத்தில் ஏகருத்திராக்ஷம், சிறுவடம், சரப்பளிபோன்ற ஆபரணம், மார்புவரை உள்ள ருத்திராக்ஷமாலை ஆகியவை காணப்படுகின்றன. இடப் பக்க மார்பில் முடிச்சுடன் திகழும் முப்புரி நூலானது மூன்று இழையுடனும் அந்த முப்புரிநூல் உதரபந்தத்திற்கு மேலே விளங்குவது போலவும் காணப்படுகிறது. தோளில் பாகுமாலை, பாதுதாமம் விளங்குகின்றன. புஜங்களில் தோள்வளையும் அதன்கீழ் ஒருகாப்பும், மணிக்கட்டுப் பகுதிகளில் காப்புகளும் விளங்குகின்றன.

வலக்கரத்தில் மழுவேந்தியுள்ளார். அம்மழுவினது வெட்டு வாய்ப்பகுதி நேரே அமையப் பெற்றுளது; வலத்தோளில் மழுவின் பின்பகுதி சாய்ந்தநிலையில் பதிந்து காணப்படுகிறது. மழுவின் வெட்டுவாயானது முன்பக்கமிருப்பது சிறப்புடையது. இடக்கரம் சிப் ஹகர்ண கரமாக விளங்குகின்றது. இடுப்பில் விளங்கும் சிற்றுடையினை இறுகப்பிடிக்க மணிகள் கோக்கப்பட்ட மூன்று இடுப்புப் பட்டைகளும் காணப்படுகின்றன. வலப்பாதம் கீழ் நோக்கித் தொங்கவிடப்பட்டுள்ளது. இப்பாதம் கீழுள்ளபத்மத்தில் பதிந்துள்ளது இடக்கால் நன்கு மடக்கி ஆசனத்தில் விளங்குகிறது. இப்பாதம் இரண்டிலும் சிலம்புகள் அணியப்பெற்றுள்ளன. இடையானது சிறுத்தும் மார்பானது விரிந்தும், கரங்களும், கால்களும் செம்மையாக அமையப் பெற்றுள்ளன. இநதநீண்ட பத்ரபீடத்தில் இரண்டு உலோகக் கூறுகள் திருவாட்சியினைப் பொருத்துவதற்காக வைக்கப் பட்டுள்ளன.

ஆய்வாளர்களின் சிந்தனைக்கும், குறிப்பாக சிற்பக்கலைஞர் களுக்கும் சோழர் காலத்துப் படிமமான இத்திருவுருவம் தமிழகத்தின் தன்னிகரில்லாக் கலைச்சிறப்பினை விளக்குவதாக அமைந்துள்ளது.



நாகப்பட்டினம் - ஸ்ரீ காயாரோகணேஸ்வரர் ஆலய சண்டேசுவரர் (முன்னழகு) சோழர்காலம் கி. பி. 950.



பின்னழகு - ஸ்ரீ காயாரோகணேஸ்வரர் ஆலய சண்டேசுவரர்.

9. நாடாப்பூர் - சண்டேசுவரர் :

நாடாப்பூர் மாவட்டத்தில் விளங்கிய ஒரு சிவாலயத்தில் (கி. பி. 950) - முற்காலச் சோழர் காலத்திய சண்டேசுவரர் செப்புத் திருமேனியானது தற்போது திருவாரூர் தியாகராஜர் திருக்கோயிலில் இருக்கின்றது.

இச்சண்டேசுவரர் சதுரமான பத்ரபீடத்தின் மேலே அமையப் பெற்ற பத்ம பீடத்தில் வைசாக ஸ்தானக முறைப்படி நின்ற கோலத்தில் விளங்குகிறார். இவரது விரல்கள் யாவும் சேர்ந்தும் சேராமலும் விலகி இருக்கின்ற நிலையில் அஞ்சலி ஹஸ்தமாக விளங்குகிறது, இடப்புறத் தோளினிடையே ஒட்டியவாறு மெல்லிய மழுப்படையானது இடக்கையின் இடுக்கில் விளங்குகிறது.

இப்பெருமானின் கேசங்கள் யாவும் உச்சிக் கொண்டை போட்டது போல உள்ளது (கூடமகுடம்). இவர் நிமிர்ந்த பார்வையுடனும் வடி காதுகளுடனும், கழுத்தில் சிறியஉருத்ராக்கமணி கொண்ட மாலையும் அணிந்தும் கழுத்தில் கண்டாபரணமும், கரங்களில் காப்புகளும், காலில் கொலுசும் விளங்கத் தோற்றமளிக்கிறார். வஸ்திரக் கட்டின் முன்புறம் சிறுமணிகள் தொங்கிய நிலையில் காணப்படுகின்றன. இத் திருவுருவத்தில் ஜடைக் கட்டும் அஞ்சலி முத்திரையும் நோக்கத்தக்கதாகும்.

10 நாகை - சண்டேசுவரர் :

நாகப்பட்டினத்தில் உள்ள காயாரோகண சுவாமி திருக்கோயிலில் விளங்கும் சண்டேசுவரர் திருவுருவத் திருக்கோலமானது எண்ணிலாக் கலைப்பொலிவுடன் விளங்குகிறது. இந்த செப்புச் சிலையின் உயரம் 87. 5 செ. மீட்டராகும். இது முற்காலச் சோழர் காலத்தது.

முன் அழகு :

சண்டேசுவரப் பெருமான் பத்ம பீடத்தில் * வைசாகஸ்தானக நிலையில் நின்றவாறு இருகரம் கூப்பி சிவச்சிந்தனையோடு காட்சி தருகின்றார். இவரது திருவுருவத்தின் கூப்பிய கரங்களில் உட்புறம் மலர்ச்சரம் காணப்படுகிறது. சிரசில் பத்ர பூரிமம் உள்ள ஜடாமகுடம் விளங்குகிறது. காதுகளில் அணிகலன்கள் ஏதும் இல்லை. வடிகாதுகளாக உள்ளன. (இங்கு காதுகள் தோளினைத் தொடா திருத்தல் காண்க). இவர் கழுத்தில் சிறிய ருத்திராட்சமாலையும், கண்டாபரணமும் காணப்படுகின்றன. மூன்று பிரிகளை உடைய யக்ஞோபவீதமும், உதரபந்தமும்அணித்துள்ளார் தொடை பகுதிவரையுள்ள வஸ்திரக்கட்டு

---

* ஏதாவது ஒரு காலை நன்றாக ஊன்றி மற்றொரு காலை இரண்டரைச் சாண் அளவில் முன்வைத்து நிமிர்ந்து பங்க அமைதியோடு அழகுற நிற்கும் நிலை '' வைசாக ஸ்தானகம் '' எனப்படும்.

விளங்குகின்றது. தோள், புஜம், மணிகட்டுகால் இவைகளில் பாதுதாமம், பாகுமாலை, தோள்வளை காப்புகள் (வளையல்கள்), கொலுசு முதலான அணிகலன்களை அணிந்துள்ளார்.

பின் அழகு :

இத்திருவுருவத்தின் பின்னழகின் அமைப்புத்திறன் வியக்கும் முறையில் அமைந்துள்ளது. * கேசக்கிரீடத்தின் மேற்பகுதியின் உச்சியில் (கூர்மைப்பகுதி) ஓர் முடிச்சும், அதன் கீழ் தனித்தனி கேசங்கள் கீழ்நோக்கியும் அதன் கீழ் சுருள் சுருளாக கேசக்கற்றைகளும் விளங்குகின்றன. சிரசின் பின்புறம் சிரச்சக்கரம் விளங்குகிறது. இந்தச் சிரச்சக்கரத்தில் பதினாறு இதழ் போன்று (சக்கரத்தின் ஆரக்கால்கள் போன்று) அமைந்துள்ளன. இதன் மையப் பகுதியிலிருந்து மூன்று முத்துச் சரங்கள் கீழ் நோக்கித் தொங்குகின்றன. கழுத்தினை மறைத்த வாறு கேசச்சுருள் சுற்றைகள் பத்தும் அமைந்துள்ளன. கண்டாபரணம், ருத்திராட்சம் இவைகளின் சயிற்றுப்பகுதியான முடிச்சும் உள்ளன. யக்ஞோபவீதம் பின்புறத்தில் மேலும் கீழும் வளைந்துள்ளது.

இடுப்பு வஸ்திரத்தினை ஒட்டிய பட்டையும் உடலோடு ஒட்டிய பட்டாடைப்புனைவும் சிறப்பாக உள்ளன. அங்க அமைப்புக்கள் செம்மையாக உள்ளன.

இத்தகைய முன்னழகும் பின்னழகும் விளங்கும் கலைச்சிறப்புள்ள சண்டேசுவரரின் திருக்கோலத்தை நினைக்கும் போது ஆதியும் அந்தமும் இல்லாத சிவபெருமானின் (சோமாஸ்கந்தர், நடராஜர்) திருவுருவ அழகானது நம் கண்முன்னே நிற்கின்றது எனலாம்.

தந்தையின் கால்களை தடிந்ததும் சிவசிந்தனையோடு சிவபூசையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டும் விளங்கின விசாரசருமர்க்குச் சிவனார் சண்டீச பதம் என்ற பெரும் பதவிதனை அருளிச் செய்த மாத்திரத்தில் சிவாம்சம் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற திருவுருவமாக இந்தச் சண்டேசுவரர் திருவுருவம் அமைந்துள்ளது.

11. வேளாங்கண்ணி - சண்டேசுவரர் :

வேளாங்கண்ணியில் கிடைக்கப்பெற்ற சண்டேசுவரர் திருவுருவம் சோழர் கலைப்பாணியை உடையதாகக் (கி. பி. 1000) காணப்படுகிறது. இச் சிலையின் உயரம் 66செ மீ. தற்போது சென்னை அரசினர் அருங்காட்சியகத்தில் உள்ளது. இச்சண்டேசுவரர் பத்ம பீடத்தில் (இதழ்கள் இல்லாத வட்டமான பீடம்) நின்ற நிலையில் கூப்பிய கரங்களுடன் விளங்குகின்றார். சிரசில் ஜடாமகுடம் விளங்குகிறது. தலையின் பின்புறம் இருமருங்கிலும் தோள்களை ஒட்டினாற்

* கேசங்களால் அமைக்கப்படும் கிரீடங்கள் பல ஆகும். இதனை ஆதீனவெளியீடு எண் 384 & 407ல் காண்க.



நாகை மாவட்டம் - மயிலாடுதுறை தாலுக்கா - ஆக்கூர் - சண்டேசுவரர். உயரம் 44 செ. மீ. சோழர்காலம் கி. பி. 10 ஆம் நூற்றுண்டைச் சார்ந்தது. தற்போது சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது.



தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தாலுக்கா - சேய்ஞலூர் ஸ்ரீ சத்யகிரீஸ்வரர் ஆலய சண்டேசுவரரின் சிலாத் திருவுருவம்.

போன்று நடராஜர்க்கு உரிய விரிந்த சடைபோல பக்கவாட்டில் சுருள் கேசங்கள் அமைந்து விளங்குகின்றன. இது சிறந்த கலைப்படைப்பு. கூப்பிய கரங்களின் விரல் நுனிகள் ஒன்றோடொன்று சேர்ந்த நிலையிலும் உட்பகுதியில் சேராத நிலையிலும் உள்ளன. இடுப்பிலே அணியப்பட்ட வஸ்திரக் கட்டின் அமைப்பு நுண்ணிய வேலைப்பாடுகளுடன் தொடைப்பகுதி வரை காணப்படுகிறது. மணிவடம் கண்டாபரணம் பாகுமாலை வளையல்கள் கொலுசுகள் முதலிய ஆபரணங்கள் விளங்க நேர் கொண்ட பார்வையோடு காட்சி தருகின்றார்.

12. ஆக்கூர் சண்டேசுவரர் :

தஞ்சைமாவட்டம் - ஆக்கூரில் கிடைக்கப்பெற்ற சண்டேசுவரர் செப்புத் திருவுருவம் 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர்காலத்தது. இதன் உயரம் 44செ. மீ தற்போது இச்சிலை சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது.

நின்ற நிலையில் விளங்கும் சண்டேசுவரர். இருகரம் கூப்பிய அஞ்சலி ஹஸ்தத்துடன் விளங்குகின்றார். வளைந்த தண்டுடன் அமைந்த மழுப்படையானது வலக்கரத்தின் இடுக்கில் விளங்குகிறது. இது பரசு போலவும் காணப்படுகின்றது. தலைக்கேசங்கள் யாவும் * மேல் நோக்கி சற்று நீண்டு, பக்க வாட்டில் அமைந்த நிலையில் உள்ளன. காதுகளின் மேற்பகுதியில் குமிழ்களுடன் காணப்படும் ஆபரணம் செருகப்பட்டுள்ளது. பாகுமாலை, பாதுதாமம், முப்புரிநூல், கண்டாபரணம், ருத்திராட்சவடம், வளையல்கள், கொலுசுகள் ஆகியவை காணப்படுகின்றன. இடுப்பு வஸ்திரம் உடலோடு ஒட்டிய நிலையில் உள்ளது. கண்களின் பார்வை தியானநிலையில் உள்முகமாக அமைந்து ஞானநிலையில் விளங்குகிறது. முகம் புன்னகை பூத்த பொலிவுடன் தோன்றுகிறது.

13 அவதாரத் தலத்தில் (சேய்ஞலூர்) சண்டேசுவரர் திருவுருவங்கள் :

சண்டேசுவரரின் அவதாரத் தலத்தில் விளங்கும் ஸ்ரீ சத்தியகிரீஸ்வரர் ஆலயத்தில் சண்டேசுவரரின் திருவுருவம் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் அமர்ந்த திருக்கோலத்தில் சிலாரூபமும், செப்புத் திருமேனியும் காணப்படுகின்றன.

---

* நடராஜப்பெருமானின் தலையில் விளங்கும் கேசங்கள் போல இத் திருவுரு அமைப்பில் காணப்படுகிறது. இப்படிமத்தில் விளங்கும் கேசவமைப் புக்கிரீடம் வேறு படிமத்தில் காணமுடியாததாக உள்ளது. அஞ்சலி ஹஸ்தத்தில் இடைவெளி உள்ளது.

சிலாரூபம் :

சிலாருபத்தில் விளங்கும் சண்டேசுவரர் பத்ரபீடத்தில் சுகாசன மாகவும் வலக்கரத்தில் மழுப்படையினையும், இடக்கரத்தினைத் தொடைமீது பதியவைத்தும் காட்சிதருகின்றார். எடுப்பான திருமுகப் பொலிவுடன் நிமிர்ந்த நிலையில் சர்வாபரணங்களும் அணியப்பெற்ற வராய் விளங்குகின்றார். இவரது திருமுகத்தினை உற்று நோக்கினால் தியான நிலையிலும் சோகநிலையிலும் இருப்பது போன்ற குறிப்பினைச் சிற்பி மிக அழகாகத் தனது கைத்திறத்தால் அமைத்துள்ளார். இவரது கேசங்கள் யாவும் சுருள் சுருளாகவுள்ளன. அவை இருமருங்கிலும் தோள் வரை தொங்குவதாக அமைந்திருப்பதனால் * ஜடாபாரமாகக் கொள்ளுதல் வேண்டும். நெற்றிப்பட்டத்திற்கு மேல் முடியில், மண்டை ஓடும் இருப்பது சிவனாரின் திருமுடியினை நினைவுகூர்வதாகும். இடக் காதில் காதோலை காணப்படுகிறது. வலக்காது வடிக்காதாக உள்ளது. இத் திருவுருவத்தின் ஜடைகளின் அமைப்பும் திருமுகப் பொலிவும் வேறிடங்களில் காணப்பெறாத சிறப்பினவாகும்.

14. எழுந்தருளும் மூர்த்தி :

உற்சவமூர்த்தியாக விளங்கும் சண்டேசுவரரின் செப்புத்திரு மேனியானது, சுகாசனமாக சதுரமான பத்ரபீடத்தின் மேலமைந்த பத்மாசனத்தில் விளங்குகின்றது. வலக் கரமும், இடக் கரமும் கடக முத்திரையாக அமைந்திருந்தாலும், வலக்கரம் மழுவினை ஏந்தியவாறு உள்ளது. சிரசில் விளங்கும் கேசங்கள் யாவும் ஒருங்கே அமைந்து விளங்கும் கேசபந்தமாக உள்ளது. இரு காதுகளிலும் ஓலைகள் காதணி களாக விளங்குகின்றன. நிமிர்ந்து அமர்ந்த நிலையில் விளங்கும். (இத் திருக்கோயிலின் முகமண்டபத் தூணின் அடிப்பகுதியில் கலையழகு மிக்க சண்டேசுவரர் சிற்பம் ஒன்று உள்ளது) இவரது கழுத்திலும், மார் பிலும் ஏகருத்திராட்சமும் பலமுத்துமணிகள் கோக்கப்பட்ட மாலையும் அணி செய்கின்றன. இந்த மணிமாலையினை ஆய்வாளர்கள் உருத்திராக்க மாலையாகவும் எண்ணுவதுண்டு. அமர்ந்த திருக்கோலத்தில் உள்ள சண்டேசுவரரின் செப்புத் திருமேனி சிவாலயத்தில் விளங்குதல் மிக அரிதே ஆகும். அவ்வகையில், இவ்வாலயத்தில் விளங்கும் எழுந்தருளும் மூர்த்தியின் அமர்ந்த திருக்கோல வடிவமும், சிலா வடிவில் விளங்கும் திருமுகப்பொலிவும் தென்னகச் சிற்பக்கலைக்கு ஓர் சிகரமாக அமைந் துளது எனலாம். குறிப்பாக குழந்தைகள் யாவரும் நல்ல அறிவுடனும் சிவசிந்தனையுடனும் விளங்க இப்பதியில் எழுந்தருளி விளங்கும் பெருமானையும் சண்டேசுவரரையும் வழிபடுவது ஓர் மரபாக இன்றும் இருந்து வருகின்றது.

---

* ஜடாபார அமைப்பு முதலான படங்களைத் தட்சிணாமூர்த்தி புத்தகத்தில் - I - பாகம், பக்கம் 22Aல் காண்க — ஆசிரியர் S. நாராயணசாமி, M. A., BEd.



சேய்ஞலூர் - ஸ்ரீ சத்யகிரீஸ்வரர்
ஆலயத்தின் சண்டேசுவரர் -
உற்சவமூர்த்தி



அச்சிறுபாக்கம் ஸ்ரீ ஆட்சிஸ்வரர் சிவாலயத்தில் விளங்கும்
சண்டேசுவர நாயனரின் வரலாற்றுச் சிற்பம் -
(சுவற்றில் விளங்கும் புடைப்புச் சிற்பம்)
இலிங்கத்தில் அபயகரம் காட்டி சிவனர் அருளல்



திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவாவடுதுறை — ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் ஆலயத்தில் விளங்கும் சண்டேசுவரர் திருவுருவம்



திருவாவடுதுறை — ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் ஆலய முகப்புத் தோற்றம்

15. அச்சிறுபாக்கம் ஆலயத்தில் சண்டேசுவரரும் சிவலிங்க மூர்த்தியும் :

செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கத்தில் உள்ள ஸ்ரீ பார்க்க புரீஸ்வரர் ஆலயச் சுவரில் புடைப்புச் சிற்பமாகச் சண்டேசுவரரின் வரலாற்றுச் சிற்பம் காணப்படுகிறது.

மண்ணியாற்றங்கரையில் ஆனிரைகளை மேய்க்கும் விசார சருமர் மணலால் பிரதிட்டை செய்யப்பட்ட இலிங்கத் திருவுருவிற்கு மூன்று குடங்களில் பாலை நிரப்பி அபிஷேகிக்கும் போது அவரது தந்தை எச்சதத்தன் மறைந்திருந்து பார்த்து விட்டுத் தனது காலால் பாற்குடங்களை இடறினர் அதைக்கண்ட விசாரசருமர் தமது தந்தையின் வலக்காலை வலக் கரத்தினுல் ஏந்திய கோலால் (கோலே மழுவாக மாறியது) தடிந்தார்.

கோயிலின் அமைப்பு

இவ்வரலாறு புடைப்புச் சிற்பமாக இங்கே வடிக்கப்பட்டுள்ளது. நீண்டதாடி, மீசையுடனும் வயோதிகத் தன்மையுடனும், இடக்கையினைத் தரையில் ஊன்றிய படி வலக் காலினை இழந்து கிடக்கும் எச்சதத்தனது காட்சியும், கௌபீனத்துடன் தனது தந்தையின் சிவ அபசார செயலை தண்டித்தல் பொருட்டு மிகுந்த கோபத்துடன் எழுந்து தண்டிக்கும் விசாரசருமர் காட்சியும் மறுகாலினையும் துண்டிக்க முயன்ற விசாரசருமர் தோற்றமும் மிக அழகாக சிற்பத்தில் காட்டப்பட்டுள்ளது. மூன்று பால் குடங்களில் இரண்டு மட்டும் இடறப்பட்டதால் பால் முழுதும் பூமியிலே ஓடுவதாகவும் ஒரு குடத்தில் மட்டும் பால் இருப்பதாகவும் இப்புடைப்புச் சிற்பத்தில் காட்டப்பட்டுள்ளன.

மேலும் விசாரசருமர் பிரதிட்டை செய்த இலிங்கத் திருவுருவின் பாணம் சற்று நீண்டு உயர்ந்த நிலையில் காணப்படுகின்றது. விசாரசருமரின் அளப்பரிய செயலைக் கண்ணுற்ற சிவபெருமான் * பாணத்திலிருந்து தனது ஒருகரம் கொண்டு விசாரசருமர்க்கு அபயமருளுகின்ருர். இச்செயல் உலகத்தவர்க்குச் சிவபூசையின் மேன்மையினையும், ஆன்மாக்கள் உய்ய வேண்டிய நிலையினையும் இந்த இலிங்க வடிவமைப்பின் மூலம் புலப்படுத்தப்படுகிறது. பாணத்தின் மேல் மலர்கள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த புடைப்புச் சிற்பத்தின் கீழே தமிழ்க் கல்வெட்டு காணப்படுகிறது. இம்மூன்று திருவுருவத்திற்கும் எண்ணெய்சாத்தி சந்தனம் வைத்து வழிபடுகின்ற நிலை இன்றும் இத்திருக்கோயிலில் இருந்து

---

* திருவாரூர் தேர்ச்சிற்பத்திலும் இதே போன்று இலிங்கத்திலிருந்து கரமானது நீண்டு அருளும் காட்சி காணப்படுகிறது. தாராசுரத்தில் வேறு நிலையில் அமைந்த இவரது வரலாறும் படமும் பிறிதொரு இடத்தில் காணலாம்.

வருகிறது. சுவரில் அமைந்த இத்தகைய புடைப்புச் சிற்பமும் குறிப்பாக இலிங்கத்திலிருந்து வெளிவரும் கரத்தின் அமைப்பழகும் காண்பது பெரிதும் அரிதேயாகும். இவ்வமைப்பைப் போன்று கண்ணப்பநாயனரின் சரித்திரப் புடைப்புச் சிற்பங்களில் சிவலிங்க பாணத்திலிருந்து தோன்றிய கரம் இருத்தலையும் பல சிவாலயங்களில் காணலாம்.

16. திருவாவடுதுறை சண்டேசுவரர் :

திருவாவடுதுறை - ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் ஆலயத்தில் விளங்கும் சண்டேசுவரர் கோயிலானது வடக்கு ஆவரணத்தில் உள்ளது. இவரது கோயில் ஏகதளவிமானத்துடன் கூடியதாகவும், சுவரின் வெளிப்பக்கம் முழுவதும் சோழர்காலத்துக் கல்வெட்டுக்களை உடையதாகவும் காணப்படுகின்றது. இத்தலம் சமயாச்சாரியர்களும், திருமூலரும் ஏனைய சித்த புருஷர்களும் அமர்ந்துவிளங்கின தலமாகும். இத்திருக் கோயிலின் தென்பால் திருவாவடுதுறை ஆதீனம் திகழ்கிறது.

சண்டேசுவரர், திருக்கோயிலின் கருப்ப இல்லில் சிலாவடிவில் நன்கு விரிந்த பத்ம மலரிதழ் பீடத்தில் சுகாசனமாக விளங்குகின்றார். வலக்கரத்தில் எடுப்பான மழுப்படை உளது. இடது கரத்தினைத் தொடைமீது பதியவைத்துள்ளார். வீர ஆவேசத்துடன் காட்சி தருகின்றார். இவரது கேசங்கள் சுருள் சுருளாகக் கீழ்நோக்கிச் சரிந்தபடி ஜடாபாரமாக உள்ளது. காதுகளில் பத்ர குண்டலங்களும் கழுத்தில் உருத்திராக்க மாலையும், மார்பில் பட்டையாக உள்ள யக்ஞோப வீதமும் காணப்படுகின்றன. இடையில் விளங்கும் ஆடையானது தொடைவரை நீண்டும், பரந்தும் மடிப்புகளோடும் காணப்படுகிறது. கரங்களிலும் கால்களிலும் காப்புகள் விளங்குகின்றன. இவரது பத்மபீடத்தின் அழகு சிறப்புடையது. சோழர்களின் ஈடில்லாக் கலை அழகிற்கு இதுவும் ஒரு சான்றாகும். இவரை ஆதிசண்டேசுவரர், சண்டேசுவரர் என்று இத்திருக்கோயிலின் கல்வெட்டுகளில் குறிப்பிடப் பட்டுள்ளது.

17. உற்சவமூர்த்தி - திருவாவடுதுறை சண்டேசுவரர் :

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவாவடுதுறை ஸ்ரீ மாசிலாமணியீசர் திருக்கோயிலில் விளங்கும் சண்டேசுவரர் திருவுருவம் ஐம்பொன்னாலாகியது. வலக் கரத்தின் இடுக்கில் தோளோடு அமைந்து விளங்கும் மழுவமைப்பும், இடுப்பில் விளங்கும் ஆடைப்புனைவும் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன. நின்ற நிலையில் கூப்பிய கரங்களுடன் திகழும் இப்பெருமான் இடுப்பினைச் சிறிதளவே இடப்பக்கம் வளைத்துள்ளார். கரங்களில் காப்புகளும், தோள்வளைகளும் விளங்குகின்றன. கழுத்திலும், மார்பிலும் ஆபரணங்கள் திகழ சிரச்சக்கரத்துடனும் சிரசில் ஜடாமகுடத்துடனும்



திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான
திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் ஆலயத்தில்
விளங்கும் சண்டேசுவரர் - உற்சவமூர்த்தி.




திருவாவடுதுறை ஆதினத்திற்குச் சொந்தமான
திருமங்கலக்குடி ஸ்ரீ பிராணநாதசுவாமி ஆலயத்தில்
விளங்கும் சண்டேசுவரர் - உற்சவமூர்த்தி
(தஞ்சை மாவட்டம்)



1



2



3

1. சூரியனூர்கோயிலில் விளங்கும் தேஜஸ் சண்டே சுவரர் - உற்சவமூர்த்தி இடப்புறத்தில் பத்மம்.

2. ஷை ஆலயத்தில் உள்ள தேஜஸ் சண்டேசுவரர் (மூலத்தானத் திருவுருவம்) வலப்புறத்தில் பத்மம்.

3. திருச்சி வட்டம்-அல்லூர் பசுபதீஸ்வரர் ஆலயத்தில் விளங்கும் பத்மஹஸ்த சண்டேசுவரர்.

எடுப்பாக அமைதி தவழும் திருமுகத்தோடு விளங்குகின்றார். இத்திருவுருவம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

18. திருமங்கலக்குடி சண்டேசுவரர் :

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருமங்கலக்குடி ஸ்ரீ பிராணநாதசுவாமி திருக்கோயிலில் விளங்கும் சண்டேசுவரர் திருவுருவம் ஐம்பொன்னாலாகியது. இச்சண்டேசுவரர் சதுரமான பீடத்தின் மேலே அமைந்த பத்மபீடத்தில் நின்ற நிலையில் இடுப்பினை வலப்பக்கம் சற்று வளைத்து கூப்பியகரங்களுடனும் கிரீடமகுடத்துடனும் உற்சவ மூர்த்தியாக விளங்குகின்றார். இவரது அஞ்சலி ஹஸ்தமானது முழுவதும் ஒட்டி இடைவெளியின்றிக் காணப்படுகிறது. முழங்கால் வரை அழகுற அமைந்த ஆடையும், இருமருங்கிலும் தொங்குகின்ற ஆடையும் மணிகள் கோக்கப்பட்டனவாக விளங்குகின்றன. இத்திருவுருவத்தின் காதுகள் குண்டலங்கள் இல்லாமல் வடிக்காதுகளாக உள்ளன. மார்பில் மணி மாலையும், கரங்களில் கடகமும் காப்புகளும் அணிசெய்கின்றன. இம்மூர்த்தியின் சதுர பீடத்தில், "திருமங்கலக்குடி சனருசுறான உ வயித்திஞதபன றாம" என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் உயரம் 50 செ. மீ ஆகும்.

19. திருமாந்துறை சண்டேசுவரர் :

தஞ்சைமாவட்டம் சூரியனார் கோயிலுக்கு அருகில் (வடபால்) திருமாந்துறை ஸ்ரீ அட்சயநாதசுவாமி திருக்கோயில் விளங்குகிறது. இவ்வாதீனத்திற்குச் சொந்தமான மிகப்பழமையான வைப்புத்தலமாகும். இக்கோயிலில் கலைச்சிற்பங்களும் கல்வெட்டுகளும் அமைந்துள்ளன. இங்கு விளங்கும் உற்சவமூர்த்திகளில் சிறப்புடையது சண்டேசுவரர் திருவுருவாகும். இப்பெருமான் நின்ற நிலையில் இடக்காலைச்சற்று முன் நோக்கி வளைத்தும் சிரசில் ஜடைகளையே திருமுடியாகவும் கொண்டுள்ளார். காதோலையும், தோள்வளையும் கடகம், காப்பு, பாதசரம் முதலியனவும் இவர் திருவுருவில் காணலாம். மழு ஆயுதம் சற்று சாய்ந்தவாறு இடப்பக்கக் கரத்தின் இடுக்கில் விளங்குகிறது. வஸ்திரக் கட்டானது இடுப்பிலிருந்து கணுக்கால் வரை பக்க வாட்டில் தொங்கும் பரிவட்டத்துடன் காணப்படுகிறது. பத்மபிடத்தில் நிற்கும் இவர் சிவத்தியானத்துடன் காட்சி தருகின்றார்.

20. சூரியனார்கோயில் - தேஜஸ் சண்டேசுவரர் :

தென்னகத்தின் நவக்கிரகத் தலமாக விளங்கும் சூரியனார் கோயிலில் சிவசூரியப்பெருமான் திருக்கோயில் விளங்குகிறது. இத்திருக்கோயிலும் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகும் மேற்கு நோக்கி அமைந்த இத்திருக்கோயிலில் ஆயுதமின்றி இருகரங்களுடன் அனைத்துக்கிரகங்களும் அநுக்கிரஹ மூர்த்திகளாக விளங்குகின்றனர். சூரியன் பிரதானமூர்த்தியாக மூலத்தானத்தில் உஷா, பிரதியுஷா தேவிகளுடன் இருகைகளில் செந்தாமரைகளை ஏந்தி நின்ற கோலத்தில்

விளங்குகின்றார். ஏனைய கிரகங்கள் யாவும் ஆவரணத்தில் தனித்தனிக் கோயிலாக அமைந்து விளங்குகின்றன. மகாமண்டபத்தில் வியாழன் (குரு) சூரியனைப் பார்த்து (கிழக்கு நோக்கி) நிற்கின்றார்.

மூலவர் :

இத்திருக்கோயிலின் வடக்குப் பிரகாரத்தில் தென்திசை நோக்கி ஏகதள விமானத்துடன் கூடிய தனிக் கோயிலில் கருவறையின் உட்பகுதியில் சுகாசனமாக (சிலாரூபம்) காட்சி தருகின்றார். இரு கரங்களும் அஞ்சலி ஹஸ்தமாகக் கொண்டு வலக்கரத்தின் இடுக்கில் மார்போடு படிந்த நீளமான காம்புடைய செந்தாமரையினைக் கொண்டுள்ளார். இவரது கேசங்கள் யாவும் ஒருங்கே அமைந்து கேச கிரீடமாக உள்ளது. தேஜஸ் சண்டேசுவரர் விமானத்தின் நாற்புறத்திலும் சுதை வடிவில் காணப்படுகின்றார். சூரியபகவானுக்கு எனத்தனி ஆலய அமைப்பில் தேஜஸ் சண்டேசுவரர் அமைத்தல் முறை ஓர் மரபாகும். இத்திருவுரு வேறு எங்கும் காண இயலாததாகும்.

உற்சவர் :

இத்திருக்கோயிலில் விளங்கும் உற்சவமூர்த்தியான தேஜஸ் சண்டேசுவரர் பத்ர பீடத்தின் மேல் அமைந்த பத்ம பீடத்தில் "சமபாத ஸ்தானகம்" என்ற முறையில் நின்ற நிலையில் இருகரங்களையும் குவித்து அஞ்சலி ஹஸ்தமாக (விரல்கள் தொடவில்லை) விளங்குகின்றார் [1] இடக் கரத்தின் இடுக்கில் செந்தாமரையின் தண்டு மட்டும் (மலர் உடைந் துள்ளது)காணப்படுகிறது. இப்பெருமானுக்குக் கேசக் கிரீடமும் உளது. கழுத்து, மார்பு, கரங்கள் யாவற்றிலும் அணிகலன்கள் அணிசெய்து அழகூட்டுகின்றன. காதுகளில் ஆபரணங்கள் இல்லாமல் வடி காதுகளாக உள்ளன. இடுப்பில் சிற்றுடை மடிப்புக்களுடன் தொங்கியவாறு அமைந் துளது. பால்மணம் மாறாத பச்சிளம் பாலகனுகத் தியானநிலையில் திருமுகப் பொலிவுடன் காட்சி தருகின்றார். வேறு எந்தத் தலத்திலும் சூரியனுக் குரிய [2] தேஜஸ் சண்டேசுவரர் மற்றும் உற்சவ மூர்த்தியினைக் காண வியலாது. மிகப்பழமையான இத்திருமேனியானது தமிழகத்திற்குக் கிடைத்த கலைப்பொக்கிஷமாகும். [3] இன்றும் நவக்கிரகதோஷ நிவர்த்தி வேண்டுவோர் இத்தலத்தில் வந்து வழிபட்டு நற்பேற்றினை அடைகிறார்கள்.

---

1. சிலாரூபத்தின் வலப்பக்கம் செந்தாமரை காணப்படுகிறது. உற்சவ மூர்த்தியின் இடப்பக்கம் செந்தாமரையின் தண்டு மட்டும் இருப்பது காணப்படுகிறது.

2. இங்கு தேஜஸ் சண்டேசுவரர் மூல மூர்த்திக்கு முன்பாக பலிபீடம் உள்ளது சிவாலயங்களில் காணப்படும் சண்டேசுவரர் திருமுன் பலிபீடம் அமைந்தோ இல்லாமலோ விளங்கும், அல்லூர் - பசுபதீஸ்வரர் ஆலயத் தில் - வலக்கரத்தில் பத்மத்தை ஏந்தியபடி சண்டேசுவரர் திருவுருவம் காணத்தக்கது.



திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர் - ஸ்ரீ மகாலிங்கசுவாமி கோயிலில் விளங்கும் சண்டேசுவரர் - உற்சவமூர்த்தி.



திருச்சி மாவட்டப்-உடையார்பாளையம் வட்டம் கோவிந்தபுத்தூர் ஸ்ரீ கங்காஜடேஸ்வரர் ஆலயத்தில் விளங்கும் சண்டேசுவரர் திருவுருவம், சோழர்காலம் கி. பி. 9-10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

21. திருவிடைமருதூர் - சண்டேசுவரர் :

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயிலில் இரு சண்டேசுவரமூர்த்திகள் (செப்புத் திருமேனிகள்) விளங்குகின்றன.

பஞ்சமூர்த்திகளில் விளங்கும் சண்டேசுவரர் திருவுருவத்தின் காலம் கி. பி. 11 ஆம் நூற்றாண்டாகும். இதன் உயரம் 68 செ. மீ. இத்திருவுருவத்தின் மகுடமானது திருத்துறைப்பூண்டி ஸ்ரீ பிறவாமருந்தீஸ்வரர் ஆலயத்தில் விளங்கும் சண்டேசுவரரின் மகுடத்தினை ஒத்ததாக அமைந்து காணப்படுகிறது. இவர் நின்ற நிலையில் சர்வாபரணங்களுடனும் அதிகமான உதிரி மலர்களைத் தனது அஞ்சலி ஹஸ்தத்தில் வைத்துக் கொண்டும், இடையில் சிறிய ஆடையினை உடுத்திப் புன்சிரிப்புடனும் காணப்படுகின்றார். கீழ்ப்பகுதியில் சதுர பீடத்துடன் பத்மபீடமானது இரும்புக் கம்பிகளால் பொருத்தப்பட்டுள்ளது.

இத்திருவுருவச் சிலை சோழர் கலைப்பாணிக்கு ஓர் எடுத்துக்காட்டாக இன்றும் இத்திருக்கோயிலில் அமைந்திருத்தலைக் காணலாம்.

மற்றொரு சண்டேசுவரர் திருவுருவச்சிலை அறுபத்துமூவர் நாயன்மார்களின் செப்புப்படிம வரிசையில் காணப்படுகிறது. இத்திருவுருவத்தின் உயரம் 64. 5 செ. மீ, இதன் காலம் கி. பி. 19ஆம் நூற்றாண்டாகும். இவர் எடுப்பான முகத்தோற்றத்துடன் சமபங்க ஸ்தானநிலையில் நின்று வலக் கரத்தின் இடுக்கில் மழு ஏந்தி அஞ்சலி கரத்துடன் பத்மபீடத்தில் காட்சி தருகின்றார், இவர் அணிந்துள்ள இடுப்பு ஆடை முழங்கால்வரை நீண்டும் தொடைகளின் இருமருங்கிலும் தொங்கிய படியும் காணப்படுகிறது.

திருவிடைமருதூர் சிவாலயத்தில் வடக்கு ஆவரணத்தில் விளங்கும் சண்டேசுவரர் ஜடாபாரத்துடன் கருவறையில் பத்ரபீடத்தில் சுகாசனமாக அமர்ந்துள்ளார். இவர் தம் வலக்கரத்தில் மழுஏந்தியுள்ளார். இடக்கரம் சிம்ஹகர்ண முத்திரையாகவும் வலப்பாதத்தைத் தாமரை தாங்குவதாகவும் உள்ளது. தென் திசை நோக்கிக்காட்சி தருகின்றார்.

இத்திருக்கோயில் ஏகதள விமானத்தின் நான்கு திசைகளிலும் மூலத்தானத்து உருவினை பிரதிபலிக்கும் வகையில் சுதைவடிவில் பூதகணங்களும் சண்டேசுவரர் திருவுருவங்களும் எட்டுத் திசைகளிலும் காணப்படுகின்றன, படுத்த நிலையில் காணும் நந்திகளின் திருவுருவங்களும் காணப்படுகின்றன. இவருக்கு என்று தனித்தேரும் இருந்திருக்கிறது என்ற

---

3 * தாதன்பேட்டைப்பழுவூரில் சக்திகளுடன் நவக்கிரகங்கள் உள்ளன. வைத்தீஸ்வரன் கோயிலில் மேற்கு நோக்கி ஒருவரிசையில் நவக்கிரகங்கள் உள்ளன. கங்கைகொண்டசோழபுரத்தில் பலிபீட, அமைப்பில் வாகனங்களுடன் நவக்கிரகங்கள் உள்ளன. சூரியனார் கோயிலில் மூல நவக்கிரகங்கள் ஆயுதங்கள் இன்றியும் உற்சவமூர்த்திகள் ஆயுதங்களுடனும் காணப்படுகின்றன.

முறையில் தேர் நிலையும் கீழரதவீதியில் காணப்படுகிறது. ஆனால் அத் தேரானது காலத்தால் அழிந்துவிட்டது.

22. கோவிந்த புத்தூர் - சண்டேசுவரர் :

திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், கோவிந்த புத்தூர் கிராமத்தில் உள்ள ஸ்ரீ சங்காஜடேஸ்வரர் ஆலயத்தில் சோழர் காலத்து (கி. பி. 9 – 10 ஆம் நூற்றுண்டு) சண்டேசுவரர் சிலாரூபம் விளங்குகிறது.

இந்தத் திருவுருவத்தின் ஜடைகள் மகுடமாகவும், பக்கவாட்டில் சுருள்களாக விளங்கும் ஜடைகள் யாவும் ஜடாபாரமாகவும் காணப் படுகிறது. கழுத்தில் அணிகலன்களும், மார்பில் பிரம்ம முடிச்சுடன் காணப்படும் யக்ஞோபவீதமும். கரங்களில் வளையல்களும் (காப்புகள்) காணப்படுகின்றன. வலக்கரத்தில் திகழும் மழு ஆயுதம் நெற்றிப் பட்டத்தைத் தாண்டி உயர்த்திப் பிடித்திருக்கும் நிலை நோக்கத்தக்கது. இடக்கரம் தொடையின் மீது வைத்தநிலையில் சதுரமான பத்ரபீடத்தில் சுகாசனமாக சண்டேசுவரர் திருவுருவம் விளங்குகிறது. இடுப்பு வஸ்திரம் முன்பக்கம் நீண்டபடி ஆசனபீடத்தில் பரவியிருத்தலையும் காண்க. கால்களில் சிலம்புகள் பட்டும் அணியப்பட்டுள்ளன. வலக்கால் பத்ம பீடத்தில் பதிந்து காணப்படுகிறது. இது பூஜையில் திகழும் வடிவமாகும். பத்ரபீடம் நல்லமுறையில் அமையவில்லை. இப்பெருமான் யோக நிலையில் தனது மூக்கின் நுனியினை மட்டும் பார்த்திருக்குமாறு அமைந்துள்ள தோற்றத்தினை நாம் நேரில் உணரமுடிகிறது.

23. ஆத்தூர் - ஸ்ரீசொர்ணபுரிஸ்வரர் ஆலய சண்டேசுவரர் :


தஞ்சைமாவட்டம் – மயிலாடுதுறை வட்டத்தைச் சார்ந்த ஆத்தூர் கிராமத்தில் விளங்கும் ஸ்ரீ சொர்ணபுரீஸ்வரர் ஆலயத்தில் கி பி 10 ஆம் நூற்றுண்டைச் சார்ந்த சோழர் காலத்து சண்டேசுவரர் திருவுருவம் உள்ளது. இது கூப்பியகரத்துடன், வலப்பக்கக் கரத்தின் இடுக்கில் சாய்ந்த நிலையில் மழுப்படையினைக் கொண்டு பத்ம பீடத்தின்மீது நின்ற நிலையில் காட்சிதருகின்றது. கேசபந்தத்தின் ஒரு வகையிலான கிரீடம் அணிந்தும், சர்வாபரணங்கள் அங்கத்திலே அலங்கரிக்கப்பட்டு முள்ளன. இடையிலே அணிந்த வஸ்திரத்தின் மேற்பகுதியில் மணிகள் கோக்கப் பட்டுள்ளன. காலில் சிலம்பு காணப்படுகிறது. வலக்காலை பீடத்தில் இருத்தியும் இடக்காலை சற்று முன்னோக்கியபடி வைத்தும் இத்திருவுரு வானது தோற்றமளிக்கிறது. சோழர் காலத்து கலை நுணுக்கத்துடன் காட்சிதருகிறது.

24. நாகை - சமபாதஸ்தானக சண்டேசுவரர் :

கி. பி. 10 ஆம் நூற்றுண்டைச் சார்ந்த சோழர் கலைப்பாணியில் அமைந்த சண்டேசுவரர் செப்புத் திருவுருவத்தை நாகப்பட்டினத்தில்,



நாகப்பட்டினம் – சிவாலயத்தில் விளங்கும் சண்டேசுவரர் செப்புத் திருவுருவம். சோழர் காலம் கி. பி. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது



தஞ்சை மாவட்டம் – மயிலாடுதுறை வட்டம் – ஆத்தூர் ஸ்ரீ சொர்ணபுரீஸ்வரர் ஆலயத்தில் விளங்கும் சண்டேசுவரர். சோழர்காலம் கி. பி. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

உள்ள சிவன் ஆலயத்தில் காணலாம். இவர் ஜடாமகுடமும், கூப்பிய கரமும், கொண்டு விளங்குகிறார். இடக்கரத்தின் இடுக்கில் வளைந்த மழுப் படைகொண்டுள்ளார் (காம்புப்பகுதி வளைந்துள்ளது) தொடைப்பகுதி வரை பல மடிப்புகளுடைய வஸ்திரம் அணிந்துள்ளார். பல ஆபரணங் களுடன் கீழ்நோக்கிய பார்வையுடன் தோன்றும் சண்டேசுவரர் சமபாத ஸ்தானகத்தில் பத்ர பீடத்தின்மேலே அமைந்த பத்மபீடத்தில் காட்சி தருகின்றார்.

25. சேமங்கலம் - சண்டேசுவரர் :

தஞ்சாவூர் மாவட்டம் – சேமங்கலம் எனும் இடத்தில் கிடைக்கப் பெற்ற சண்டேசுவரர் செப்புத்திருமேனியானது சோழர் காலத்தைச் சார்ந்ததாகும் (10 – ஆம் நூற்றாண்டு) இதன் உயரம் 53 செ. மீட்டர் இதுதற்போது சென்னை அரசினர் அருங்காட்சியகத்தில் காட்சிப் பொருளாக அமைந்து விளங்குகிறது.

இச்சண்டேசுவரர் பத்ம இதழ்கள் அமையப் பெற்ற பத்மபீடத்தில் நின்ற நிலையிலான " வைசாக ஸ்தானகத்தில் " (இடக்காலை ஊன்றி வலக் காலைச்சற்று முன் நிறுத்துதல்) ஜடைகள் இறுக்கமாக அமைந்த மகுட மாகவுள்ளன. இவர் நீண்ட வடிகாதுகளுடன் விளங்குகிறார். இவர் பாகுமாலை, பாதுகாபம் தோள்வளை முதலியன அணிந்துள்ளார் கழுத்தணி களும், கரங்களில் மும்மூன்று வளையல்களும், உதரபந்தமும், முப்புரி நூலும் விளங்கத் தோற்றமளிக்கின்றார். அஞ்சலி ஹஸ்தத்தின் இடையில் மலர்ச்சரமும் காணப்படுகிறது. இடுப்பு வஸ்திர அமைப்பில் ஜரிகை வேலைப்பாடுகளும் இதனை இறுகப்பற்றிக்கொள்ள யாளி முகமுடைய பட்டையும் காணப்படுகின்றன. கீழ்ப்பீடத்தினை இணைக்க இருமருங்கிலும் வளையங்களும் காணப்படுகின்றன. திருமுடியும், ஆபரணங்களும், வஸ்திர அமைப்பும் கலைநுணுக்கம் வாய்ந்தனவாக வடிக்கப்பட்டுள்ளன.

26. திருத்துறைப்பூண்டி சண்டேசுவரர் :

திருத்துறைப்பூண்டி – ஸ்ரீ பிறவாமருந்தீஸ்வரர் திருக்கோயிலில் விளங்கும் சோழர் காலத்திய (கி. பி. 1000) சண்டேசுவரர் திருவுருவம் நின்ற நிலையில் கூப்பிய கரங்களுடன் திகழ்கிறது. இதன் உயரம் 55. செ. மீட்டராகும். இச்சண்டேசுவரர் நிமிர்ந்த நிலையில் விளங்கினாலும் வலப்பாக இடுப்பினைச்சற்று வளைந்த பாவனையில் காணப்படுகிறார் கூப்பிய கரங்களின் முன்பகுதி விரல்கள் சேராத நிலையில் உள்ளது. சிரசில் கிரீட மகுடம் விளங்க ஏகருத்ராட்சம், கண்டாபரணம், தோள்வளை, பாகுமாலை, கைவளையல் (காப்பு), கொலுசு முதலியன இவருக்கு அணிகலன்களாகத் திகழ்கின்றன. தொடைப்பகுதி வரை உடலோடு ஒட்டியமைந்த வஸ்திரமும் அதனை இறுகப் பிடித்தாற்போன்று விளங்கும் இடுப்புப் பட்டையும் காணப்படுகின்றன.

இவர் கூப்பிய கரமானது நெஞ்சிற்கு நேராக அமைந்திருக்கிறது. மழுவாயுதம் காணப்படவில்லை. பத்மபீடமானது உடைந்து காணப்படுகிறது இத்திருவுருவத்தினை நோக்கும்போது சண்டேசுவரரின் இளமைத் தோற்றம் பரிணமிக்கிறது எனலாம்.

27. தாராசுரம் - ஐராவதேஸ்வரர் ஆலய சண்டேசுவரர் திருவுருவங்கள் :

வரலாற்றுச் சிறப்புடைய தாராசுரம் எழில்மிகு கலைக்கோயிலானது சோழர்களின் சட்டக்கலைக்கும் சிற்பக்கலைக்கும் ஓர் சிகரமாக அமைந்து காணப்படுகிறது.

இத்திருக்கோயிலின் விமானம் முற்றிலும் கருங்கற்களால் ஆனவை இதில் உள்ள சிற்பங்கள் நல்லகலைச் சிறப்புடன் காணப்படுகின்றன. இவ் விமானம் போன்றதே முற்றிலும் கல்லாலான தஞ்சை - கங்கை கொண்ட சோழபுரம் திருபுவனம் ஆகிய திருக்கோயில்கள். * தாராசுரம் திருக்கோயிலை எடுப்பித்த இரண்டாம் இராஜராஜன் (கி. பி. 1150 - 1173) தனது ஆட்சிக்காலத்தில் இதனை இராஜராஜேச்சுரம் என்னும் பெயரால் அழைக்கச் செய்தான்.

முதலில் இதன் பிரதான விமானம் கீழ்த்திசையை நோக்கி இருப்பினும், கருவறைக்குச் செல்லும் வாயில் தென் பிரதட்சிண வெளியிலிருந்துதான் அமைக்கப்பட்டிருக்கிறது இது கற்குதிரைகளும், யானைகளும் பூட்டிய தேரின் வடிவில், இருமருங்கிலும் படிக்கட்டுகளைக் கொண்டு சற்றே வெளிவாங்கிய முகமண்டபத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்த தேரமைப்பின் சக்கரங்களின் ஆரங்களும், வெளிப்பட்டையும் மையக்குடமும் மிக இயற்கையான தோற்றத்துடனும், நுண்ணிய வேலைப் பாடுகளுடனும் கூடியவையாகும். இத்தகைய தேர் மண்டபங்களை சோழ மண்டலத்திலும் அதன் சுற்றுப் பிரதேசங்களிலும் உதாரணமாக குப்பகோணம், திருவாரூர், சிதம்பரம், மேலக்கடப்பூர், விருத்தாசலம் முதலிய இடங்களிலும் காணலாம்.

இரண்டாவதாக உயர்ந்த மதிற்சுவருடனும், திருமாளிகைச் சுற்றுடனும் கூடிய முதல் பிரகாரத்தின் வெளியே அமைந்துள்ள கோயிலின் நந்தி மண்டபமும் அதன் பின்புறம் பலிபீடமும் அமைந் துள்ளன. இந்தப்பலிபீடம் அழகிய கைப்பிடிச் சுவருடனும் பல் ஸ்தாயி களின் நாதத்தை எழுப்பக்கூடிய படிக்கட்டுகளுடனும் திகழ்கிறது.

சுவாமி ஆலய விமானம் :

இக்கோயிலின் ஐந்து தளங்களுடன் கூடிய விமானத்தின் எழுச்சி, தஞ்சைப் பெருங்கோயிலின் நெடிய அமைப்பை ஒத்ததாக இருக்கிறது.

---

* இத்திருக்கோயிலின் இடப்பக்கம் தனித்த நிலையில் அம்மன் கோயிலும் காணப்படுகிறது. அம்மன் ஆலயத்தின் விமானம் கோபுர அமைப்பில் காணப்படுகிறது.



தாராசுரம் ஸ்ரீ ஐராவதேஸ்வரர் ஆலயத்தில் விளங்கும் சண்டேசுவரர் உற்சவமூர்த்தி. சோழர்காலம் கி. பி. 11-12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது



ஷை ஆலயத்தில் நாயனார்மார்களின் வரலாற்றுச் சிற்பத்தொகுதியில் 20 - வது சிற்பமாக விளங்கும் சண்டேசுவர நாயனார் வரலாற்றுப் புடைப்புச் சிற்பங்கள். இது தெற்குகோஷ்டப் பகுதியில் விளங்குகிறது.

ஆனால் அதுபோலன்றி உச்சித்தளத்தின் மேல் நான்கு மூலைகளிலும் நந்தி உருவங்களுக்குப் பதிலாக சர்ணகூடுகள் அமைந்துள்ளன. இந்த விமானத்தின் ஓர் அடுக்கில் சண்டேசுவரரின் புராணவரலாறும், அவருடைய எல்லாவித லட்சணங்களுடன் கூடிய திருவுருவமும் காணப்படுகின்றன.

திருக்கோயில் அமைப்பும் சிற்பங்களும் ;

பிரதான சுவாமி கோயிலின் அமைப்பானது 23 மீட்டர் அகலமும் 63 மீட்டர் நீளமும் உடைய உபபீட மேடையின் மேல் கட்டப் பட்டுள்ளது. அம்மன் கோயிலுக்கும் இது போல் உபபீடம் உண்டு. கோயிலின் உயரம் சுமார் 23 மீட்டர் ஆகும். கருவறையில் உண்ணாழிச் சுற்றுலை இல்லை. அதையடுத்து முறையே சோழர்களின் உத்தியான பக்கவாட்டுப் புகு வழியுடன் கூடிய அர்த்தமண்டபமும் அதையடுத்து மகாமண்டபமும், அதன் பின்பு கோயில் கட்டுகளில் இரண்டாம் இராஜராஜனின் விருதுகளில் ஒன்றான ராஜகம்பீரன் -மண்டபம் என்று அழைக்கப்படும் திறந்ததேர் மண்டபமும் விளங்குகின்றன.

இக்கோயில் சுவர்ச்சிற்பங்களில் முத்தலையுடனும் எண்தோளுடனும் கூடிய அர்த்தநாரீஸ்வரர், ஹர - பிதாமஹர் முதலான சில அபூர்வமான இணைப்பு-தேவதைகளின் வடிவங்களும் காணப்படுகின்றன. இவையாவும் தக்காணப் பிரதேசத்தின் வழிபாட்டுக் கருத்துக்களின் பிரதிபலிப்பாக இருக்கலாம். இத்திருக்கோயிலின் தென் திசையிலிருந்து தொடங்கும் மண்டபத்தில் புடைப்புச் சிற்பங்களாக சுவரின் மத்தியில் அருமையான அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருஉருவங்களும் அவற்றின் விளக்கக் கல்வெட்டுத் தலைப்புடன் கூடிக் காணப்படுகின்றன.

கோயிலின் பலபகுதிகளிலுள்ள தூண்கள் பிற்காலச் சோழர்களின் கட்டிட வளர்ச்சியின் அறிகுறியாக விளங்குகின்றன. சுவரறைகளின் (சுவரில் உள்ள மாடங்கள்) தேவதைச் சிற்பங்களும் ஓரளவிற்குக் கல்யாணி - சாளுக்கியர்களின் தொடர்பைக் குறிப்பது வியக்கத்தக்கதல்ல. ஏனெனில் கல்யாண நகரத்தின் படையெடுப்பின் வெற்றிப் பரிசாக அங்கிருந்து கல்வெட்டுகளுடன் கூடிய சாளுக்கிய துவார பாலகர்சிலை இம்மன்னனால் இங்கு கொண்டுவரப்பட்டது. கோயிலின் சிற்பங்கள் பெரும்பாலும் சற்று வளைந்தபாணியில் அமைக்கப்பட்டிருப்பினும், சோழர் கலைப் பண்பாட்டின் வலிவும் பொலிவும் நிறைந்தனவாகவே காணப்படுகின்றன. இத்திருக்கோயிலின் மிகச் சிறப்புள்ள சிற்பங்களான பிச்சாடனர் சிற்பத் தொகுதியும், துவாரபாலகர் சிலையும், நின்ற நிலையில் உள்ள சண்டேசுவரர் சிலையும் பார்ப்பவர்களின் உள்ளத்தில் விட்டு நீங்காத உயிர்க்கலைச் சிற்பங்களாக விளங்குகின்றன.

28. சண்டேசுவரர் வரலாற்றுச் சிற்பம் :

இத்திருக்கோயிலின் தென்புறச்சுவரிலிருந்து தொடங்கப்பெற்ற * அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றுச் சிற்பத் தொகுப்பில் கீழ்ப்பகுதியில் இருபதாவது சிற்பமாக அமைவது "சண்டேசுவரர்" வரலாற்று நிகழ்ச்சியாகும். இந்த வரலாற்று நிகழ்ச்சியானது நீண்ட செவ்வக அமைப்பில் காணப்படுகிறது. இந்த வரலாற்று நிகழ்ச்சிகள் யாவும் புடைப்புச் சிற்பங்களாக மிகச்சிறிய அளவில் அந்தந்த நாயன்மார்களின் பெயர்கள் குறிக்கப்பட்ட கல்வெட்டுகளுடன் தில்லை வாழ் அந்தணர் சரித்திரம் முதலாகச், சுந்தரர் சரித்திரம் முடியக் காணப் படுகின்றன. இந்தச் சிற்பங்கள் அமைப்புபோல் வேறு எங்கும் காண இயலாது.

இந்தச் சிற்பத்தொகுதியில் "சேய்ஞலூர் பிள்ளையார் கதை' என்ற கல்வெட்டு காணப்படுகிறது. இதுபோன்று ஒரு நாயன்மார் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. சண்டேசுவரரின் சிற்பம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வலப்பக்கத்திலிருந்து இவரது சரித்திரம் தொடங்குகின்றது. I-வது : அத்திமரத்தின் கீழ் விசாரசருமர் தாபரமணலால் இலிங்கம் பிரதிட்டை செய்து பாற்குடங்களால் அபிஷேகிக்கின்றார். அருகிலிருக்கும் மரத்தின் பின்பக்கமாக இருந்து தந்தையானவர் இதனைக் கவனிக்கின்றார்.

II வதுபகுதி: பாற்குடங்களை இடறிவிட்ட காரணத்தால் தனது தந்தையின் இரு கால்களையும் தான் வைத்திருக்கும் தண்டத்தால் (மழு அல்லது கோடறி) வெட்டி வீழ்த்துகின்றார். கால் வெட்டுண்ட தந்தையின் முகமும் வெட்டுண்ட கால்கள் தொங்கியபடி இருக்கும் சிற்ப நுட்பத் திறனும் நேரிலேதான் அனுபவிக்கலாம். இங்கு விசாரசருமர் நின்ற நிலையில் மழுவினை ஓங்கியிருக்கின்றார்.

III வதுபகுதி: நீண்ட பத்ர பீடத்தில் சுகாசனமாக பரமேஸ்வரன், இடக்காலினைத் தொங்க விட்டபடி உள்ளார். இடக்கரத்தினைப் பூ ஸ்பரிஸ முத்திரையாகவைத்துள்ளார். கரண்டமகுடம் அணியப்பெற்ற அம்பிகையும் விளங்குகின்றார். கீழ்ப்பகுதியில் அமர்ந்த நிலையில் கூப்பியகரங்களுடன் விளங்கும் சண்டேசுவரர் திருமுடியில் பெருமான் தமது இண்டை மாலையினை அணிவித்து, * சண்டேசப்பதம் தந்து அருளுகின்றார்.

"DARASURAM" "Frise des Nayanmar" Ph 73 சிற்ப வரிசை 20. Ref :- Institut Francais 'D' Indologie.

*இதுபோன்றே, தஞ்சாவூர்ப் பெரிய கோயிலின் வடக்குப் படிக்கட்டின் கிழக்கு இடுக்குப்பகுதியில் யோகாசனம் அமைப்பில் சண்டேசர் விளங்கு கின்றார். இந்த வரலாற்றுச் சிற்பம் முற்றிலும் கலை நிறைவு பெருத சிற்பமாக உள்ளது. கங்கை கொண்ட சோழபுரத்தில் - "சண்டேசா நுக்ரஹ மூர்த்தி சிற்பம் சிறப்புடையது.





1. கும்பகோணம் வட்டம் - தாராசுரம் ஸ்ரீ ஐராவதேஸ்வரர் கோயிலில் விளங்கும் சண்டேசுவரர் (சண்டேசுவரர் கோயில் மூலத்தானத்திருவுரு)

2. ஷை ஆலயத்தில் விளங்கின சண்டேசுவரர் (வீரசண்டர்) தற்போது தஞ்சை அருங்காட்சியகத்தில் உள்ளது.

29. சண்டேசுவரர் கோயிலும் அமர்ந்த நிலையில் காணும் திருவுருவமும் :-

இத்திருக்கோயிலினுள் விளங்கும் சண்டேசுவரர் திருக்கோயிலில் டெக்குப்பகுதி, ஆவரண நுழைவாயிலின் அருகில் (துர்க்கை விளங்கும் மாடத்தின் எதிரில்) * துவைதள விமானத்துடன் கூடியதாக அமைந்த கோயில் உள்ளது. இதன் கருவறையில் ஜடாமகுடத்துடன், பத்மபீடத்தில் சுகாசனமாக அமர்ந்த நிலையில் சிலாவடிவில் சண்டேசுவரர் எழுந்தருளி யுள்ளார். இவர் வலக்கரத்தில், விளங்கும் மழுவாயுதம் நல்ல சிற்பக்கலை நுட்பத்துடன் காணப்படுகிறது. இடக்கரம் கடககரமாக (சிம்ஹகர்ண மாகவும் எண்ணலாம்) விளங்குகிறது. கழுத்தில் எல்லாவித அணிகலன் களும் விளங்க வலப் பாதத்தை தாமரைப் பீடத்தில் வைத்துள்ளார். இப்பெருமானது திருக்கோயிலானது முகமண்டபத்தினையும் கொண்டு உள்ளது. இக்கோயிலினை ஒட்டினாற் போன்று ஒரு சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. சிவலிங்கம் இருக்கும் பகுதியானது சிறுமண்டபத்தின் அறைபோலக் காணப்படுகிறது.

30. வடக்குச் சுற்று மாடத்தில் துவாபரயுக சண்டேசுவரர் :-

இத்திருக்கோயிலின் வடக்குச் சுற்றுச் சுவரின் மாடத்தில் (வடகிழக்கு) துவாபரயுக சண்டேசுவரர் சிலாருபம் காணப்படுகிறது. இத்திருவுருவமானது சோழர் கலைத்திறனைப் பறை சாற்றுவதாக அமைந்துள்ளது.

இந்த ஆதி சண்டேசுவரர் திருவுருவம் நான்கு முகங்களைக் கொண்டது (பின்புறம் ஓர் முகம் உள்ளது) இந்த ஆதிசண்டேசுவரர் மகுடத்தை அணிந்தும் பின் கரங்களில் திரிசூலமும், மழுவும் தாங்கி யுள்ளார். முன் கரங்களில் சின் முத்திரையுடன் கூடிய அட்சமாலையும் கமண்டலமும் விளங்குகின்றன. கண்டாபரணம், உருத்திராக்கவடம், முப்புரிநூல், சன்னவீரம், உதரபந்தம்; பட்டாடை முதலியன அணிந் துள்ளார். காலில் தண்டையும் சிலம்பும் காணப்படுகின்றன. இவர் பத்ம பீடத்தின் மேற்பகுதியில் வஸ்திரம் விரிக்கப்பட்ட நிலையில் சுகாசனமாக நிமிர்ந்து அமர்ந்துள்ளார்.

31. நின்ற வடிவில் சண்டேசுவரர். (கற்சிலாவடிவம்)

இந்தத் திருகோயிலிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட நின்ற நிலையில் விளங்கும் சண்டேசுவரரின் கற்சிலா உருவமானது தஞ்சை அருங் காட்சியகத்தில் உள்ளது. நின்ற நிலையில் இதைப் போன்ற சண்டேசுவரர் உருவத்தினைக் காண்பது அரிது. இதன் உயரம் 85 செ. மீ. இராண்டாம் ராஜராஜன் காலத்தைச் சேர்ந்ததாகும். நின்ற நிலையில் விளங்கும் இச் சண்டேசுவரர் திருவுருவமானது "சமபாதஸ்தானகம்" வடிவமைப்பில்

* இத்திருக்கோயிலில் விளங்கும் சண்டேசுவரர் திருக்கோயிலின் வரைகோட்டுப்படத்தினை இப்புத்தகத்தில் காணலாம்.

உள்ளது. ஜடாபாரம் பத்ரபூரிமத்துடன் சுருள் சுருளாகக் கீழ்நோக்கிய படி அமைந்து காணப்படுகிறது. வலக்காதில் மகரமும், இடக்காதில், காதோலையுப் திகழ்கின்றன நெற்றியில் லலாடமும், கழுத்தில் மணிமாலையும் கண்டாபரணமும், விளங்குகின்றன. திருமார்பில் தடித்த முப்புரி நூலானது நான்குமுறை வளைந்தும் இடப்பக்கம் முப்புரிநூலிலிருந்து பிரிந்து வரும் ஸ்தன சூத்திரமும், இடுப்பில் உதரபந்தமும், விளங்கு கின்றன. தோளில் பாதுதாபம், புஜத்தில் தோள்வளை, கரங்களில் காப்புகள் திகழ்கின்றன.

இடையிலே உடுத்தப்பட்ட பட்டாடையினை சிங்கமுக உருவுள்ள இடுப்புப்பட்டையானது இறுகப்பற்றி உள்ளது. தொடைப்பகுதிவரை காணப்படும் வஸ்திரத்தின் மேலே முத்துமணி மாலைகள் பல வளைவாகப் பூட்டப்பட்டுள்ளன. இந்த வஸ்திரக்கட்டானது இருமருங்குகளிலும் இலாக வயாக முடிந்து செருகியபடி பாதம்வரை நீண்டு காணப்படுகிறது.

நேர்கொண்ட பார்வையுடன் சிவ சொருபமேற்கொண்டு தனது வலக்கரத்தில் பழுவினை ஏந்தியும் இடக்கரம் சிம்மகர்ணகரமாக அமைத்தும் விளங்குகின்றன. நல்ல உடற்கட்டோடும் வியத்தகு ஆஹ்ருதியோடும் நின்றவாறு சண்டேசுவரர் திருவுருவம் எண்ணிலாக் கலையழகுடன் சோழர்களின் கலைப்பாணியை உணர்த்துவதாக இந்தச் சிலாரூபம் அமைந்து வினங்குகின்றது.

32. இவ்வாலயத்தில் விளங்கும் சண்டேசுவரர் - உற்சவ மூர்த்தியின் எழில் மிகு தோற்றம் :

மேலும் இத்திருக்கோயிலில் உற்சவ மூர்த்தியாக விளங்கும் சண்டேசுவரர் செப்புத் திருவுருவம் பத்ம பீடத்தில் நின்ற நிலையில் காணப்படுகிறது. (உற்சவ விக்ரகங்கள் யாவும் இத்திருக் கோயிலின் அர்த்த மண்டபத்தில் உள்ளன) சிரசில் சிரச்சக்கரத்துடன் கூடிய ஜடா மகுடமும், காதுகளில் காதோலையும், கூப்பிய கரத்தில் பூச்சரமும் வலத் தோளின் மீது சாய்ந்த மழுப்படையும், கரங்களிலும், கால்களிலும் காப்புகளும் அணியப்பெற்றுள்ளன. அடிவயிற்றுப் பகுதியிலிருந்து தொடைப்பகுதிவரை வஸ்திர அமைப்பும், இடக்காலை ஊன்றி, வலக் காலைச்சற்று முன்னே நிறுத்தி இடுப்பினை வளைத்து உடலின் மேற்பகுதி நேராக விளங்கும் திருவுருவம் நேரான பார்வையைக் கொண்டு திகழ்கிறது. பத்மபீடமானது ஒரு நீண்ட செவ்வக பீடத்தில் பொருத்தப் பட்டுள்ளது. அப்பீடத்தில் இரு துவாரங்களும் காணப்படுகின்றன.

சோழர்களின் கலைச் சிறப்புக்கு ஒரு ஞாயிறாக விளங்கும் இத்திருக் கோயிலின் மூலத்தானத்துச் சண்டேசுவரர், தஞ்சைக்கலைக் கூடத்தில் உள்ள நின்ற சண்டேசுவரர், ஆதிசண்டர், உற்சவ மூர்த்தியாக விளங்கும் சண்டேசுவரர் ஆகிய திருவுருவங்களின் பேரழகுக் கலைச்சிறப்பானது என்றென்றும் தமிழ் நாட்டிற்குப் பெருமை சேர்ப்பதாகும்.



திருச்சி மாவட்டம் கங்கைகொண்டசோழபுரம் ஸ்ரீ பிரகதீஸ்வரர் ஆலயத்தில் விளங்கும் சண்டேசுவரர் திருவுருவம். இத்திருவுருவம் மிகப்பெரியதாகும். சோழர்காலம் - கி. பி. 11 ஆம் நூற்றுண்டைச் சார்ந்தது.



சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள பேளூர் சண்டேசுவரர். (சோழர்காலம் 11 ஆம் நூற்றுண்டு. உயரம் 63 செ. மீ)

33. கங்கைகொண்ட சோழபுரம் சண்டேசுவரர் திருக்கோயிலில் விளங்கும் மூலத்தானத்துத் திருவுருவம் :

கங்கைகொண்ட சோழபுரத்துத் திருக்கோயிலில் விளங்கும் சண்டேசுவரர் திருக்கோயிலானது தென்திசை நோக்கி ஏக தளவிமானத்துடன் விளங்குகின்றது. இத்திருக்கோயிலில் விளங்கும் சண்டேசுவரர் திருவுருவம் மிகப் பெரியதாகும். விசுவரூபம் எடுத்தாற் போன்று விளங்கும் இத்திருவுருவின் பெருமையை நாம் நேரில் காணும்போது உணரலாம். இத்திருக்கோயில் முழுவதும் கருங்கல்லால் அமைக்கப்பட்டது. இதன் மேற்பகுதியில் சுண்ணும்புக் கலவைகள் பூசப்பட்டுள்ளன. விமானத்தின் நான்கு பக்கங்களிலும் அமர்ந்தநிலையில் சண்டேசுவரர் திருவுருவங்கள் அமைந்துள்ளன.

சதுரமான பத்ர பீடத்தில் மூலத்தானத்தில் சுகாசனமாக சண்டேசுவரர் அமர்ந்துள்ளார். இவரது ஜடைகள் சுருள் சுருளாக அமைந்து ஜடாபாரமாக உள்ளது. நெற்றிப் பட்டம் எடுப்பாக உள்ளது. நெற்றிபட்டத்திற்கு மேல் விளங்கும் ஜடை சிறிய வடிவில் குடமகுடம் போலவும் உள்ளது. காதுகள் வடிக்காதுகளாக உள்ளன. வலக்கரத்தில் அமைந்த மழுவாயுதத்தின் காம்பு மெல்லியதாகவும் நீண்டும் இலைப்பகுதி (மழுவிலை) சற்று விசாலமாக (பரசு ஆயுதத்தின் இலைப்பகுதி போல) வலப்பக்கம் நீண்டு உள்ளது. இடக்கரமானது இடப்பக்கத்து முழங்காலின் நடுப்பகுதியில் பதிந்தாற்போலக் காணப்படுகிறது. விரல்கள் மெல்லியனவாகவும் அழகாகவும், உள்ளன. சுண்டு விரலின் அடிப்பகுதியில் சிறிய வளையம் போன்ற மோதிரம் விளங்குகின்றது. பாதங்களில் மணிகளைக்கோத்த கொலுசுகள் காணப்படுகின்றன.

கழுத்தில் மூன்று அணிகள் காணப்படுகின்றன. அதில் கண்டாபரணமும் ஒன்று. மூன்று புரிகளையுடைய முப்புரிநூல் தெளிவாகவும் மூன்று முடிச்சுகள் உடையனவாகவும் உள்ளன. கரங்களில் உருத்திராக்கங்கள் கோத்த அணியும் அணியப்பெற்றுளது. தோள்வளையும் காப்புகளும் விளங்குகின்றன.

முப்புரிநூலிற்கு மேல் உதர பந்தம் மணிகளால் அமையப்பெற்றுள்ளது.

இடையில் விளங்கும் வஸ்திரத்தை இறுகப் பிடித்துக் கொள்ளக் கச்சை கட்டப்பட்டுள்ளது. வஸ்திரமானது பீடத்தின் முன்பு இரு மருங்கிலும் பரவியும் கீழ்நோக்கித் தொங்கியும் காணப்படுகிறது; வலப்பாதம் பெரிய தாமரைப் பீடத்தில் பதிந்துளது.

சண்டேசுவரர் (விசாரசருமர்) தாம் சிவபூசை செய்யும் காலத்து சதாசிவரூபமாகவும் சிவ அபசாரத்தைச் செய்த தந்தையினைத் (எச்சதத்தன்) தண்டிக்க முற்படும் போது ருத்ராம்சமச் கோலமாகவும் (விசுவரூபமாகவும்) காணப்படுகிறார். எனவே இவ்வாலயத்தில் விளங்கும்

சண்டேசுவரின் திருக் கோலமானது விசுவரூபத் திருவுருவமைதியாக விளங்குகின்றது. சோழர்களின் கலைப்பாணி ஈடில்லா அழகு ததும்பும். குறிப்பாக வீரத்திலும் சிவபக்தியிலும் சிறந்த இராஜராஜசோழனின் மகனான ராஜேந்திர சோழனின் சிவபக்தியின் மேம்பாட்டினை இவ்வாலயத்தில் விளங்கும் திருமேனிகளின் வாயிலாக நாம் காணலாம்.

34. பேளூர் – சண்டேசுவரர் :

சதுரமான பத்ர பீடத்தின் மேற்பகுதியில் அமைந்த வட்டப் பகுதியில் நின்ற நிலையில் 11-வது நூற்றாண்டைச் சார்ந்த பேளூர் சண்டேசுவரர் செப்புத் திருமேனியின் உயரம் 63. செ. மீ. ஆகும். இச் சண்டேசுவரர்சிலை தற்போது சென்னை அரசினர் அருங்காட்சியகத்தில் உள்ளது. இவர் சிரசில் ஜடாமகுடம் விளங்க, காதணிகள் இல்லாமல் வடி காதுகளுடனும் கழுத்தில் சிறிய ருத்திராக்ஷமாலையுடனும், மார்பில் முப்புரி நூலுடனும், இடுப்பில் உதரபந்தத்துடனும், கரங்களில் தோள்வளை களுடனும் கால்களில் (கணுக்காலுக்குச் சற்று மேற்பகுதியில்) காப்பு களுடனும் காணப்படுகின்றார்.

இந்தச்சண்டேசுவரர் திருவுருவமானது ஏனைய சிற்பத் திருவுருவி லிருந்து சற்று வித்தியாசமான நிலையில் காணப்படுகிறது. கீழ்நோக்கி அமைந்த இடக் கரத்தில் மலர் பொருந்தின நிலையில் இருப்பது * போல "மழு" ஆயுதமானது மிகச் சிறிய நிலையில், மழுப்படையின் வெட்டு வாய்ப்பகுதி இடப்பக்கம் இருக்குமாறு காணப்படுகிறது. வலக்கரமானது நெஞ்சுக்கு நேராக அமைந்து அபயகரமாக விளங்குகிறது. உடலோடு ஒட்டிய பட்டாடையும் காணப்படுகிறது.

35. கோயில் திருமாகாளம் – இருசண்டேசுவரர் திருவுருவங்கள் :

கோயில் திருமாகாளம் சோழநாட்டுத் தென்கரைத் தலங்களுள் ஒன்றாகும். (நாகை மாவட்டம் – நன்னிலம் வட்டத்தில் உள்ளது) இறைவனின் திருப்பெயர் ஸ்ரீமாகாளேஸ்வரர், இறைவியின் திருப்பெயர் ஸ்ரீபக்ஷயாம்பிகை. இத்தலம்–சோமாசி மாறநாயனார் செய்யும் யாகத்திற்குத் திருவாரூர்ப் பெருமான் (தியாகராஜமூர்த்தி) எழுந்தருள வேண்டும் என்ற சுந்தரரின் வேண்டுகோளை ஏற்று, பெருமான் நீசவடிவினராய் வருகை புரிந்து அருள்செய்த தலமாகும். யாகஉற்சவ காலத்தில் 17 மூர்த் தங்கள் புறப்பாடு சிறப்பாக இருக்கும்.

இத்திருக்கோயிலில் பெரியதும் சிறியதுமான இரு சண்டேசுவரர் சிலாரூபங்கள் அருகருகே காட்சிதருகின்றன. இத்திருவுருவங்கள் ஜடா மகுடத்துடன் சுகாசனம் கொண்டு சிறிய மழுவினை வலக்கரத்தில் ஏந்தியவாறு காணப்படுகிறன. காதுகளில் பத்ரகுண்டலங்கள் விளங்க, சர்வ ஆபரணங்களுடன் இடக்கரங்களை தொடைமீது பதிய வைத்தபடி சதுரமான ஆசனத்தில் காட்சிதருகின்றன. நிமிர்ந்த உடல் வீரம்



நாகை மாவட்டம், நன்னிலம் வட்டம் கோவில்திருமாகாளம் ஸ்ரீ மாகாளேஸ்வரர் ஆலயத்தில் விளங்கும் இரு சண்டேசுவரர்களின் திருவுருவங்கள்.



வடஆர்க்காடு மாவட்டம், திருவண்ணுமலை வட்டம் ஆர்ப்பாக்கம் ஸ்ரீ பொலச்சியம்மன் கோயிலில் விளங்கும் சண்டேசுவரர்.

பொருந்திய திருமுகம் கம்பீரமான தோற்றம் ஆகியவற்றுடன் விளங்கும். இம் மூர்த்தங்களை நேரில் காண்பதே சிறப்புடையதாகும். மேலும் இத்திருக்ககோயிலில் உள்ள உற்சவமூர்திகள் எண்ணிலாக் கலையழகுடன் விளங்குகின்றன.

36. "நேமம்" - சண்டேசுவரர் :

பழமையும் பெருமையுமிக்க 'நேமம்' என்பது நகரத்தார்களின் குலமரபுக் கோயில்கள் இருக்கும் தலம் * ஒன்பதில் ஒன்றாகும். இத்தலம் ப. மு. தேவர்மாவட்டத்தில் குன்றக்குடிக்கு வடக்கே 2 கி. மீ. தொலைவில், கீழச்சிவல்பட்டி செல்லும் சாலையில் உள்ளது 1800 - ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மைச் சிறப்புவாய்ந்த தலமாகும் சுவாமி – செயங்கொண்ட சோழீசுவரர். அம்பிகை – சௌந்தர நாயகி இத்திருக்கோயில் எத்தனையோ அழகு தரும், சிற்பங்களைத் தன்னகத்தே கொண்டதாய், பார்ப்போர் வியக்கும் வனப்புடையதாய் அமைந்து விளங்குகின்றது.

சந்நிதி :

இத்திருக்கோயிலின் மேல் சுற்றுப் பிரகாரத்தில் சண்டேசுவரர்க்குத் தனிச்சந்நிதி அமைந்துள்ளது. இதன் உபபீடம், அதிட்டானம், சுவர், கூரை ஆகிய பகுதிகள் எளிமையாக அமைந்து விளங்குகின்றன. கூரையின் கபோதக முகப்பில் கஜலட்சுமியும் சுற்றிலு முள்ள கூடுகளில் பல்வகைச் சிகரங்களும் அமைந்து விளங்குகின்றன. இடையிடையே கிழக்கு மேற்கு, வடக்கு. ஆகிய திசைகளில் முறையே இந்திரன், திருமால் நான்முகன், ஆகிய தெய்வ உருவங்கள் வீற்றிருக்கின்றன. கூரையின் மீதுள்ள ஒரு தள விமானம் சுதைச் சிற்பங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இதன் சிகரம் வட்டவடிவுடையது.

கருவறைத் திருவுரு (பாண்டியர்காலம்) :

இக்கோயிலின் கருவறையில் உள்ள சண்டேசுவரர் சிலை மிகவும் பழமையான வடிவுடையது. இவ்வுருவம் இடக்காலை மடித்து வலக்காலைத் தொங்க விட்டபடி இரண்டு கரங்களுடன் அமர்ந்த திருக்கோலத்தில் (சுகாசனம்) காட்சியளிக்கிறது. இவரது வலக்கரம் நீண்ட கோடரியைப் பிடித்துள்ளது. இவரது கேசங்கள் சடாபாரமாகக் காட்சியளிக்கின்றன. இவர் இரத்தினபட்டம், மகரக்குழை, வட்டக்குழை, தோள்மாலை, முத்துப்பட்டம், சரப்பளி, கல்பதித்தமாலை, பூணூல், வயிற்றுக்கச்சை. பூரிம முகப்புடைய தோள்வளை, கடகம், காப்பு, கைவளை, தொடை வரை அமைந்த இடைக்கச்சு, பக்கங்களில் சரிந்த ஆடைக்கட்டு, கழல்,

---

* ஏனைய எட்டு கோயில்கள் - இலுப்பைக்குடி இளையாத்தங்குடி; வைரவன்கோயில், மாத்தூர், இரணியூர், சூரைக்குடி, பிள்ளையார்பட்டி வேலன்குடி, நேமம் கோயில் - மா, சந்திரமூர்த்தி, எம், ஏ.

பாதசரம் ஆகியவை அலங்கரிக்க, முகத்தில் இளநகை தவழ அமைதியான தோற்றத்துடன் காட்சியளிக்கின்றார். இவரது இடப்பக்கத்து மார்பை அலங்கரிக்கும் முத்தாலான பூணூல் கீழ்வயிற்றை அடையாமல் வலப் பக்கத்து முன் கையில் ஏறிச் செல்கிறது. தலைக்கோலம், உருவமைதி, ஆடைஅணிகள், ஆயுதம், அமர்ந்துள்ள கோலம், பீடத்தின் அமைப்பு யாவும் கருத்திற்கொண்டு சிந்தித்தால் இது கி. பி. 9–10 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர் கலையாகக் கருத இடம்தருகிறது. இச்சிலையின் உயரம் 65 செ. மீ. தோள் அகலம் 21 செ. மீ. ஆகும்.

திருவீதி உலாமூர்த்தி (உற்சவர் – சண்டேசுவரர்) :

விழாக்காலங்களில் திருவீதியில் எழுந்தருளி அருள் பாலிக்கும் சண்டேசுவரர் (உற்சவமூர்த்தி) தாமரை இருக்கையின் மீது இருகைகளைக் கூப்பிய நிலையில் வணங்கி நின்ற கோலத்தில் காணப் படுகின்றார். வலப்பக்க முன் தோளின் மீது கோடரியை ஒத்த மழுவாயுதம் சாத்தப்பட்டுள்ளது. தலையை உயர்ந்த சடைமகுடமும் சிரச்சக் கரமும் அலங்கரிக்கின்றன. மேற் காதுகள் செவிப்பூக்கள் செருகப்பட்டும், கீழ்க்காதுகள் மலர்க் குண்டலங்கள் அணியப்பெற்றும் விளங்குகின்றன. நெற்றியைச் சுற்றிலும் இரத்தினபட்டம், காணப்படுகிறது. கழுத்து, மார்பு மேற்கை முன் கரங்கள் ஆகியவற்றில் மணிகள் கோத்த அணிகலன் கள் அழகு செய்கின்றன. மார்பில் - பூணூல் எடுப்பாக உள்ளது, இடையிலிருந்து கீழ்த்தொடை வரை எளிமையான ஆடை விளங்குகிறது. இடையின் முன்புறம் விசிறி மடிப்புடைய முகப்பும், இடையைச் சுற்றிலும் அரைப்பட்டிகையும், இடையின் பக்கங்களில் சரிந்து தொங்கும் ஆடைக் கட்டும், காணப்படுகின்றன. தொடைமீது முத்துச் சரமும், இரு தொடைகளின் ஊடே தொங்கு சரமும் உள்ளன. கால்களில் மணிகள் பதித்த காப்பும் விளங்குகிறது.

இப்பெருமானது முகம் ஆழ்ந்தபக்தியைக் காட்டுகிறது. நுதலில் செங்குத்தான திலகம் விளங்குகிறது. உயர்ந்த புருவமும், அழகிய கண்களும், குவிந்தவாயும் இவரது அழகுக்கு அழகூட்டுவனவாக உள்ளன. வேண்டும் போது திருவாசியைப் பொருத்துவதற்கு வகை செய்யப் பட்டுள்ளது. இவரது வலத்தோளில் சாத்தியுள்ள கோடரியை ஒத்த, மழு ஆயுதத்தின் வடிவமைப்பில் நகரத்தாரின் கலையினைக் காணமுடிகிறது. " இரணியூர் " படிமத்துடன் ஒப்பிடத்தக்க இப்படிமம், கி. பி. 19 - ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தது. பஞ்சலோகத்தில் அமைந்த இத் திருவுருவத்தின் உயரம் 62 செ. மீட்டரும் அகலம் 13 செ. மீட்டரும் ஆகும்.

37. சிம்மத்தின் மீதமர்ந்த ஆர்ப்பாக்கம் - பொளச்சியம்மன் ஆலய சண்டேசுவரர் :

வடஆர்க்காடு மாவட்டம் – திருவண்ணாமலை வட்டம் ஆர்ப் பாக்கம் எனும் ஊரில் விளங்கும் பொளச்சியம்மன் ஆலயத்தில் சிம்மத்தின்



செங்கல்பட்டு மாவட்டம் பொன்னேரி வட்டம் – திருப்பாலைவனம் ஸ்ரீ பா லீ ஸ் வ ர ர் ஆலயத்தில் விளங்கும் சண்டேசுவரர் (இத்திரு வுருவத்தை ஆதிசண்டேசுவரர் எ ன வு ம் கூறுவர்)



வடஆர்க்காடு மாவட்டம், வேலூர் வட்டம் விரிஞ்சிபுரம் ஸ்ரீ மார்க்கபுரீஸ்வரர் ஆலயத்தில் விளங்கும் சண்டேசுவரர் திருவுருவம்.

மீதமர்ந்த சண்டேசுவரர் திருவுருவம் காணப்படுகின்றது. ஒரே கல்லினால் வடிக்கப்பட்ட இத்திருவுருவின் மீது சுண்ணாம்பு பூசப்பட்டு அகில் வண்ணங்களும் தீட்டப்பட்டுள்ளன, பூசையில் இல்லாது தனித்து இவ்வுருவம் காணப்படுகின்றன.

அமர்ந்த நிலையில் உள்ள சிம்மத்தின் மீது சுகாசனமாக பாலரூப சண்டேசுவரர் காணப்படுகின்றார், வலக் கரத்தில் மழுப் படையினை ஏந்தியும், இடக்கரத்தினைத் தொடைமீது பதித்தும், நிமிர்ந்த எடுப்பான திருமுகத்துடன் இவரது உருவம் காணப்படுகிறது. இவரது கேசங்கள் யாவும் ஜடாமண்டல அமைப்பினை ஒத்ததாக உள்ளது. மார்பில் திகழும் உருத்திராக்க மாலை எடுப்பாக உள்ளது பாதங்களிலும் கரங்களிலும் காப்புகள் காணப்படுகின்றன.

இத்தகைய சண்டேசுவரர் உருவம் சிம்மத்துடன் கூடியதாக அமைந்து காணப்படுதல் என்பது ஓர் அற்புதப் படைப்பேயாகும். பொதுவாக சண்டேசுவரர் சிற்பத்தைக் கல்லிலும், செம்பிலும் உருவாக்கும் காலத்தில் எவ்வித வாகனமுமின்றி அமைப்பர். மேலும் சிம்ம வாகனம் அம்பிகைக்கு உரியதாகும். அம்பிகைக்கு உரிய ஆலயமாக இருப்பதால் அவளது வாகனமே பாலனாக விளங்கும் சண்டேசுவரர்க்கும் அமைந்து விளங்கு கின்றது என்று துணியலாம். மேலும் அம்பிகையின் ஆலயத்தில் பெரும் பாலும் " சண்டி கேசுவரி " எனும் திருப்பெயருடன் பெண்உருவமாக காணப்படும். ஆனால் இவ்வாலயத்தில் பாலரூப அமைதியோடு சிம்மத்தில் ஆரோகணித்து சண்டேசுவரர் திருவுருவம் அமைந்திருப்பது தொல்லியல் ஆய்வாளர்களின் சிந்தனைக்கு விருந்தாகும். இத்திருவுருவத்தின் மேல் சுண்ணாம்பு பூச்சினை தற்போது அகற்றியுள்ளனர். இன்னும் சிம்மவாகனத் தின் உடற் பகுதியில் சுண்ணாம்பு காணப்படுகிறது.

38. சிந்தனைக்குரிய திருப்பாலைவனம் சண்டேசுவரர் :

செங்கல்பட்டு மாவட்டம் - பொன்னேரி வட்டத்தில் உள்ள திருப்பாலைவனம் தலத்தில் விளங்கும் ஸ்ரீ பாலீஸ்வரர் ஆலயத்தில் விளங்கும் சண்டேசுவரர் சிலாவடிவம் ஆய்வாளர்களின் சிந்தனைக்குரிய தாகும்.

பத்ரபீடத்தின் மீது சுகாசனமாக நான்கு திருக்கரங்களுடன் சண்டேசுவரர் காட்சி தருகின்றார். பின் கரங்களில் ஜபமாலை (அக்கமாலை) தீச்சுடர், முன்கரங்களில் அபய, வரத முத்திரைகள் காணப்படுகின்றன. சிரசில் விளங்கும் கேசங்கள் யாவும ஜடாபாரமாகத் தோள்வரை கீழ்நோக்கித் தொங்கியபடி அமைந்துள்ளன. கால்களில் – கொலுசு தண்டை, கரங்களில் காப்புகள், கழுத்தில் – மணிவடம், மார்பில் யக்ஞோபவீதம் முதலியன விளங்குகின்றன.

இருப்பினும் இத்தகைய அம்சங்கள் அடங்கிய சண்டேசுவரர் திருவுருவ அமைதியினைப்பற்றிச் சிற்பநூல்களிலும், ஆகமங்களிலும்

காணப்பெறவில்லை. இத்திருவுருவப் புகைப் படத்தின் குறிப்பு பாண்டிச்சேரி பிரஞ்சு இண்டாலஜி நிறுவனத்தில் " சண்டேசுவரர் " என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

உத்தர காமிகாகமத்தில் சண்டேசுவரரைப் பற்றிக் கூறும் போது கிரேதயுகத்தில் – எண்கரங்களை உடையவராகவும், திரேதாயுகத்தில் – ஆறுகரங்களை உடையவராகவும், துவாபரயுகத்தில் – நாற்கரங்களையுடையவராகவும், கலியுகத்தில் – இரு கரங்களையுடையவராகவும் அமைத்தல் வேண்டும் என்கிறது.

" க்ரேதாயாம் அஷ்ட ஹஸ்த :।
ஸ்யாத் த்ரேதாயாம் ஷட்புஜோமத :।
த்வாபரே ச சதுர்ஹஸ்த :
கலௌது த்விகரோ மத :।

சிங்களதேசத்தில் சண்டேசுவரரை நிர்மாணிக்கும்போது கரங்களில் அபயம், மழு, பாசம், சூலம் கொண்டு இஷ்ட ஆசனத்தில் அமைப்பார் என்று உத்தரகாமிகாகமம் கூறுகிறது.

நான்கு முகமுடைய சண்டேசுவரரின் திருக்கரங்களில் காணும் ஆயுதங்கள் முற்றிலும் திருப்பாலைவனம் சண்டேசுவரர் திருக்கரங்களில் திகழவில்லை என்பதனைச் சிந்திக்க வேண்டும். இச்சண்டேசர் திருவுருவமைதிபற்றிப் பல கருத்துக்கள் நிலவுகின்றன. ஆனால் இத்திருவுருவத்தை ஆதிச்சண்டர் என்று பெரியோர்கள் கூறுகின்றனர். எப்படி இருப்பினும் இத்திருவுருவஅமைதியனை, ஆராய்ச்சியாளர்களும், சிற்பிகளும் தக்கமுறையில் விளக்கம் தந்து உதவுவார்களேயானல் ஆய்வு செய்யும் அன்பர்களுக்கு நல்லதொரு கருத்து விளக்கம் கிடைக்கும்.

39. சிதம்பரம் – சண்டேசுவரர்கள் :

தில்லை என்று போற்றப்படும் சிதம்பரம் ஸ்ரீ நடராஜப்பெருமான் திருக்கோயிலில் – விளங்கும் பொன்னம்பலத்தின் கிழக்கு ஆவரணத்தில் அபிஷேகக் கிணற்றின் அருகில் சண்டேசுவரர் கோயில் உள்ளது. இத்தலத்தில் ஸ்ரீ நடராஜப்பெருமான் தென்திசை நோக்கியிருந்து திருக்காட்சி வழங்குகின்றார்.


சண்டேசுவரர் திருக்கோயிலின் கருவறையில் இரண்டு சண்டேசுவரர் திருவுருவங்கள் காணப்படுகின்றன. முதல் திருவுருவமான சண்டேசுவரர்க்கு * நான்கு திருமுகங்கள் உள்ளன. பின் இடக்கரத்தில்

---

* நான்கு முகமுடைய, சண்டேசுவரரை ஷெ ஆலய பூசகர்கள் பிரம்ம சண்டி எனக் கூறுகின்றனர். இதுவும் துவாபரயுக சண்டேசுவரர் ஆகும். (முருகனின் திருவுருவ வகைகளில் ஒன்று " பிரமசாஸ்தா " பிரமனுக்குரிய முத்திரையினைக் கொண்டு விளங்குதலால் முருகன் இப்பெயர் பெற்றார்) பிரமனுக்கு நான்கு முகம் உண்டு. அதுபோல் அமைந்த இச்சிற்பத்திற்கும் இந்தப்பெயரினை வழங்குகின்றனர்.



திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி வட்டம் - கழுகுமலை வெட்டுவான் கோயில் (குகைக்கோயில்) சண்டேசுவரர். இதுபாண்டியர் காலத்தைச் சார்ந்தது.



வடஆர்க்காடு மாவட்டம் திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் விளங்கும் சண்டேசுவரி - சண்டேசுவரர்.

சூலமும், பின் வலக்கரத்தில் மழுவும், முன் இடக்கரத்தில் கமண்டலமும், முன் வலக்கரத்தில் ஜபமாலையும் கொண்டு சின் முத்திரையோடு சுகாசன மாக வலப்பாதம் தாமரைப் பீடத்தில் பதிந்து காணப்படுகிறது.

40. தொனிச்சண்டர் :

அதே கருவறையில் இருகரம் உள்ள தொனிச் சண்டேசுவரர் திருவுருவம் காணப்படுகிறது. இவர் கேசக்கிரீடமும் சர்வாபரணங்களும் கொண்டு இடக்கரத்தில் மழுவினை ஏந்திச் சுகாசனமாகக் காட்சி தருகின்றார்.

இவ்விரு சண்டேசுவரர்களின் (துவாபரயுக சண்டேசுவரர், தொனிச் சண்டேசுவரர்) திருமேனிகளின் முன்பு ஒரு பலிபீடமும் காணப்படுகிறது. இதே போலச் சில சிவாலயங்களில் காணப்படும் சண்டிகேசுவரர் ஆலய கருப்பக்கிருகத்தில், இரண்டு சண்டேசுவரர் திருமேனிகளும் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். திருமாளிகைப் பத்தியிலும் சண்டேசுரர் திருவுருவங்களைக் காணலாம்.

41. விரிஞ்சிபுரம் சண்டேசுவரர் :

வடஆர்க்காடு மாவட்டம் - வேலூர் வட்டத்தைச் சார்ந்த விரிஞ்சி புரம் தலத்தில் விளங்கும் ஸ்ரீ மார்க்க புரீஸ்வரர் ஆலயத்தில் அழகிய கலைச் செறிவோடு கூடிய சண்டேசுவரர் திருவுருவமானது சிலாரூபத்தில் விளங்குகின்றது. நீண்ட பத்ர பீடத்தில் சுகாசனமாக இப்பெருமான் காட்சிதருகின்றார். வலக் கரத்தில் வேலைப்பாட்டுடன் கூடிய சிறிய மழு ஆயுதம் உள்ளது. இடக்கரம் சிம்ஹகர்ண முத்திரையாகக் காணப் படுகிறது. இவர்திருமேனியில் ஏகாரத்சாட்சம், கண்டாபரணம்,உருத்திராக்க வடம், தோள்வளை, பாகுமாலை, உதரபந்தம், காப்புகள், கொலுசுகள் முதலான அணிகலன்கள் அணியப்பெற்றுள்ளன. இருகாதுகளிலும் காதோலைகள் காணப்படுகின்றன. நெற்றிப்பட்டத்திற்குமேல் அணியப் பெற்ற கிரீடம் பத்ரபூரிமத்துடன் திகழ்கிறது. காதுகளின் இருமருங்கிலும் கிரீடத்தோடு இணைந்த வேலைப்பாடுகள் நன்கு அமைந்துள்ளன. புன்முறுவலோடு இவரது திருமுகப் பொலிவு நன்கு மிளர்கின்றது.

42. கழுகுமலை - சண்டேசுவரர் : (வெட்டுவான் கோயில்)
இருப்பிடம் :

பல்லவர்களின் கலைப்பாணியைப் பின்பற்றி வ. உ. சி மாவட்டம் சங்கரன்கோயிலிருந்து கோவில்பட்டிக்குச் செல்லும் வழியில் வெட்டுவான் கோயில் உள்ளது. உலகப்புகழ் பெற்ற மாமல்லபுரம் செல்ல இயலாதவர்கள் இக்கோயிலைக்கண்டு மகிழலாம் (கோவில்பட்டியிலிருந்து சுமார் 20. கி. மீ தூரம்) "அரைமலை" என்பது இங்கு அமைந்துள்ள மலையின் பழைய பெயராகும்.

பெயர்க்காரணம் :

"நின்ற சீர் நெடுமாறன்" காலத்தில் சமணர்களை இவ்வூரில் கழுவேற்றிய காரணத்தால் இவ்வூர் கழுமலை என்று பெயர் பெற்றது. பின்னர் கழுகுமலை என்றாயிற்று. இவ்வூரிலுள்ள கோயில்கள் ஒற்றைக் கோயில், குடைவரைக்கோயில், கட்டிடக்கோயில் என்ற மூன்று வகையான கட்டிக் கலைக்கும் சான்றாக அமைந்து விளங்குகின்றன.

வெட்டுவான் கோயில் :

இது முருகன் கோயிலுக்குப் பின்னால், மலையின் ஒரு பகுதியை மலையில் இருந்து வேறுபடுத்திக் காட்டி கற்கோயிலாக அமைக்கப் பட்டுள்ளது. இதற்கு வெட்டுவான் கோயில் என்று பெயர். இது எட்டாம் நூற்றாண்டின் முற்காலப் பாண்டியர்களின் படைப்பாகும். இங்குள்ள சிற்பங்கள் அழகின் செறிவாகக் காட்சியளிக்கின்றன.

சண்டேசுவரர் :

இங்கு விளங்கும் சண்டேசுவரர் திருவுருவம் அமைதி தவழும் திருமுகம் கொண்டதாக விளங்குகிறது. கேசங்கள் யாவும் ஒருங்கே அமைந்த கிரீடமாகவும் காணப்படுகின்றன. இவரது இடையானது சிறுத்தும் மார்பானது விரிந்தும் விளங்குகிறது. காதுகளில் பக்கவாட்டில் அமைந்த பத்ரகுண்டலங்களும் கழுத்தில் கண்டாபரணமும், காணப்படுகின்றன. பூணூல் நன்கு தடித்துப்பட்டையாக உள்ளது. உதரபந்தப்பட்டையும் காணப்படுகிறது.

இடுப்பில் உள்ள வஸ்திரத்தினை இறுகப்பிடித்துக்கொள்ள மேலே ஒரு வஸ்திரக்கட்டு அமைந்துள்ளது. கரங்களில் காப்புகள் அணியப் பட்டுள்ளன. சண்டேசுரர் சுகாசனமாக அமர்ந்துள்ளார். இவர்தமது வலக்கரத்தில் மலரினை ஏந்தியுள்ளார். இடக் கரத்தினை இடத்தொடை மீது வைத்தும் கீழ்நோக்கிய பார்வையுடனும் காட்சிதருகின்றார். கீழ்நோக்கி விளங்கும் வலக்கால் தாமரைமீது பதிந்துள்ளது.

இங்கு விளங்கும் கோயில்களையும் அவற்றில் உள்ள சிற்பங்களையும் நாம் காணுகின்றபோது அவை வடநாட்டில் அமைந்த குகைக்கோயில்களை நினைவூட்டுவனவாகவும், பல்லவர்களின் கலைப்பாணியினை நினைவூட்டுவன வாகவும் உள்ளன.

இக்கோயில் முற்காலப் பாண்டியரின் கலைத்திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும் இராட்டிர கூட மன்னன் முதலாம் கிருட்டிணன் எல்லோராவில் எடுத்த கைலாச நாதர்கோயிலுக்கு இணையான கலைச் சிறப்புடையது. இக்கோயில் காண்பாரை மகிழச் செய்யும் தன்மையுடையது. இக்கோயில் முற்றும் முடிக்கப்பெறாமல் பாதியிலேயே விடப்பட்டது கலையுலகுக்கு ஒரு பேரிழப்பே ஆகும்.

நடுசாலை — சண்டேசுவரர்



தர்மபுரி மாவட்டம் - நடுசாலை கிராமத்தில் விளங்கும் சிவாலயத்தில் சண்டேசுவரர் செப்புத் திருமேனி. காலம் கி. பி. 13-14 ஆம் நூற்றாண்டு.

43 திருவண்ணாமலை சண்டேசுவரர் கற்பலகைச்சிற்பம் :

வடஆர்க்காடு மாவட்டம் – திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் விளங்கும் சண்டேசுவரர் திருவுருவமானது கற்பலகையில் புடைப்புச் சிற்பமாக காணப்படுகிறது. இவ்வமைப்பு பல்லவர்காலக் கலைப்பாணியினைக் கொண்டதாகக் காணப்படுகிறது. இதில் பத்ர பீடத்தின் அமைப்பு நன்றாக அமைந்துள்ளது இடக்காலை மடித்து, வலக்காலைத் தொங்க விட்டபடி இராஜகம்பீரமாக, சுகாசனம் கொண்டு விளங்குகின்றார் சண்டேசுவரர். வலக்கரத்தின் கடகமுத்திரையில் மழுவும், இடக்கரம் முன் நோக்கி நீண்டு தொடைமீது பதித்தும் காணப்படுகிறது. சிரசில் கிரீடமகுடம், விளங்குகிறது. காதுகள் நீண்டு வடிக்காதுகளாக உள்ளன. சிரசில் விளங்கும் கேசங்கள் பக்கவாட்டில் அரைவட்ட வடிவில் காட்டப்பட்டுள்ளன. கழுத்தில் பதக்கம் அமைந்த கழுத்தணியும், மார்பில்28 உருத்திராக்கமணிகள் கோத்த உருத்திராக்கமாலையும் (இவைகள் 28 சிவாகமங்களை உணர்த்துகின்றன) கரங்களிலும், பாதங்களிலும் காப்புகளும் அணிசெய்கின்றன. இடுப்பிலிருந்து கணுக்கால் வரை பல மடிப்புகளை உடைய வஸ்திரக்கட்டு நன்றாக அமைந்துளது. தியான நிலையில் கீழ் நோக்கிய பார்வையுடனும் சிவச்சிந்தனையுடனும் இத்திருவுருவத்தின் முகத்தோற்றத்தினைச் சிற்பி தெளிவாக அமைத்துள்ளார்.

சண்டேசுவரி கரத்தில்கிளி :

இப்பெருமானது வலப்பக்கத்தில் கிரீடமகுடம் அணிந்தும், வலக்காலை மடித்தும் இடக்காலை தொங்கவிட்டபடியும், சுகாசனமாக ஓர் அம்மனின் திருவுருவமொன்று சிறிய வடிவில் விளங்குகின்றது. இவ்வம்மையின் வலக்கரத்தில் * கிளி ஒன்று காணப்படுகிறது. இடக்கரம் தொடைமீது காணப்படுகிறது. இத்திருவுருவம் சண்டேசுவரி எனத் துணியலாம். ஏனெனில் அம்பிகையின் வலக்கரத்தில் கிளி விளங்குதல் ஓர் மரபாகும். அம்பிகையின் அருள் வடிவாகவே சண்டேசுவரி இங்கு அமைந்து விளங்குதலால் கிளியும் அவ்வாறு காணப்படுகிறது.

44. நடுச்சாலையில் விளங்கும் தனிச்சிறப்புடைய சண்டேசுவரர் :

தர்மபுரிமாவட்டம் – கிருஷ்ணகிரி வட்டத்தில் நடுச்சாலை என்ற கிராமம் உள்ளது. இங்கு நடராஜப் பெருமானுக்கு ஒரு திருக்கோயில் இருக்கிறது. இத்திருக்கோயிலின் மகாமண்டபத்தில் விளங்கும் செங்கல் மேடையில் பல செப்பு விக்ரகங்கள் அமைந்து விளங்குகின்றன. இவை யாவும் 13–14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

இத்திருக்கோயிலில் விளங்கும் செப்புத் திருமேனிகளில் ஒன்றான சண்டேசுவரரின் திருவுருவமானது தனிச்சிறப்புடையதாக விளங்குகிறது.

---

* அம்பிகையின் வலக்கரத்தில் மலர் அல்லது கிளி அமைத்தல் ஒருமரபாகும்.

*இச்சண்டேசுவரர் பத்ம பீடத்தின் மீது நிற்கிறார் (அர்த்தவைதஸ்திக ஸ்தானத்தில் சிறிது மாற்றமாக உள்ளநிலை) இவரது வலக்கால் சற்று விலகியும் சற்று முன்பாக அமைந்தும் காணப்படுகிறது. இடக்காலானது நேராக அமைந்து விளங்க உடல் சிறிது வளைந்து ணைக்சமுடன் காணப் படுகிறது. கரங்கள் கூப்பிய நிலையில் உள்ளன. இவர் அன்பு மேலோங்கும் சிவ பக்தனைக் காணப்படுகிறார். பாதச்சங்கிலி கழல் ஆகியன கால்களில் விளங்குகின்றன. முழங்கால்களின் பகுதி மிகத் தெளிவாகத் தோன்று கிறது. இவரது இடையில் குட்டையான ஆடை தொடைப்பகுதி வரை உள்ளது. '' ப '' வடிவில் முகப்புடைய இடுப்புப்பட்டையானது அந்த ஆடையினை இறுகப் பற்றியுள்ளது. ஆடை தொடைகளின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் தொங்கியபடி காணப்படுகிறது.

மிகவும் மெலிந்து நீண்டிருக்கும் இவரது உடலின் கீழ்ப்பகுதி உருண்டை வடிவமாகவுள்ளது. உதரபந்தத்தின் மேற்பாகமுள்ள உடல் அசன்றும், வலிமை வாய்ந்ததாகவும் அமைந்துள்ளது. எடுப்பான தோள்களும் உள்ளன. திருமார்பில் யக்ஞோபவீதம் (பூணூல்) எடுப்பாக முன்புறத்தில் அமைய, அதுவே பின்புறத்தில் வளைந்தநிலையிலும் காணப் படுகிறது. வயிற்றில் விளங்கும் உதரபந்த மானது தடித்தும் அகலமாகவும் உள்ளது.

சண்டேசுவரரின் திருமுகமானது தெளிவாகவுள்ளது. கண்கள் முழுமையாகத் திறந்துள்ள காரணத்தால் அதிலே மகிழ்ச்சியையும் காணமுடிகிறது. இருகரங்களும் அஞ்சலி முத்திரையில் காணப்பட்டாலும் உள்ளங்கைகளின் இடையே (நடுவே) மலர்ச்சரம் ஒன்று விளங்குகிறது. இடக் கரத்தின் இடுக்கில் நன்றாக இடப்பக்கம் சாய்ந்தமைந்த கோடரி (மழு) உள்ளது. கோடரியின் அடிப்பாகம் இடக்கைபுஜத்தின் மீது அமைந்துள்ளது.

கழுத்தில் இரு அணிகள் அணி செய்கின்றன. இதில் ஓர் அணியில் செண்பகமலர் உருவம் உள்ளது. காதுகளில் ருத்திராட்ச குண்டலங்கள் அணியப்பட்டுள்ளன. ஜடைகள் யாவும் ஒன்று சேர்ந்து ஜடாமகுடமாக அமைந்துள்ளது. சிரசின் பின்புறம் ஆறு கேசபுரிக் கற்றைகள் சரிந்தும் (ஜடைகள்) உள்ளன. ஜடாமகுடத்தின் பின்புறம் சிரச்சக்கரம் இல்லை. கழுத்தின் இருமருங்கிலும் வாகு மாலைகள் உள்ளன. தோள்கள், கைகள், புஜங்கள், மணிக் கட்டுகள் யாவற்றிலும் வங்கி, கடகம், வளையல்களும் அணியப்பெற்றுள்ளன. இந்த சண்டேசுவரரின் வடிவமைப்பு போன்று தமிழகத்தில் பெரும்பாலும் இல்லை, அண்டை நாட்டின் வடிவமைப்பு இதில் பிரதிபலிக்கிறது. பெரும்பாலும் இப்பகுதியினை ஆண்ட சாளுக்கிய பாணியை பின்பற்றியதாக இருக்கலாம் என எண்ணவேண்டியுள்ளது.

---

* '' **A UNIQUE CANDIKESVARA BRONZE – Ref By :- K . Damodaran.**

சண்டேசுவரர்



கிடைத்த இடம்:- திருவெண்காடு (சென்னை அருங் காட்சியகம்) முற்காலச் சோழர்காலம் இராசராசன்-I [கி. பி. 1011-1015]

இப்படிமம் பத்ரபீடத்தில் சுகாசனமாக அழகு மிகு அமைதித் திருக்கோலமுகம், வலப்பாதம் தாமரை மலரின்மீதும், வலக்கரம் கடககரமாகவும், இடக்கரம் சம்ஹகர்ண கரமாகவும், இரு காதுகளில் காதோலை களும், கேசக் கிரீடம் கொண்டு விளங்குகின்றது.

45. வைத்தீஸ்வரன்கோயில் மேற்கு நோக்கிய சண்டேசுவரர் :

புள்ளிருக்கு வேளூர் என்று போற்றப்படும் வைத்தீஸ்வரன் கோயிலில் விளங்கும் திருக்கோயிலில் தலவிருட்சமான (வேம்பு) வேம்படி மேடையில் மேற்கு நோக்கி விநாயகர், ஆதிவைத்திய நாதர் (இலிங்கம்) சண்டேசுவரர் திருமேனிகள் சிலாருபத்தில் விளங்குகின்றன. சிவாலயத்தில் விளங்கும் சண்டேசுவரர்க்குத் திருநாமம் தொனிச் சண்டர் எனக்கூறுவர். அவ்வகையில் ஆதிப் பிரானை தரிசித்தவுடனே சண்டேசுவரரின் அநுக்கிரகத்தால் சிவனுரின் திருவருள் பெறவேண்டும் என்ற முறையில் இவ்வமைப்பு இம் மேடையில் விளங்குகின்றது.

சண்டேசுவரப்பெருமான் சிரசில் கேசங்களே மகுடமாக அமைந்துள்ளது. இவர் வலக்கரத்தில் மழுப்படையினை ஏந்தியுள்ளார். இடக்கரம் புட்பம் ஏந்தும் கரப்போலக் கடக கரமாகவுள்ளது. இவர் சுகாசனம் கொண்டு பத்ரபீடத்தில் காட்சி தருகின்றார்.

இருப்பினும் இத்திருக்கோயிலின் பிரதான மூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ வைத்தியநாதப் பெருமான் (இலிங்கத் திருவுரு) மேற்கு நோக்கி எழுந்தருளி அடியார்களுக்கு எல்லாவிதப் பிணிகளையும் நீக்கி அருளுகின்றார். இவரது கருவறையின் பின்புறம் (கிழக்கு ஆவரணம்) ஈசான திசையில் தெற்கு நோக்கியவாறு ஏகதள விமானத்துடன் கூடிய சிறுகோயிலினுள் சண்டேசுவரர் திருவுருவம் காணப்படுகிறது. இத்திருக் கோயிலுக்கு முன் இரு தூண்கள் உடைய மண்டபமும் காணப்படுகிறது. கருவறையில் அமைந்து விளங்கும் சண்டேசுவரர் திருவுருவம் முன்னர் கூறப்பட்ட (வேம்படி சண்டேசுவரர்) திருவுருவமைதியோடு விளங்குகின்றது. இத்திருக் கோயிலின் விமானப்பகுதியில் சண்டேசுவரரின் புராணவரலாற்று நிகழ்ச்சிகள் யாவும் சுதைச் சிற்பங்களாக அமைக்கப் பட்டுள்ளன.

46. திருவாரூர் - சண்டேசுவரர் :

திருவாரூர் ஸ்ரீ தியாகராஜர் திருக்கோயிலில் கலைச் சிறப்புடன் கூடிய மூன்று சண்டேசுவரர் திருவுருவங்கள் விளங்குகின்றன. அதில் ஒன்று செப்புத்திருமேனி, மற்றது இரண்டும் கற்சிலா ருபங்களாகும். இம் மூன்றும் வரலாற்றுச் சிறப்பும் கலைச்சிறப்பும் கொண்டவைகளாகும்.

ஷ ஆலயத்தில் உற்சவ மூர்த்தியாக விளங்கும் சண்டேசுவரப் பெருமானை ஆதி சண்டேசுவரர் என அழைக்கின்றனர். ஆனால் இப்பெயருக்கும் இச்சிற்ப அமைதிக்கும் முற்றிலும் மாற்றமாகக் காணப் படுகிறது. ஒக்கோயிலின் புராணப்படி இதற்கு இப்பெயரினை சூட்டியிருக் கலாம் என எண்ணவேண்டியுள்ளது.

உற்சவர் உருவமைதி ;

கி பி. 9 ஆம் நூற்றுண்டைச் சார்ந்த சண்டேசுவரர் செப்புத் திருவுருவமானது கூப்பிய கரங்களுடன் நின்ற நிலையில் சோழர்களின்

உயரிய கைவண்ணத்தினுல் உருவாக்கப்பட்டதாகும். இது பல வரலாற்றுச் சிறப்புடன் தனிச் சன்னதியில் விளங்குகிறது. இத்திருமேனி பற்றிய கல்வெட்டுகளும் இத்திருக்கோயிலில் உள்ளன. சண்டேசுவரர் சிரசில் ஜடாமகுடம் விளங்க குடிக்காதுகளுடன் காட்சிதருகின்ருர். மார்பில் மிகச் சிறிய உருத்திராக்கமாலே, காலில் கொலுசு மிகச் சிறியதாக விளங்கும் இடுப்பு வஸ்திரம் ஆகியன அணியப் பெற்றவராய் பத்மபீடத்தில் நின்ற வாறு சிவனுரை வழிபடும் நிலேயில் காட்சிதருகின்ருர்.

47. எமசண்டேசுவரர் :

திருவாரூர் — ஸ்ரீ தியாகராஜ சுவாமி திருக்கோயிலின் தெற்கு ஆவரணத்தில் சனிச்சந்நிதியில் எம சண்டேசவரர் எனும் திருவுருவம் காணப்படுகிறது இது ஓர் கற்பலகைச் சிற்பமாகும் (இதன் அளவு $3\frac{1}{2} \times 1\frac{1}{2}$ அடி) நல்ல வேலேப்பாடுடன் கூடிய இச்சிற்பமானது இரு கரங்களுடன் திகழ்கிறது. இப்பெருமானுர் அமர்ந்த நிலேயில் வலக்காலினே குத்திட்டும் இடக்காலேச் சற்று மடித்தும் (உத்குடிகாசனம்) ஜடா பாரத்துடன் காணப்படுகின்ருர், இடக் கரத்தில் கால தண்டம் எனும் கதாயுதம் விளங்குகிறது. வலக் கரம் கடக கரமாக அமைந்துள்ளது. சிரமானது இடப்பக்கம் சற்று சாய்ந்த நிலேயில் உள்ளது. இந்த எம சண்டேசுவரர் எனும் பெயர் வழங்க புராணவரலாறு ஒன்று உண்டு. இவ் ஆலய புராணவரலாற்றினே நாம் அறியாது இருந்தாலும் இந்த சிற்பத்தின் அழகினே ஓர் முறையாவது காணவேண்டும்.

இவ் ஆலய இரண்டாம்கோபுரத்தில் வடக்குநோக்கிய சண்டேசுவரர் :

மேலும் இத்திருக்கோயிலின் [illegible]க்கில் அமைந்த இராஜகோபுரத்தை அடுத்து அமைந்த இரண்டாவது கோபுரத்தின் நுழைவாயிலில் இடப் பக்கம் மாடத்தில் சண்டேசுவரரின் பெரியதொரு திருமேனியானது (கற்சிலே...) 4 அடி உயரத்தில் சுகாசனமிட்டநிலேயில் காணப்படுகிறது. இப்பெருமான் வடக்கு நோக்கி அமர்ந்துள்ளார். துவாரப்பகுதியில் இது போன்று சண்டேசுவரர் விளங்குவது இத்தலத்தில் தான் காணப்படுகிறது. பெரும்பாலும் "அதிகார நந்திகேஸ்வரர்" தனித்தோ அல்லது தனது பத்தினியான "ஊர்மிளா" தேவியுடனே இவ்விடத்தில் இருப்பது ஒரு முறையாகும் என்பதனேக் கருதவேண்டியுள்ளது.

இப்பெருமான் எல்லா அணிகளேயும் அணிந்தவராகவும், ஜடாபாரம் உடையவராகவும் சிறிய மழுவினேத் தனது வலக்கரத்தில் ஏந்தியவராகவும் மலரினேத் தாங்கும் கடக கரம்உடையவராகவும், சுகாசனம் கொண்டும் அருட்காட்சி தருகின்ருர்.

திருவாவடுதுறை ஆதீனம்

ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் அருங்காட்சியகத்தில் விளங்கும் சண்டேசுவரர்கள்



1)	துவாபரயுகசண்டேசுவரர்	—	உயரம்	80	செ. மீ.
2)	சண்டேசுவரர்	—	,,	73	,,
3)	சண்டேசுவரர்	—	,,	59	,,
4)	சண்டேசுவரர்	—	,,	46	,,
5)	சண்டேசுவரி	—	,,	50	,,
6)	சண்டேசுவரர்	—	,,	50	,,
7)	சண்டேசுவரர்	—	,,	54	,,
8)	சண்டேசுவரர்	—	,,	65	,,

குறிப்பு ;— ஷை அருங்காட்சியகத்தில் சிவமூர்த்தங்கள் பல விளங்குகின்றன

தேர்ச் சிற்பங்களில் சண்டேசுவரர்

சிவாலயங்களில் இன்றும் பெரும்பாலும் தேர்கள் விளங்குகின்றன. பிரமோற்சவ காலங்களில் பஞ்சமூர்த்திகள் யாவரும் திருத்தேர்களில் ஆரோகணித்துப் பவனிவருதல் கண்கொள்ளாக் காட்சியாகும். சிவாலயங்களில் விளங்கும் திருத் தேர்களின் நாற்புறங்களிலும் சிவனாரின் திருவிளையாடல்களையும், சிவனாரின் அறுபத்து நான்கு (அஷ்டாஷ்டமூர்த்தங்கள்) மூர்த்தங்களையும், இதிகாச புராணத் தொடர்பான கதைகளையும், அவ்வத்தலங்களின் புராண நிகழ்ச்சிகளையும் தெள்ளத் தெளிவாக மரச் சிற்பங்களாக வடிக்கப்பட்டு காட்சி தருகின்றன.

இச்சிற்பங்கள் காலத்தால் பழமை பெற்றாலும் இன்று விலை மதிக்கமுடியாத கலைச் செல்வங்களாக உள்ளன. திருத்தேர்கள் யாவும் ஆலயத்தின் கிழக்கிலோ அல்லது மேற்கிலோ தனித்ததொரு பெரிய மேடை உள்ள மண்டபத்தின் அருகிலேயே காட்சி தரும். இம்மண்டபத்திற்கு மேலே ஏறிச் செல்ல பல படிகளும் உண்டு. இந்த மண்டபங்கள் யாவும் சுதைச் சிற்பங்களுடனும் கலசங்களுடனும் திருக்கோயில் போன்றே காணப்படும்.

தெய்வத் திருமேனிகளான உற்சவ மூர்த்திகள் இம்மண்டபத்திலிருந்து தான் திருத்தேரில் ஆரோகணித்து திருவீதி உலா வரும் திருத்தேர்கள் யாவும் மேரு மலையாகவும், கயிலைமலையாகவும் கருதி மக்கள் வழிபாடாற்றி மகிழ்வர். இத்தேர்களைப் பல நிலைகளில் அமைப்பர். பிரிக்க முடியாத தேர்கள், சட்டத்தேர்கள் முதலாகப் பலவகைகள் உள்ளன. பிரிக்க முடியாத தேர்களில் தான் பலதரப்பட்ட சிற்ப வேலைப்பாடுகளுடைய சிற்பங்கள் காணப்படும் சட்டத் தேர்கள் (அவ்வப்போது பிரித்தும், கோத்தும் அமைக்கக் கூடியது) சில திருக்கோயில்களில் காணப்படும். இத்தேரில் மரச் சட்டங்கள் யாவும் பல இடுக்குகளைக் கொண்டதாக அமைந்து சிற்பங்கள் இல்லாது விளங்கும்.

சண்டேசுவரரை ஆசீர்வதிக்கும் திருவாரூர் தேர்ச்சிற்பம் :

• திருவாரூர் திருத்தேரில் பல சிற்பங்கள் உள்ளன. இதில் இலிங்கத்தின் பல திருவுருவ அமைதிகள் காணப்படுகின்றன. இதில் முகலிங்கம் (எட்டுவகை இலிங்கங்களுள் எட்டாவது ஆகும்) என்ற ஓர் அமைப்பும் உண்டு. இந்த வகை இலிங்கத்திற்கு மனித முகம் உண்டு பஞ்சமுகலிங்கம் என்பது மூன்று முகங்கள் ஒரு படியிலும். ஒருமுகம்

---

* " Temple cars of medival Tamilaham " Dr. Kalidass.

இவைகளின் மேலேயும் உள்ளது. இன்னும் ஓர் முகம் பின்புறம் உள்ளதாக ஐதிகம். இத் தலைகளின் மேலே ஐந்து தலை நாகம் ஒன்று படம் எடுத்தபடி உள்ளது.

இதில் குறிப்பிடத்தக்கது இலிங்கத்தில் அபிஷேகிக்கும் பொருட்கள் யாவும் வழிந்தோடி ஒரு முகமாக வரும் இடமான "கோமுகி" (ஆவுடையார்) யானது வழக்கமாக இடப்புறம் அமையாமல் வலப்புறம் அமைந்து காணப்படுகிறது. இதில் அபூர்வ புஜலிங்கம் ஒன்றும் உள்ளது. இலிங்கத்திலிருந்து வெளிப்படும் கரமானது (கை) சண்டேசுவரரை ஆசீர்வதிக்கும் கோலத்தில் உள்ளது. இத்தகைய சிற்ப அமைப்பு திருவாரூர் தேரில் அமைந்துள்ளது.

சண்டேசுவர மூர்த்தி :

சண்டேசுவரர் சிவபிரான் மீது ஆழ்ந்த பக்தி கொண்டவர். சிவனார் அவருக்கு அருள் பாலித்துத்தன் கணங்களில் ஒருவராக்கினார். இந்நிலையில் விசாரசருமர் மனித நிலையிலிருந்து தெய்வநிலையான சண்டேசுவரமூர்த்தி ஆகிறார். எல்லோராலும் போற்றப்படும் கங்கை கொண்ட சோழபுரம் (ஸ்ரீ பிரகதீஸ்வரர் ஆலயம்) திருக்கோயிலின் தெற்கு வாயிலின் கிழக்கு நோக்கியமைந்த சண்டேச பதம் தந்தருளும் காட்சியான சண்டேசானுக்ரக மூர்த்தியின் சிற்பம் எண்ணிலாகலைச் சிறப்புடன் கண்டோர் வியக்கும் வண்ணம் அமைந்து விளங்குகிறது. இச்சிற்பத்தின் காலம் 11 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இத்தகைய சிற்பம் தேர்ச் சிற்பங்களில் அபூர்வமாகவே காணப்படும்.

திருவுரு :

சண்டேசுவர மூர்த்தி திருவுரு சோமாஸ்கந்தர் வடிவமைப்பைப் போன்றதே. ஆனால் இதில் கந்தப் பெருமான் இருக்கமாட்டார். உமையும் இறைவனும் சுகாசனத்தில் இருப்பர். இறைவனின் வலக்காலும், இறைவியின் இடக்காலும் பீடத்தில் இருந்து தொங்கியபடி உள்ளன. இறைவன் முன் இடப்புறமாக தரையில் சண்டேசுவரர் அமர்ந்து உள்ளார். இறைவனுக்கு நான்கு கரங்கள் முன் இருகரங்கள் சண்டேசுவரரின் தலையினைத் தொட்டு ஆசீர்வதிக்கும் நிலையில் அதாவது பூச்சரத்தைச் சண்டேசுவரர்க்கு சூட்டிய நிலையில் இருக்கும். பின் இரு கரங்களில் மானும், மழுவும் காணப்படும். முன்னது திருவாரூர் தேர்ச் சிற்பமாகும். திருமழபாடி ஸ்ரீ புஷ்பவனேஸ்வரர் ஆலயம் - திருபுவனம் ஆகிய கோயில் சிற்பங்கள் பூச்சரத்துடன் உள்ளவையாகும்.

காச்யப சில்ப சாஸ்திரத்தில் கூறியுள்ளபடி சண்டேசுவரர் திருமழபாடி தேர்ச் சிற்பத்தில் நின்றபடி உள்ளார். சிவன் வீராசனத்தில் வீற்றிருப்பார். இப்பெருமான் கிரீடமகுடம் தரித்தும் பீதாம்பரத்தை உடுத்தியும், கழுத்தில் ஸ்கந்தமாலையும் விளங்கக் காட்சி

தருகின்றூர். கரண்டமகுடம் தரித்த அம்மனுக்கு இரு கரங்கள் மட்டும் உள்ளன. திருவாரூர் தேர்ச் சிற்பத்தில் மட்டும் அம்மன் திருவுருவானது விளங்கவில்லை.

திருநாவுக்கரசர் (அப்பர்) காலத்துக்கு முற்பட்டவராக எண்ணப் படும் சண்டேசுவரர் இறைவன் பால் கொண்ட பக்தியானது எல்லையற்ற தாகும். தனது தந்தை என்றும் பாராமல் வழிபாட்டிற்கு இடையூறு செய்தமைக்காக அவரது கால்களை முடமாக்கும் அளவிற்கு பக்தி பூண்டவரின் சிறப்பு இவ்வுலகத்தவர்க்கு காட்டப்படுகிறது.

திருவிடைமருதூர் தேர்ச் சிற்பங்கள் : (ஸ்ரீ மகாலிங்க சுவாமிகோயில்)

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடை மருதூர் தேரானது அளவிலும், சிற்ப அழகிலும் சிறப்புடையதாகும். திருவாரூர்த்தேர், 'சாரங்கபாணி திருத்தேர், இவ்விரு தேர்களையும் ஒத்ததாகத் திருவிடைமருதூர் தேரானது விளங்குகிறது இத்தேரின் உயரம் 89 அடி, நான்கு சக்கரங்களின் விட்டம் 8½ அடி, சக்கரத்தின் பருமன் 2¼ அடி, தேரின் மேலே சுவாமி அமரும் பீடத்தின் அளவு 14½ × 14½ அடியாகும். இத்திருத்தேரினை 1000 அடி நீளம் கொண்ட வடக்கயிற்றினால் (1000 × 4 = நான்கு வடங்கள்) 5000 பேர்கள் (மனித சக்தியினால்) இழுத்தாக வேண்டும்.

மகாசந்நிதானம் உருவம் :

இத்திருத்தேரில் தனித் தனியாக (பலகை வடிவில்) சிற்பங்களை வடித்து, தேரிலே பதித்துள்ளார்கள். ஒவ்வொரு சிற்பமும் 2½ அடிக்குக் குறையாமல் உள்ளன. தேரின் முன்பக்கம் முதல் வரிசையின் நடுமத்தி யில் திருவாவடுதுறை ஆதீனத்தின் 14 – வது குருமகாசந்நிதானம் ஸ்ரீ சுப்ரமணிய தேசிகர் அவர்களின் கொலுக்காட்சி சிற்பம் அமர்ந்த நிலையில் உள்ளது (காலம் 1789 - 1845) இக்குருமூர்த்திகளின் இருமருங்கிலும் ஆதீனத்து முனிவர்கள் கூப்பிய கரங்களால் வணங்கி நிற்கின்றனர். இடப்பக்கம் தனியாக சின்னபட்டத்தில் விளங்கிய சுவாமிகள் நின்ற நிலையில் கூப்பிய நிலையிலும் இருமருங்கிலும் இரண்டு ஆதீனத்து தம்பிரான்கள் கூப்பிய கரங்களுடனும் திகழ்கின் றனர். சந்நிதானம் மற்றும் சின்னப்பட்டம் இவர்களின் கீழ் சில எழுத் துக்கள் * பொறிக்கப் பட்டுள்ளன.

தேரில் உள்ள அற்புதச் சிற்பங்கள் :

துவார பாலகர், குதிரைவீரன் விநாயகர், வள்ளி தேவயானை யுடன் முருகன், பிட்சாடனர், சங்கு சக்கரம் கொண்ட ஓர் உருவம்

---

* 1. கைலாச பரம்பரை ... ... எழுந்தருளி ... ... தேசிக.

2. கைலாச பரம்பரை ஆதீனம் சி ... ... எழுந்தருளியிருக்கிற நமசிவாய தேசிகர்.

யானையில் அமர்ந்த நிலை, சந்திரன், நர்த்தன விநாயகர், மயிலேறும் முருகன் (வள்ளி - தேவயானையுடன்), மருதமரத்தின்கீழ் மகாலிங்கத்தை விநாயகரும் அம்பிகையும், பூசித்தல், சந்திரசேகரர், க்ஷேத்திர பாலகர், சந்திரசேகரரை முனிவர் வணங்குதல், நின்ற கோலத்தில் விஷ்ணு அடியார்தொழ இடப்பக்கம் அம்பிகை கோபியர் சூழ கிருஷ்ணன் யாளிமீது நர்த்தனம், கோவர்த்தன கிரியுடன் கண்ணன் – மாடுகள்–ஆய்ச்சியர்கள், கிருஷ்ண உருவத்தில் பெண்ணுடன் இருமுனிவர்கள், நின்ற நிலையில் கையில பாம்பினையுடைய பூதம் திருவீழிமிழலைத் தலவரலாற்று நிகழ்ச்சி – விஷ்ணுலிங்கத்தை பூசித்தல் - பின்புறம் சிவன் சக்கரத்தை அருளுதல், நான்கு கரமுள்ள குண்டோதரன், ஓர்லிங்கத்தின் இடப்பால் முருகனும் வலப்பால் விநாயகரும், பின்புறம் விஷ்ணு இம் மூவரும் சோடச உபசாரம் கொண்டு பூசித்தல், ஊர்மிளாவுடன் கூடிய அதிகார நந்திகேஸ்வரரின் கீழே குண்டோதரன் அமர்ந்த நிலையில் கிருஷ்ணன் வயலின் வாசித்தல், வைணவ முறையில் துவாரபாலகர், கந்தர்வப் பெண் வீணைவாசித்தல், சட்டை நாதர், நின்ற நிலையில் வீணாதர தட்சிணாமூர்த்தியின் இருமருங்கிலும் நாரதர் ஹயக்கிரீவர் - காமதேனு–நந்தி ஆகியவை விளங்குதல், லக்ஷ்மி நரசிம்ம அவதாரம், கவரி வீசும் பெண், திரிபாத மூர்த்தியினை இருமருங்கிலும் இரு இரு (பக்கத்திற்கு 4 பேர்) முனிவர்களும் தொழுதல், கங்கா விசர்ஜனர், நின்ற நிலையில் அம்பிகை (பின்கரத்தில் கட்கமும்-பாசமும்) முன்கரங்களில் மலர்கள் தாங்கி - ஆலவட்டம் – விசிறி வீசும் பெண்கள் சூழ, மருதவாணர் (இலிங்கம்) நாரதர் – முனிவர்கள் – இராவணன் பார்வதி - பரமேஸ்வரன், அகோர வீரபத்திரர் - கீழே மகாலிங்கத்தின் பின்புறம் விஷ்ணு - பிரமன் - இந்திரன் - கருடன் - தேவி முதலானோர் பூசித்தல், லிங்கோத்பவர், சிவவழிபாடு செய்யும் அம்பிகை, சூரியன், சிவன், நடனப் பெண்டிர், வீரபத்திரர், காளி நவநீத கிருஷ்ணன், மிருதங்கம் வாசிக்கும் பூதம், கால சம்ஹார மூர்த்தி, வைஷ்ணவி, சாமுண்டி, முனிவர்களும் பெண்களும் சூழ தாருகாவனத்தில் பிட்சாடனர், பிராமிகி, சிவன் - விஷ்ணு, சோமாஸ்கந்தர், கீழே சிவாச்சாரியர் அலங்கார தீபம் காட்டல். மனோன்மணி (நான்குமுகம் – பத்மாசனம்) கீழே கருடன், எருது, அன்னம் இவை காணப்படுகின்றன.

மூன்று முனிவர்கள் சூழ மேதா தட்சிணாமூர்த்தி, ரிஷபாரூடர் – பார்வதியுடன் சிவாச்சாரியர்கள் பூசித்தல் – கந்தர்வர்கள் குடை – சாமரம் ஏந்தியிருத்தல், பிரமன் நின்ற கோலம், நான்கு முனிவர்களுடன் ஞான தட்சிணாமூர்த்தி. சிவலிங்கத்தைத் தழுவிய பார்வதி புருஷ தலை உள்ள யாளி, வள்ளி தேவயானை உடனுகிய முருகன் நான்கு கரங்களுடன். ஸ்ரீ தேவி - பூதேவி சமேத மகாவிஷ்ணு, திரிபுராந்தகர் (வலக்கால் தேரில்வைக்கப்பட்டுள்ளது). கங்கா விசர்ஜனர் கீழே பகீரதன் தவம். சந்திரசேகரர், மிருதங்கம் வாசிக்கும் நந்தி, எட்டு கரங்களுடன் விளங்கும் காளியானவள் சிவனிடம் தோற்று நாணத்துடன்

முன் இருகரங்களைப்பிசைதல், ஊர்த்துவ தாண்டவரின் கீழே நந்தி – மூன்று முனிவர்கள், சண்முகர் நடனக்கோலம், பிராம்ஹி நடனக் கோலம், நான்கு கரத்துடன் திரிபுராந்தகர், அஷ்டபுஜகாளி (சுகாசனம்) கீழே இரு வீரர்கள், மகிஷாசுரமர்த்தினி, சந்திரன், இன்னும் யாளி வரிசைகள் கொடி வேலைகள், குண்டோதரர்கள், க்ஷேத்திரபாலகர்கள் முதலான சிற்பங்களும் விளங்குகின்றன. இவைகள் யாவும் இன்று விலை மதிக்கமுடியாத கலைப்பொக்கிஷங்களாகும். இத்தேரானது இப்போது திருப்பணி செய்யப்பட்டுவருகிறது.

சண்டேசுவரர் திருவுருவம் :

இத்தேர்ச் சிற்பங்களின் ஊடே இரண்டு சண்டேசுவரர் திருவுருவங்கள் நின்ற நிலையில் காணப்படுகின்றன. தேரின் முன்பக்கம் இரண்டாவது மேல் வரிசையிலும், மூன்றாவது மேல் வரிசையிலும் சண்டேசுவரர் உருவத்தைக் காணலாம். சண்டேசுவரர் (இரண்டாம் மேல்வரிசை) கூப்பிய கரத்துடனும் வலப்பக்கமார்போடு அமைந்த மழுவுடனும் காணப்படுகிறார். இவர்ஜடாமகுடம் தரித்தும் முழங்கால் வரை ஆடை அணிந்தும், காப்புமுதலான ஆபரணங்கள் அணிந்தும் விளங்குகிறார். இவரது வலப்பக்கம் முருகன் போன்ற உருவமும், அம்பிகையின் உருவமும் காணப்படுகின்றன. மேலும் * சில உருவங்களும் உள்ளன.

மூன்றாம் மேல் வரிசையில் உள்ள சண்டேசுவரர் எல்லாவிதமான லட்சணங்களுடன் தனியாக நின்ற நிலையில் உள்ளவர். இத்தேர்த் திருப்பணி முழுவதும் இவ்வாதீனத்து 14 ஆம் பட்டத்தில் விளங்கிய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அருளாட்சி காலத்தில் செய்யப்பட்டது என்பதனை ஸ்ரீ தேசிக மூர்த்திகளின் கொலுக்காட்சியே இத்தேரில் சிறந்த ஆதாரமாக உள்ளது.

---

* இத்தேரில் உள்ள சில சிற்பங்கள் பின்னப்பட்டுள்ளன. சில சிற்பத் தொகுதிகள் திரும்பத்திரும்ப இடம் பெற்றுள்ளன. இத் தேர் தஞ்சை மராட்டிய மன்னர் காலத்தது என்பர். ஆனால் மராட்டிய மன்னர்களின் உருவம் ஏதும் இதில் இடம் பெறவில்லை என்பதனை நேரில்காணலாம்.

கல்வெட்டுகளில் சண்டேசுவரர்

ஒரு நாட்டின் பண்டைக்கால வரலாற்றினை அறிய அந்நாட்டின் இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள் ஓலைச் சுவடிகள், தொல்பொருள்கள், வெளிநாட்டார் குறிப்புகள் போன்றவை சான்றுகளாக அமைகின்றன. அவற்றுள் கல்வெட்டுகளின் சான்றுகள் குறிப்பிடத் தக்கவை. "கல்லில் எழுத்துப்போல் காணுமே" என்னும் முதுமொழிக்கேற்ப கல்லெழுத்துக்கள் பல நூறு ஆண்டுகளாக அழியாமலும் மாறுபடாமலும் நமக்குப் பல உண்மைகளைப் புலப் படுத்துகின்றன.

கல்வெட்டுகள் பெரும்பாலுல் திருக்கோயில்களின் மதிற்சுவரிலும் கோஷ்டப் பகுதியிலும், தூண்களிலும் கோபுரங்களின் பக்கச் சுவர்களிலும் மற்றும் மக்களின் கண்களில் நன்ருக புலப்படும்படியான இடங்களிலும் அரசர்களாலும் நமது முன்னோர்களாலும் அமைக்கப் பெற்று பிற்காலத்தவர் உணர்ந்து கொள்வதற்கு ஏற்ற வரலாற்றுக் குறிப்புகளாக அமைந்துள்ளன.

தொன்மைச் சிறப்பு :

தமிழ் நாட்டில் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கல்வெட்டுகள் எழுதப் பெற்றுள்ளன. மிகவும் தொன்மைக் காலத்தியக் கல்வெட்டுகள் ஒரு வரி, இரண்டு வரிகளிலேயே காணப் படுகின்றன. பல்லவர் காலத்திலிருந்து தான் கல்வெட்டுகள் அதிக வரிகளைக் கொண்டதாக அமைந்துள்ளன. இருப்பினும் சோழர் காலத்தில்தான் கல்வெட்டுகள் ஒரு குறிப்பிட்ட வகையில் எழுதப் பெறல் வேண்டும் என்று நெறிப்படுத்தப் பட்டுள்ளன.

மங்கலச் சொற்கள் :

கல்வெட்டின் தொடக்கத்தில் ஸ்வஸ்தி ஸ்ரீ, சுபமஸ்து, சிவமயம் நமோநாராயணாய, ஹரிநன்ருக குருவே துணை, போன்ற மங்கலச் சொற்கள் காணப்படும். கல்வெட்டின்படி தர்ம கார்யங்களைச் செய்யத் தவறியவர்கள் எத்தகைய துன்பத்தை அடைவர் என்று கீழே குறிப்பிடப் பெற்றிருக்கும். மேலும் கல்வெட்டுகளில் செய்தியைக் கல்லில் பொறித்த தச்சனின் கையெழுத்தும் கொடைக்குச் சான்ருக இருந்தவர்களின் கையெழுத்துக்களும் 'இடம்பெறுவதுண்டு, முடிவில் பன்மாஹேஸ்ச்வர ரக்ஷை, அறம்மறவற்க என்ற ஓம் படைக் கிளவி களோடு " உ " போன்ற குறியீட்டுடன் முடியும்.

கல்வெட்டு அறிஞர்கள் :

கல்வெட்டுப் பேரறிஞர்களாக விளங்கிய ஹுல்ஷ், கீல்ஹார்ன் போன்ற வெளிநாட்டினரும், வெங்கையா, கிருஷ்ணசாஸ்திரி. கோபிநாதராவ், சதாசிவ பண்டாரத்தார், சுப்ரமணியஐயர் போன்ற வர்களும் கல்வெட்டுகளைப் படித்துப் பல வரலாற்றுச் செய்திகளைச் சுட்டிக் காட்டினர். இப்பெரியோர்கள் இத்தகைய வரலாற்றுச் சிறப்புப் பொருந்திய அரியபணியினை ஆய்வு செய்துரைக்கவில்லை என்றால் நமது பழம் பெருமையையும் சரித்திரத்தையும் அறிய முடியாது போயிருக்கும்.

கல்வெட்டுகளைப் பற்றிய அனைத்து விவரங்கள் மற்றும் ஆய்வுகள் இந்திய மைய அரசாங்கத்தாரால் (கர்நாடக மாநிலம்) மைசூரில் செயல்பட்டுவருகின்றன. இங்கு அனைத்து மாநிலங்களின் கல்வெட்டு களின் படிகளையும் மற்றும் புகைப்படங்களையும் சேகரித்து வைத்துள்ளனர். அவற்றை அச்சுப்புத்தகங்களாக அச்சிட்டும் வழங்கு கின்றனர். இதுபோன்றே தமிழ்நாடு தொல்பொருள் துறையும் செயல்பட்டு வருகின்றது.

கல்வெட்டுகளின் அருமை :

கல்வெட்டுகளின் மூலம் பழைய அரசர்களின் மரபு, ஆட்சி முறைகள், வெற்றிச் சிறப்புகள், ஆட்சி மாற்றங்கள், சமுதாயநிலை, வெற்றிச் சிறப்புகள் நாகரீகம், பண்பாடு ஆட்சி மாற்றங்கள், சமய நிலை, ஓவியம், சிற்பம், ஆடல், பாடல், கட்டடக்கலை, நுண்கலைச் சிறப்பு, ஆவணங்கள் எழுதிய முறை, நில அளவைகள். நில விற்பனை, தர்மகாரியங்கள், கோயில் தானங்கள், கோயில் கட்டளைகள், "**கோயிலுக்குப் படிமங்கள் செய்து அளிக்கின்றவழக்கம்**" தேர்தல் முறை, அரசன் - அரசி - பொது மக்கள் – நாட்டிய நங்கையர் இவர்களது கோயில் கொடைகள். தேர்தல் முறைகள், கைப் பிழைக் குற்றங்கள், தண்டனைகள், கோயில் விழாக்கள், திருவமுது (நைவேத்யம்) கோயிலுக்குரிய உற்சவமூர்த்திகள் மற்றும் சிலாத்திருமேனிகளின் விபரம், ஆபரணங்கள் முதலான எண்ணற்ற செய்திகளை நாம் அறிய முடிகின்றது. அவ்வகையில் "சண்டேசுவரர்" (படிமம்) திருமேனி பற்றிய கல்வெட்டுகள் சிறப்புடையனவாகும்.

சண்டேசுவரர் கல்வெட்டு :

சோழநாட்டில் மண்ணியாற்றின் தென்கரையில் சேய்ஞலூர் என்ற ஒரு சிவத்தலம் உள்ளது. சேய் ஆகிய முருகன் சிவபிரானை வழிபட்ட நல்ல ஊர் ஆதலின் சேய்ஞலூர் (சேய் – நல் - ஊர்) எனப் பெயர் அமைந்தது. அது வேத விற்பன்னர்கள் நிறைந்து வாழும் ஊர்! சோழ அரசர்கள் முடிசூடிக்கொள்ளும் ஐந்து(காவிரிப்பூம்பட்டினம், உறையூர், திருவாரூர், "சேய்ஞலூர்". கருவூர்) தலைநகரங்களுள் ஒன்றாகத் திகழ்வது.

சேய்ஞலூரில் அவதரித்த சண்டேசுவரர் சிவபூசையின் பெருமையினை உலகத்தவர்க்குக் காட்டி, திருக்கோயில் தோறும் விளங்கியருளுகின்றார்.

மரபுநெறிச்செய்தி :

* சிவாலயங்களின் வரவு செலவுக் கணக்குகளைச் சண்டேசுவரர் பெயரினாலேயே எழுவதுவது தான், பண்டைக் காலத்து மரபு முறையாக இருந்து வந்தது. இம்மரபு நெறிச் செய்தியினைப் பின் வரும் கல்வெட்டுச் வெண்பாப்பாடல் விளக்குதலை காணலாம்.

கல்வெட்டுச்செய்யுள் :

''சண்டீச் சுரன்ஓலை சாகரஞ்சூழ் வையகத்தீர்
கண்டீச் சுரன் கருமம் ஆராய்க - பண்டே
அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமைச் சென்னிமேல் வைத்து''

'கடல் சூழ்ந்த உலகில் வாழும் மக்களே! நமக்கு முற்பட்டுப் பண்டைக் காலத்தில் அறத்தைச் செய்தவன், செய்வித்தவன், செய்த அறத்தைப் பாதுகாத்தவன் முதலியவர்களுடைய பாதங்களைப் பிறழ்வின்றி உங்கள் தலைமேற்கொண்டு போற்றி, இறைவனின் திருப் பணிகளை முறைப்படி ஆராய்ந்து செய்து வருவீர்களாக! இது சண்டேசுவரரின் ஆணை ஓலை (கட்டளை)'' என்பது மேற்குறித்த கல்வெட்டுப் பாடலின் பொருளாகும்.

பிறஆலயங்களில் :-

இக்கல்வெட்டுப் பாடல், மதுராந்தகம் வட்டம், பெரும்பேறு கிராமம் 1. தான் தோன்றி ஈசுவரர் கோயிலின் முன்மண்டபத்துத் தெற்குச் சுவரிலும், 2. தஞ்சை மாவட்டம் - தஞ்சாவூர் வட்டம் திருகளாவுடைய மகாதேவர் கோயிலின் வடபுறச் சுவரிலும், 3. தென்னார்க்காடு மாவட்டம் - விழுப்புரம் வட்டம் - திருவாமாத்தூர் அபிராமேசுவரர் கோயிலின் முன் பிராகாரம் தென்புறச் சுவரிலும், 4. புதுக்கோட்டை – திருமயம் வட்டம் – கள்ளம்பட்டி – மதீசுவரர் கோயிலின் முன்புள்ள ஒரு கல்லிலுமாகப் பல தலங்களில் செதுக்கப் பெற்றுள்ளது. மேலும் அரசர்கள் திருக்கோயில்களுக்கு வழங்கின படிமங்களோடு (உற்சவர்கள்) அளித்த சண்டேசுவரர் படிமம் பற்றிய செய்திகளும், கல்வெட்டுகளின் மூலம் அறிகின்றோம். குறிப்பாக தஞ்சைப் பெருவுடையார் கல்வெட்டு மிகச் சிறப்புடையதாகும். இதில் மேற்படி படிமத்தின் அளவு, கனம், லட்சணம் முதலியன துல்லியமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

* ''திருக்கோயில்'' - சமயமாத இதழ் - ''சண்டேசுவரர்'' கட்டுரை ஆசிரியர் - சிவநேசன்.

திருவாவடுதுறைக் கல்வெட்டுகள் :-

திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் ஆலயத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. இவைகளில் சண்டேசுவரர் பற்றிய செய்திகளை இரண்டு கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. இத்தலத்து சண்டேசுவரப் பெருமானை சண்டேசுவர தேவர் என்றும், ஆதிசண்டேசுவரதேவர் என்றும் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு - 7 :-

இடம் — அர்த்த மண்டப வடபுறச் சுவர் (துர்க்கா தேவிக்கு மேற்கு)

எழுதியோர் — பிரமதேயமான சாத்தனூர் சதுர்வேதி மங்கலத்துப் பெருமக்கள்.

செய்தி — இறையிலி (வரிஇலாத,) நிலத்தை விற்றுக் கொடுத்தல்.

ஷ கல்வெட்டின் சுருக்கச்செய்தி :-

1. பிரமதேயம் சாத்தனூர் சதுர்வேதி மங்கலத்துப் பெருமக்கள்.

2. திருவாவடுதுறை திருக்கோயிலில் உள்ள உலகளந்தான் மாடத்தில் கூடியிருந்து "திருவாவடுதுறை ஆள்வாருக்கு மூலப் பிரத்தியரான (தலைமைப் பிரதிநிதி) சண்டேசுவரர் தேவர்க்கு" இரண்டு வேலியும் எட்டுமாவும் கொண்ட நிலத்துக்கு விலையாகப் பத்துகாசும்,

   இறைக்காவலுக்காக நூற்றுத் தொண்ணூறு காசும், ஆக இரு நூறு காசும்,

   வகைச் செல்லறக் கொண்டு (எதிர்கால உரிமை ஏதும் இல்லாமல்) விற்றுக் கொடுத்தார்கள்-இக்கல்வெட்டு இராஜேந்திர சோழனின் 6 - வது ஆட்சியாண்டாகும்.

கல்வெட்டு - 8 :-

இடம் — கருவறை வடசுவர்

எழுதியோர் — திரைமூர் நாட்டு மேற்கிளி மங்கலத்துச் (மேக்கிரி மங்கலத்து) சபையோர்.

சர்வதேவன் மடத்தில் — மாகேசுரபூசைக்கு விட்ட நிலத்துக்கு வரிநீக்கல்.

ஷை கல்வெட்டின் சுருக்கச்செய்தி :-

திருவாவடுதுறை ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு (i) நிலம் இருபது வேலி சூரிய சந்திரர் உள்ளவரை வரியில்லாமல் அனுபவிக்கவும், (ii) இதில் வரும் வருமானம் கொண்டு சர்வதேவன் திருமடத்தில் ஸ்ரீ மாகேசுவரர்க்கு நாள்தோறும் திருவமுது செய்தருளவும் வரி நீக்கிக் கொடுத்தோம். – இக்கல்வெட்டு இராஜேந்திர சோழனது 18 - வது ஆட்சியாண்டாகும்.

மூலக்கல்வெட்டு :

" ... ... திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்த திரிபுவன பதியாகிய மூலப்பிரத்தியனாகிய ஆதி சண்டேஸ்வர தேவர்க்கு இறையிலி பிரமாணம் செய்து குடுத்த பரிசாவது ... ..

சண்டேசுவரர் படிமத்துடன் திருவாவடுதுறைத் திருக்கோயிலில்* எழுந்தருளிவிக்கப்பெற்ற திருமேனிகள் :

திருவாவடுதுறைக் கோயிலில் திருச்சிற்றம்பல திருமேனிமுதல் ஆடி அருளும் உடையாரும் ஆட்டத்துக்கு வாசிக்கும் பூதம் அமைத்த பீடமும் பிரபையும்உட்பட முழஉயரத்து ஒருவர் இவர் நம்பிராட்டியார் பீடமும், பிரபையும் உட்பட இருந்த ஒருமுழமும் ஆறுவிரல் உயரத்து ஒருவர், சந்திர சேகர தேவர் பீடமும் பிரபையும் உள்பட இருமுழ உயரத்து ஒருவர், இவர் நம்பிராட்டியார் பத்மத்தொடும் ஒரு முழ உயரத்து ஒருவர், திரிபுவன சுந்தரர் பீடமும் பிரவையும் உட்பட மும்முழ உயரத்து ஒருவர், கனவதி யார் பீடமும் பிரவையும் உட்பட ஒரு முழ உயரத்து ஒருவர், சந்திரசேகர தேவர் பீடமும் பிரவையும் உட்பட ஒரு சாணும் ஒரு விரல் உயரத்து ஒருவர்;

க்ஷேத்திர பாலதேவர் பீடமும் பிரவையும் உள்பட ஒரு முழ உயரத்து ஒருவர். மேற்படி தேவர் பீடமுட்பட ஒருச்சாணே நால்விரல் உயரத்து ஒருவர், இடபவாகன தேவரும் பிராட்டியாரும் இடபமும் பிரவையும் உட்பட மும்முழஉயரத்து ஒருவர், பிச்சத்தேவர் மானும் பூதமும் பீடமும் பிரவையும் உட்பட இருமுழ மூவிரல் உயரத்து ஒருவர், அர்த்த நாரி தேவர் பத்மத்தொடு ஒருமுழமும் ஒட்டை உயரத்து ஒருவர், தட்சிணாமூர்த்தி ஒருமுழ உயரத்து ஒருவர், பள்ளிக் கட்டில் நம்பிராட்டியார் பீடம் உட்பட இருமுழ உயரத்து ஒருவர், அஸ்திரதேவர் நடுவுமாகத் தண்டொடுமொருவர், இட்பதேவர் பீடமுட்படத் திருக்காம்பளவும் ஈரொட்டை உயரத்து ஒருவர், ' சண்டேஸ்வர தேவர் பீடமுட்பட இருந்த ஒருமுழ உயரத்து ஒருவர்; " - இவைதவிர ஏனைய பிரதிமங்கள், அணிகலன்கள் முதலானவைகளைப்

---

* ஷை கல்வெட்டின் விளக்கம் ஆதீன சரஸ்வதிமகால் நூலகத்தில் விளங்கும் " கையெழுத்துப்பிரதிபுலம் - பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.

பற்றிய தனிக்கல்வெட்டுக்களும் இத்திருக்கோயிலில் உள்ளன. இப்போது ஷெ கல்வெட்டுகளின் சுருக்கம் பெயிண்டால் (Oil paint) எழுதப் பட்டுள்ளது.

ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த (தஞ்சை பெருவுடையார் கோயில்)

சண்டேச்வர பிரசாத தேவர் :

ஸ்வஸ்திஸ்ரீ

உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் ஸ்ரீ ராஜராஜிச்வரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவது வரை எழுந்தருளிவித்த செப்புத் திருமேனிகள் :

உடையார் கோயிலில் முழத்தால் அளந்து கல்லில்வெட்டின :

பாதாதிகேசாந்தம் இருபதிற்றுவிரலே நாலு தோரை உசரத்து நாலு ஸ்ரீ ஹஸ்தம் உடையராகக் கனமாக எழுந்தருளிவித்த சண்டேச்வர பிரசாத தேவர் திருமேனி ஒருவர்;

ரத்ந நியாசஞ் செய்து இவர் எழுந்தருளி நின்ற ஒரு விரலே இரண்டு தோரை உசரத்து ஸ்ரீ பாதத்தோடுங் கூடச் செய்த பத்மம் ஒன்று;

செவிக்கு மேல் கேசாந்தத்தளவுஞ் செல்ல மூவிரல் உசரத்து இரண்டு கைய் உடையராகக் கனமாகச் செய்த முசலகன் ஒன்று;

பாதாதிகேசாந்தம் பதின் ஐய்விரலே மூன்று தோரை உசரத்துக் கனமாகச் செய்த இவர் நம்பிராட்டியார் உமாபரமேச்வரியார் திருமேனி ஒருவர்.

ரத்ந நியாசஞ் செய்து இவர் எழுந்தருளி நின்ற ஒரு விரலே ஒரு தோரை உசரத்து பத்மம் ஒன்று;

தேவரும் நம்பிராட்டியாரும் எழுந்தருளி நின்ற ஒரு முழமே இருவிரல் நீளத்துப் பதின் அறுவிரல் அகலத்து அறுவிரல் உசரத்து பீடம் ஒன்று;

ஸ்ரீ பாத பீடத்துக்கு மேல் சிரோவர்த்தனை யளவுஞ் செல்ல ஒரு விரலே இரண்டு தோரை உசரத்து மூவிரலரைச் சுற்றிற் புறப்பட்ட ஒரு ஸ்ரீ ஹஸ்தம் உடையராகக் கனமாகச் செய்த மஹாதேவர் ஒருவர்;

இவரோடுங் கூடச் செய்த இருவிரல் உசரத்துக் கனமாகச் செய்த பீடம் ஒன்று;

பாதாதிகேசாந்தம் ஐய்விரலே ஐஞ்சு தோரை உசரத்து இரண்டு கைய்யுடையராகக் கனமாகச் செய்த சண்டேச்வரர் ஒருவர்;

பாதாதிகேசாந்தம் அறு விரலேய் எழுதோரை நீளத்து இரண்டு கைய்யுடையராய் விழுந்து கிடந்தாராகக் கனமாகச் செய்த இவர் பிதா ஒருவன்;

பாதாதிகேசாந்தம் ஒன்பதிற்று விரல் நீளத்து இரண்டு கைய்யுடையராக பிரஸாதம் பெறுகின்றாராகக் கனமாகக் செய்த சண்டேச்வரர் ஒருவர்.

இவனுக்கு பிரஸாதம் குடுத்த பதின் அறுவிரலே நாலு தோரை நீளத்து அரை விரலகலத்து இரண்டு தோரைக்கனத்து புஷ்ப மாலே ஒன்று;

இவர்களேக் கவித்த இரு முழமேய் இருபத்து மூவிரற் சுற்றிற் கனமாகச் செய்து கவித்த பிரபை ஒன்று.

[இக்கல் வெட்டு தஞ்சைப்பெருவுடையார் கோயில் கோபுரத்தின் வலப்புறம் கிழக்குத் திருச்சுற்றில் ஒரு தூணில் உள்ளது. மேற்படி கல்வெட்டினேத் தென்னிந்திய கல்வெட்டுகள் இரண்டாம் தொகுதியில் எண் 29 ஆக அச்சிடப்பட்டுள்ளது.]

சண்டேசுவரர் அஷ்டோத்தர சதநாமாவளி

ஓம் சண்டேச்வராய நம:
,, மஹாசண்டாய நம:
,, ப்ரசண்டாய நம:
,, த்யானமாநஸாய நம:
,, ப்ராம்ஹணாய நம:
,, வரதாய நம:
,, வித்ரவே நம:
,, க்ருதசண்டாய நம:
,, சிவப்பிரியாய நம:
,, ஜ்ஞானதாய நம: 10
,, ஜ்ஞானநேத்ரஸம்பூதாய நம:
,, ஸர்ப்பபூஷணாய நம:
,, பஸ்மோத்துளிதாய நம:
,, சிவபஸ்மப்ரியாய நம:
,, சிவபக்தாய நம:
,, பவ்யாய நம:
,, பவாய நம:
,, கருணாகராய நம:
,, சீலாய நம:
,, வைதநிகாய நம: 20
,, ஸேநாய நம:
,, சாந்த மானஸாய நம:
,, பணிமாலா தராய நம:
,, பணிகங்கண தாரணாய நம;
,, ஜடாதராய நம:
,, ஜகத்ஸே நாய நம:
,, விப்ரப்ரியாய நம:
,, விசிஷ்டாய நம:
,, விப்ராசாந் தாய நம:
,, விச்வத்ருஷ்டயே நம: 30

ஓம் விச்வதர்சனாய நம:
,, மூர்த்திமதே நம:
,, வ்யவஸ்தாரஹி தாய நம:
,, வேதவிதே நம:
,, ஸுந்தராய நம:
,, வித்யுத்ப்ரபாய நம:
,, சுபகராய நம:
,, சங்கரப்ரியாய நம:
,, சங்கரப்ரீதாய நம:
,, டங்கஹஸ்தாய நம: 40
,, அஞ்ஜலிஹஸ்தாய நம:
,, உமாபக்தாய நம:
,, அசுரப்ரீதாய நம:
,, ஜயினே நம:
,, ஏகாக்ரசிந்தநாய நம:
,, சுபங்கராய நம:
,, மந்திர மூர்த்தயே நம:
,, மாநஸார்ச்சாபராய நம:
,, ஸாந்நித்யாய நம:
,, ஸர்வாய நம: 50
,, சாந்தாய நம:
,, சம்ஹரப்ரியாய நம:
,, சரத்ரிகாய நம:
,, ஸாம்பஸ்மரணாய நம:
,, ஸாமாந்யாய நம:
,, பிரசாந்த மாநஸாய நம:
,, கேதசரண்யாய நம:
,, ஸாம்ப்ரதாயகாய நம:
,, த்விநேத்ராய நம:
,, திவ்யஜ் ஞானிநே நம: 60

ஓம் திவ்யஸுந்தராய நம:
,, தேவப்ரியாய நம:
,, தைவசிந்த்யாய நம:
,, நிஷ்களங்காய நம:
,, நிராகாராய நம:
,, ஈசுவரைக்யாய நம:
,, நிரஞ்ஜநாய நம:
,, நிரக்ஞாநாய நம:
,, போகரக்தாய நம:
,, சிவபூஜப்ரியாய நம: 70
,, ஈசாநாயநம:
,, சம்புபார்ச்வஸ்திதாய நம:
,, ஸூக்ஷ்மாய நம:
,, ஸூக்ஷ்மதேஹாய நம:
,, ஹரப்ரியாய நம:
,, தண்டஹஸ்தாய நம:
,, சிவகலாத்யாமினே நம:
,, பஸ்மநிதயே நம:
,, பஸ்மத்ருதே நம:
,, பரிசராய நம: 80
,, பரிவ்ராஜே நம:
,, வஸவே நம:
,, சிவபாத்யபிரியாய நம:
,, வச்யாய நம:
,, ருபிணீபிரியாய நம:

ஓம் கலிசண்டாய நம:
,, காலிகாய நம:
,, குஸுமப்ரியாய
,, நிர்மலாய நம:
,, நியதாய நம: 90
,, நித்யாய நம:
,, நிராமயாய நம:
,, நித்ராக்ஞானாய நம:
,, நிராதங்காய நம:
,, நியமப்ரியாய நம:
,, தேயாய நம:
,, த்யானரூபாய நம:
,, நித்யசண்டாய நம:
,, நிஷ்களங்காய நம:
,, மோட்சஞானப்ரதாய நம: 100
,, வஜ்ரகேசாய நம:
,, த்வனிக்ஞானிநெ நம:
,, சிவநிர்மால்யபோக்த்ரே நம:
,, சிவார்ச்சநாபலதாத்ரே நம:
சிவசக்திதுரந்தராய நம:
சண்டேசாய நம:
,, விசாரசர்மணே நம:
,, கோஸம்ரக்ஷணாய நம:
,, ஸ்கந்தபுரவாஸிநே நம:
,, சிவத்வனிசண்டாய நம:

"சிவசண்டேசுவர அஷ்டோத்ர சத
நாமார்ச்சனம் ஸம்பூர்ணம்"

॥ चंडेश्वराष्टोत्तरशत नामावलिः ॥

1 ओं चंडेश्वराय नमः
2 ,, महा चंडाय नमः
3 ,, प्रचंडाय नमः
4 ,, ध्यानमानसाय नमः
5 ,, ब्रांहणाय नमः
6 ,, वरदाय नमः
7 ,, विद्वते नमः
8 ,, हृदचंडाय नमः
9 ,, शिवप्रियाय नमः
10 ,, ज्ञानदाय नमः
11 ,, ज्ञाननेत्र संभूताय नमः
12 ,, सर्पभूषणाय नम!
13 ,, भस्मोद्धूलिताय नमः
14 ,, शिवभस्मप्रियाय नमः
15 ,, शिव भक्ताय नमः
16 ,, भव्याय नमः
17 ,, भवाय नमः
18 ,, करुणाकराय नमः
19 ,, शीलाय नमः
20 ,, वैधनिकाय नमः
21 ,, सेनाय नमः
22 ,, शान्तमानसाय नमः
23 ,, फणिमालाधराय नमः
24 ,, फणिकंकणधारणाय नमः
25 ,, जटाधराय नमः
26 ,, जगत्सेनाय नमः
27 ,, विप्रप्रियाय नमः
28 ,, विशिष्ठाय नमः
29 ,, विप्रशान्ताय नमः
30 ,, विश्वद्रष्टये नमः
31 ओं विश्वदर्शनाय नमः
32 ,, मूर्तिमते नमः
33 ,, व्यवस्थारहिताय नमः
34 ,, वेदविदे नमः
35 ,, सुन्दराय नमः
36 ,, विद्युत्प्रभाय नमः
37 ,, शुभकराय नमः
38 ,, शंकर प्रियाय नमः
39 ,, शंकरप्रीताय नमः
40 ,, टंकहस्ताय नमः
41 ,, अंजलिहस्ताय नमः
42 ,, उमाभक्ताय नमः
43 ,, अक्षरप्रीताय नमः
44 ,, जयिने नमः
45 ,, एकाग्रचिन्तनाय नमः
46 ,, शुभंकराय नमः
47 ,, मंत्रमूर्तये नमः
48 ,, मानसार्चापराय नमः
49 ,, सान्निध्याय नमः
50 ,, शर्वाय नमः
51 ,, शांताय नमः
52 ,, संहरप्रियाय नमः
53 ,, शरद्रिकाय नमः
54 ,, सांवत्सरणाय नमः
55 ,, सामान्याय नमः
56 ,, प्रशान्तमानसाय नमः
57 ,, खेदशरण्याय नमः
58 ,, सांप्रदायकाय नमः
59 ,, द्विनेत्राय नमः
60 ,, दिव्यज्ञानिने नमः

61 ओं दिव्यसुन्दराय नमः
62 ,, दैवचिन्त्याय नमः
63 ,, देवप्रियाय नमः
64 ,, निष्कलंकाय नमः
65 ,, निराकाराय नमः
66 ,, ईश्वरैक्याय नमः
67 ,, निरंजनाय नमः
68 ,, निरज्ञानाय नमः
69 ,, भोगरक्ताय नमः
70 ,, शिवपूजाप्रियाय नमः
71 ,, ईशानाय नमः
72 ,, शंभुपार्श्वस्थिताय नमः
73 ,, सूक्ष्माय नमः
74 ,, सूक्ष्मदेहाय नमः
75 ,, हरप्रियाय नमः
76 ,, दंडहस्ताय नमः
77 ,, शिवकलाध्यायिने नमः
78 ,, भस्मनिधये नमः
79 ,, भस्मधृते नम
80 ,, परिचराय नमः
81 ,, परिव्राजे नमः
82 ,, वसवे नमः
83 ,, शिवपाद्यप्रियाय नमः
84 ,, वश्याय नमः
85 ,, रूपिणीप्रियाय नमः

86 ओं कलिचंडाय नमः
87 ,, कालिकाय नमः
88 ,, कुसुमप्रियाय नमः
89 ,, निर्मलाय नमः
90 ,, नियताय नमः
91 ,, नित्याय नमः
92 ,, निरामयाय नमः
93 ,, निद्राज्ञानाय नमः
94 ,, निरातंगाय नमः
95 ,, नियमप्रियाय नमः
96 ,, देयाय नमः
97 ,, ध्यानरूपाय नम,
98 ,, नित्यचंडाय नमः
99 ,, निष्कलंकाय नमः
100 ,, मोक्षज्ञानप्रदाय नमः
101 ,, वज्रकेशाय नमः
102 ,, ध्वनिज्ञानिने नमः
103 ,, शिवनिर्माल्यभोक्ते नमः
104 ,, शिवार्चनाफलदाते नमः
105 ,, शिवभक्तिधुरंधराय नमः
106 ,, चंडेशाय नमः
107 ,, विचारशर्मणे नमः
108 ,, गोसंरक्षणाय नमः
,, स्कंदपुरवासिने नमः
,, शिवध्वनिःचंडाय नमः

इति शिवचंडेश्वराष्टोत्तर शतनामार्चनं संपूर्णम् ॥

சண்டேசுவரரைப் பற்றிய திருமுறைப் பாடல்கள்

1 - ஆம் திருமுறை - திருஞானசம்பந்தர் :

வந்தமண லால்இலிங்கம் மண்ணியின்கட் பாலாட்டும்
சிந்தை செய்வோன் தன்கருமந் தேர்ந்துசிதைப் பான்வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீசன் என்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே. 1

1 - ஆம் திருமுறை - திருஞானசம்பந்தர் :

எண்டிசை யோர்மகிழ எழில்மாலையும் போனகமும் பண்டு
சண்டிதொழ அளித்தான் அவன்தாழும் இடம்வினவில்
கொண்டல்கள் தங்குபொழிற் குளிர்பொய்கைகள்சூழ்ந்து நஞ்சை
உண்டபிரான் அமரும் திருவூறல் உள்குதுமே. 2

3 - ஆம் திருமுறை - திருஞானசம்பந்தர் :

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங்(கு) ஆட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலைஅற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார் சொலக் கேட்டு மன்றே 3

3 - ஆம் திருமுறை - திருஞானசம்பந்தர் :

தோத்திரமா மணலிலிங்கத் தொடங்கியஆன் நிரையிற்பால்
பாத்திரமா ஆட்டுதலும் பரஞ்சோதி பரிந்தருளி
ஆத்தமென மறைநால்வர்க்(கு) அறம்புரிநூல் அன்றுரைத்த
தீர்த்தமல்கு சடையாருந் திருவேட்டக் குடியாரே 4

3- ஆம் திருமுறை - திருஞானசம்பந்தர் :

அண்டர்தொழு சண்டிபணி கண்டடிமை
கொண்டஇறை துண்டமதியோ(டு)
இண்டைபுனை உண்டசடை முண்டதர
சண்டஇருள் கண்டரிடமாம்
குண்டமண வண்டரவர் மண்டைகையில்
உண்டுளறி மிண்டுசமயம்
கண்டவர்கள் கொண்டவர்கள் பண்டுமறி
யாதகயி லாயமலையே. 5

3-ஆம் திருமுறை - திருஞானசம்பந்தர் :

சென்று தாதை உகுத்தனன் பாலையே
சீறியன்பு செகுத்தனன் பாலையே
வென்றிசேர்மழுக் கொண்டுமுன் காலையே
வீடவெட்டிடக் கண்டுமுன் காலையே
நின்றமாணியை ஓடின கங்கையால்
நிலவமல்கி உதித்தன கங்கையால்
அன்றுநின்னுரு வாகத் தடவியே
ஆலவாயர னுகத்த டவியே. 6

4-ஆம் திருமுறை - திருநாவுக்கரசர் :

அண்டமார் அமரர் கோமான் ஆதிஎம் அண்ணல் பாதம்
கொண்டவன் குறிப்பி னாலே கூப்பினுன் தாபரத்தைக்
கண்டவன் தாதை பாய்வான் காலற எறியக் கண்டு
தண்டியார்க்(கு) அருள்கள் செய்ததலைவர் ஆப் பாடியாரே. 7

5-ஆம் திருமுறை - திருநாவுக்கரசர் :

மாணி பால்கறந் து) ஆட்டி வழிபட
நீணு லகெலாம் ஆளக் கொடுத்தவன்
ஆணிமையச் செம்பொன் அம்பலத் துள்நின்ற
தாணுவைத் தமி யேன்மறந் துய்வனே. 8

5-ஆம் திருமுறை - திருநாவுக்கரசர் :

கண்ட பேச்சினிற் காளையர் தங்கள்பால்
மண்டி யேச்சுணும் மாதரைச் சேராதே
சண்டி யீச்சுர வர்க்கருள் செய்தஅக்
கொண்டி யீச்சுர வன்கழல் கூறுமே. 9

5-ஆம் திருமுறை - திருநாவுக்கரசர் :

வண்டு சேர்பொழில் சூழ்மங் கலக்குடி
விண்ட தாதையைத் தாளற வீசிய
சண்ட நாயக னுக்கருள் செய்தவன்
துண்ட மாமதி சூடிய சோதியே. 10

6-ஆம் திருமுறை - திருநாவுக்கரசர் :

ஆங்கணைந்த சண்டிக்கும் அருளி யன்று
　　தன்முடிமேல் அலர்மாலை அளித்தல் தோன்றும்
டாங்கணைந்து பணிசெய்வார்க் கருளியன்று
　　பலபிறவி அறுத்தருளும் பரிசுந்தோன்றும்
கோங்கணைந்த கூவிளமும் மதமத் தம்முங்
　　குழற்கணிந்த கொள்கையொடு கோலந் தோன்றும்
பூங்கணைவேள் உருவழித்த பொற்புத் தோன்றும்
　　பொழில் திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. 11

6-ஆம் திருமுறை - திருநாவுக்கரசர் :

சண்டனைநல் லண்டர்தொழச் செய்தான் கண்டாய்
　　சதாசிவன் கண்டாய் சங்கரன்தான் கண்டாய்
தொண்டர்பலர் தொழுதேத்துங் கழலான் கண்டாய்
　　சுடரொளியாய்த் தொடர்வரிதாய் நின்றான் கண்டாய்
பண்டுபுனல் பொன்னிவலஞ் சுழியான் கண்டாய்
　　மாமுனிவர் தம்முடைய மருந்து கண்டாய்
கொண்டல்தவழ் கொடிமாடக் கொட்டை யூரிற்
　　கோடீச் சரத்துறையுங் கோமான் தானே. 12

6-ஆம் திருமுறை - திருநாவுக்கரசர் :

பொங்கரவர் புலித்தோலர் புராணர் மார்பிற்
　　பொறிகிளர்வெண் பூணநூல் புனிதர் போலும்
சங்கரவக் கடன்முகடு தட்ட விட்டுச்
　　சதுரநடம் ஆட்டுகந்த சைவர் போலும்
அங்கரவத் திருவடிக்காட் பிழைப்பத் தந்தை
　　அந்தணனை அறவெறிந்தார்க் (கு) அருள்ப்போதே
கொங்கரவச் சடைக்கொன்றை கொடுத்தார் போலும்
　　குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. 13

7-ஆம் திருமுறை - சுந்தரர் :

இண்டைமலர் கொண்டுமணல் இலிங்கம்(து) இயற்றி
　　இனத்தாவின் பாலாட்ட இடறியதா தையைத்தாள்
துண்டமிடு சண்டியடி அண்டர்தொழு தேத்தத்
　　தொடர்ந்தவனைப் பணிகொண்ட விடங்கனதூர் வினவில்

மண்டபமுங் கோபுரமும் மாளிகைசூ ளிகையும்
மறையொலியும் விழவொலியும் மறுகுநிறை வெய்திக்
கண்டவர்கள் மனங்கவரும் புண்டரிகப் பொய்கைக்
காரிகையார் குடைந்தாடுங் கலயநல்லூர் காணே. 14

7 - ஆம் திருமுறை - சுந்தரர் :

அஞ்சுங்கொண் டாடுவர் ஆவினிற்
சேவினை ஆட்சி கொண்டார்
தஞ்சங்கொண் டார்அடிச் சண்டியைத்
தாமென வைத்துகந்தார்
செஞ்சங்கொண் டார்வெண்ணெய் நல்லூரில்
வைத்தென்னை ஆளுங்கொண்டு
நஞ்சங்கொண் டார்க்கிட மாவது
நந்திரு நாவலூரே 15

7 - ஆம் திருமுறை - சுந்தரர் :

எறிந்த சண்டி இடந்தகண்ணப்பன்
ஏத்து பத்தர்கட் கேற்றம் நல்கினீர்
செறிந்த பூம்பொழில் தேன் துளி
வீசுந் திருமிழலை
நிறைந்த அந்தணர் நித்தம் நாடொறும்
நேசத் தாலுமைப் பூசிக்கும் மிடம்
அறிந்து வீழிகொண் டீர்
அடியேற்கும் அருளுதிரே. 16

7 - ஆம் திருமுறை - திருத்தொண்டத்தொகை :

" மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 17

8- ஆம் திருமுறை - மாணிக்கவாசகர் :

நீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம் 18

9-ஆம் திருமுறை - சேந்தனுர் :

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கவ்
　　வண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
　　போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
　　தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
　　பல்லாண்டு கூறுதுமே. 19

10-ஆம் திருமுறை - திருமூலர் :

திருமந்திரம் இரண்டாம் - தந்திரம் :

உறுவ(து) அறிதண்டி ஒண்மணற் கூட்டி
அறுவகை ஆனைந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்த சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலைபெற் ருனே. 20

11-ஆம் திருமுறை - நக்கீரர் :

வந்தமரர் ஏத்து மடைகூழும் வார்சடைமேல்
கொந்தவிழு மாலைகொடுத் தார்கோல் - வந்தித்து
வாலுகுத்த வெண்கயிலைக் கோனுர்தம் மாமுடிமேல்
பாலுகுத்த மாணிக்குப் பண்டு. 21

11 - ஆம் திருமுறை - போற்றித்திருக்கலிவெண்பா

... . மட்டித்து
வாலுகத்தால் நல்லிலிங்க மாவகுத்து மற்றதன்மேற்
பாலுகுப்பக் கண்டு பதைத்தோடி - மேலுதைத்தங்
கோட்டியவன் தாதை இருதாள் எறிந்துயிரை
வீட்டிய சண்டிக்கு வேருக - நாட்டின்கண்
பொற்கோயி லுள்ளிருத்திப் பூமாலை போனகமும்
நற்கோலம் ஈந்த நலம் போற்றி ! 22

11 - ஆம் திருமுறை - பட்டினத்தார்

இனியவர் இன்னர் அவரைஒப்
　　பார்பிறர் என்னவொண்ணுத்
தனியவர் தைய லுடனும்
　　அவர்தரு மம்பணித்த

முனியவர் ஏறும் உகந்தமுக்
கண்ணவர் சண்டி அன்புக்(கு)
இனியவர் காய்மழு வாட்படை
யார்கச்சி ஏகம்பரே 23

11 - ஆம் திருமுறை - நம்பியாண்டார் நம்பி

திருத்தொண்டர் திருவந்தாதி :

குலமே றியசேய்ஞ லூரிற்
குரிசில் குரைகடல்சூழ்
தலமே றியவிறல் தண்டிகண்
டீர்தந்தை தாள் இரண்டும்
வலமே றியமழு வால்எறிந்(து)
ஈசன் மணிமுடிமேல்
நலமே றியபால் சொரிந்தலர்
சூட்டிய நன்னிதியே 24

சேக்கிழார் அருளிச் செய்த

பெரிய புராணத்தில் சண்டேசுவர நாயனர் புராணம்

12 - ஆம் திருமுறை

பூந்தண் பொன்னி எந்நாளும் பொய்யா தளிக்கும் புனல்நாட்டு
வாய்ந்த மண்ணித் தென்கரையில் மன்ன முன்னாள் வரைகிழியை
ஏந்தும் அயில்வேல் நிலைகாட்டி இமையோர் இகல்வெம் பகைகடக்கும்
சேந்தன் அளித்த திருமறையோர் மூதூர் செல்வச் சேய்ஞலூர். 1

செம்மை வெண்ணீற் றொருமையினர் இரண்டு பிறப்பின் சிறப்பினர்
மும்மைத் தழலோம் பியநெறியார் நான்கு வேதம் முறைபயின்றார்
தம்மை ஐந்து புலனும்பின் செல்லும் தகையார் அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகம் போற்றும் மறையோர் விளங்குவது 2

கோதில் மான்தோல் புரிமுந்நூல் குலவு மார்பிற் குலழக்குடுமி
ஓது கிடைசூழ் சிறுவர்களும் உதவும் பெருமை ஆசானும்
போதின் விளங்குந் தாரகையும் மதியும் போலப் புணர்மடங்கள்
மீது முழங்கு முகிலொதுங்க வேத ஒலிகள் முழங்குவன. 3

யாகம் நிலவும் சாலைதொறும் மறையோர் ஈந்த அவியுணவின்
பாகம் நுகர வருமாலும் அயனும் ஊரும் படர்சிறைப்புள்
மாகம் இகந்து வந்திருக்கும் சேக்கை எனவும் வானவர்கோன்
நாகம் அணையும் கந்தெனவும் நாட்டும் யூப ஈட்ட முள. 4

தீம்பா லொழுகப் பொழுதுதொறும் ஓம தேனுச் செல்வனவும்
தாம்பா டியசா மங்கணிப்போர் சமிதை இடக்கொண் டணைவனவும்
பூம்பா சடைநீர்த் தடம்மூழ்கி மறையோர் மகளிர் புகுவனவும்
ஆம்பான் மையினில் விளங்குவன அணிநீள் மறுகு பலவுமுள. 5

வாழ்பொற் பதிமற் றதன்மருங்கு மண்ணித் திரைகள் வயல்வரம்பின்
தாழ்வில் தரளம் சொரிகுலைப்பால் சமைத்த யாகத் தடஞ்சாலை
சூழ்வைப் பிடங்கள் நெருங்கியுள தொடங்கு சடங்கு முடித்தேறும்
வேள்வித் தலைவர் பெருந்தேர்கள் விண்ணோர் ஏறும் விமானங்கள். 6

மடையில் கழுநீர் செழுநீர்சூழ் வயலில் சாலிக் கதிர்க்கற்றைப்
புடையில் சுரும்பு மிடைகமுகு புனலில் பரம்பு பூம்பாளை
அடையில் பயிலுந் தாமரைநீள் அலரில் துயிலுங் கயல்கள்வழி
நடையில் படர்மென் கொடிமௌவல் நனையில் திகழுஞ் சினைக்காஞ்சி 7

சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன் தில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக் கியவளவர் போரே றென்றும் புவிகாக்கும்
மன்னர் பெருமான் அநபாயன் வருந்தொல் மரபின் முடிசூட்டுந்
தன்மை நிலவு பதிஐந்தின் ஒன்றாய் நீடும் தகைத்தவ்வூர். 8

பண்ணின் பயனும் நல்லிசையும் பாலின் பயனும் இன்சுவையும்
கண்ணின் பயனும் பெருகொளியும் கருத்தின் பயனும் எழுத்தஞ்சும்
விண்ணின் பயனும் பொழிமழையும் வேதப் பயனும் சைவமும்போல்
மண்ணின் பயனும் அப்பதியின் வளத்தின் பெருமை வரம்புடைத்தோ 9

பெருமை பிறங்கும் அப்பதியின் மறையோர் தம்முள் பெருமனைவாழ்
தருமம் நிலவு காசிபகோத் திரத்துத் தலைமை சால்மரபில்
அருமை மணியும் அளித்ததுவே நஞ்சும் அளிக்கும் அரவுபோல்
இருமை வினைக்கும் ஒருவடிவாம் எச்ச தத்தன் உளனானன். 10

மற்றை மறையோன் திருமனைவி வாய்ந்த மரபின் வந்துதித்தாள்
சுற்றம் விரும்பும் இல்வாழ்க்கைத் தொழிலாள் உலகில் துணைப்புதல்வர்
பெற்று விளங்குந் தவஞ்செய்தாள் பெறும்பே றெல்லைப் பயன்பெறுவாள்
பற்றை எறியும் பற்றுவரச் சார்பா யுள்ள பவித்திரையாம். 11

நன்றி புரியும் அவர்தம்பால் நன்மை மறையின் துறைவிளங்க
என்றும் மறையோர் குலம்பெருக ஏழு புவனங் களும்உய்ய
மன்றில் நடஞ்செய் பவர்சைவ வாய்மை வளர மாதவத்தோர்
வென்றி விளங்க வந்துதயம் செய்தார் விசார சருமனர். 12

ஐந்து வருடம் அவர்க்கணைய அங்கம் ஆறும் உடன்நிறைந்த
சந்த மறைகள் உட்படமுன் தலைவர் மொழிந்த ஆகமங்கள்
முந்தை அறிவின் தொடர்ச்சியினல் முகைக்கு மலரின் வாசம்போல்
சிந்தை மலர உடன்மலரும் செவ்வி உணர்வு சிறந்ததால். 13

நிகழும் முறைமை ஆண்டேழும் நிரம்பும் பருவம் வந்தெய்தப்
புகழும் பெருமை உபநயனப் பொருவில் சடங்கு முடித்தறிவின்
இகழு நெறிய அல்லாத எல்லாம் இயைந்த எனினுந்தம்
திகழு மரபின் ஓதுவிக்கும் செய்கை பயந்தார் செய்வித்தார் 14

குலவு மறையும் பலகலையும் கொளுத்து வதன்முன் கொண்டமைந்த
நிலவும் உணர்வின் திறங்கண்டு நிறுவும் மறையோர் அதிசயித்தார்
அலகில் கலையின் பொருட்கெல்லை ஆடுங் கழலே எனக்கொண்ட
செலவு மிகுந்த சிந்தையினில் தெளிந்தார் சிறிய பெருந்தகையார். 15

"நடமே புரியுஞ் சேவடியார் நம்மை உடையார்" எனும்மெய்ம்மை
உடனே தோன்றும் உணர்வின்கண் ஒழியா தூறும் வழியன்பின்
கடனே இயல்பாய் முயற்றிவருங் காதல் மேன்மேல் எழுங்கருத்தின்
திடம்நேர் நிற்குஞ் செம்மலரார்திகழு நாளில் ஆங்கொருநாள். 16

ஓது கிடையி னுடன்போவார் ஊர்ஆன் நிரையி னுடன்புக்க
போது மற்றங் கொருபுனிற்று போற்றும் அவன்மேல் மருப்போச்சு
யாதும் ஒன்றுங் கூசாதே எடுத்த கோல்கொண் டவன்புடைப்ப
மீது சென்று மிகும்பரிவால் வெகுண்டு விலக்கி மெய்யுணர்ந்து. 17

பாவுங் கலைகள் ஆகம்நூல் பரப்பின் தொகுதிப் பான்மையினல்
மேவும் பெருமை அருமறைகள் மூல மாக விளங்குலகில்
யாவுந் தெளிந்த பொருள்நிலையே எய்த உணர்ந்த உள்ளத்தால்
ஆவின் பெருமை உள்ளபடி அறிந்தார் ஆயற் கருள்செய்வார். 18

" தங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமைத் தகைமையன
பொங்கு புனித தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்துவன
துங்க அமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்கம் அனைத்துந் தரமுடைய அல்ல வோநல் ஆனினங்கள். 19

ஆய சிறப்பி னாற்பெற்ற அன்றே மன்றுள் நடம்புரியும்
நாய னார்க்கு வளர்மதியும் நதியும் நகுவெண் தலைத்தொடையும்
மேய வேணித் திருமுடிமேல் விரும்பி ஆடி அருளுதற்குத்
தூய திருமஞ் சனம்ஐந்தும் அளிக்கும் உரிமைச் சுரபிகள் தாம். 20

சீல முடைய கோக்குலங்கள் சிறக்குந் தகைமைத் தேவருடன்
கால முழுதும் உலகனைத்துங் காக்கும் முதற்கா ரணராகும்
நீல கண்டர் செய்யசடை நிருத்தர் சாத்து நீறுதரும்
மூலம் அவதா ரஞ்செய்யும் மூர்த்தம் என்றால் முடிவென்னே. 21

உள்ளுந் தகைமை இனிப்பிறவே றுளவே உழைமான் மறிக்கன்று
துள்ளுங் கரத்தார் அணிபணியின் சுடர்சூழ் மணிகள் சுரநதிநீர்
தெள்ளுஞ் சடையார் தேவர்கள்தம் பிராட்டி யுடனே சேரமிசைக்
கொள்ளுஞ் சினமால் விடைத்தேவர் குலமன் றோஇச் சுரபிகுலம். 22

என்றின் னனவே பலவும்நினைந் " திதத்தின் வழியே மேய்த்திந்தக்
கன்று பயில்ஆன் நிரைகாக்கும் இதன்மேல் இல்லை கடன் இதுவே
மன்றுள் ஆடுஞ் சேவடிகள் வழுத்து நெறியா வதும் " என்று
நின்ற ஆயன் தனைநோக்கி " நிரைமேய்ப் பொழிக நீ " என்பார். 23

" யானே இனிஇந் நிரைமேய்ப்பன் " என்றார் அஞ்சி இடைமகனும்
தானேர் இறைஞ்சி விட்டகன்றான் தாமும் மறையோர் இசைவினால்
ஆனே நெருங்கும் பேராயம் அளிப்பா ராகிப் பைங்கூழ்க்கு
வானே என்ன நிரைகாக்க வந்தார் தெய்வ மறைச்சிறுவர். 24

கோலும் கயிறும் கொண்டுகுழைக் குடுமி அலையக் குலவுமான்
தோலும் நூலும் சிறுமார்பில் துவள அரைக்கோ வணஞ்சுடரப்
பாலும் பயனும் பெருகவரும் பசுக்கள் மேய்க்கும் பான்மையினால்
சாலும் புல்லின் அவைவேண்டுந் தனையும் மிசையுந் தலைச்சென்று 25

பதவு காலங் களில்மேய்த்தும் பறித்தும் அளித்தும் பரிவகற்றி
இதமுண் துறையுள் நற்றண்ணீர் ஊட்டி அச்சம் எதிர்நீக்கி
அதர்நல் லனமுன் செலநீழல் அமர்வித் தமுத மதுரப்பால்
உதவும் பொழுது பிழையாமல் உடையோர் இல்லந் தொறும்உய்த்தார். 26

மண்ணிக் கரையின் வளர்புறவின் மாடும் படுகர் மருங்கினிலும்
தண்ணித் திலநீர் மருதத்தண் டலைசூழ் குலையின் சார்பினிலும்
எண்ணிற் பெருகு நிரைமேய்த்துச் சமிதை யுடன்மேல் எரிகொண்டு
நண்ணிக் கங்குல் முன்புகுதும் நன்னாள் பலவாம் அந்நாளில். 27

ஆய நிரையின் குலமெல்லாம் அழகின் விளங்கி மிகப்பல்கி
மேய இனிய புல்லுணவும் விரும்பு புனலும் ஆர்தலினால்
ஏய மனங்கொள் பெருமகிழ்ச்சி எய்தி இரவும் நன்பகலும்
தூய தீம்பால் மடிபெருகிச் சொரிய முலைகள் சுரந்தனவால். 28

பூணுந் தொழில்வேள் விச்சடங்கு புரிய ஓம தேனுக்கள்
காணும் பொலிவின் முன்னையினும் அநேக மடங்கு கறப்பனவாய்ப்
“பேணுந் தகுதி அன்பால்இப் பிரம சாரி மேய்த்ததற்பின்
மாணுந் திறத்த வான” என மறையோர் எல்லாம் மனமகிழ்ந்தார்.

அனைத்துத் திறத்தும் ஆனினங்கள் அணைந்த மகிழ்ச்சி அளவின்றி
மனைக்கண் கன்று பிரிந்தாலும் மருவுஞ் சிறிய மறைக்கன்று
தனைக்கண் டருகு சார்ந்துருகித் தாயாந் தன்மை நிலைமையவாய்ந்
கனைத்துச் சுரந்து முலைக்கண்கள் கறவா மேபால் பொழிந்தனவால்.

தம்மை அணைந்த ஆன்முலைப்பால் தாமே பொழியக் கண்டுவந்து
செம்மை நெறியே உறுமனத்தில் திருமஞ் சனமாங் குறிப்புணர்ந்தே
எம்மை யுடைய வள்ளலார் எய்த நினைந்து தெளிந்ததனில்
மெய்ம்மைச் சிவனார் பூசனையை விரும்பும் வேட்கை விரைந்தெழலும்

அங்கண் முன்னை அர்ச்சனையின் அளவின் தொடர்ச்சி விளையாட்டாப்
பொங்கும் அன்பால் மண்ணிமணல் புளினக் குறையில் ஆத்தியின்கீழ்ச்
செங்கண் விடையார் திருமேனி மணலால் ஆக்கிச் சிவாலயமும்
துங்க நீடு கோபுரமும் சுற்றா லயமும் வகுத்தமைத்தார். 32

ஆத்தி மலரும் செழுந்தளிரும் முதலா அருகு வளர்புறவில்
பூத்த மலர்கள் தாந்தெரிந்து புனிதர் சடிலத் திருமுடிமேல்
சாத்த லாகுந் திருப்பள்ளித் தாமம் பலவுந் தாங்கொய்து
கோத்த இலைப்பூங் கூடையினில் கொணர்ந்து மணந்தங் கிடவைத்தார்.

நல்ல நவகும் பங்கள்பெற நாடிக் கொண்டு நாணற்பூங்
கொல்லை யிடத்தும் குறைமறைவும் மேவுங் கோக்கள் உடன்கூட
ஒல்லை அணைந்து பாலாக்கள் ஒன்றுக் கொருகா லாகஎதிர்
செல்ல அவையும் கனைத்துமுலை தீண்டச் செழும்பால் பொழிந்தனவால். 34

கொண்டு மடுத்த குடநிறையக் கொணர்ந்து விருப்புங் கொள்கையினுல்
அண்டர் பெருமான் வெண்மணல்ஆ லயத்துள் அவைமுன் தாபித்து
வண்டு மருவுந் திருப்பள்ளித் தாமங் கொண்டு வரன்முறையே
பண்டைப் பரிவால் அருச்சித்துப் பாலின் திருமஞ் சனம்ஆட்டி. 35

மீள மீள இவ்வண்ணம் வெண்பால் சொரிமஞ் சனம்ஆட்ட
ஆள உடையார் தம்முடைய அன்பர் அன்பின் பாலுளதாய்
மூள அமர்ந்த நயப்பாடு முதிர்ந்த பற்று முற்றச்சூழ்
கோளம் அதனில் உள்நிறைந்து குறித்த பூசை கொள்கின்ருர். 36

பெருமை பிறங்குஞ் சேய்ஞலூர்ப் பிள்ளை யார்தம் உள்ளத்தில்
ஒருமை நினைவால் உம்பர்பிரான் உவக்கும் பூசை உறுப்பான
திருமஞ் சனமே முதலவற்றில் தேடா தனஅன் பினில்நிரப்பி
வரும்அந் நெறியே அர்ச்சனைசெய் தருளி வணங்கி மகிழ்கின்ருர். 37

இறையோன் அடிக்கீழ் மறையவனுர் எடுத்துத் திருமஞ் சனம்ஆட்டும்
நிறைபூ சனைக்குக் குடங்கள்பால் நிரம்பச் சொரிந்து நிரைக்குலங்கள்
குறைபா டின்றி மடிபெருகக் குவிந்த முலைப்பால் குறைவின்றி
மறையோர் மனையின் முன்புதரும் வளங்கள் பொலிய வைகுமால். 38

செயலிப் படியே பலநாளுஞ் சிறந்த பூசை செய்வதற்கு
முயல்வுற் றதுவே திருவிளையாட் டாக முந்நூல் அணிமார்பர்
இயல்பில் புரியும் மற்றிதனைக் கண்டித் திறத்தை அறியாத
அயல்மற் ருெருவன் அப்பதியில் அந்த ணுளர்க் கறிவித்தான். 39

அச்சொற் கேட்ட அருமறையோர் "ஆயன் அறியான் என்றவற்றின்
இச்சை வழியே யான்மேய்ப்பேன் என்றெம் பசுக்கள் தமைக்கறந்து
பொச்சம் ஒழுகு மாணவகன் பொல்லாங் குரைக்க அவன்தாதை
எச்ச தத்தன் தனையழைமின்" என்ருர் அவையில் இருந்தார்கள். 40

ஆங்கு மருங்கு நின்ருர்கள் அவ்வந் தணன்தன் திருமனையின்
பாங்கு சென்று மற்றவனை அழைத்துக் கொண்டு வரப்பரந்த
ஓங்கு சபையோர் அவனைப்பார்த்(து) "ஊரா னிரைமேய்த்
துன்மகன்செய்
தீங்கு தன்னைக் கேள்" என்று புகுந்த பரிசு செப்புவார். 41

"அந்தண் மறையோர் ஆகுதிக்குக் கறக்கும் பசுக்க ளானவெலாம்
சிந்தை மகிழ்ந்து பரிவினுல் திரளக் கொடுபோய் மேய்ப்பான்போல்
கந்தம் மலிபூம் புனல்மண்ணி மணலிற் கறந்து பாலுகுத்து
வந்த பரிசே செய்கின்ருன் என்ருன்" என்று வாய்மொழிந்தார். 42

மறையோர் பொழியக் கேட்டஞ்சிச் "சிறுமா ணவகன் செய்தஇது
இறையும் நான்முன் பறிந்திலேன் இதற்கு முன்பு புகுந்ததனை
நிறையும் பெருமை அந்தணர்காள்! பொறுக்க வேண்டும் நீங்கள்" எனக்
குறைகொண் டிறைஞ்சி 'இனிப்புகுதிற் குற்றம் எனதேயாம்" என்றான்

அந்த ணாளர் தமைவிடைகொண் டந்தி தொழுது மனைபுகுந்து
"வந்த பழியொன் " றெனநினைந்தே மகனார் தமக்கு வாய்நேரான்
"இந்த நிலைமை அறிவேன் " என் றிரவு கழிந்து நிரைமேய்க்க
மைந்த னார்தாம் போயினபின் மறைந்து சென்றான் மறைமுதியோன்

சென்ற மறையோன் திருமகனார் சிறந்த ஊர்ஆன் நிரைகொடுபோய்
மன்றல் மருவும் புறவின்கண் மேய்ப்பார் மண்ணி மணற்குறையில்
அன்று திரளக் கொடுசென்ற அதனை அறிந்து மறைந்தப்பால்
நின்ற குரவின் மிசையேறி நிகழ்வ தறிய ஒளித்திருந்தான். 45

அன்பு புரியும் பிரமசா ரிகளும் மூழ்கி அரனார்க்கு
முன்பு போல மணற்கோயில் ஆக்கி முகைமென் மலர்கொய்து
பின்பு வரும்ஆன் முலைபொழிபால் பெருகுங் குடங்கள் பேணுமிடந்
தன்பாற் கொணர்ந்து தாபித்துப் பிறவும் வேண்டு வனசமைத்தார்.

நின்ற விதியின் விளையாட்டால் நிறைந்த அரும்பூ சனைதொடங்கி
ஒன்றும் உள்ளத் துண்மையினால் உடைய நாதன் திருமுடிமேல்
மன்றல் விரவுந் திருப்பள்ளித் தாமஞ் சாத்தி மஞ்சனமா
நன்று நிறைதீம் பாற்குடங்கள் எடுத்து நயப்புற் றாட்டுதலும். 47

பரவ மேன்மேல் எழும்பரிவும் பழைய பான்மை மிகும்பண்பும்
விரவும் மேதக் கவர்தம்பால் மேவும் பெருமை வெளிப்படுப்பான்
அரவம் மேவுஞ் சடைமுடியார் அருளாம் என்ன அறிவழிந்து
குரவ மேவு முதுமறையோன் கோப மேவும் படிகண்டான். 48

கண்ட போதே விரைந்து இழிந்து கடிது சென்று கைத்தண்டு
கொண்டு மகனார் திருமுதுகில் புடைத்துக் கொடிதாம் மொழிகூறத்
தொண்டு புரியுஞ் சிறியபெருந் தோன்ற லார்தம் பெருமான்மேல்
மண்டு காதல் அருச்சனையின் வைத்தார் மற்றொன் றறிந்திலரால். 49

மேலாம் பெரியோர் பலகாலும் வெகுண்டோன் அடிக்க வேறுணரார்
பாலார் திருமஞ் சனம்ஆட்டும் பணியிற் சலியா ததுகண்டு
மாலா மறையோன் மிகச்செயிர்த்து வைத்த திரு மஞ்சனக்குடப்பால்
காலால் இடறிச் சிந்தினான் கையாற் கடைமைத் தலைநின்றான். 50

சிந்தும் பொழுதில் அதுநோக்குஞ் சிறுவர் இறையில் தீயோனைத்
தந்தை எனவே அறிந்தவன்தன் தாள்கள் சிந்தும் தகுதியினால்
முந்தை மருங்கு கிடந்தகோல் எடுத்தார்க் கதுவே முறைமையினால்
வந்து மழுவா யிடஎறிந்தார் மண்மேல் வீழ்ந்தான் மறையோனும். 51

எறிந்த அதுவே அர்ச்சனையில் இடையூ றகற்றும் படையாக
மறிந்த தாதை இருதாளும் துணித்த மைந்தர் பூசனையில்
அறிந்த இடையூ றகற்றினராய் முன்போல் அருச்சித் திடப்புகலும்
செறிந்த சடைநீள் முடியாரும் தேவி யோடும் விடையேறி. 52

பூத கணங்கள் புடைசூழப் புராண முனிவர் புத்தேளிர்
வேத மொழிகள் எடுத்தேத்த விமல மூர்த்தி திருவுள்ளம்
காதல் கூர வெளிப்படலும் கண்டு தொழுது மனங்களித்துப்
பாத மலர்கள் மேல்விழுந்தார் பத்தி முதிர்ந்த பாலகனார். 53

தொடுத்த இதழி சூழ்சடையார் துணைத்தாள் நிழற்கீழ் விழுந்தவரை
எடுத்து நோக்கி "நம்பொருட்டால் ஈன்ற தாதை விழஎறிந்தாய்
அடுத்த தாதை இனியுனக்கு நாம்" என் றருள்செய் தணைத்தருளி
மடுத்த கருணை யால்தடவி உச்சி மோந்து மகிழ்ந்தருள. 54

செங்கண் விடையார் திருமலர்க்கை தீண்டப் பெற்ற சிறுவனார்
அங்கண் மாயை யாக்கையின்மேல் அளவின் றுயர்ந்த சிவமயமாய்ப்
பொங்கி எழுந்த திருவருளின் மூழ்கிப் பூமேல் அயன்முதலாம்
துங்க அமரர் துதிசெய்யச் சூழ்ந்த ஒளியில் தோன்றினார். 55

அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப னாக்கி "அனைத்தும்நாம்
உண்ட கலமும் உடுப்பனவும் சூடு வனவும் உனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோம்" என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார். 56

எல்லா உலகும் ஆர்ப்பெடுப்ப எங்கும் மலர்மா ரிகள்பொழியப்
பல்லா யிரவர் கணநாதர் பாடி ஆடிக் களிபயிலச்
சொல்லார் மறைகள் துதிசெய்யச் சூழ்பல் லியங்கள் எழச்சைவ
நல்லா ரேங்க நாயகமாம் நங்கள் பெருமான் தொழுதணைந்தார். 57

ஞாலம் அறியப் பிழைபுரிந்து நம்பர் அருளால் நான்மறையின்
சீலந் திகழுஞ் செய்ஞலூர்ப் பிள்ளை யார்தந் திருக்கையில்
கோல மழுவால் ஏறுண்டு குற்றம் நீங்கிச் சுற்றமுடன்
மூல முதல்வர் சிவலோகம் எய்தப் பெற்றான் முதுமறையோன். 58

வந்து மிகைசெய் தாதைதாள் மழுவால் துணித்த மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே அரனர் மகனர் ஆயினர்
இந்த நிலைமை அறிந்தாரார் ஈறி லாதார் தமக்கன்பு
தந்த அடியார் செய்தனவே தவமாம் அன்றே சாற்றுங்கால். 59

நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்
தீச னடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழஎடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்ததிருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம். 60

திருத்தொண்டர் புராணசாரம் :

வேதமலி சேய்ஞலூர் எச்சதத்தன் விளங்கிய சேய்
- மறைபயிலும் விசார சன்மர்
கோதனம் மேய்ப்பவன்கொடுமை பொறாது தாமேகொண்டுவிரை
மண்ணியின்தென் கரையின்நீழல்
தாதகியின்மணல் இலிங்கத் தான்பா லாட்டத் தாதைபொரு
- தவை இடறுந் தாள்கள்மாளக்
காதிமலர்த் தாமமுயர் நாமமுண்ட கலமகனும்
- பதமருளாற் கைக்கொண் டாரே. 27

— ஸ்ரீ உமாபதி சிவாசாரியர்

திருத்தொண்டர் திருநாமக்கோவை :

... ... மருவுமறைச் சண்டீசர் வாகீசர் தக்ககுலச்சிறையார் ....
துறைசையாதீனம் — ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் 28

சண்டேசுவரர் திரிசதி நாமாவளி

ஓம் சண்டிகேஸ்வராய நம :
,, சிவபக்தாய நம :
,, ஸ்கந்தபுரவாஸிநே நம :
,, ஏகாக்ரசித்தாய நம :
,, தர்மப்ரவர்த்தகாய நம :
,, வேதபாரகாய நம :
,, ஷட்கர்மநிரதாய நம :
,, ஸப்தரிஷிஸமவைபவாய நம :
,, மண்ணிநதீதீர கோஸம்ரக்ஷணாய நம :
,, அஷ்டமூர்த்திபதாஸக்தாய நம : 10
,, நித்யநவநவோத்ஸவாய நம :
,, தசதிக்வியாப்தயசஸே நம :
,, சதருத்ரஜபோந்முகாய நம :
,, ஸத்யநிரதாய நம :
,, சசிப்ரபாய நம :
,, பிரும்மசாரிணே நம :
,, பஞ்சாக்ஷரஜபமாநஸாய நம :
,, காச்யபகோத்ரஜாய நம :
,, யஞ்ஞதத்தஸுதாய நம :
,, பவித்ரைகபுத்ராய நம : 20
,, நிருத்தேசபாதாப்ஜ பக்தாய நம :
,, சிவதர்மமார்கலோலாய நம :
,, விசாரசர்மாய நம :
,, நீலகண்டபக்தாய நம :
,, பஸ்ம பூஷணாய நம :
,, நிர்மலாய நம :
,, புக்திமுக்திப்ரதாய நம :
,, கோரக்ஷணக்ரியாய நம :
,, சிவார்ச்சநாபலப்ரதாய நம :
,, கோபாலாய நம : 30
,, பாவநாய நம :
,, வநாந்தரே கோஸம்ரக்ஷணாய நம :
,, புஷ்டிவர்த்தநாய நம :
,, சிவஸ்யக்ஷீராபிஷேக பிரியாய நம:
,, பூர்ணாய நம :
,, நிர்மலமானஸாய நம :
,, தேவார்ச்சநப்ரியாய நம :
,, மஹாதேவபக்தாய நம :
,, சிவநிர்மால்யபோக்த்ரே நம :
,, ஏகாந்தப்ரியாய நம : 40
,, கருணாபூர்ணாய நம :
,, வேத வேதாந்தாய நம :
,, டங்கதராய நம:
,, கைலாஸவாஸிநே நம:
,, தேஜஸே நம :
,, சங்கரபக்தாய நம:
,, பராத்பராய நம :
,, ஆனந்தாய நம :
,, ஸூக்ஷ்மதேஹாய நம :
,, பஞ்சேந்திரிய நிக்ரஹாய நம: 50
,, ஞானதாய நம :
,, யோகாய நம :
,, நிஷ்டாய நம :
,, நிராகாராய நம :
,, ஸுதேஹாய நம :
,, பஞ்சாக்ஷர மாநஸாய நம :
,, தபஸ்விநே நம :
,, ஜன்மவர்ஜிதாய நம :
,, சித்கலாய நம :
,, சதுர்வேதப்ரியாய நம : 60
,, வியாக்ர சர்மாஸநாய நம :
,, ஸத்யாய நம :
,, அஞ்ஞாநநிக்ரஹாய நம :
,, தபோமயாய நம :
,, த்விநேத்ராய நம :
,, ஸுப்ரகாசாய நம :
,, ச்யாமாய நம :
,, அம்ருதாய நம :
,, பலதாத்ரே நம :
,, சிவமந்திரபாராயணாய நம : 70

,, ருத்ராக்ஷ பூஷிதாய நம :
,, சிவப்ரஸாதமாநஸாய நம :
,, தர்மிஷ்டாய நம :
,, ஸித்தாய நம :
,, சுத்தாய நம :
,, அபயாய நம :
,, ஆனந்தபரிதாய நம :
,, ஸத்யபாஷிணே நம :
,, பஸ்மோத்தூளிதவிக்ரஹாய நம :
,, ஸித்தஸேவிதாய நம : 80
,, ஈசப்ரியாய நம :
,, கமநீயாய நம :
,, கலாநிதயே நம :
,, த்யானபதயே நம :
,, ஜ்வலந்நேத்ராய நம :
,, காந்தாய நம :
,, சாந்தஜனப்ரியாய நம :
,, ப்ரபவே நம :
,, சங்கரப்ரியாய நம :
,, பாந்தவாய நம : 90
,, யோகசாஸ்திரஞ்ஞாய நம :
,, ஞானசக்ஷுஷே நம :
,, தபோமயாய நம :
,, பராக்ரமாய நம :
,, வச்யாய நம :
,, ஞானமயாய நம :
,, ஸர்வோபத்ரவநாசநாய நம :
,, ஸர்வஸித்திப்ரதாய நம :
,, துக்கநிவாரணாய நம :
,, பஸ்மாங்காய நம : 100
,, ஸுரேச்வராய நம :
,, பக்தானுக்ரஹகாரிணே நம :
,, பக்தரக்ஷணாய நம :
,, தேவதேவாய நம :
,, யோகஸாதிணே நம :
,, பங்கஜப்ரியாய நம :
,, ஜயப்ரதாய நம :
,, பரசுஹஸ்தாய நம :
,, ம்ருகாஸநாய நம :
,, மஹாவச்யாய நம : 110
,, மஹாஸத்யாய நம :
,, மஹாக்ஷமாய நம :
,, ஸௌம்யாய நம :
,, பஸ்மத்ருதே நம :
,, சண்டாய நம :
,, அமரேசாய நம :
,, ஆராத்யாய நம :
,, ருஷிகணவந்தியாய நம :
,, கமண்டலுதராய நம :
,, ஞானமூர்த்தயே நம : 120
,, டங்கஹஸ்தாய நம :
,, தத்வரூபாய நம :
,, யஞ்ஞமூர்த்தயே நம :
,, ரமணியாய நம :
,, அநாமயாய நம :
,, பிரும்மண்யாய நம :
,, ரக்ஷாகர்த்ரே நம :
,, நளிநாய நம:
,, நந்தநாய நம:
,, நடேசபக்தாய நம: 130
,, வரதாய நம:
,, ஸநாதநாய நம:
,, அனகாய நம:
,, பரமபுருஷாய நம :
,, ஸத்யவ்ரதாய நம :
,, தந்விநே நம :
,, வரப்ரதாய நம :
,, ஜிதேந்திரியாய நம :
,, ஜிதக்ரோதாய நம :
,, முனிஸம்ஸ்துதாய நம : 140
,, ரமணாய நம :
,, குமாராய நம :
,, தேவேசாய நம :
,, ஜன்மஸம்ஸார பேஷஜாய நம :
,, நரகாதிபயத்வம்ஸிநே நம :
,, விஜயாய நம :
,, மஹாப்ரபவே நம :
,, ஸுலபாய நம ;
,, ஸர்வாய நம :
,, சரணாகதவத்ஸலாய நம : 150

,, தீராய நம :
,, ஸர்வஞ்ஜாய நம :
,, தேவப்ரியாய நம :
,, பூஜ்யாய நம :
,, அக்ஷயாய நம ;
,, ஸேவ்யாய நம :
,, பிராக்ஞாய நம :
,, வாங்மயாய நம :
,, விபவே நம ;
,, வாஸ்மினே நம : 160
,, ஸத்யதர்மானுஷங்காய நம :
,, ஆர்த்தரட்சகாய நம :
, வந்தநீயாய நம :
,, ஸுப்ரஸந்நாய நம:
,, ஸுசீலாய நம :
,, ஸுவர்ச்சஸே நம :
,, உஜ்வலதேஜஸே நம :
,, சாந்தாய நம :
,, குணாத்மனே நம :
,, பஞ்சமூர்த்திஸேவதாய நம : 170
,, ஐசுவர்யப்ரதாய நம :
,, அசிந்த்யாய நம :
,, ஸௌக்யப்ரதாய நம :
,, ச்ரேயஸே நம :
,, சிஷ்டபாலகாய நம :
,, ஸுந்தராய நம :
,, சுப்ராய நம :
,, ஸாமகானப்ரியாய நம :
,, பக்திகம்யாய நம :
,, மங்களாய நம ! 180
,, பவபந்தமோசநாய நம :
, ஸநகாதிமுனிஸ்துத்யாய நம !
,, மஹேச்வரப்ரியாய நம :
,, மங்களப்ரதாய நம :
,, த்விபுஜாய நம :
,, தயாகராய நம !
,, மாநதாய நம :
,, ஸுகப்ரதாய நம !
,, சிஷ்டபூஜிதாய நம ;
,, துக்கபஜ்ஜநாய நம ! 190

,, யௌவநாய நம :
,, ஸௌம்யசித்தாய நம :
,, த்ருடவ்ருதாய நம :
,, ஸத்யஸங்கல்பாய நம :
,, ஸர்வரோகப்ரசமநாய நம :
,, ஸர்வமிருத்யுநிவாரகாய நம :
,, சாருசீலாய நம :
,, மேதாவிநெ நம :
,, குணாகராய நம :
,, ஜயந்தாய நம : 200
,, வாசஸ்பதே நம :
,, கலிதோஷஹராய நம :
, புண்யவர்த்தநாய நம :
,, தர்மரூபாய நம :
,, தநாத்யக்ஷாய நம :
,, தர்மபாலநாய நம :
,, ஆகமஞ்ஜாய நம :
,, வேதாந்தவிதுஷே நம :
,, கருணாபூரணாய நம :
, கல்யாணகுணவர்த்தநாய நம : 210
,, சுவேதாம்பராய நம :
,, அக்ஷமாலாதராய நம :
,, ஆதிவ்யாதிஹராய நம :
,, க்லேசநாசாய நம :
,, சிந்திதார்த்தப்ரதாய நம :
,, புண்யதாயகாய நம :
,, ஸமாதிநிலயாய நம :
,, பாக்யதாய நம :
,, பவபாசவிமோசநாய நம :
,, அபவர்க்கப்ரதாய நம : 220
,, ஸர்வைச்வர்யப்ரதாய நம :
,, வைராக்யதாய நம :
,, அமிருதார்ணவாய நம :
,, ஸத்யோஜாதாய நம :
,, ஆர்யாய நம :
,, புண்யமூர்த்தயே நம :
,, சோகஹராய நம :
,, சுபப்ரதாய நம :
,, ரம்யரூபாய நம ;
,, க்ரீடிநே நம : 230

,, கல்யாணுய நம :
,, சிவபக்தாய நம :
,, சிவயோகினே நம :
,, ஸுந்தரரூபாய நம ?
,, ருத்ராக்ஷபூஷிதாய நம :
,, உத்ஸவப்ரியாய நம :
,, அகோராய நம :
,, பாரிஜாதப்ரியாய நம ;
,, ஞானிநே நம :
,, வித்யாநிதயே நம : 240
,, ஸுராஸுரபூஜிதாய நம :
,, ஆனந்தநிதயே நம :
,, பாபநாசநாய நம :
,, ஸர்வேசுவராய நம :
,, சிவபூஜாபலப்ரதாய நம :
,, சிவமாநஸீகநிலயாய நம :
,, சிவபூஜாதுரந்தராய நம :
,, சிவோத்ஸவப்ரியாய நம :
,, கற்பகநிதயே நம :
,, கும்போதரசண்டாய நம : 250
,, சிவஸ்தோத்ராய நம :
,, கருணுநிதயே நம :
,, மஹாத்மனே நம :
,, யசீஸே நம :
,, யஜ்ஞேசாய நம :
,, பராகாசாய நம :
,, கல்மஷக்னே நம :
,, சம்புபக்தாய நம :
,, ஸுமித்ரசண்டாய நம :
,, பிரும்மரூபாய நம : 260
,, பிரும்மவிதே நம :
,, வித்யாதரஸுபூஜிதாயா நம :
,, தேவாய நம :
,, ஸர்வதேவபூஜிதாய நம :
,, பக்தப்ரியாய நம :
,, குணபதயே நம :
,, குணக்ஞாய நம :
,, கீதக்ஞாய நம :
,, கானப்ரியாய நம :
,, ஸுராத்யக்ஷாய நம : 270
,, மான்யாய நம :
,, புராணபுருஷாய நம :
,, மந்திரக்குதே நம :
,, ஸர்வஸ்மை நம :
,, சிவப்ரியாய நம :
,, மங்களப்ரதாய நம :
,, அபீஷ்டவரதாய நம :
,, ஸ்ரீருத்ரஜபப்ரியாய நம :
,, பாலரூபிணே நம :
,, புண்யகீர்த்தயே நம : 280
,, புண்யச்ரவணுய நம :
,, மஹாதேஜஸே நம :
,, கோஸம்ரக்ஷணமாநஸாய நம :
,, ஸுரச்ரேஷ்டாய நம :
,, சிவதர்சனபலதாய நம :
,, சிவசிந்தநாய நம :
,, பக்தானுக்ரஹமூர்த்தயே நம :
,, பக்தவாஞ்சிததாயகாய நம ;
,, பக்தபாபக்ஷயங்கராய நம :
,, தேஜச்சண்டாய நம : 290
,, ராகத்வேஷவிநாசநாய நம :
,, காமக்ரோதஹராய நம :
,, அக்ஞானத்வாந்ததீபிகாய நம :
,, அத்புதசரித்ராய நம :
,, அனுக்ரஹதாய நம :
,, உதாரகீர்த்தயே நம :
,, க்ரோத நாசநாய நம :
,, ஞானவிக்ரஹாய நம :
,, ஞானப்ரகாசகாய நம :
,, பக்தத்வனிசண்டாய நம : 300

"பக்த த்வனி சண்டத்ரிசதி நாமாவளி சம்பூரணம்"

குறிப்பு : மேற்கண்ட அஷ்டோத்ரம் த்ரிசதி - சீர்காழி, திரு. N. இர்ரமநாத சிவாச்சாரியார் அவர்கள் கையெழுத்துப் பிரதியாக உதவியன.

॥ ध्वनिःचंडेश्वर विंशति नामावलिः ॥

1 ओं चंडिकेश्वराय नमः
2 ,, शिवभक्ताय नमः
3 ,, स्कन्दपुरवासिने नमः
4 ,, एकाग्रचित्ताय नमः
5 ,, धर्मप्रवर्तकाय नमः
6 ,, वेदपारकाय नमः
7 ,, षट्कर्मनिरताय नमः
8 ,, सप्तर्षिसमवैभवाय नमः
9 ,, मंणीनदीतीर गोसंरक्षणाय नमः
10 ,, अष्टमूर्तिपदासक्ताय नमः
11 ,, नित्य नव नवोत्सवाय नमः
12 ,, दशदिग्व्याप्तयशसे नमः
13 ,, शतरुद्रजपान्मुखाय नमः
14 ,, सत्यनिरताय नमः
15 ,, शशिप्रभाय नमः
16 ,, ब्रंह्मचारिणे नमः
17 ,, काश्यपगोत्रजाय नमः
18 ,, यज्ञदत्तसुताय नमः
19 ,, पवित्रैकसुताय नमः
20 ,, पंचाक्षरजपमानसाय नमः
21 ,, नृत्तेशपादाब्ज भक्ताय नमः
22 ,, शिवधर्ममार्गलोलाय नमः
23 ,, विचारशर्माय नमः
24 ,, नीलकंठभक्ताय नमः
25 ,, भस्मभूषणाय नमः
26 ,, निर्मलाय नमः
27 ,, भुक्तिमुक्तिप्रदाय नमः
28 ,, गोरक्षणक्रियाय नमः
29 ,, शिवार्चनाफलप्रदाय नमः
30 ,, गोपालाय नमः
31 ओं पावनाय नमः
32 ,, वनान्तरे गो संरक्षणाय नमः
33 ,, पुष्टिवर्धनाय नमः
34 ,, शिवक्षीराभिषेककर्त्रे नमः
35 ,, पूर्णाय नमः
36 ,, निर्मलमानसाय नमः
37 ,, देवार्चनप्रियाय नमः
38 ,, महादेवभक्ताय नमः
39 ,, शिवनिर्माल्यभोक्त्रे नमः
40 ,, एकान्तप्रियाय नमः
41 ,, करुणापूर्णाय नमः
42 ,, वेदवेदान्ताय नमः
43 ,, टंकधराय नम
44 ,, कैलासवासिने नमः
45 ,, तेजसे नम
46 ,, शंकरभक्ताय नमः
47 ,, परात्पराय नमः
48 ,, आनन्दाय नमः
49 ,, सूक्ष्मदेहाय नमः
50 ,, पंचेंद्रियनिग्रहाय नमः
51 ,, ज्ञानदाय नमः
52 ,, निष्ठाय नमः
53 ,, निराकाराय नमः
54 ,, सुदेहाय नमः
55 ,, पञ्चाक्षरमानसाय नमः
56 ,, तपस्विने नमः
57 ,, जन्मवर्जिताय नमः
58 ,, चित्कलाय नमः
59 ,, योगाय नमः
60 ,, चतुर्वेदप्रियाय नमः

61 ओं सत्याय नमः
62 ,, व्याघ्रचर्मासनाय नमः
63 ,, अज्ञाननिग्रहाय नमः
64 ,, तपोमयाय नमः
65 ,, द्विनेत्राय नमः
66 ,, सुप्रकाशाय नमः
67 ,, श्यामाय नमः
68 ,, अमृताय नमः
69 ,. फलदात्रे नमः
70 ,, शिवमन्त्रपारायणाय नमः
71 ,, रुद्राक्षभूषिताय नमः
72 ,, शिवप्रसादमानसाय नमः
73 ,, धर्मिष्ठाय नमः
74 ,. सिद्धाय नमः
75 ,, शुद्धाय नमः
76 ,, अभयाय नमः
77 ,, आनन्दपरिताय नमः
78 ,, सत्यभाषिणे नमः
79 ,, भस्मोद्धूलत विग्रहाय नमः
80 ,, सिद्धसेविताय नमः
81 ,, ईशप्रियाय नमः
82 ,, कमनीयाय नमः
83 ,, कलानिधये नमः
84 ,, ध्यानपतये नमः
85 ,. ज्वलन्नेत्राय नमः
86 ,. कांताय नमः
87 ,, शान्तजनप्रियाय नमः
88 ,, प्रभवे नमः
89 ,, शंकरप्रियाय नमः
90 ., बांधवाय नमः
91 ,, योगशास्त्रज्ञाय नमः
92 ,, ज्ञानचक्षुषाय नमः
93 ,, तपोमयाय नमः
94 ,, पराक्रमाय नमः

95 ओं वश्याय नमः
96 ,, ज्ञानमयाय नमः
97 ,, सर्वोपद्रवनाशनाय नमः
98 ,, सर्वसिद्धिप्रदाय नमः
99 ,, दुःखनिवारणाय नमः
100 ,, भस्मांगाय नमः
101 ,, सुरेश्वराय नमः
102 ,, भक्तानुग्रहकारिणे नम
103 .. भक्तरक्षणाय नमः
104 ,, देवदेवाय नम
105 ,, योगसाक्षिणे नमः
106 ,, पंकजप्रियाय नमः
107 ,. जयप्रदाय नमः
108 ,, परशुहस्ताय नमः
109 ,, मृगासनाय नमः
110 ,, महावश्याय नमः
111 ,. महासत्याय नम
112 ,, महाक्षमाय नमः
113 ,, सौम्याय नमः
114 ,, भस्मधृते नम
115 ,, चंडाय नमः
116 ,, अमरेशाय नमः
117 ,. आराध्याय नमः
118 ,, ऋषिगणवंद्याय नमः
119 ,, कमंडलुधराय नमः
120 ,, ज्ञानमूर्तये नम
121 ,, टंकहस्ताय नमः
122 ,, तत्वरूपाय नमः
123 ,, यज्ञमूर्तये नमः
124 ,, रमणीयाय नमः
125 ,, अनामयाय नमः
126 ,, बृंहण्याय नमः
127 ,, रक्षाकर्त्रे नमः
128 ,, नलिनाय नमः

129 ओं नंदनाय नमः
130 ,, नटेशभक्ताय नमः
131 ,, वरदाय नमः
132 ,, सनातनाय नमः
133 ,, अनघाय नमः
134 ,, परमपुरुषाय नमः
135 ,, सत्यव्रताय नमः
136 ,, तन्विने नमः
137 ,, वरप्रदाय नमः
138 ,, जितेंद्रियाय नमः
139 ,, जितक्रोधाय नमः
140 ,, मुनिसंस्तुताय नमः
141 ,, रमणाय नमः
142 ,, कुमाराय नमः
143 ,, देवेशाय नमः
144 ,, जन्मसंसारभेषजाय नमः
145 ,, नरकादिभयध्वंसिने नमः
146 ,, विजयाय नमः
147 ,, महाप्रभवे नमः
148 ,, सुलभाय नमः
149 ,, सर्वाय नमः
150 ,, शरणागतवत्सलाय नमः
151 ,, धीराय नमः
152 ,, सर्वज्ञाय नमः
153 ,, देवप्रियाय नम,
154 ,, पूज्याय नमः
155 ,, अक्षयाय नमः
156 ,, सेव्याय नमः
157 ,, प्राज्ञाय नमः
158 ,, वाङ्मयाय नमः
159 ,, विभवे नमः
160 ,, वाग्मिने नमः
161 ,, सत्यधर्मानुषंगाय नमः
162 ,, आर्तरक्षकाय नमः
163 ओं वंदनीयाय नमः
164 ,, सुप्रसन्नाय नमः
165 ,, सुशीलाय नमः
166 ,, सुवर्चसे नमः
167 ,, उज्ज्वलतेजसे नमः
168 ,, शान्ताय नमः
169 ,, गुणात्मने नमः
170 ,, पञ्चमूर्तिसेविताय नमः
171 ,, ऐश्वर्यप्रदाय नमः
172 ,, अचिन्त्याय नमः
173 ,, सौख्यप्रदाय नमः
174 ,, श्रेयसे नमः
175 ,, शिष्टपालकाय नमः
176 ,, सुन्दराय नमः
177 ,, शुभ्राय नमः
178 ,, सामगानप्रियाय नमः
179 ,, भक्तिगम्याय नमः
180 ,, मङ्गलाय नमः
181 ,, भवबंधमोचनाय नमः
182 ,, सनकादिमुनिस्तुत्याय नमः
183 ,, महेश्वरप्रियाय नमः
184 ,, मङ्गलप्रदाय नमः
185 ,, द्विभुजाय नमः
186 ,, दयाकराय नमः
187 ,, मानदाय नमः
188 ,, सुखप्रदाय नमः
189 ,, शिष्टपूजिताय नमः
190 ,, दुःखभंजनाय नमः
191 ,, यौवनाय नमः
192 ,, सौम्यचित्ताय नमः
193 ,, दृढव्रताय नमः
194 ,, सत्यसंकल्पाय नमः
195 ,, सर्वरोगप्रशमनाय नमः
196 ,, सर्वमृत्युनिवारकाय नमः

197 ओं चारुशीलाय नमः
198 ,, मेधाविने नमः
199 ,, गुणाकराय नमः
200 ,, जयन्ताय नमः
201 ,, वाचस्पते नमः
202 ,, कलिदोषहराय नमः
203 ,, पुण्यवर्धनाय नमः
204 ,, धर्मरूपाय नमः
205 ,, धनाध्यक्षाय नमः
206 ,, धर्मपालनाय नमः
207 ,, आगमज्ञाय नमः
208 ,, वेदान्तविदुषे नमः
209 ,, करुणापूरणाय नमः
210 ,, कल्याणगुणवर्धनाय नमः
211 ,, श्वेतांबराय नमः
212 ,, अक्षमालाधराय नमः
213 ,, आधिव्याधिहराय नमः
214 ,, क्लेशनाशाय नमः
215 ,, चिन्तितार्थप्रदाय नमः
216 ,, पुण्यदायकाय नमः
217 ,, समाधिनिलयाय नमः
218 ,, भाग्यदाय नमः
219 ,, भवपाशविमोचनाय नमः
220 ,, अपवर्गप्रदाय नमः
221 ,, सर्वैश्वर्यप्रसादायकाय नमः
222 ,, वैराग्यदाय नमः
223 ,, अमृतार्णवाय नमः
224 ,, सद्योजाताय नमः
225 ,, आर्याय नमः
226 ,, पुण्यमूर्तये नमः
227 ,, शोकहराय नमः
228 ,, शुभप्रदाय नमः
229 ,, रम्यरूपाय नमः
230 ,, क्रीडिने नमः / किरीटिने नमः

231 ओं कल्याणाय नमः
232 ,, शिवभक्ताय नमः
233 ,, शिवयोगिने नमः
234 ,, सुन्दररूपाय नमः
235 ,, रुद्राक्षभूषिताय नमः
236 ,, उत्सवप्रियाय नमः
237 ,, अघोराय नमः
238 ,, पारिजातप्रियाय नमः
239 . ज्ञानिने नमः
240 ,, विद्यानिधये नमः
241 ,, सुरासुरपूजिताय नमः
242 ,, आनंदनिधये नमः
243 ,, पापनाशाय नमः
244 ,, सर्वेश्वराय नमः
245 ,, शिवपूजाफलप्रदाय नमः
246 ,; शिवमानसीकनिलयाय नमः
247 ,, शिवपूजातुरन्दराय नमः
248 ,, शिवोत्सवप्रियाय नमः
249 ., कल्पकनिधये नमः
250 ,, कुम्भोदरचंडाय नमः
251 ,, शिवस्तोत्राय नमः
252 ,, करुणानिधये नमः
253 ,, महात्मने नमः
254 ,, यशसे नमः
255 ,, यज्ञेशाय नमः
256 ,, पराकाशाय नमः
257 ,, कल्मषघ्ने नमः
258 ,, शंभुभक्ताय नमः
259 ,, सुमित्रचंडाय नमः
260 ,, बृंहरूपाय नमः
261 ,, बृंहविधे नमः
262 ,, विद्याधरसुपूजिताय नमः
263 ,, देवाय नमः
264 ,, सर्वदेवपूजिताय नमः

265	ओं भक्तप्रियाय नमः	283	ओं गोसंरक्षणमानसाय नमः
266	,, गुणपतये नमः	284	,, सुरश्रेष्ठाय नमः
267	,, गुणज्ञाय नमः	285	,, शिवदर्शनफलदाय नमः
268	,, गीतज्ञाय नमः	286	,, शिवचिन्तनाय नमः
269	,, गानप्रियाय नमः	287	,, भक्तानुग्रहमूर्तये नमः
270	,, सुराध्यक्षाय नमः	288	,, भक्तपापक्षयंकराय नमः
271	,, मान्याय नमः	289	,, तेजश्चंडाय नमः
272	,, पुराणपुरुषाय नमः	290	,, रागद्वेषविनाशनाय नमः
273	,, मन्त्रकृते नमः	291	,, कामक्रोधहराय नमः
274	,, सर्वस्मै नमः	292	,, अज्ञानध्वान्तदीपिकाय नमः
275	,, शिवप्रियाय नमः	293	,, अत्भुतचरित्राय नमः
276	,, मङ्गलप्रदाय नमः	294	,, अनुग्रहदाय नमः
277	,, अभीष्टवरदाय नमः	295	,, उदारकीर्तये नमः
278	,, श्री रुद्रजपप्रियाय नमः	296	,, क्रोधनाशनाय नमः
279	,, बालरूपिणे नमः	297	,, ज्ञानविग्रहाय नमः
280	,, पुण्यकीर्तये नमः	298	,, ज्ञानप्रकाशाय नमः
281	,, पुण्यश्रवणाय नमः	299	,, भक्तवांचितदायकाय नमः
282	,, महातेजसे नमः	300	,, भक्तध्वनिःचंडाय नमः

॥ भक्तध्वनिःचंड त्रिशति नामावलिः संपूर्णम् ॥

கும்பாபிஷேகத் தத்துவம் — கும்பாபிஷேகத்தின் 64 சடங்குகள் — யாகசாலைத் திரவியங்களின் பட்டியல்

ஆ + கமம் = என்பது ஆன்மாக்கள் மோக்ஷமடைய மலநாசம் செய்விப்பது என்று பொருள். சிருஷ்டிக் காலத்தில் இறைவன் ஆன்மாக்களுக்குப் புருஷார்த்தம் சித்திக்க வேண்டியதன் பொருட்டு இந்த ஆகமங்களைச் செய்தருளினர் என்று ஞானிகள் கூறுவர்.

பொதுவாக ஆகமங்கள் மூன்று பகுதிகளாக இருக்கின்றன சைவாகமங்கள், வைணவ ஆகமங்கள். சாக்தாகமங்கள் ஆகும். பொதுவான விஷயங்களில் இவைகளுக்குள் வித்யாசம் அதிகம் இல்லை, வைணவத்தில் போற்றப்படும் பாஞ்சராத்ர ஆகமங்கள் 108 என்று ஒரு கணக்கு கிடைத்தாலும் தற்காலம் கிடைக்கக் கூடியவை பத்தோ பதின் மூன்றோதான். இவை ஆதியில் பிரப்மன். சிவன், ஸ்கந்தன், கௌதமன், வசிஷ்டன், நாரதன், கபிலன் என்ற 7 ரிஷிகளால் செய்யப்பட்டனவாகக் கூறப்படுகிறது. இந்த 108 வைணவ ஆகமத்திற்கு மொத்தம் 4 லக்ஷம் சுலோகங்கள் என்று கணக்கிடப்படுகிறது.

இனி, சைவாகமங்கள் 28 ஆகும். இவற்றிற்கு உப ஆகமங்கள் 113. சாக்தாகமங்கள் 64. இவற்றிலும் தற்போது கிடைக்கக் கூடியவை மிகச் சிலவே ஆகும். ஆகமங்களின் பொதுவான அம்சங்களைப் பற்றியும் கும்பாபிஷேகத் தத்துவத்தைப் பற்றியும் இங்கு விரிவாகக் கூறப்படுகிறது.

ஆகமத்தில் ஞானபாதம். யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என்று நான்கு பிரிவுகள் உள்ளன.

ஞானபாதம் :

தத்வத்ரயம் என்று கூறப்பட்ட முப்பொருள் உண்மை விளக்கப் படுகின்றது. சிவாகமங்களில் பதி, பசு, பாசம் என்பனவும். வைணவ ஆகமங்களில் சித்து அசித்து, ஈசுவரன் என்பனவும் சாக்தாகமங்களில் சிவம், சக்தி, ஆன்மா என்பனவும் முப்பொருளாய்க் கொண்டு விவரிக்கப் படுகின்றன. இவற்றை விளக்கு முகமாக சிருஷ்டிக் கிரமம் கூறப்படுகின்றது. நாமரூப ரஹிதமான பிரம்மத்தினின்று இந்த ஜகத் எப்படி விரிந்தது என்று தற்கால விஞ்ஞானிகளும் பிரமிக்கும்படி சிருஷ்டியின் விகாசம் படிப்படியாய் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

சைவ ஆகமங்களின் ஞான பாதத்தை சந்தான குரவர் என்று சிறப்பித்துக் கூறப்படும் மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார்,

மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார், என்ற நால்வரால் 14 நூல்களாக இயற்றப்பட்டு சைவ சித்தாந்த சாத்திரங்களாகப் பெரிதும் போற்றப்பட்டு வருகின்றன. சைவ சித்தாந்தத்திற்கு இப்பதினான்கு நூல்களும் ஆதாரமாகத் திகழ்கின்றன. இந்நால்வரில் மெய்கண்டார் என்பார் சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர். வடமொழியில் தற்போது கிடைக்கக் கூடிய ஆகமங்களில் ஞான பாகத்தைப் பயில முடியாதவர்கள் இந்த 14 நூல்களையும் அவசியம் கற்க வேண்டும்.

யோகபாதம் :

பிராணயாமம் முதலிய சாதனைகளும், ஆறு ஆதாரங்களின் நிலையும் குண்டலியின் லக்ஷணமும், ஆத்ம சுத்தி, அந்தர்யாகம் முதலியவையும் பேசப்படுகின்றன. சைவ, வைணவ, சாக்த ஆகமங்கள் மூன்றில் சாக்தாகமங்களே இந்த யோகப் பகுதியை மிகவிரிவாய்க் கூறுகின்றன. அதற்காகப் பல நூல்களும் உபாஸனா மார்க்கங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கிரியாபாதம் :

கர்ஷணம் முதல் பிரதிஷ்டை வரையிலுள்ள கிரியைகளும் அவற்றிற்கேற்பட்ட மந்திரங்களும் உற்ஸவங்கள், பிராயச் சித்தங்கள், நித்திய, நைமித்திக பூஜா விவரங்கள், சமய விசேஷ, நிர்வாண தீக்ஷா கிரமங்கள், அதிகாரி பேதங்கள், வர்ணாசிரம தர்மங்கள் முதலியன கூறப்படுகின்றன. ஆகவே இந்த கிரியா பாதம் மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. மந்திரங்களின் பாகுபாடு அக்ஷரங்களின் தோற்றம், இவையெல்லாம் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

> " மந்த்ரம் விநாக்ரியா நாஸ்தி
> கர்ஷணாத் யர்ச்சனாந்தகா "

என்று காரணாகமம் கூறுகின்றது. மந்திரங்களை 1 சித்தம், 2. ஸாத்யம், 3 ஸ்வசித்தம், 4. ரிபு என்று நான்கு பெரும் பகுதிகளாகப் பிரித்து சித்தம் என்பவை ஜபித்தாலேயே பலனைத் தரக்கூடிய பஞ்சாக்ஷரம், ஷடாக்ஷரம், பஞ்சதசீ போன்ற மந்திரங்கள் விமர்சிக்கப்படுகின்றன. ஸாத்யம் என்பவை கிரியையோடு சேர்ந்து மந்திரம் ஓதப்பட வேண்டும். இதைத் தான் மேற்கூறிய காரணாகம மேற்கோள் கூறுகின்றது. கர்ஷணம் முதல் பிரதிஷ்டை வரை ஒவ்வொரு படியிலும் மந்திரங்கள் ஜபிக்கப்பட வேண்டும். கர்ஷணம் என்றால் கிருஷி செய்தல். அதாவது ஆலயம் கட்டவேண்டிய இடத்தை உழுதல். இந்தப் பகுதியில் கோயில் நிர்மாணங்களுக்கு நிலத்தின் தன்மை, அளவு, விக்ரகங்களில் பரிமாணம், அமைப்பு முதலியன பேசப்படுகின்றன. சிலர் சங்கிரஹணம் என்ற பகுதியில் பிம்பம் செய்ய வேண்டிய சிலை அல்லது கல்லின் தன்மை, ஆண், பெண், அலி என்று பாகுபாடு செய்து, மணி ஓசை போன்ற நாதமுடைய கல் ஆண் என்றும் அதில் புருஷ பிம்பங்களையும், தாள ஓசை போன்ற நாதமுடைய கல்

பெண் என்றும் அதனுல் ஸ்திரீபிம்பங்களையும் அமைக்க வேண்டு மென்றும், நாதமில்லாத கல் அலி என்றும், அதனுல் பீடங்கள் அமைக்க வேண்டுமென்றும் கூறப்படுகின்றது. சிற்பிக்கு வேண்டிய சில பயிற்சிகளும் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

மேலும் பிம்பங்களின் அமைப்பு, அளவு முதலியன விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. லிங்கம் என்ற பதத்துக்கு குறி, அடையாளம் என்றே பொருள். அளப்பதற்கரிய இறைவனுக்கு அடையாளமாக ஓர். அளவையில் செய்து வைப்பதுவே லிங்கமாகும், பழக்கத்தில் லிங்கம் என்ருல் சிவாலயங்கள் கர்ப்ப கிரஹத்தில் இருக்கும் அருஉருவத்திருமேனியைத்தான் குறிப்பதாகக் கொள்கிருேம். ஆனுல் ஆகமங்களில் லிங்கம் என்பது நிஷ்களம், சகளம், சகள நிஷ்களம் என்று மூன்று விதமாகக் கூறப்பட்டிருக்கிறது. 1. நிஷ்கள லிங்கம் என்பது நாம் பார்க்கும் கர்ப்பக் கிரஹமூர்த்தி, 2, சகல நிஷ்களம் என்பது சிவலிங்க உருவத்தில் கண், மூக்கு, வாய் முதலிய அவயவங்கள் செதுக்கப்பட்ட உருவமாயும், 3. சகள லிங்கம் என்பது நடராஜர் போன்ற உருவத் திருமேனிகளைக் குறிப்பதாயும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு சகள லிங்கங்களாகக் கருதப்படுவன 64 உருவத் திருமேனிகளாக ஆகமங்கள் கூறுகின்றன.

அஷ்டாஷ்ட ஆகமங்கள் இவற்றை அஷ்டாஷ்ட விக்ரஹங்கள் என்றும், அவையாவும் நிஷ்கள லிங்கத்தினின்றும் ஆவிர்பவித்தவை என்றும் கூறப்பட்டிருக்கின்றது அஷ்டாஷ்ட விக்ரஹங்களை சுருக்கி 25. மூர்த்தமாகக் காரணுகமம் கூறுகின்றது. அவை சந்திரசேகரர், கல்யாணசுந்தரர், நடராஜர், விருஷபாருடர், கஜாரி. அர்த்தநாரி, கங்காளர், வீரபத்ரர், சோமாஸ்கந்தர், ஏகபாதமூர்த்தி, தக்ஷிணுமூர்த்தி, முதலான திருவுருவங்களாகும்.

சாதாரணமாக ஆலயங்களில் இவ்விருபத்தைந்தும் இருக்க வேண்டு மாயினும் சோமாஸ்கந்தர், நடராஜர், தக்ஷிணுமூர்த்தி, கங்காளர் அல்லது பிக்ஷாடனர் போன்ற சில மூர்த்தங்களே காணப்படுகின்றன. மதுரை, திருநெல்வேலி போன்ற பெரிய ஆலயங்களில் இவ்விருபத்தைந்தும் சிலாரூபமாகத் தூண்களில் செதுக்கப்பட்டு காக்ஷி அளிக்கின்றன.

மேலும் நிஷ்கள லிங்கத்துக்கு தன் அளவைக் கொண்டு நான்கு விதமாயும் அவை உண்டான காரணத்தைக் கொண்டு 6 விதமாயும் கூறப்பட்டிருக்கின்றது. அளவைப் பொருத்து ஸமகண்டம், வர்த்தமானம் சைவாதிக்யம், திரிராசிகம் என்று நான்கு விதம். அடிப்பாகம், நடுப்பாகம், மேல்பாகம் மூன்றும் இன்னன்ன அளவில் இருப்பதைக் குறித்து இந்தப் பாகுபாடுகள் கூறப்படுகின்றன.

இனி அவை உண்டான காரணத்தைக்கொண்டு தேவிகம், தைவிகம் ஆர்ஷம், மானுஷம், ராக்ஷஸம், பாணம் என்று ஆறுவகை, இவை தவிர செய்யப்படும் பொருளைக் கொண்டு சைலஜம், ரத்னஜம் லோகஜலிங்கம் :

க்ஷணிகலிங்கம் என நான்கு வகை. அதாவது கல்லில் செய்யப்படுவது மாணிக்கம், மரகதம் போன்ற ரத்னங்களால் செய்யப்படுவன. சுவர்ணம், வெள்ளி, தாம்பரம் முதலிய உலோகங்களால் செய்யப்படுவன வென்றும், க்ஷணிகலிங்கம் என்பது மணல் அரிசி, அன்னம், ஆற்றுமண், கோமயம், வெண்ணெய், ருத்ராக்ஷம், விபூதி, சந்தனம், கூர்ச்சம் (தர்ப்பை) புஷ்பமாலை வெல்லம், மாவு என்பவைகளால் செய்யப்பட்டு பூஜையின் முடிவில் உத்வாஸனம் (அழித்துவிடுதல்) செய்யப்படுவதால் க்ஷணிகம் (க்ஷணம் – சிறிது நேரம்) என்று கூறப்படுகின்றன. மேலும் இவை ஒவ்வொன்றின் பூஜையாலும் ஏற்படும் பலன்களும் வெவ்வேறுகக் கூறப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, ரத்னஜ லிங்கங்களில் மரகத லிங்கம் புஷ்டியையும், ஸ்படிக லிங்கம் சந்தானத்தையும் தருவதாயும் லோஹஜங்களில் சொர்ண லிங்கம் மோக்ஷத்தைக் கொடுப்பதாயும், தாம்பர லிங்கம் சந்தானத்தைக் கொடுப்பதாயும் கூறப்படுகின்றது. க்ஷணிகலிங்கங்களில் சைகிதம் அதாவது மணலில் செய்யப்படுவது மோக்ஷத்தையும் கோமயத்தால் செய்யப்படுவது ரோக நாசத்தையும், கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்வாறே ஒவ்வொரு லிங்க வழிபாட்டுக்கும் பலன்கள் தரப்படுகின்றன.

இனி விக்ரஹங்களின் அமைப்பைப் பற்றி தியான சுலோகங்கள் விளக்குகின்றன. அதே சுலோகங்களில் ஒவ்வொரு விக்ரஹமும் அமைக்கப்பட வேண்டிய விதங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக தக்ஷிணாமூர்த்தி உருவம் எப்படி இருக்க வேண்டும் என்பதை ஒரு தியான சுலோகம் காட்டுகின்றது. நான்கு கைகள் சின்முத்திரை, உடுக்கை அக்னி, ஏடு இவற்றை உடையனவாயும், வலது காலை முயலகன் என்ற பூதத்தின் மீது ஊன்றி, இடது காலை வலது கால் துடையில் ஏற்றி உட்கார்ந்திருக்கும். பின்புறம் ஆலவிருக்ஷம். பக்கத்தில் சனகாதி முனிவர் நால்வர். இவ்வாறு அமைக்கப்பட வேண்டும். பூஜையின் போது இந்த தியான ஸ்லோகத்தில் கூறப்பட்ட வடிவத்தைத் தியானம் செய்து மனதில் பதிய வைத்து பூஜை செய்ய வேண்டும். இதில் ஒரு ரகஸியம் உள்ளது. ஒவ்வொரு தேவதைக்கும் மந்திரங்கள் கூறப்படுகின்றன. இந்த மந்திரங்கள் பெரும்பாலும் வேத மந்திரங்கள். அவற்றை சந்தஸ் தவறுமல் உச்சரிப்பதால் அந்தந்த தேவதையின் உருவங்களே சூக்ஷ்ம சலனத்தால் ஆவிர்ப்பவித்து சாதகனின் மந்திர திருஷ்டியில் தோன்றுமாம்.

இந்த ரகஸியத்தை மேனுட்டு விஞ்ஞானிகள் பிரத்தியக்ஷமாய் செய்து பார்த்தார்கள் என்றும் சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க விஞ்ஞானிகள் ஓசையின் சூக்ஷ்ம சலனங்களை ஆராய்ந்து கண்டுபிடித்தார்கள் என்றும் எழுதி இருக்கிறார்கள். பைரவ மந்திரத்தை சந்தஸோடு பாடச் செய்து அதன் சலனத்தால் ஓர் மனிதனும் நாயும் தென்பட்டதாக எழுதியுள்ளார்கள். கிரியா பாதத்தில் மந்திர சாஸ்திரம் விரிவாகக் கூறப்

பட்டிருங்கின்றது. மந்திரம் என்பது கேவலம் மூட நம்பிக்கையல்ல, அவற்ருல் சூக்ஷ்ம சலனங்களை உண்டுபண்ண இயலும் என்பதை மேனுட்டினரும் ஒப்புக் கொண்டிருக்கிருர்கள். மந்திர சாஸ்திரத்தைப் பற்றி சைவ, வைணவ, சாக்த ஆகமங்களுக்குள் " சாக்தாகமங்களே மந்திரக்களைப்பற்றி மிக விரிவாயும் தெளிவாயும் கூறியுள்ளன "

இனி லிங்கங்கள் அல்லது விக்ரஹங்கள் செய்யப்பட வேண்டிய நியதிகள் கூறப்படுகின்றன. சிலாசங்கிரஹணம் என்பது விக்ரஹம் செய்வதற்கு வேண்டிய கல்லைப் பொறுக்கி எடுப்பது. நியாசம் என்பது கர்ப்ப கிரஹத்தில் குறிப்பிட்ட ஹோரை அல்லது காலத்தில் உலோஹத்திஞல் 25 அறைகள் உள்ள பெட்டி செய்து அதில் ரத்னங்கள், தான்யங்கள் முதலியன முறைப்படி நிறைத்து கர்ப்பகிரஹத்தில் குறிப்பிட்ட இடத்தில் ஸ்தாபனம் செய்ய வேண்டும். இதோடு அந்தந்த தேவதைக்கு ஏற்பட்ட சக்கர ஸ்தாபனமும் செய்ய வேண்டும். இது ஆலயத்துக்கு ஜீவஸ்தானம் போன்றது. இதிலிருந்து அங்கு பிரதிஷ்டை செய்யப்படும் தேவதையின் சக்தி ஆவிர்பவிக்கின்றது.

இனி ஆலய நிர்மாணத்தைப் பற்றிய விவரங்களும் கிரியாபாதத்திலேயே கூறப்பட்டிருக்கின்றன. ஆகமங்களில் கிரியாபாதமே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி. இதனைக் கசடறக் கற்றவரே ஆசாரியர்களாக இருக்கத் தகுதியுடையவர்.

' பிரதிஷ்டை என்பது 4 விதம் " 1. ஆவர்த்தம் என்பது, ஆலயம் புதிதாகக் கட்டி முதன்முதல் செய்யப்படும் பிரதிஷ்டை 2. அநாவர்த்தம் - என்பது வெள்ளம், மழை போன்றவற்ருல் அழிக்கப்பட்ட ஆலயங்களைப் புதுப்பித்தலாகும், 3 புனராவர்த்தனம் என்பது இருக்கும் ஆலயங்களில் காலத்தால் சிதைந்துபோன பாகங்களை ஜீர்ணோத்தாரணம் செய்வது (Repair) 4 அந்தரிதம் என்பது திருடர்கள், மிலேச்சர்கள் இவர்களால் தீட்டாக்கப்பட்டதற்குச் செய்யப்படும் சாந்தி. சம்புரோக்ஷணத்துக்கு அந்தரிதம் என்று பெயர்.

பிரதிஷ்டைக்கு உரிய கிரியைகள் 64 என்று சில ஆகமங்களும் 55 என்று சில ஆகமங்களும் கூறுகின்றன இவற்றில் அதிக முக்கியத்வம் வாய்ந்த சிலவற்றைக் குறிப்போம்,

1. அனுக்ஞை :

செய்யப்படும் கும்பாபிஷேகத்துக்கு ஆசார்யனுக இருந்து நடத்தத் தக்கவரை பெரியோர்கள் தேர்ந்தெடுத்து பின்பு இறைவனிடமும் இறைவியிடமும் அனுமதி பெறுவது.

2. விக்னேச்வரபூஜை :

எடுத்த காரியம் விக்னமின்றி முடியும் பொருட்டு விநாயகப் பெருமானை வழிபடுதல்.

3. வாஸ்துசாந்தி :

இறவாத வரம் வாங்கினவரான வாஸ்துபுருஷன் என்ற அசுரனின் உபாதி இல்லாமலிருப்பதற்காக அவனைக் காவல் புரியும் 53 தேவர்களையும் பூஜை, பலி முதலியவற்றால் திருப்தி செய்து இடையூற்றை நீக்குதல். இதில் உண்மைக் கருத்து யாதெனில் ஆன்மாக்கள் இருக்கும் தோறும் அவர்களைத் தொடர்ந்திருக்கும் அரிஷ்டவர்க்கங்களால் ஆச்சார்யனுக்கும் இன்னும் கும்பாபிஷேக வைபவங்களில் கலந்து கொள்பவர்க்கும் இடையூறு உண்டாகாதபடி தேவதைகளை பிரார்த்தித்தலாம். அதாவது எடுத்த காரியம் முடியும் வரை அதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் காம குரோதாதிகள் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதுதான் இதன் உட்கருத்தாகும்.

4. மிருத்ஸங்கிரஹணம் :

அங்குரார்ப்பணம் என்னும் கிரியை செய்வதற்கு வேண்டிய மண்ணை வெட்டி எடுக்குமுன் மண்ணிற்கு அதிபதியான பூமியையும், பூமியைக் காவல் செய்யும் திக் பாலகர்களான இந்திரன் முதலிய எண்மரையும் தலைவரான பிரம்மனையும் பிரார்த்தித்து அவர்கள் அனுமதி பெற்று வெட்டி எடுத்து, வெட்டிய பள்ளத்தில் ஏழுகடலை வரவழைத்து அபிஷேகம் செய்தல், ஏழுகடல் என்பவை உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் என்பன. இங்கு உவர் நீருக்குப் பதிலாக இளநீரையும் மற்றவையும் கொண்டு அபிஷேகம் செய்து வேண்டுதல்.

5. அங்குரார்ப்பணம் :

செய்யப்படும் கிரியையின் நன்மையினை அறிவதற்காக, மந்திர பூர்வமான கிரியையுடன் பாலிகைகளில் விதைகளைத் தெளித்து வளர விடல், பசுமையாக முளைத்தால் கிரியை சரியான முறையில் அமைந்தது என்று கொள்ளல் வேண்டும். மாறுதலாக இருந்தால் கிரியாதோஷம் இருப்பதாக உணர்ந்து அதற்கு வேண்டிய பிராயச்சித்தம் செய்ய வேண்டும். பாலிகையில்லாத கிரியை பயனற்றது என்று ஆகமங்கள் வலியுறுத்துகின்றன.

6. ரக்ஷாபந்தனம் :

இது அதவர்யூ அல்லது ஆச்சாரியனுக்குச் செய்யப்படும் ரக்ஷை அல்லது காப்பு. இதனால் கிரியை முடிவதற்குள் தெய்விகமாய் ஆசௌசம் ஏற்பட்டால் அதனால் கிரியைக்குத் தடங்கல் ஏற்படாத வகையில்

ஆச்சாரியனைக் காக்கும். அதாவது ரக்ஷா பந்தன விசர்ஜனம் செய்யும் வரை அதாவது காப்பை அவிழ்க்கும் வரை ஆச்சாரியனுக்கு ஆசௌச தோஷம் அணுகாது என்பது கருத்து.

7. கும்ப ஸ்தாபனம் :

இறைவனை ஆவாஹனம் செய்யும் பொருட்டுக் குடத்தை மந்திர பூர்வமாக அலங்கரித்து, அதை வித்யா தேகமாக பாவிக்க வேண்டும். இந்த வித்யா தேகத்துக்கு வஸ்திரம் தோலாகவும், மேலே பூசப்பட்ட மண் ரத்தமாகவும், செப்பொருள் மாம்சமாயும், ஜலம் மேதை என்ற தாதுவாகவும், சுற்றப்பட்ட நூல் நரம்பாகவும், குடத்தில் இடப் பட்ட ரத்னம் சுக்ல தாதுவாயும், மந்திரம் ஜீவனுகவும் அடியில் போடப்பட்ட தானியம் ஆசனமாகவும் பாவிக்க வேண்டும்.

8. கலாகர்ஷணம் :

குறிப்பிட்ட தேவதையின் விக்ரஹத்தை அலங்காரம் செய்து வித்யா தேகமாகிற குடத்தில் குரு உபதேச முறைப்படி ஆகர்ஷணம் செய்து குறிப்பிட்ட காலம் வரை அக்குடத்தில் இருக்கச் செய்தல்.

9. யாகசாலை :

ஆலயத்தினுடைய வடமேற்கு மூலை தவிர வேறு திக்குகளில் ஏதாவதொரு இடத்தில் யாகசாலை அமைக்க வேண்டும். யாகசாலை மூன்று விதம், அதாவன 9 குண்ட விதானம், ஐந்து குண்ட விதானம், ஏக குண்ட விதானம் என்பன. அவை காலதேச வர்த்தமானங்களை அனுசரித்து 3 முதல் 13 முழங்களாலோ அல்லது 20 - 32 முழங்களாலோ அமைக்கலாம். யாகசாலை உள் அளவை 81 பாகமாகச் செய்து, மத்தியில் உள்ளது பிரம்மபதம் என்றும், அதைச் சுற்றிலும் உள்ள 16 பதம் தைவிகபதம் என்றும், அதைச் சுற்றி 24 பதம் மானுஷ பதம் என்றும், அதைச் சுற்றி 32 பதம் பைசாசபதம் என்றும் கூறப்படுவன.

மேலே விவரிக்கப்பட்ட கலசத்தை சகலவித உபசாரத்துடன் கோயிலை பிரதிக்ஷணமாகக் கொண்டுவந்து, யாகசாலையில் பிரம்மபதம் என்ற மத்தி ஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யவேண்டும். அதோடு வித்யேச்வரர்களை வைக்க வேண்டும். (இவர்கள் 14 பேர்கள் அதாவது 4 வேதம், 6 சாஸ்திரம், தர்மம், மீமாம்ஸை, நையாயிகம், புராணங்கள், ஆக 14க்கும் அதிதேவதைகளாக உள்ளவர்கள், தைவீக பதத்தில் அஷ்டமங்கலங்கள் என்று கூறப்பட்ட கண்ணுடி, பூரணகும்பம் விருஷபம், சாமரம், ஸ்ரீவத்ஸன், ஸ்வஸ்திகம், பங்கம், தீபம், என்பன வற்றை அமைக்க வேண்டும். மானுஷ பதத்தில் 9 அல்லது 5 அல்லது ஒன்று என்ற குண்டங்கள் வைக்க வேண்டும். [யா-யக்ஞும், க- செல்லு தல், சா-சுகம், லா-லயம்].

நவகுண்ட விவரம் :

கிழக்கு	— ஆஹவனியாக்னி	— சதுரகுண்டம்
தென் கிழக்கு	— விருத்தாக்னி	— யோனிகுண்டம்
தெற்கு	— தக்ஷிணாக்னி	— அர்த்தசந்திரகுண்டம்
தென் மேற்கு	— யவ்வனாக்னி	— திரிகோணகுண்டம்
மேற்கு	— கார்ஹபத்யாக்னி	— விருத்தகுண்டம்
வடமேற்கு	— பாலாக்னி	— அறுகோண குண்டம்
வடக்கு	— கேவலாக்னி	— பத்மகுண்டம்
வடகிழக்கு	— சாமான்யாக்னி	— எண்கோணம்
ஈசான்யம்	— சிவாக்னி	— விருத்தகுண்டம்

பஞ்சகுண்ட விவரம் :

கிழக்கு	— ஆஹவனியாக்னி	— சதுரகுண்டம்
தெற்கு	— தக்ஷிணாக்னி	— அர்த்தசந்திரகுண்டம்
மேற்கு	— கார்ஹபத்யாக்னி	— விருத்தகுண்டம்
வடக்கு	— கேவலாக்னி	— பத்மகுண்டம்
வடகிழக்கு	— சிவாக்னி	— விருத்தம் (அ) சதுரகுண்டம்

ஏககுண்டம் :

சிவாக்னி விருத்தம் அல்லது சதுரகுண்டம், நவகுண்ட யாக சாலையில் இருக்கும் குண்டங்களில் சிவாக்னி குண்டம் தவிர ஏனைய எட்டுக் குண்டங்களுக்கும் இறைவனின் அஷ்டமூர்த்தங்கள் சரீரமாகும். அவை கிழக்கு முதல் வடகிழக்கு வரை முறையே பிருதிவி, அக்னி, இயமானன், சூர்யன், ஜலம், வாயு சந்திரன், ஆகாசம் என்பன. மேலும் இந்த எட்டுக்குண்டங்களுக்கு அதிதேவதைகளாக மேல்சண்ட வரிசையில் சர்வன், பசுபதி, விக்ரன், ருத்ரன், பவன், மஹேச்வரன், மகாதேவன், பீமன் என்ற எண்மர்.

இவ்வாறு எட்டுக் குண்டங்களில் எட்டு சரிரங்களும் எட்டு அதிதேவதைகளையும் தனித்தனியே இரண்டு காலம் முதல் சக்திக்கு ஏற்ப ஆறுகாலம் வரை ஹோமம், பலி, தியானம், பூஜை முதலியவற்றல் பிரசன்னமுள்ளதாகச் செய்து அவற்றை கலசத்திலிருக்கும் இறைவனோடு சேர்த்துப் பின்பு கலசத்திற்கும் இறைவனை விக்ரஹத்தில் சேர்த்து சிவகுண்டமாகிற பிரதான குண்டத்தில் செய்யப்பட்ட ஹோமம், பலி, பூஜை முதலியவற்றைச் செய்வதால் இறைவன் ஆவிர்ப்பவம் ஆவான் என்பது தாற்பரியம்.

10. பிம்பசுத்தி :

பிம்பசுத்தி என்பது விக்ரஹத்துக்கு ஏற்பட்ட சிற்பிதோஷ நிவாரணத்துக்காக (ஜலவாசம், தான்யவாசம் முதலானதும் செய்தல் நலம்) ஐந்து விதமான பட்டை, ஐந்து விதமான தளிர், எட்டு விதமான மண் இவைகளைக்கொண்டு ஸ்நபனம் வைத்து, ஜபம் செய்து அபிஷேகம் செய்ய வேண்டும்.

11. ஸ்பர்சாஹுதி :

யாகசாலையில் செய்யப்பட்ட ஹோமங்களையும் தத்துவங்களையும், தத்துவ அதிபர்களையும் நாடீசந்தானம் என்று கூறப்பட்ட தங்கக்கம்பி வெள்ளிக் கம்பி அல்லது தர்ப்பைக் கயிறு கொண்டு யாகசாலையின் கலசத்துக்கும் மூல விக்ரஹத்துக்கும் இணைப்பு ஏற்படுத்தி அதில் சேர்த்தல்

12. யாகசாலையின் மற்ற விபரம் :

யாகசாலைக்கு நான்கு புறம் நான்கு வாசற்படி வைத்து, மேலே மூன்று திரிசூலம் வைக்க வேண்டும். யாகசாலையின் பைசாசபதம் என்ற பாகத்தில் தசாயுதம், கொடி, பதாகம், தோரணம், தர்ப்பை, மாலை முதலியவற்றால் அலங்காரம் செய்யவேண்டும். தசாயுதமாவது - வஜ்ராயுதம், சத்தியாயுதம், தண்டாயுதம், கட்காயுதம், பாசாயுதம், த்வஜாயுதம் கதாயுதம், திரிசூலாயுதம், பத்மாயுதம், சக்ராயுதம் என்பன.

யாகசாலை திரவியங்கள் :

இவைகளைப்பற்றி விரிவாக பின்னர் கொடுக்கப்பட்டுள்ளது.

13. மெய்ஞானத்தில் விஞ்ஞானம் :

ஹோமத்திலிருந்து வருகின்ற புகையும் * எடுக்கப்பட்ட சாம்பலும் தோல் வியாதிகளை நீக்குகின்றன. உடலிலுள்ள கெட்ட நீரினை அகற்றுகின்றன. எலுமிச்சம்பழச்செடி, நாரத்தம்பழச்செடி, முல்லைச்செடி முதலான செடிகளுக்கு ஹோமச் சாம்பல் எருவாக இடப்படுதலினால் அவை பழங்களையும் பூக்களையும் அதிக அளவில் கொடுக்கின்றன என்பது தாவரவியில் விஞ்ஞானத்தில் கண்ட உண்மையாகும்.

இறைவனுக்குச் செய்யப்படும் யாகங்களில் 91 விதமான மருந்துப் பொருள்களைத் தனித்தனியே கொடுத்தும் அத்துடன் பசு நெய்யில்

---

* "பிரான்ஸ் நாட்டில் சில பள்ளிக் குழந்தைகளுக்கு ஏற்பட்ட காக்காய் வலிப்பு" நோய் வேள்விப் புகையின் மூலமாக நிவர்த்தியாயிற்று. என்று 1981 - ஆம் ஆண்டுச் செய்தி கூறுகிறது. உதராணமாக நாயுருவி என்ற செடியின் புகையானது சருமத்தில் உள்ள கெட்ட நீரினை அகற்றுகிறது. தோல் வியாதிகளைப் போக்குகிறது. ஆகவே இதனை யாகசாலைகளில் முக்கிய சமித்தாக கையாளுகின்றனர்.

ஆஹுதியும் கொடுப்பதனால் இறைவன் ஆனந்தம் கொண்டு அருள் என்ற பாலைக் கொடுக்கின்றான் என்பது சமயக்கருத்து.

மேற்கூறிய மருந்துப் பொருள்களைத் தனித்தனியாக இடித்து, வஸ்திரகாயம் செய்து நெய்விட்டுக் காய்ச்சி லேகியமாக்கித் தாயானவள் உண்டு தன் குழந்தைக்குப் பாலினைக் கொடுத்து உறுதியான குழந்தையை உருவாக்குகின்றாள். இந்நுட்பத்தை மேற்கூறியவாறு தெய்வகாரியமாக நம்மவர்கள் திருக்கோயிலில் நடத்தி வருவது கண்கூடாகும்.

14. அஷ்டபந்தனப் பொருள்கள் :

1. கொம்பரக்கு
2. சுக்கான்தூள்
3. குங்குலியம்
4. கற்காவி
5. செம்பஞ்சு
6. சாதிலிங்கம்
7. தேன்மெழுகு
8. எருமை வெண்ணெய்

அஷ்டபந்தன முறைகளை மேலும் அறிய ஆதீனவெளியீடு எண் 372ல் காண்க.

15. கும்பாபிஷேகம் :

யாகசாலையில் பூஜிக்கப்பட்ட கலசத்தை எழுந்தருளச் செய்து விக்ரஹத்தின் முன்வைத்து, குரு உபதேச முறையில் குடத்தில் இருக்கும் இறைவனை பிம்பத்தில் சேர்த்துப் பின் அக்கலச நீரை அபிஷேகம் செய்ய வேண்டும். இப்போது அந்த பிம்பம் குறிப்பிட்ட இறைவனின் சக்தியைத் தாங்கும் ஓர் நிலையாகி விடுகின்றது. அதற்கு கல், உலோஹம் என்றுபெயர் நீங்கி இறைவனின் ரூபமாகி விடுகின்றது. அந்த பிம்பத்தில் இறைவன் ஆவிர்ப்பவித்து நித்ய வாசம் செய்கின்றான். விமானம், கோபுரம் முதலிய வற்றில் உள்ள கலசங்களுக்கும், மூலத்தான விக்ரஹத்திற்கும் அபிஷேகித்தல் முறையாகும்.

16. அஷ்டபந்தனம் செய்முறை :

இது மூலஸ்தான விக்ரஹங்களுக்குச் செய்யப்படுவது. அதாவது பிம்பத்தையும் அதற்கு ஏற்பட்ட பீடத்தையும் ஒட்டுதல் அல்லதுசேர்த்தல். இது ஒரு மருந்து 8 சாமன்கள் சேர்த்துச் செய்யப்பட்டு பிம்பத்தையும் பீடத்தையும் பந்தனம் பண்ணுவதால் அதற்கு அஷ்டபந்தனம் என்று பெயராயிற்று.

17. மஹாபிஷேகம் :

இதற்கு மஹா ஹவிர்நிவேதனம் என்று சில ஆகமங்கள் பெயர் கொடுத்துள்ளன. கும்பாபிஷேகம் ஆன பின்ப இறைவன் ஆவிர்ப்

பவமான விக்ரஹத்துக்கு பூரணமான அபிஷேக திரவியங்கள் கொண்டு செய்தல் வேண்டும். அதுபோல பூரணமாக நிவேதனமும் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்தால் இதுகாறும் கும்பாபிஷேகத்தில் ஈடுபட்ட சகல தேவர்களும் பசுக்களும் திருப்தி அடைகின்றார்கள் என்பது கருத்தாகும்.

18. மண்டலாபிஷேகம் : (45 நாட்கள் விசேஷபூசை)

கும்பாபிஷேகம், மஹாபிஷேகமான பின்பு 3 பக்ஷம் இறைவனை விசேஷமாக பூஜித்து முடிவில் ரக்ஷபந்தன விசர்ஜனம் செய்து பூர்த்தி செய்தல் வேண்டும்.

திருக்கோயில்கள் கும்பாபிஷேகம் பன்னிரண்டு வருடத்திற்கு ஒரு முறை செய்தல் நலம் என்பர் பெரியோர்.

அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகத்தில் 64 சடங்குகளின் பெயர்கள்

1. ஆசாரிய வரணம்
2. தேவதாநுக்ஞா
3. சபாநுக்ஞா
4. விநாயகர் வழிபாடு
5. தனபூஜை
6. கோள்கள் வழிபாடு
7. நவகவ்யம்
8. ஆசாரியர் 10 வகை ஸ்நானம்
9. விசேஷ சந்தி
10. யாத்திராதானம்-கிருகப்பிரீதி
11. ரக்ஷோக்நம்
12. பிரவேசபலி
13. கிராமசாந்தி
14. ரத்நநியாஸம்
15. நயனோமீலனம்
16. ப்ரதிமாசுத்தி
17. ப்ரதிமாசோதனம்
18. ஜலாதிவாஸம்
19. கரிக்கோலம்
20. சயனம்
21. பீடாஸ்தாபனம்
22. திரிபந்தனம்
23. பிம்பஸ்தாபனம்
24. தங்கம், வெள்ளி, மருந்து சாத்துதல்
25. யாகசாலை அமைப்பு
26. ஸ்தபதி ஸம்பாவனை
27. வாஸ்து சாந்தி
28. பிம்பசுத்தி
29. மிருத்சங்கிரஹணம்
30. யாகசாலை சம்ஸ்காரம்
31. அங்குரார்ப்பணம்
32. ரக்ஷாபந்தனம்
33. யாகசாலை தான்ய ஸ்தாபனம்
34. ஆசாரியார் வஸ்த்ர தாரணம்
35. அக்னி சங்கிரகணம்
36. பரஸங்நாபிஷேகம்
37. கும்பாலங்காரம்
38. மூர்த்திதிசா ஹோமம்
39. கடத்துக்கு பூஜை ஜபம்
40. நாடீசந்தானம்
41. நியாஸாதிகள் செய்தல்
42. பிம்பத்திலிருந்து கும்பத்தில் சேர்த்தல்
43. யாத்திராஹோமம்
44. யாத்திரா தானம்
45. யாகசாலாப்ரவேசம்
46. யாகசாலை பூஜை
47. அக்நிகார்யம்
48. சாந்தி ஹோமம்
49. சாந்தி கும்பம்
50. திரிகண்டகல்பனை
51. தர்பைகயிறு செய்தல்
52. அக்நியில் உள்ள மூர்த்தியை கும்பத்தில் சேர்த்தல்
53. ஆலய பிரவேச யாத்திரா ஹோமம்
54. யாத்திரா தானம்
55. மூலாலயப் பிரவேசம்
56. பிம்ப சம்யோஜனம்
57. கும்பாபிஷேகம்
58. ஆசாரியார் (மங்கள ஸ்நானம்)
59. மகாபிஷேகம்
60. உத்ஸவம்
61. ஆசார்ய சம்பாவனை
62. தசதாநுதிகள்
63. ஆசாரிய உத்ஸவம்
64. மண்டலாபிஷேகம்

யாகசாலை - திரவியங்களின் பட்டியல் :

பூ வகை :

அன்ருசி பூ, ஆவாரம்பூ, காட்டுப்பூ, குங்குமப்பூ, சிறுநாகப்பூ, காட்டத்திப்பூ, சண்பகப்பூ, தாமரைப்பூ.

மொட்டு வகை :

சண்பகமொட்டு, தக்கோலமொட்டு, மகிழமொட்டு, ரோஜா மொட்டு, மராட்டி மொட்டு.

தாமரை வகை :

ஆகாயத்தாமரை, கம்பித்தாமரை, கல்தாமரை, வெண் தாமரை, செந்தாமரை.

கொடி வகை :

செந்தாமரைக் கொடி, செவ்வல்லிக்கொடி, சீந்தல் கொடி, நீர் வஞ்சிக் கொடி வெப்பாலைக் கொடி.

ஆதாரம் :- ஷ திரவியங்களின் பட்டியல் " யாகசாலைக் கருவூலம் " எனும் நூலிலிருந்து திரட்டப்பட்டது.

வேர்வகை :

நன்னாரிவேர், நாயுருவிவேர், விளாமிச்சைவேர், வெட்டிவேர், அறுகு, சிவதவேர், கீழாநெல்லிவேர், குருவிவேர், மாகாளிவேர், ஆடுதொடாவேர்.

கிழங்கு வகை :

கோரைக்கிழங்கு, தாமரைக்கிழங்கு, நீலோற்பலக் கிழங்கு, பத்திராட்சக்கிழங்கு, தண்ணீர் வட்டான் கிழங்கு, டாமஸ் கிழங்கு, பூலான் கிழங்கு, சிகப்பு பூமி சக்கரக்கிழங்கு.

கட்டைவகை :

மாங்கட்டை, பலாக்கட்டை, வன்னிக்கட்டை, கருங்காலி, வில்வம், வேங்கை, மூங்கில், சந்தனம், செம்மரம், தேவதாரு, மருதை

குச்சிவகை : (சமித்து)

அத்திக்குச்சி, அரசன்குச்சி, ஆலன்குச்சி, இத்திக்குச்சி, வெள் எருக்கன் குச்சி, முருக்கன்குச்சி, மோரடிக்குச்சி.

காய்வகை :

அக்ரோட்காய், ஜாதிக்காய், மாசிக்காய், கடுக்காய், கஜ்ஜூர்க்காய், பிஞ்சிக்காய். தான்றிக்காய், வலம்புரிக்காய், இடம்புரிக்காய், கல்யாண பூசணிக்காய், வில்வக்காய், தெள்ளுக்காய், மக்கன்காய்.

பருப்பு வகை :

பாதாம்பருப்பு, பிஸ்தாப்பருப்பு, சாரைப்பருப்பு, முந்திரிப்பருப்பு.

மிளகுவகை :

குருமிளகு (டங்கர்), வால்மிளகு, வெள்ளைமிளகு.

பொடிவகை :

அகத்திக்கீரைப்பொடி அரிசிமாப்பொடி (பச்சரிசி), மஞ்சள் பொடி, வாசனைப்பொடி, திரவியப்பொடி, சுக்கான்கல்பொடி.

அரிசிவகை :

வேப்பாலை அரிசி, மூங்கில் அரிசி, பச்சரிசி, அரிசித்திப்பிலி.

குங்கிலிய வகை :

வெண் குங்குலியம், கருங்குங்குலியம்.

நூல்வகை :

திரிநூல், முப்புரிநூல். பூணுநூல், பஞ்சவர்ணப்பட்டு நூல், பட்டுக்கயிறு, தாலிக்கயிறு. தருபைக் கயிறு.

பட்டை வகைகள் :

அத்திப்பட்டை, அரசம்பட்டை. ஆலம்பட்டை, மாம்பட்டை, பலாப்பட்டை ஷை (பஞ்சபட்டை), லவங்கப்பட்டை, கிளியூர்ப் பட்டை, மருதமரப்பட்டை, நாகப்பட்டை, பிச்சிப்பட்டை, எட்டிப் பட்டை, அசோக பட்டை. லோத்திரா பட்டை, சித்திரமூலம் பட்டை, புளியம்பட்டை.

கொழுந்துவகை :

அத்திக் கொழுந்து, அரசங்கொழுந்து, ஆலங் கொழுந்து, மாங்கொழுந்து, பலாக் கொழுந்து.

பல்வகை ஓம திரவியங்கள் :

ஓமம், நல்லகிச்சலி, பச்சைக்கிச்சலி, சித்தரத்தை, பேரரத்தை, பரங்கிச் சக்கை, புனுகுச்சட்டம், ருத்திராட்சம், பத்திராட்சம், ஆனைத்திப்பிலி, கடல்பாசி, மட்டிப் பால், சாம்பிராணிப்பால், குரோசாணி ஓமம், வெள்ளைச் சித்திர மூலம், குண்டுமணி (சா தா) நெல்மணி மலை வேம்பு, கொல்லி மலை வேம்பு, கசகசா, கடல்நுரை, கந்தகம், கருநொச்சி, மாசிபத்திரி, ஜாதிப்பத்திரி, கௌரிபாஷாணம், கலப்பு ஓம திரவியம், வீரம், பூரம், நிலப்பனை நெல்லி, முள்ளி, நாகதந்தா, உலர்ந்தலிங்கம், சுக்கு, லவங்கம், சிறுசின்னி, நேத்திப் பூண்டு, நெற்பொரி, அவல், உமி, புல், கஸ்தூரி மஞ்சள்.

வெண்கடுகு, கல்மதம், கரித்தூள், மாவுக்கல், சதகுப்பி, சடை விருச்சம், செண்பகவிதை, தாமரைவிதை, ஜெர்மன்பச்சிலை, ஆகாய கருடன், அதிமதுரம், குண்டு பிரண்டை, கொட்டைப்பாக்கு, வீரசிங்கி, படிகாரம், மனோசிலை, நன்னாரி, நாயுருவி, வாய்விளங்கம், செந்தூரம், பாதரஸம், கற்கண்டு, கொண்டசீனி, திராட்சை, பேரீச்சம்பழம், பசிபோக்கும் மூலிகை, பெரியா நங்கை, சிறியாநங்கை, காதோலை கருவமணி, கோஷ்டம், நத்தசொறி, தாக்கோலம், ருத்ரசடை, மைகி சாட்சி, கொட்டிசாந்து கோமுத்திர சிலாஜ் சித்திரமூலம், மைதாலக்டி, நாகணம், கடல் அலஞ்சி, பலகரை, குலேபணஷா, ஜூபா மாகாளி, நீலோபர், அசாரோம், நீலகடம்பை, ஜப்ஜா, பாலங்கு, இளம்பிசின், முருகபிசின், ஸபேர்முஸ்லி, சியாசிஸ்லி, சாலாமுல்லி, நீர்முல்லி, காட்டதிப்பு, சிவப்பிளை, முன்கத்திரி, ஓர்இலை, மூஇலை, பையானை, நெருஞ்சிமுள், மேத்தா, மகாமேத்தா, அகோலி, சீரககோலி, ருத்தி, விருத்தி.

பந்தன வகை : (திரிபந்தனம்)

சருக்கரை, சுக்கான்கல்பொடி, வாழைப்பழம்.

அஷ்டபந்தனம் : (மருந்தும் உபகரணங்களும்)

சாதிலிங்கம், எருமைவெண்ணெய், செம்பஞ்சு, நற்காவி, தேன் மெழுகு, கொம்பரக்கு, குங்குலியம், சுக்கான்கல் வெண்ணெய், உரல், உலக்கை.

தைலவகை :

சங்கனுதித்தைலம், சாம்பிராணித்தைலம்.

வாசனை திரவியவகை :

சந்தனம், பன்னீர், ஜவ்வாது, புனுகு, அரகஜா, கஷ்தூரி, கோரோஜனம்,பச்சைக் கற்பூரம், ஏலம், சிகப்பு சந்தனம், குங்குமப்பூ

மண்வகை :

வில்வமண் கடல்மண். கூக(வ)ம்மண். பம்மைமண். பசுமாட்டுத் தொழுவமண். காளை மாட்டுக் கொம்புமண், யானையடிமண், தர்ப்பையடி மண். நண்டுவளைமண்.

தீர்த்த வகை :

கங்கைத் தீர்த்தம், யமுனைத்தீர்த்தம், காவிரி தீர்த்தம் நர்மதை தீர்த்தம். சரஸ்வதி தீர்த்தம், காசி - திரிவேணி சங்கமதீர்த்தம், தவயோக தீர்த்தம், இராமேஸ்வர தீர்த்தம் பம்பாநதி தீர்த்தம், சமுத்திர தீர்த்தம், சகல சிவாலயங்களின் தீர்த்தம்,

யாக சாலை பூஜைக்குரிய பிறபொருட்கள் :

கிண்டி, கைமணி, கற்பூரத்தட்டு, தூபக்கால், நெய்க்கிண்ணம் பஞ்சபாத்திரம், உத்தரணி, பிரதான கலசகுடங்கள், வர்த்தனி கலச சொம்புகள், வஸ்திர வகைகள், பூர்ணாகுதி பட்டு, ஜண்டாக்கொடி, தர்ப்பைக்கட்டு, விசிறி, மணை, முக்காலி, மூங்கில் தட்டு பெரியவை, மூங்கில் தட்டு சிறியவை, கூடை வகைகள், குத்துவிளக்குகள், எண்ணெய், நெய், சிருக்கு, சுருவம், மஞ்சள், குங்குமம், விபூதி, கற்பூரம், ஊதுபத்தி, சாம்பிராணி, தசாங்கம், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தேங்காய் உரித்தது, மட்டையுடன் காய்ந்த தேங்காய், பச்சைக் கற்பூரம், சந்தனம், பூ - (சரம், ஆரம், மாலை, காதுதோடு, சாட்டைமாலை, பணிச்செட்டு வகையறக்கள்), உதிரிப் பூக்கள், செந்தாமரைப்பூ வெண்தாமரைப்பூ, மற்றும் வாசனை உள்ள மலர்கள் யாவும், எலுமிச்சம்பழம், பழவகைகள், கரும்பு, இளநீர் வகைகள் நாரத்தை, தம்பரத்தை, யாகசாலைக்குரிய நூதனமாக அமைக்கப்பட்ட சித்திரப்பந்தல்.

யாகசாலைக்குரிய ஆயகலை வேதிகைகள் குண்டமண்டலங்கள் :

சதுரகுண்டம், யோனிகுண்டம், அர்த்த சந்திர குண்டம், திரி கோணகுண்டம், ஷட்கோண குண்டம், அஷ்டகோண குண்டம், விருத்த குண்டம், பத்மகுண்டம் முதலியன,

யாகசாலை பிரதான நாயகர்க்கு - அம்பிகைக்குரிய வெற்றிவேர் அலங்கார விமானம், துவஜங்கள் கொடி 8, பதாகம் 8, துவாரபாலகர்கள், துவாரசக்திகள், அஷ்டமங்கலங்கள், தசாயுதங்கள், பிறஅலங்காரங்கள். (மேளம் தாளம் ஒலி ஒளி உட்பட).

பிரதிஷ்டைக்குரியன :

நவரத்தினம் (ஒன்பது வகை மணிகள்), பொன் தாமரை, வெள்ளிப் ப்ரதிமை, யந்திரத்தகடு, வெள்ளிக்கம்பி (நாடிசந்தானம்).

விசேஷ பூஜைக்குரியன :

கோசிருங்கம், ஏகதாரை, சததாரை, ஸகஸ்ரதாரை, வலம்புரிச்சங்கு, கமண்டலம், மான்தோல், புலித்தோல், தர்ப்பாசனம், கூர்மாசனம், பத்மாசனம், அபிஷேகப்பலகை, அர்க்கியவட்டில் முதலியன.

நவகவ்யம் :

பால், தயிர், நெய், கோமயம், கோசலம், நெல்லிவத்தல், மஞ்சள் பொடி, அரிசி மாவு, தருப்பைநீர்.

நவதானியம் – பிற தானியங்கள் யாகசாலைக்குரியவர்கள் :

தட்டைப்பயிறு, கோதுமை, எள், கொள், மூக்குக்கடலை, பச்சைப்பயறு, மொச்சை, துவரை, உளுந்து, கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, நெல், வால்நெல், செந்நெல்.

மங்கல இசைக்கலைஞர்கள், ஆகமசிவாச்சாரியார்கள், வேத விற்பன்னர்கள், பரிசாரகர்கள், திருமுறை ஓதுவாமூர்த்திகள், சன்மானம் முதலான அனைத்து தான வகையருக்கள்.

தல புராணங்களில் சண்டேசுவரர் வாழ்த்துப் பாக்கள்

துறைசைப்புராணம் :

அட்ட மூர்த்திக்கு அடாதுசெய் வோர்மனம்
கட்ட மாகிக் கலங்கிடத் தாதைதாள்
வெட்டும் வாள்விதிர்க் கும்கரத் தண்டிதாட்கு
இட்ட மாய்மலர் இட்டுப் பணிகுவாம். 1

— சாத்திரம் சாமிநாதமுனிவர்

திருவாரூர்ப் புராணம் :

தாரைவெள்ளிலே வேல்மைந்தன் தன்னொடும் தலைவியோடும்
வீரசிங்காதனத்து மேவினன் விழாவிற் கெய்தச்
சீர்கெழு தேவர்க்கெல்லாந் திருமுகம் எழுதும்செம்மல்
வார்தருகமலச் செந்தாள் மனத்தினில் வழுத்திவாழ்வாம். 2

— சம்பந்தமுனிவர்

குடந்தைப் புராணம் :

ஆதிநிலையுண்டாக்கு தலின் அம் போருகமே லவன்தண்டாய்
நீதிமருவப் பசுவோம்பு நிகழ்ச்சியன் மாயவன் தண்டாய்
மோதியொருவேதியனுபிரை முடித்தலால் கூற்றுவன் தண்டாய்ச்
சோதிவயங்கும் ஒருதண்டஞ்சுமந் தாரடிகள் தொழுது எழுவாம்.

— திரிசிரபுரம், ஸ்ரீ மீனுட்சிசுந்தரப்பிள்ளை

மண்ணிப்படிக்கரைப் புராணம் :

அறத்தை நோக்கி பரிய தனை புடை
திறத்தை யுற்ற கரஞ்சிதை யாதுால்
புறத்தை யுற்றிடப் போக்கிய தாள்சிதை த்
நிறத்தை யுற்ற நிமலனைப் போற்றுவாம் 4

— திரிசிரபுரம், ஸ்ரீ மீனுட்சிசுந்தரப்பிள்ளை

கருவூர்ப் புராணம் :

உண்டிதானஞ் சமானர்சேட முண்டுயுர்வு பூண்ட
தண்டிதாள் போற்றிசெய்து தனிமுதல் விழியிற்றேன்றுங்
கண்டிதார்மார்பு திண்டோள் கரங்களங் கன்னஞ் சென்னி
கொண்டுதாமணி வோர்யாரேயவர் பதங்குறித்து வாழ்வாம் 5

பேரூர்ப் புராணம் :

விண்ணவ ரேனுஞ் சிவபிரான் பத்திமேவில ராயின்நல் வினையும்
திண்ணிய பாவம் எனப்படுமென்று சிறுவிதி தெரிப்ப அன்பினரேல்
மண்ணவரேனும் வெய்யபாதகமும் மறுவில்நல் வினையெனப் படுமென்று
அண்ணலம் புவியில் தெரித்தசண்டீச ரடிமலர் முடிமிசைப் புனைவாம்.

கவிராக்ஷஸ ஸ்ரீ கச்சியப்பமுனிவர்

தணிகைப் புராணம் :

புண்ணியம் பாதக மாகப் போற்றிய
அண்ணலங் தக்கனு ரகத்து நாணிய
புண்ணியம் பாதக மாகப் போற்றிய
அண்ணலங் தண்டிதன் அடிகள் போற்றுவாம். 7

— கவிராக்ஷஸ ஸ்ரீ கச்சியப்பமுனிவர்

நாகைக்காரோணப் புராணம் :

பசுக்களை ஓம்பு வாற்குப் பாங்காவது இதுவே யென்று
பசுக்களை இனிதின் ஓம்பிப் பால்முத லாயது எவ்வப்
பசுக்களை ஓம்பல் செய்த பைந்துழா யவன்போ லாது
பசுக்களைந்து இன்பம் துய்க்கும் பார்ப்பனச் சிறுவனை யுள்வாம் 8

— திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை

திருக்குற்றாலத் தலபுராணம்:

தான்பிறந்த தந்தையையும் இனிப்பிறப்பும் நிந்தையையும் தடிந்துசேயென்
றுன்பிறங்கு மழவிடைமே லொருவரமைத் திட இருவர்
அயிர்ப்ப வேகிக்
கான்பொலிதார் அரிபிரமா தியர்க்குஎய்தா இருக்கைஎய்திக்
கடவுள்சேடம்
வான்புலவர் பெறுப்பேறு பெற்றவனை நற்றவனை வழுத்தல் செய்வாம்

— திரிகூடராசப்பக் கவிராயர்.

மருதவனப் புராணம் :

நேசமுறு தாதைபுரி தவறும்அவன் துணைப்பதமும் நீக்கி நீடு
பாசமகற் றிடுபரம பதத்தினொடு சண்டேச பதமும் பெற்றோன்
வாசமலர்ப் பதந்தனையாம் வணங்கிடுதும் அனையதனி வணக்க மாகும்
பேசரிய பேரின்பம் மருவுதற்கோர் பதமென்னப் பெரிதுமன்றே. 10

— கொட்டையூர் ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர்.

திருப்பெருந்துறைப் புராணம் :

ஆத்திமுதல் இடையில்லா ஆத்திதனைத் தாபித்தே
ஆத்திகழும் பாலாட்டி வழிபடுகால் அடுபவம் போல்
லாத்தியக்க மென்றறுப்பான் அடியறுத்து விடைமேலால்
ஆத்தியொடும் ஆத்தனைக்கண்(டு) அமர்ந்தபிரான் பதம் பணிவாம்

— மகாவித்துவான் திரிசிரபுரம் – ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை.

சேதுபுராணம் :

மனுதிகளுக் கெட்டாத பரமானந்த வாழ்வினை
அங்கோர் இலிங்க மணலால் கூப்பித்
தனுதியம் தனினின்றும் தாபித்துஆன் பால்தழைத்து
அவன் பாலாட்ட வந்து தடுக்கத் தாதை
எனுது அவன்தன் இருபதமும் மழுவால் துண்டித்து
இகழ்ந்தவனைப பரபதத்துள் இருத்தித் தானும்
பினுகிஅருள் அடைந்த விறல் சண்டேசன் தாள்
பிரசமலர் இறைத்து இறைஞ்சிப் பரசுவாமே. 12

— நிரம்பஅழகியதேசிகர்

திருவிடையூர்த் தலபுராணம் :

நல்வினை தீயவாய் நயந்த தந்தை தாள்
கொல்வினை நல்வினை யாய்க்கறித்து முன்
தொல்வினை இலாதவன் துடர்ந்த தண்டி தாள்
வல்வினைத் தாளற வணங்கி வாழ்த்துவாம். 13

— அசலாம்பிகையம்மாள்

திருஅம்பர்ப் புராணம் :

வலன்உயிர் குடித்த தோன்றல் ஒருடசுப் புரக்கும் மாண்பில்
கலகம்எண் ணில்லமேவல் கண்டுமற்(று) அதற்கு அஞ்சாது
நலனமை சேய்ஞலூரில் நாளுப்ஓர் இடையூறின்றிப்
பலபசுப் புரந்த ஐயன் பாததா மரைஉட் கொள்வாம். 14

— மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம்பிள்ளை.

திருச்சுழியற் புராணம் :

தந்தைதாள் துணித்தாரைத் தன்மகவை அறுத்தாரை
வந்தவர்க் கியாத கொடை கொடுத்தாரை மதமாக்கை
சிந்த மழு எறிந்தாரைச் சிவனடிக்கீழ்ச் சேர்ந்த மற்றச்
சந்தமுறும் அடியாரை என(து) இதயந் தனிற்சேர்ப்பாம். 15

— ஆராவமுதாச்சாரியார்

திருக்குருகாவூர்ப் புராணம் :

தந்தைதாள் பிடிக்கும் ஏவல் தாரம் அன்னை தனயர் மெய்த்
தந்தை தானியத்தை உற்ற தாவது எண்ணி மண் பொதுத்
தந்தை தாள் புழுவமால் சதிக்க ஆடு கழல் புக
தந்தை தாள் எறிந்த அன்பர் சரண் நினைந்து பணிகுவாம். 17

திருக்கோவலூர்ப் புராணம் :

தந்தைசெலும் இருபதமும் தனதுவினை இருபதமும்
சிந்துவினை முடித்தானைச் சிந்துவினை முடித்தானைச்
சுந்தரம்சேர் அவனடிக்கும் தொழும் இதயம் அவனடிக்குச்
சந்ததம்பூண் மணித்தொழுவார் தலைவன்இரு சரண்தொழுவாம்.

பவாநி கூடற்புராணம் :

வெள்ளியங் கடவுள் ஓதிமம் தேட மிளிர்முடிக் காட்டிடை நாகப்
பள்ளியன் காத்த சுக்குலம் கறந்த பால்கலசங்களைத் தாளால்
தள்ளிய தாதை வெய்ய தாளிணையைத் தடிந்தொரு மடந்தை பங்காளர்
ஒள்ளிய கமலத் திருவடி நீழல் ஒன்றினேன் அடிபணிந்து உய்வோம்.

— மொழிபெயர்ப்பு வாசுதேவ முதலியார்

கோயிலூர்ப் புராணம் :

முனிதரு கொலைத்தொழில் இன்மை முத்திசார்
கனிதரு சாதனம் என்று காப்பவும்
முனிதரு கொலைத் தொழில் இயற்றி முத்தியில்
கனிதரப் புகுந்தசேய் கழல்கள் போற்றுவாம். 19

— மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை.

திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம் :

வெண்மணல் இலிங்கம் ஞானநேத் திரத்தால் விதிமுறை
ஆலயம் புரிந்து
கண்மணி யானசிவபரம் பொருளைத் தாபன முறையினால் கற்பித்து
எண்மல ரால்பாலா தியால் பூசை இயற்றுழி இடர்செய் தாளிரண்டும்
விண்மணி நிகர்க்கும் மழுவினால் தடிந்தவிறல் சண்டேசுரனையாம்
பணிவாம். 20

— இலக்கணம் ஸ்ரீ சிதம்பரநாதமுனிவர்.

திருநாவலூர்ப்புராணம் :

தந்தைஇரு பதம்சிதைத்த எந்தையடி தொழுது அடியார்
தமக்கு யாழ்நாள்
சிந்தைமகிழ் அமுதுபசும் பொன்னளித்துத் திருநீறு திகழும்
தூர்த்தற்கு
அந்தமிறை இரட்டியபொன் அளித்தநர சிங்கமுனை யார்தாள்
போற்றிச்
சுந்தரனை இனிதளித்து மகிழ்சடை யனார்அடியைத் துதி
செய்வோமே. 21

— இராசப்பக்கவிராயர்.

திருநள்ளாற்றுப் புராணம் :

மண்ணினனும் நதியின்பால் சங்கரனைப் பாராட்டி வரலாறு
உன்னான்
நண்ணியதீ தியற்றுதந்தை சரண்தடிந்து பரனருளால் நயந்து நல்க
தண்ணிய மாலையும் பூணும் ஊணும் பெற்றுடைய திருத்தண்டியாதிப்
புண்ணியநல் தொண்டர்பதம் தொழுதேத்தி நள்ளாற்றுப்
புராணம் சொல்வாம். 22

செவ்வந்திப் புராணம் :

மணத் தாதுசெறிமலரும் செழுங்கனியும் கொணர்ந்து சிறுமணலைவாரி
அணைத்துஆதி சிவன்வடிவாய் அமைத்தருளி அவற்கினிதா
ஆட்ட வேண்டிக்
கணத்தாவின் பால்கறந்து நிறைத்து வைத்த கலசமெலாம்
கவிழ்த்த தாதை
இணைத்தாளைத் தடிந்(து) இறைவர் துணைத்தாளை அடைந்தவர்
தாள் இறைஞ்சுவோமே. 23

— சைவ. எல்லப்பநாவலர்.

பூவாளூர்ப் புராணம் :

அந்திமதி முடிக்கணிந்த அழகர்திரு அடிபிழைத்தார் யாரேயாக
வெந்திறலின் அவருயிரை வீட்டுவதே மேலான விமலா னந்தம்
தந்தருளும் முத்தியெனத் தாரணியோர் அறிந்துய்யத் தந்தை தாள்கள்
சிந்தஎறிந் தவர்மலர்த்தாள் சிந்தனைசெய் தவர்மலமும் சிந்துமன்றே

— ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள்

சிவராத்திரிப் புராணம் :

நீளிரண்டு கரத்தெடுத்த நிறைகுடப்பால் முகல் புனித நீரில்ஆட்டி
வாளிரண்டு நிகர்த்தவிழி மலைமகள்கேள் வனை வழுத்தி மலர்கள்சாத்தி
ஆளிரண்டு பதமளித்து என்றருச்சிக்கும் அமைய மதில்
அவன் செய் தந்தை
தாளிரண்டும் அறவெறிந்த சண்டீசர் முண்டகப் பொற் றுளில்
தாழ்வாம். 25

— காசி. அ வரதராஜ பண்டிதர்

நீடூர்த்தல புராணம் ;

பந்தபா சங்கள்அற நல்வினையின் பகுதிவந்த பரமஞானச்
சிந்தையார் முழுதுணர்ந்த தெய்வநான் மறையவர்க்கோர் திலகம்
போல்வார்
எந்தையார் பிறைமுடிக்குப் பாலாட்டும் அளவையில் வந்து
ஊறு செய்யும்
தந்தையார் தாள்எறிந்த தண்டீசர் புண்டரிகச் சரணம் போற்றி. 26

— இறையூர். வடமலை நாரணக்குடைமன்னர்.

சீகாழித்தல புராணம் :

எந்தைதாள் காமுறுவார் இருவினைத்தாள் அறுக்கஎனு
முந்தைஆ ரணம்புகன்ற முதுக்கறைவா னதுபொதிந்த
சிந்தைதான் அரனடிக்கே செறிவித்துச் சினந்து வரும்
தந்தைதாள் ஓரிரண்டும் தடிந்தவன்தாள் தலைக்கொள்வாம். 27

— அருணாசலக் கவிராயர்

திருவதிகைப் புராணம் :

தந்தையின்பா தப்போதைத் தான்சிதை வுறப்புரிந்துச்
சிந்தையில்அச் சந்தோடு ஆத்திகேழ்ச் சிவத்தினுக்கு
அந்தமார்க் கிரம்ஆட்டி அடைவுடன் கைலைசென்ற
எந்தையாம் ஐயன்தூய இணையடிப் போற்று வாமால். 28

— ஸ்ரீ அப்பாவையர்.

வில்லைப் புராணம் (வில்லவநல்லூர்) :

ஓதலூர் தொறும் போய்ப் பெம்மான் உருக்கழுக் குன்றில் கண்ட
வாதவூராளி செந்தா மரைதிரு வடிகள் போற்றி
நாதர்மீக் கொண்ட மாலை தாம் கொண்டு நமது பாவம்
காதலூர் புறத்து வைகும் தண்டீசர் கழல்கள் போற்றி. 29

— வீரராகவகவி

திருமுல்லைவாயிற் புராணம் :

சுரர்உடம்பினும் தவர்உடம்பினும் துதிநிறைந்தவிஞ் சையர்
உடம்பினும்
பரவுதண்பிரம் படிதழும்பிடும் பரமநந்திதன் பதம்இறைஞ்சுவாம்
பிரணவம்சொலும் குரவன்அந்தணன் பெருகுதந்தை
தன் தாள்தடிந்தவன்று
அரனணிந்தகொன் றையுமணிந்துநின் றருள்வழங்கு தண் டியை
வணங்குவாம். 30

— ஸ்ரீ மத் வடுகநாத தேசிகர்.

திருத்துருத்திப் புராணம் :

ஒன்றுமெய்த் தந்தைகூடல் உடுத்தல் உண்கலம் இம்மூன்றும்
நன்றமுன் பிள்ளையாரும் நகுகடைப் பிள்ளையாரும்
என்றும்எய் திலரேயாக இடைப்பிள்ளை யாரென்று ஓதத்து
அன்றதா மேபெற்று இன்பம் துய்ப்பவர்க்கு அன்பு செய்வாம். 31

— மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை

சூதவன புராணம் (திருவுசாத்தானம்) :

ஓத கம்பர கதிநெறி உற்றிடாது உய்வான்
சீத கம்பர கதிர் வயல் சேய்ஞலூர் அடிகள்
மேத கம்பர கதிர் நிலை யான் அருள் விளைவால்
பாத கம்பர கதி செய் சண்டிசர் தாள் பணிவாம். 32

திருவெண்காட்டுப் புராணம் :

நந்திமலர்ப் பதம்பரவி உருத்திரபல் கணத்தவர்தாள் நளினம் போற்றி
ஐந்துமுகன் பணிவிடைசெய்து அப்பாலும் அடிச் சார்ந்தார் அடிகள் போற்றிச்
செந்தமிழ்ஆ கரமுனிவன் பதம்இறைஞ்சித் தாழ்கொடு தாழ் திறக்கு மாபோல்
தந்தைஇரு தாளகற்றிச் சிவன்தாளில் புகுந்தவன்தாள் தலைமேற் கொள்வாம். 33

— சைவ - எல்லப்ப நாவலர்.

வைரவன்கோயிற் புராணம் :

சும்மைவான் புகழ்ச்சேய்ஞல் ஊருதித்து
மண்ணி நதிச் சூழல்ஓர் சார்
செம்மைசேர் செழுமறையோர் திருந்துமனைக்கு
ஓதனம்பெய் தீம்பால் கொண்டே
எம்மையாள் இறைவழிபாடு இயற்றும்இடை
வெகுண்டுஎழுந்த ஈன்றோன்செற்ற
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு
அடியார்கட்கு அடிமை பூண்டு. 34

— நடராச கவிராயர்

வாசவனூர்ப் புராணம் :

தந்தை தாள்மலர் தன்னைத் தடிந்துமே
எந்தை தாளினில் எய்திய கோவையும்
சந்த மார்தென் மலைமுனி தாளையும்
சிந்தைமீது குடியெனச் சேர்த்துவாம். 35

— ஸ்ரீ பொன்னம்பலப்பிள்ளை.

திருவைகாவூர்ப் புராணம் :

தங்கு சைவம்தழை தருசேய் ஞலூர்ப்
புங்க வன்திருத் தாளேயும் புந்தியைச்
சங்க ரன்பதத்துப்த்தவர் தாளேயும்
வங்க மாய்த்துதித்து இப்பவம் மாற்றுவாம். 36

— கவித்தலம். சி. வேலேயதேசிகர்.

பெண்ணே நதிப் புராணம் :

தடக்கை ஒராயிரத்து வாணனது புயம்அறுத்த தண்துழாயின்
கிடக்கை மேவுறு மறுமார்பனேப் போல்ஆன் மேய்த்தான்
பாற்கெழுமவைத்து அன்
பொடுஅக்கை யால் அருச்சித்துத் தந்தை தாள் தடிந்ததனுல்
புகழ்ந்த எங்கோமான்
இடக்கை என்றென்றும் தோள்மேற் கிடைக்கப் பெற்றவர்
அடியை இறைஞ்சி வாழ்வாம். 37

— சுவாமிமலே. கனகசபைக்கவிராயர்.

கேதாரீஸ்வர புராணம் :

விந்தை பெறும் கலேகளெல்லாம் நவில்கின்ற
ஆநிரைகள் மேய்த்து நல்ல
சிந்தை எலாம் சிவனிடத் தல்லாது
பிறிதொன்றினிலே செலுத்தாராகி
எந்தை அபிடே கத்திற்கென வைத்த
பாற்குடத்தை இடறி வந்த
தந்தை இரு தாள்தடிந்த தண்டீசர்
சேவடியைத் தலேமேல் கொள்வோம். 38

— வாணியம்பாடி முருகப்பசெட்டியார்

திருப்புன்கூர்ப் புராணம் :

திடத்தோடு ரீனக்கண்டார்க்கு எனேக்கண்ட
பலனன்றிச் சேரார் என்று
விடத்தோடு புணர்களத்தான் அளித்த பெரும்
பதவி கண்டு விழைமால் ஏங்க
நடத்தோடு தரிசிப்ப ஆனந்தப்
பெருக்கினிடை நண்ண நாதன்
இடத்தோளே என்றும் தன் வலத்தோளில்
பெற்றேன் தாள் இறைஞ்சி வாழ்வாம். 39

— கனகசபைக்கவிராயர்

வேணுவன புராணம் :

கைம்மழுவால் வருதாதை கால் இரண்டும்
துணித்து மலர்க் கரங்கள் தம்மில்
அம்மழுவான் தரித்தவர்தாள் அடைந்து புகழ்த்
தண்டீசர் ஆதியான
செம்மை நெறி அளப்பரிய சிவனடியார்
அடிமலர்கள் சிரமேல் கொண்டிங்கு
இம்மையினும் மறுமையினும் உளபயன்கள்
தவறுமல் எய்தி வாழ்வாம் 40

பரிதியப்பர்கோயில் தலபுராணம் :

எந்தை பதம் அடைந்திடத்தன் தந்தைபதம்
எறிந்த சண்டீசர் பொற்றுள்
வந்தனைசெய் தேமுன்னர் வழிபட்ட
தொண்டர்பதம் வணங்கிஇந்நாள்
பந்தம் அறுத்திடும் அன்பர் பதம்பரவி
இனிப்பிறந்து பரமர் தாளில்
சிந்தைவைப்போர் தனைக்கருதிப் பரிதிவன
மகிமைதனைச் செப்பலுற்றேன் 41

— நாராயணசாமி உபாத்தியாயர்

திருக்கழுக்குன்றப் புராணம் :

தந்தைதாள் எறிந்து குகன் தந்தைதாள் அடைந்த
திருத் தண்டியாதி
முந்தையோர் திருத்தொண்டர் யாவரையும்
வேதகிரி மூதூர்வைகும்
சிந்தை நான்மறைச் சைவத்திற நெறிநின்றோரையும்
அச்சிலம் பின்உச்சி
எந்தை ஆளுடைய கழுகெனும் முனிவர் இருவரையும்
இறைஞ்சி வாழ்வாம் 42

— அந்தகக்கவி வீரராகவமுதலியார்

திருவெண்ணெய்நல்லூர்த் தல புராணம் :

தன்தந்தை தாளுடனே பிறவித் தாளையும்
தடிந்த தனயர் தாளும்
முன்வந்த வேதநெறி சைவநெறி பத்திநெறி
முறை வழுவாமல்

அன்பு உந்தப் பணிபுரிந்தே சிந்தைதனை அரன்பதத்தில்
அழுத்தி வாழ்ந்த
இன்பம்தம் இடமாக்கொள் திருத்தொண்டர் அடிகளையும்
இறைஞ்சு வோமால். 43

— வடிவேல் முதலியார்

கொடுமுடிப் புராணம் :

எந்தை அருச்சனைக்கு இடையூறு இழைத்தனன்
என்பதனை மனத்தெண்ணி ஈன்ற
தந்தைஎனக் கருதாது சரண் இறப்ப
மழு எறியும் தகையால் தாமம்
முந்து பரிகலம் உதவும் கொடு முடியார்
தூவியின் கோமுகைப்பின் பாங்கர்
புந்தியில் ஐஞ்செழுத்து அகலாப் போதகர்
சண்டேசர் பொற்றாள் போற்றுகிற்பாம். 44

— வெங்கடரமண தாசர்

திருப்பறியலூர்ப் புராணம் :

கண்ணுதல் அடியில் தோயும்
கருத்தினர் அரும் பாவங்கள்
புண்ணியத் திறமாம் என்றுஇப்
புவியுளோர் அறியமுன்னுள்
அண்ணலைப் பரசும் பேரா
தரவினுல் பிதாவை விட்டும்
திண்ணிய செயல்சேர் சண்டன்
திருவடி மருவுவாமே. 45

— திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானம்
ஸ்ரீ பின்வேலப்ப தேசிகர்

திருநெல்வேலித்தல புராணம்:

மெய்ந்நெறி வழுவாது அன்பு
விளைந்த பேரறிவு தோன்ற
மைந்நிறை கண்ட ஞரைவரன் முறை
மகிழ்ந்து பூசை

செய்ம்முறை தவிர்த்த தாதை
காலறச் சினத்து நோக்கிக்
கைம்மழு எறிதண்டீசர் கமலத்தாள்
வணக்கம் செய்வோம். 46

— நெல்லையப்பபிள்ளை.

புள்ளிருக்கு வேளூர்ப் புராணம் :

மண்டுபுனல் பரந்துவரும் மண்ணிநதி வெண்மணலின்
மாருக் காதல்
கொண்டிறைவன் முடிமீது குடத்துசிறை பால்சொரிந்து
கோலால் அங்கு
மிண்டுசெயும் தாதைதாள் தடிந்துமே தினியின்மிகு
மேன்மை பெற்ற
சண்டிஇரு தாள்வணங்கிச் சிவனடியார் மலர்ப்பாதம்
தலைமேல் கொள்வாம். 47

— வடுகநாத தேசிகர்

திருவாரூர்ப் புராணம் :

கூப்பியே மணலை ஈசன் தனைக்குறித்து அதனின் அன்பால்
ஆப்பொழி பாலைஆட்ட வனிட்டனும் தாதைதாளைத்
தீப்பெரு மழுவால் வீசிச் சிவனருள் பெற்றதண்டி
பூப்புரை பாதம் தன்னைப் புந்தியுள் சிந்தை செய்வாம். 48

— சிதம்பரம் மறைஞானசம்பந்த நாயனுர்

அவிநாசிப் புராணம் :

வண்டேசர் புக்கொளியார் வண்மைபெறு
தமைப்புரிந்த மணற்பாற் பூசை
கண்டே சரோருகத்தாள் அகம் தரித்து
முந்துபரி கலப்பே நீந்து
விண்டேசர் காண்பரிய மெய்ப்பதவி
தந்தருள மீததி ஓங்கும்
சண்டேசர் புண்டரிகத் தண்டையம்பொன்
தாளிணைகள் தலைமேல் வைப்போம். 49

— இளையான் கவிராயர்

திருவிரிஞ்சைப் புராணம் :

"நாதனுர் அருள்நண் ணிய நந்தியை நவின்று
வாதவூருறை மாணிக்க வாசக வள்ளல்
பாதநூபுரப் பரிமளப் பங்கயம் பணிந்து
தாதை தாளினைத் தடிந்தவன் தாளினைத் தரிப்பாம்" 50

— எல்லப்ப நாவலர்

திருவோத்தூர் புராணம் :

பிள்ளைமதி தவழ்சடிலப் பிஞ்ஞகனுர்க்கு இனிதாட்டும்
ஒள்ளியபால் கலங்கவிழ உதைத்த பெரும் பாதகமும்
தெள்ளி மறை தருந்தாதை சேவடியும் தன்பிறப்பும்
துள்ளிவிழ ஒருங்கெறிந்த தொண்டன் மலர்ப்பதம் போற்றி" 51

— கருணுகரக்கவிராயர்.

கோயிற்புராணம் :

தந்தை எனுது இகழ்ந்தபுகழ்ச் சண்டேசர் விறல் தகுமெய்ச்
சிந்தையராய் எல்லையிலாத் திருவேடத் தினராகி
எந்தைபிரான் அருள்வளர்க்கும் இயல்பினராய் முயல்தவங்கள்
அந்தமிலா அடியவர்கள் திருக்கூட்ட மவைபோற்றி. 52

— உமாபதிசிவாசாரியார்.

திருமயிலைத்தல புராணம் :

மண்ணி எனும் நதிநடுவில் மணல்குவித்துச் சிவலிங்க
வடிவமாக்கித்
தண்ணிய ஆன்பால் முடிமேல் ஆட்டுதலும் தாதை சினம்
தலைமேற்கொள்ளத்
துண்ணெனவே எழுந்து சுடர் மழுவாலே அவன்தாளைத்
துணித்த வீரத்
திண்ணியனைச் சண்டேசன் துணைப்பாதம் பணிந்து அன்பால்
சிந்தைசெய்வாம். 53

— ஸ்ரீ அமிர்தலிங்கத் தம்பிரான்

திருவியலூர்ப் புராணம் :

ஈசனுக் காம்உணவு எழில்கொள் ஆடைபூண்
வாசநல் தார்இவை மரபினில் கொளீஇப்
பேசவன் தரிசனப்பேறு அளிக்கும் சண்
டேசுரன் அடிமலர் சிந்தைப் பாலதே. 54

திருநாகேச்சுரப் புராணம் :

நெறிஒன்றி உரைக்கும்ஓர் அறிவன் இன்றிச்
சிவபூசை நியம மாகப்
பிறிவின்றி எழும் அன்பால் பிழைபாடும்
விளையாமல் பெருகச் செய்து
வெறிஒன்றும் இதழியன்பால் விதியுடையார்
வழிபாட்டின் விளவிற்கெல்லாம்
குறிஒன்று சான்ருக அருள் பெற்ற
சண்டியடி குறித்து வாழ்வாம். 55

திருவேட்டக்குடிப் புராணம் :

தந்தை தனக்குக் கதியளிப்பான்
தனயன் என்பதனைத் தெரிப்பான்
நிந்தை தனக்கு முதல்வனுய்
நின்ருன் தனக்கும் கதியளித்தே
எந்தை தனக்குப் பூசை செய்வோர்
இயற்றர்ச் சனைகொள் இறைவன் தாள்
சிந்தை தனக்குத் தூய்மை யுறச்
சிந்தித்து ஏத்திப் பணிகுவாம். 56

— சிதம்பரநாதபிள்ளை

திரிமூர்த்திமலைப் புராணம் :

தாதைபுரி தவறு அறத்தாள் துண்டம் செய்த
தண்டி அடி கண்டு அவயவத்துத் தாங்கி
தீதுதெறும் ஐந்தெழுந்து உச்சரிநா வாராய்ச்
சிவனடியார்க்கு அடியவராய்த் திகழுவாராய்
ஓதுபல பவமுழுதும் ஒருவினராய்
உள்ளதிருத் தொண்டர்ஒளிர் உபயமான
பாதபது மம்குறைகள் அனைத்தும் ஒடப்
பலசுபமும் நனிபரவப் பணிகு வாமால். 57

— வித்துவான் அருணசலக்கவுண்டர்

இறைவாசநல்லூர்த்தல புராணம் :

போதமுறு மெய்ஞ்ஞான புனிதனைக்கைக்
காட்டியழும் புகலி வேந்தும்
மோது கடல் அலைக்கற்றா ணல் கடந்த
பெருந்தகையும் முதலை கொண்ட
வேதியர்தம் சிறுர் அழைத்த மெய்த்தவனும்
புத்தர் மொழி வென்ற கோவும்
தாதை சரண் எறிந்துயர்ந்த தலைவரும் மிக்
கவர்எமக்குத் தலைவ ராவார். 58

— புராணத்திருமலைநாதர்

பூந்துறைப் புராணம் :

பண்டேசர்க் கரைஎனும்தீம் பால்கலசம் தனைக்கவிழ்த்துப்
பரிவு இல்லாமல்
கண்டேசற்கு உளம்கொண்ட தந்தையின்தாள் தனைத்தடிந்து
கனிவு கூர்ந்தும்
அண்டேசர் பரவு திருக்கயிலையினில் எப்போதும் அன்பு கூர்ந்த
சண்டேசர் தமைத்துதித்துப் பதமலரை எப்போதும்
தலைமேல் கொள்வாம் 59

— காளியண்ணப்புலவர்

திருஎருக்கத்தம் புலியூர்த் தலபுராணம் :

முந்து பூசனைக் காம்பொருள் முழுதையும் ஈட்டி
வந்திறைஞ்சிடும் முன்னமே வல்லையின் எய்திக்
கந்தநாண் மலர்சிந்திப் பாற்கடம் கவிழ்த்த
தந்தை தாள்எறி தண்டியை வணங்குதல் செய்வாம் 60

— சிவப்பிரகாசர்

திருவானைக்காப் புராணம் :

பொன்னம் கடுக்கை முடிவேய்ந்த
புனிதற்கமைக்கும் பொருளன்றி
மின்னும் கலனுடைகள் பிறவும்
வேறுதனக் கென்றமையாமே

மின்னும் தலைவன் பூசனையின்
    மல்கும்பயனை அடியார்கள்
துன்னும்படி பூசனை கொள்ளும்
    தூயோன் அடித்தாமரை தொழுவாம். 61

ஸ்ரீ கச்சியப்பமுனிவர்

சூரைமாநகர்ப் புராணம் :


நிரம்புநூல் கேள்வியின் நிகழ் தனக்குமாத்
திரம்பிதா வாயினுல் சினந்து தீர்ந்தொரீஇ
வரம்பில் பல் உயிர்க்கெலாம் பிதாமருங்கின் ஆ
தரம்புகப் புகுந்தசேய் சரண்புக் குய்துமே. 62

— மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம்பிள்ளை

உறையூர்ப் புராணம் :

விண்ணியல் அமரர் முனிவரர் புடவிமிடைந்தவர் யாவரும் இகழப்
புண்ணியம் புரிந்து பாதகமாக்கிப் பொலிவழி தக்கன் போலாது
நண்ணிய கொடும்பா தகம்புரிந்து யாரும் நன்றெனும் புண்ணியமாக்கித்
திண்ணிய பொலிவுற் றரனடியடைந்த சேய்ஞலூர்ப்பிள்ளை தாள்
தொழுவாம். 63

— மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம்பிள்ளை


நாகை
நாகை

